வருட. 76 இல. 14 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2024 ஏப்ரல் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
April 07 Sunday, 2024




/ Thinakaran.lk / ThinakaranLK


04
சர்வதேச நாணய நிதியத்தின் விடயத்தில் எதிர்க்கட்சியினர் இரட்டை நிலைப்பாடு!


10
அமெரிக்க மக்களிடையே எதிர்ப்பை உருவாக்கியுள்ள காஸா மீதான யுத்தம்!


12
நாளை உலகம் இருளில் மூழ்குமா?


24
ரோஹித்தும் பாண்டியாவும்




இலங்கை - இந்திய தரைவழிப்பாதை

## இந்தியாவின் ஆய்வு யோசனை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம்

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் கடலினூடாக அமைக்கப்படவுள்ள தரைவழிப் பாதையின் ஆய்வு தொடர்பான இந்தியாவின் அடிப்படை யோசனை அடுத்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

தரைவழிப் பாதை அமைப்பதற்கான அடிப்படை யோசனையை இலங்கை அரசாங்கத்திடம் இந்தியப் பிரதிநிதிகள் தெரிவித்த பின்னர், ஆய்வு செய்யப்பட்டு, இலங்கை அரசாங்கத்தின் அடிப்படை யோசனை இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமென, ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் தேசிய பாதுகாப்பு தலைவருமான சாகல ரத்நாயக்க, இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் தரைவழிப்பாதை அமைப்பது உட்பட பல விடயங்கள் 06



06
இலங்கைக்கு தடையின்றி பயணிக்கலாம்

## பயண ஆலோசனையை புதுப்பித்தது பிரிட்டன்




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தேசிய புத்தரிசி விழா அநுராதபுரத்தில் வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீமஹாபோதிக்கு அருகில் நேற்று (06) நடைபெற்றது.

பாரம்பரியமாக பெரும்போகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லின் முதல் நெல்லை ஜயஸ்ரீ மஹாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த 06

முறைசாரா தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளோரை உள்ளடக்கியதாக

# தொழிலாளர் அனைவருக்கும் EPF, ETF உரித்துடன் தொழில்

புதிய வேலைவாய்ப்பு சட்டம் விரைவில் அமுலாகவுள்ளது –மனுஷ

முறைசாரா தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழிலாளர்கள் உட்பட தனியார் துறையில் பணிபுரிபவர்கள் அனைவரும் சீரான முறையில் பணியை தொடரும் வகையில் புதிய வேலைவாய்ப்பு பாதுகாப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அனைத்து ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பலன்களை பெறக்கூடியவாறு இச்சட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.



ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் இரண்டையும் ஒன்றிணைத்து பொதுவான சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும். அத்துடன் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிறப்பு பிரசவகால கொடுப்பனவு வழங்கப்படும். பிரசவ காலத்தின் போது தொழில் வழங்குநர்களுக்கு சுமையை ஏற்படுத்தாத விதத்தில் இவ்விசேட பிரசவகால கொடுப்பனவு கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலையீட்டின் கீழ் இந்த சட்டமூலம் 06

## அமைச்சர் ஜீவனுக்கு அதியுயர் உலக கௌரவம்

இளம் உலக தலைவராக அங்கீகாரம்



நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், இளம் உலகத் தலைவராக உலக பொருளாதார மன்றத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 06

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 06-11 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.35 |
| ஸுபஹ் | 04.50 |
| சூரிய உதயம் | 06.07 |
| ளுஹர் | 12.14 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

## தலைமன்னார் – தனுஷ்கோடியை நீந்திக் கடந்த இரண்டு சிறார்கள்

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது



கடல் மாசுபடுவதை தடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இரண்டு சிறார்கள் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனைக்கு நீந்திச் சென்றுள்ளனர். இவர்கள் இருவரும் 11 மணி 30 நிமிடங்களில் நீந்திக் கடந்துள்ளனர். 06

'கெலிப்சோ' சுற்றுலா ரயில் பயணத்தில்...



(படம்: சுதத் நிஷாந்த)

கொழும்புக்கும் பதுளைக்கும் இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைவதையிட்டு ஆரம்பிக்கப்பட்ட 'கெலிப்சோ' விசேட சுற்றுலா ரயில் பயணத்தில் நேற்று முன்தினம் (05) தெமோதர செல்லும் வழியில் போக்குவரத்து, 06

வாரமஞ்சரி எங்கள் கருத்து...

## வரிகள் சம்பந்தமாக மக்களிடம் நிலவுகின்ற தவறான கருத்துகள்!

அரசுக்கு மக்கள் வரி செலுத்துவதென்பது உலகநாடுகளில் புதுமையான நடைமுறை அல்ல. அரசியல் நாகரிகமும் மானுடவாதமும் வளர்ச்சி பெற்றுள்ள அனைத்து ஜனநாயக நாடுகளிலும் வரி செலுத்தும் நடைமுறையானது அக்காலம் முதல் இக்காலம் வரை தொடர்ந்தபடியே உள்ளது.

உலக வரலாற்றில் வரிநடைமுறையானது பண்டைய மன்னராட்சிக் காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வருகின்றது. பணப்புழக்கம் அறிமுகமாகாத பண்டைய காலத்திலும் கூட நாட்டு மக்கள் தங்கள் விளைச்சல் நிலங்களில் கிடைக்கின்ற உணவு உற்பத்திகளில் குறிப்பிட்டதொரு தொகையை அரசனுக்கு வரியாகச் செலுத்தியுள்ளனரென்று வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன.

பண்டைக்கால நடைமுறையானது இன்றுவரை உலக நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. வரிநடைமுறை இன்றேல் நாடு சீராக இயங்க முடியாமல் போய்விடுமென்பது உண்மை. நாடு சீராக இயங்க வேண்டுமானால் அந்நாட்டின் அரசாங்கம் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு நிதி அவசியம். 06



## புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில், பஸ் சேவை

அமைச்சர் பந்துலவின் பணிப்பில் ஏற்பாடுகள்



தமிழ், சிங்கள புத்தாண்டையிட்டு இலங்கை போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் ரயில்வே திணைக்களமும் இணைந்து கொழும்பிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு பயணிக்கும் 06

## ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராக மனோ

சிவசேனை தலைவர் சச்சி முன்மொழிவு



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாக தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் போட்டியிடுவது பொருத்தமானதாக இருக்குமென, சிவசேனை அமைப்பின் தலைவர் 06



## தினகரன் தில்லைக்கு ஊடகதூது விருது

வடமராட்சியில் பாராட்டு வைபவம்

தினகரன் பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளரும் மூத்த ஊடகவியலாளருமான சின்னத்துரை 06



## டென்மார்க்கில் அலன் தருமனுக்கு உயர் கௌரவம்

பொருளியல் வியூக இயக்குநராக பதவி

டென்மார்க்கில் புலம்பெயர் தமிழரான இளம் பொருளியல் நிபுணர் அலன் தருமனுக்கு உயர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. டென்மார்க்கில் இளம் பொருளியல் நிபுணராக அலன் தருமன் உள்ளார். 06



தினகரன் THINAKARAN

நாளைய தினகரன் பத்திரிகையுடன் ஆயுர்வேத பஞ்சாங்கம் வெளிவரும்



## நீதிமன்றத்தை அவமதித்ததால்

# தண்டனை விதிக்கப்பட்ட கலகொட ஞானசார தேரர்

கலகொடஅத்தே ஞானசார தேரர் இந்த நாட்களில் அதிகம் பேசப்படும் நபர்களில் ஒருவராக உள்ளார். அதற்குக் காரணம், அவருக்கு இரண்டாவது முறையாகவும் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமையாகும். தற்போது அவர் அந்தத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

“ஒரு தேரர் என்ற முறையில், தேசிய மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்பதோடு, இது போன்ற கருத்துக்களையும் வெளியிடக்கூடாது. அவ்வாறான கருத்துக்களால் நாட்டில் தேசிய, மதப் பிளவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது” என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு எதிராக 04 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த உயர் நீதிமன்ற நீதியரசர் ஆதித்ய படபெந்திகே தெரிவித்தார். இந்த தீர்ப்பு கடந்த மார்ச் 28ஆம் திகதி வழங்கப்பட்டது. இந்தச் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக ஞானசார தேரர் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு இவ்வாறு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருப்பது இது இரண்டாவது தடவையாகும். முதலாவதாக அவருக்கு 2018ஆம் ஆண்டு அவருக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் ஒரு வருடம் சிறைச்சாலையில் கடூழியச் சிறைத்தண்டனையைக் அனுபவித்த பின்னர் 2019 மே மாதம் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் மூலம் விடுவிக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் ஐந்து வருடங்களின் பின்னர் ஞானசார தேரர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் செல்ல நேர்ந்தது 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அல்லது அதற்கு அண்மித்த தினம் ஒன்றில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது குரகல விகாரை தொடர்பில் வெளியிட்ட கருத்தின் மூலம் இனங்களுக்கு இடையிலான மத நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் குற்றவாளியாக காணப்பட்டதை அடுத்தேயாகும். இந்த வழக்கு விசாரணைகள் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நீண்டகாலமாக விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் பிரதிவாதியான தேரருக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகியுள்ளதாகக் குறிப்பிட்டு உயர் நீதிமன்ற நீதிபதி, அவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு குற்றப்பத்திரிகைகளிலும் பிரதிவாதியான தேரர் குற்றவாளியாகியுள்ளதாக தனது தீர்ப்பில் அறிவித்துள்ளார்.

பிரதிவாதியான தேரர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் முறைப்பாட்டுத் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜரான அரச தரப்புச் சட்டத்தரணி லக்மாலி திஸாநாயக்க, “இனவாத மோதல்களின் காரணமாக முப்பது வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு மற்றொரு மத மோதல் ஒருபோதும் தேவையில்லை" என்று கூறினார்.

“ஒரு மதத் தலைவர் மற்றும் ஒரு அமைப்பின் தலைவரான பிரதிவாதியின் சொற் பிரயோகங்களின் காரணமாக, இலங்கையில் மத மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. அவ்வாறான நிலையினைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகும். இதன் காரணமாகவே, எதிராளியான தேரருக்கு கடுமையான தண்டனை வழங்குமாறு கௌரவ நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என அரச தரப்பு சட்டத்தரணியும் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதன்போது பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை அனுபவித்ததாகவும், பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு 'ஜனாதிபதி மன்னிப்பு' வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

"எனது கட்சிக்கார தேரர் தெரிவித்த கருத்தின் மூலம் எந்த கடுமையான தவறுகளையும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இது தொடர்பில் இதற்கு முன்னர் அவர் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரினார். எவ்வாறாயினும், அவருக்கு இலகுவான சிறைத்தண்டனையை விதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்” எனவும் சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது, பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிக்கு பதிலளித்த அரச தரப்பு வழக்கறிஞர், 'கத்தியால் குத்துவதை விடவும், வார்த்தைகளால் பேசும் விடயங்கள் மிகவும் தீவிரமானவை எனத் தெரிவித்தார்.

எவராவது ஒருவர் கத்தியால் குத்திவிட்டு மன்னிப்பு கேட்டுவிட்டால் மாத்திரம் குற்றத்தின் தீவிரம் குறையுமா? அதேபோன்று, எதிராளி கூறிய வார்த்தைகளினால் எழுந்த விடயங்களுக்கு மன்னிப்பு கேட்பதால் மாத்திரம் குற்றத்தின் தீவிரம் குறையுமா?”

“குற்றம் சாட்டப்பட்ட தேரர் இதற்கு முன்னைய வழக்கு விசாரணை தினத்தின் போது குற்றவாளிக் கூண்டில் நின்றவாறு தனது கூற்றினால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏதேனும் மன வேதனைகள் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் தான் வருத்தம் தெரிவிப்பதாகக் கூறியிருந்தார். எது எவ்வாறிருந்தாலும், குற்றஞ்சாட்டப்பட்ட பிக்கு ஊடகவியலாளர் சந்திப்பின் போது பயன்படுத்திய வார்த்தைகள் வேண்டுமென்றே குரோத மனப்பான்மையுடன் ஏனைய மதம் தொடர்பாக வெளியிடப்பட்ட வெறுப்பூட்டும் வார்த்தைகளே தவிர, தவறுதலாக அல்லது பிழையாக கூறப்பட்டவை அல்ல என்பது தெளிவாகின்றது. தேரர்கள் தேசிய மத நல்லிணக்கத்துக்கும் அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது. இவ்வாறான கூற்றுக்களினால் நாட்டினுள் இன, மத பிளவுகள் கூட தோன்றலாம்” என இந்த வழக்கின் தீர்ப்பை அறிவித்த நீதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் குற்றவாளியான தேரரை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

பின்னர் கடந்த 03ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பிணை மனு ஒன்றினை தாக்கல் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, கலகொட அத்தே ஞானசார தேரரை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார். இந்த கோரிக்கை தொடர்பில் போதியளவு விடயங்கள் முன்வைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, அந்த கோரிக்கையினை நிராகரித்தார்.

கொழும்பு உயர் நீதிமன்றில் இந்த பிணை தொடர்பான மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பெருமளவான பிக்குகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த தேரர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரட்ன, தனது கட்சிக்காரருக்கு எதிராக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு தீர்ப்பினை வழங்கும் வரையில் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார். “எனது கட்சிக்காரருக்கு விதிக்கப்பட்டுள்ள நான்கு வருட சிறைத் தண்டனை சிறைச்சாலை விதிகளுக்கு அமைய இரண்டு வருடங்கள் நான்கு மாதங்களில் நிறைவடையும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவருக்குப் பிணை வழங்குவதற்கான வாய்ப்பு நீதிமன்றத்திற்கு உள்ளது. மேன்முறையீட்டினை விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதற்கு பொதுவாக மூன்று அல்லது நான்கு வருடங்கள் எடுப்பதற்கான வாய்ப்புள்ளது. இந்தளவு காலம் குற்றவாளியைச் சிறையில் வைத்திருப்பது நியாயமானதல்ல. அரசியலமைப்பு மற்றும் பிணைச் சட்டங்களுக்கு அமைய தனி மனித சுதந்திரம் உன்னதமாக கருதப்பட வேண்டும். எனவே, நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள விருப்புரிமையைப் பயன்படுத்தி, எனது கட்சிக்காரருக்கு பிணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, தற்போது நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரரின் உடல்நிலை தொடர்பில் கவனிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்” என ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றில் விடயங்களை முன்வைத்தார்.

இதன்போது நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்த அரச தரப்பு சட்டத்தரணி லக்மாலி திஸாநாயக்க, 'தேரருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற முடியாதளவுக்கு கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே அவருக்கு பிணை கோருவதற்கு அவரது நோய் நிலையை ஒரு காரணமாக ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை” எனக் குறிப்பிட்டார்.

இதன்போது நீதிமன்றத்தில் உரையாற்றிய உயர் நீதிமன்ற நீதிபதி, “குற்றவாளிகளுக்கு பிணை வழங்குவதற்கு பிணைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு வாய்ப்பு இருப்பதாக் குறிப்பிடப்பட்டாலும், பிணைச் சட்டத்தின் விதிகள் சந்தேக நபர்களுக்கோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கோ பொருந்துமே தவிர, குற்றவாளிகளுக்கு அல்ல. நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள ஒருவருக்கு பிணைச் சட்டத்தின் விதிகள் பொருந்தாது என்று உச்ச நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

பிணை வழங்குவதற்கு சிறப்பான விடயங்கள் தேவை. இந்த மனுவின், பிணைக் கோரிக்கையில் சிறப்பு விடயங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை” எனக் குறிப்பிட்ட நீதிபதி பிணை மனுவை நிராகரித்தார்.

இனி ஞானசார தேரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் சென்றே பிணைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும். அதற்கமைவாக, மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அவரது சட்டத்தரணிகள் தற்போது தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஞானசார தேரருக்கு முதல் தடவையாக கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது கடந்த 2018ஆம் ஆண்டாகும். கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி ஹோமாகமை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பான வழக்கு விசாரணையின் போது வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை அந்த நீதிமன்றத்தினுள் கோசமிட்டு குழப்பம் விளைவித்து நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குறிப்பிடப்பட்டு அப்போதைய ஹோமாகம நீதவான் ரங்க திசாநாயக்காவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறையீட்டின் பிரகாரமாகும். இதன் போது கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஆறு வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி கடந்த 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வாறு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரர், கடந்த 2019ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் மூலம் விடுதலை செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும், உச்ச நீதிமன்ற வரலாற்றில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்ட முதல் பிக்குவாக கலகொட அத்தே ஞானசார தேரர் வரலாற்றில் இடம்பிடித்தார். ஜனாதிபதி மன்னிப்பின் மூலம் விடுதலை பெற்று வெளியே வந்த போதிலும், ஐந்து வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு தடவை கடூழிய சிறைத்தண்டனை விதித்து அவருக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

*நிமந்தி ரணசிங்க*
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து கட்சியைப் பாதுகாக்க வேண்டும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திசாநாயக்க



**உங்கள் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர் பதவியில் செயற்படுவதைத் தடைசெய்து இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறிருக்கும்?**

நீதிமன்றம் நியாயமான தீர்மானத்தை வழங்கியிருக்கின்றது. அவர் தலைவர் பதவியில் செயற்படுவதைத் தடைசெய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஸ்ரீ.ல.சு.கட்சியினரை சௌகரியங்களுக்கு உள்ளாக்காமல் கட்சியை வலுப்படுத்தும் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**புதிய தலைமைத்துவம் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதா?**

எமக்கு தலைமைத்துவம் தொடர்பில் பிரச்சினை இல்லை. எனினும் கட்சியை வலுப்படுத்தும் பயணத்தை ஆரம்பிப்போம். இந்த நீதிமன்ற தீர்மானத்தின் பிரகாரம் கட்சியின் எதிர்கால பயணம் தொடர்பில் நாம் தீர்மானிப்போம். தலைவர் பதவியில் பிரச்சினை இல்லை.

**அண்மையில் ஸ்ரீ.ல.சு. கட்சியினுள் வெடித்த குழப்பம் என்ன?**

ஸ்ரீ.ல.சு.கட்சியில் மைத்திரிபால சிறிசேனவும் நானும் 2015ஆம் ஆண்டு குடும்ப ஆதிக்கத்திலிருந்து கட்சியைப் பாதுகாப்பதற்காகவே வெளியேறினோம். எனினும் இன்று நாம் விருப்பமில்லாவிட்டாலும் ஸ்ரீ.ல.சு கட்சியை மைத்திரிபால சிறிசேனாவிடமிருந்து காப்பாற்றவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

**கட்சி பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது தானே?**

நாம் நீதிமன்றத்தில் அதனை சரி செய்து கொண்டோம். அவர் எம்மைக் கட்சியிலிருந்து நீக்கியது தவறு என்பதை நீதிமன்றம் தீர்மானித்து விட்டது. அந்த நீதிமன்றத் தீர்மானத்தின் பிரகாரம் நான் இன்னமும் கட்சியின் தேசிய அமைப்பாளராகும். அமைச்சர் லசந்ததான் கட்சியின் பொருளாளர். அமைச்சர் மஹிந்த அமரவீர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்.

**ஜனாதிபதி ரணிலின் தேர்தல் பிரசாரத்திற்கு நீங்கள் ஆதரவு வழங்கியதே இதற்குப் பின்னால் உள்ள வலுவான குற்றச்சாட்டாகும். சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் என்ன?**

அவர் எந்த ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய குற்றச்சாட்டுக்களையும் சுமத்தவில்லை. கட்சிப் பதவிகளிலிருந்து ஒருவரை நீக்கும்போது அதனை பகிரங்ககூட்டம் ஒன்றின் பின்னரே நீக்கவேண்டும். அதுதொடர்பில் உறுதியான காரணங்களை முன்வைத்து கட்சியின் யாப்புக்கு அமையவே அந்தச்செயற்பாடு இடம்பெற வேண்டும். தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக எம்மீது குற்றம் சுமத்தப்படுமானால் அவரும் ஜனாதிபதியைச் சந்தித்து உதவிகேட்டதை என்ன வென்றுகூறுவது? எமது தலைவராக மைத்திரிபால சிறிசேன தற்போதைய ஜனாதிபதியைச் சந்தித்து உதவிகோரியிருப்பதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது. அவரால் உதவிபெற முடியுமானால் நாம் நாடு வீழ்ந்துள்ள நேரத்தில் நாட்டு மக்களுக்காக சில தீர்மானங்களை மேற்கொள்வதில் பிரச்சினை ஏற்படப் போவதில்லையே.

**இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வங்குரோத்தடைந்த கட்சியாகும். 140 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பொறுப்பேற்றுக் கொண்ட கட்சியில் இன்று மீதமிருப்பவர்கள் இருவர் மாத்திரமேயாகும்?**

இன்றுவரைக்கும் வங்குரோத்து நிலையில்தான் இருந்தது. எனினும் இப்போது வங்குரோத்தான கட்சியல்ல.

**இவ்வாறான நிலையில் வேறு கட்சிகளிடமிருந்து அழைப்புக்கள் வரவில்லையா?**

நாம் வேறு எந்தக்கட்சிக்கும் செல்ல மாட்டோமே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுவிட்டு எமது குழுவினர் வேறுகட்சிகளுடன் இணையும் எதிர்பார்ப்பு இல்லை. எனினும் நாம் ஆரம்பத்திலிருந்தே கட்சியில் இருந்து கொண்டு போராடியது கட்சியைப் பாதுகாப்பதற்கே அல்லாமல், எமது பயணத்தை சிறப்பாக்கிக் கொள்வதற்கல்ல. எமது தேவை ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சரியான பாதைக்கு கொண்டு வருவதும், கட்சி ஆதரவாளர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுமேயாகும். எனினும் எப்போதும் இடம்பெற்றது கட்சியில் பிரச்சினை ஏற்பட்டதன் பின்னர் தங்கள் பயணத்தை மாற்றிக்கொண்டு சென்றதேயாகும்.

**ஜனாதிபதி ரணிலின் நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடு தொடர்பில் திருப்தி கொள்ள முடியுமா?**

இப்போது நாம் அனைவரும் வரிசை யுகத்திலிருந்தும், மின் துண்டிப்பிலிருந்தும் மீண்டிருக்கின்றோம். அதுதொடர்பில் நாட்டு குடிமகன் என்ற வகையில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். மின்சாரம் துண்டிக்கப்பட்ட காலம், அது எந்தளவு காலம் என்பதை அன்று நாம் அறியாதிருந்தோம். எனினும் தற்போதைய அரசாங்கத்தினுள் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பொது ஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் உள்ளனர். அவர்கள் அனைவரும் இந்தப் பொறுப்பை ஏற்று நாட்டை ஒருநிலைக்கு கொண்டு வந்துள்ளார்கள். அது நூறுவீதம் நல்லநிலையா இல்லையா என்பது வேறுவிடயம். எனினும் இருந்த பிரச்சினைகளிலிருந்து இன்று நாம் விடுபட்டிருக்கின்றோம்.

**வெளிநாட்டுக் கடனைச் செலுத்தாதனாலேயே அரசாங்கம் இந்த நிவாரணங்களை வழங்குவதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றவே?**

எதிர்க்கட்சியைப் போன்று யார் நாட்டைப் பொறுப்பேற்றாலும் இதைத்தான் செய்யவேண்டும். அநுரகுமார திசாநாயக்க நாட்டைப் பொறுப்பேற்றாலும் இதைத்தான் செய்யவேண்டும். முதலில் செய்யவேண்டியது மக்கள் மூச்சுவிட இடமளிக்க வேண்டும். அதற்கு ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று எவரையும் குற்றம் சுமத்துவதில் பலனில்லை. இன்று ஆளும், எதிர்க்கட்சி பேதங்களின்றி இந்த வசதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வது மிகச் சிரமமாகும். பொருட்களின் விலைகள் அதிகம் என்பதை நாம் அறிவோம். எனினும் எமது முதலாவது போராட்டமாக இருந்தது வரிசைகளை இல்லாமலாக்குவதாகும். இன்று அவர் அரசியல் கட்சிகளுடன் ஒரு வேலைத்திட்டத்துடன் பேசி அதனை முன்வைத்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் நாமும் சிந்திக்கலாம்.

சுபாஷினி ஜயரத்ன
*தமிழில்– எம். எஸ். முஸப்பிர்*

# சிறந்த தலைவர் ரணில்தான் என்பதை நாடே ஏற்றுக் கொண்டு விட்டது

## ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன



**தற்போது, நாடு ஒரு நல்ல நிலைக்குள் வந்து விட்டது. நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

சுதந்திரத்தின் பின்னர் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்நாட்டை ஆட்சி செய்தன. எனினும் எமது ஒற்றுமின்மையின் காரணமாக கடைசியில் நாடு வங்குரோத்து அடைந்தது. எனினும் இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கையின் எந்த ஒரு அரசியல்வாதியும் இருக்கவில்லை. கடைசியில் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய தலைவர் மாத்திரமேயாகும். இப்போது வங்குரோத்தடைந்த நாடு உலக சாதனையை ஏற்படுத்தி மிகக் குறுகிய காலத்தினுள் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொண்டதைப் போன்று கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காகவும் வேலைத்திட்டங்களையும் உருவாக்கியுள்ளது. எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளும் நோக்கிற்கு அமைய நாடு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இதனைத் தவிர பயணிப்பதற்கு வேறு பாதைகள் இல்லை.

**நாட்டைக் கட்டியெழுப்பும் முறையை மாற்றக் கூடாது என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். இதை மாற்றினால் நாடு பழைய நிலைக்கு திரும்பக் கூடும் என்றா கூறுகின்றீர்கள்?**

இந்த நிலைக்கு மீண்டும் திரும்பினால் பொதுமக்கள் சிரமத்தில் விழ வேண்டியேற்படும். நாம் 2020இல் சொன்ன விடயங்களை மக்கள் கேட்கவில்லை. அவர்கள் தாம் விரும்பியதைச் செய்து நாட்டை அழித்துக் கொண்டார்கள். மீண்டும் நாட்டை அழிக்க வேண்டாம். இன்று விசித்திரக் கதைகளைக் கூறுபர்களும் உள்ளார்கள். அவர்கள் பொதுமக்களை ஏமாற்றி வருகின்றனர். பொது மக்கள் அதற்கு ஏமாந்தால் அதன் பொறுப்பை மக்களே ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்த வழியில் மாத்திரம்தான் பயணிக்க வேண்டும். வேறு வழிகள் இல்லை. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, உதவி வழங்கும் ஜப்பான் நிறுவனம், ஜய்க்கா நிறுவனம், இந்தியா, சீனா மற்றும் தனியார் கடன் வழங்கும் நிறுவனங்கள், பெரிஸ் க்ளப் போன்று இந்த அனைத்து நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி சர்வதேச இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கின்றோம். சர்வதேச இணக்கப்பாடு மீறப்பட்டால் மீண்டும் ஆறு மாதங்கள் கடக்கும் போது நாடு முன்னர் இருந்த நிலைக்குள் விழ நேரிடும். எனவே இந்தப் பாதையை மாற்ற முடியாது. சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதியினால் அனேகமான சட்டதிட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.

**எனினும் எதிர்க்கட்சி தலைவரைப் போன்று தேசிய மக்கள் சக்தியும் தாம் ஆட்சிக்கு வந்தால் IMF வேலைத்திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்யப் போவதாக் கூறியுள்ளதே?**

இவை சிறு பிள்ளைகள் கூறும் பகிடிக் கதைகள் போன்றவை. இவற்றிற்கு பொது மக்கள் ஏமாறப் போவதில்லை. உலகில் உயர் நிதி கையாளும் நிறுவனமான சர்வதேச நாணய நிதியம் தீர்மானம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் அதற்கு மேலாக வேறு நடவடிக்கைகள் இருக்க முடியாது.

**நாடு தேர்தல் ஒன்றுக்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றது. தேர்தலை குறி வைத்தே பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதாகவும், நிவாரணங்கள் வழங்கப்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றனவே?**

எதிர்க்கட்சிகள் எப்பொழுதும் இது போன்ற செயல்களைச் செய்து வருகின்றன. ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றாலும் தோற்றாலும் உண்மையைக் கூறும் தேசிய தலைவர். அவர் 2001இல் சொன்னதைத்தான் இன்று செய்கிறார். 2001இல், அவர் கூறியவற்றை பொது மக்கள் கேட்கவில்லை. அவர் தேசத் துரோகி என்று ஒதுக்கப்பட்டார். 2015இல் மீண்டும் சரிசெய்து கொண்டு சென்று மீண்டும் 2019ஆம் ஆண்டு அவர் மாற்ற வேண்டாம், வீதியில் விழுவீர்கள் எனக் கூறினார். அதனையும் மக்கள் கேட்கவில்லை. எனவே சரியான பாதையைக் காட்டுவது நமது கடமை. அவ்வாறு சுட்டிக் காட்டிய பிறகும் மக்கள் ஏற்கவில்லை என்றால் மீண்டும் அதே நிலை வரலாம். உலக வங்கி அறிக்கைக்கு அமைய 2022ஆம் ஆண்டு இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியதாகவும், நிலவிய பலவீனங்கள் காரணமாக 2020ஆம் ஆண்டு சர்வதேச சந்தை இழக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2022ஆம் ஆண்டாகும் போது அரசாங்கம் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்த முடியாததால் வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டது. இலங்கையின் பொருளாதாரம் மீட்சிப் பாதையை எட்டியுள்ள போதிலும், பொருளாதார நெருக்கடியின் கடுமையான விளைவுகளை ஏழைகள் மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான மக்கள் உணராமல் தடுப்பது மிகவும் முக்கியமானது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான் அஸ்வெசும போன்றவற்றை வழங்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது போன்ற வலுவான பொருளாதார சீர்திருத்தங்களை தொடர வேண்டியது முக்கியம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு வெளியே எந்த வியாபாரமும் இல்லை. இது குறித்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**வரும்காலங்களில் நாடு தொடர்பில் புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதா? இவ்வருட இறுதியில் சாதகமான நிலை ஏற்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ளாரே?**

உலகம் தொடர்பான அறிவுரைகளை ஏற்று செயல்படக்கூடிய ஒரு தலைமை இதுவரை இருந்ததில்லை என்று நினைக்கிறேன். வெளிநாட்டுக் கடன் தொடர்பான ஆலோசனைகளை சரியான முறையில் கவனிக்கக்கூடிய தலைமை இருக்கவில்லை. வெளியுறவுக் கொள்கையில் முடிவெடுக்கும் தலைமை இருக்கவில்லை. நாட்டுக்குத் தேவைப்பட்டது உலகத்தைப் பற்றிய புரிதல் கொண்ட தலைமையாகும். இலங்கையின் அதிர்ஷ்டவசமாக ரணில் விக்கிரமசிங்க என்ற தேசியத் தலைவர் மீதமிருந்தார். அவருக்கு எந்த ஒரு ஆலோசகரும் தேவையில்லை. நிதி அமைச்சு, மத்திய வங்கி, சர்வதேசத்தைக் கையாள்வதற்கு அவரால் முடிந்தது. எனினும் அவருக்கு பதிலாக மக்கள் தெரிவு செய்வது யாரை என்பதை நாம் கேட்க வேண்டும். வகுப்பில் டீச்சர் இல்லாத நேரம் வகுப்பை பார்த்துக் கொள்வது மொனிட்டராகும். எனினும் டீச்சர் வந்ததன் பின்னர் மொனிட்டர் மீண்டும் வகுப்பில் சென்று அமர வேண்டும். அரகலவின் போதும் நடந்தது இதுவேயாகும். அரகலயின் போது மொனிட்டர்மார் ஆங்காங்கே சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அதிபர் வந்ததன் பின்னர் அனைவரும் அமர்ந்து விட்டார்கள். வேலை செய்யக் கூடிய தலைவர் ரணில்தான் என்பதை இன்று நாட்டு மக்களே ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

# இலங்கை சினிமாவில் பந்துல குணவர்தன

## ஒரு தனித்துவமான அடையாளம்











உலகில் உள்ள எந்த ஒரு சினிமா தயாரிப்பாளராக இருந்தாலும் அவருக்கு தன் சொந்தப் படத்தை வெளியிட வேண்டும் என்ற கனவை நனவாக்கவும், அதன் ஊடாக தன் படைப்பை ரசிகர்களுக்கு வழங்குவதற்கும் பொருளாதாரம் தேவைப்படும். இயக்குனரே தயாரிப்பாளராகவும் செயற்படுவது உலகில் அரிதானதாகும். எனவே, உலக சினிமாவில் தயாரிப்பாளர்களின் செயற்பாடுகளுக்கு தனி மரியாதை உள்ளது. தயாரிப்பாளர் ஒரு திரைப்படத்திற்காக பணத்தை முதலீடு செய்பவர் மட்டுமல்ல, இந்த சிறந்த சாதனையின் காரணமாக உலக சினிமாவில் ஒரு சிக்கலான, தீர்க்கமான, பயனுள்ள மற்றும் எதிர்காலம் சார்ந்த பாத்திரத்தை வகிப்பவராகும்.

அண்மையில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்ற 35ஆவது சரசவிய விருது விழாவின் போது 2020ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமாக "The Newspaper" திரைப்படம் விருதினைப் பெற்றுக் கொண்டது. கலாநிதி பந்துல குணவர்தன, எச்.டி.பிரேமசிரி மற்றும் ரவீந்திர குருகே ஆகியோர் இப்படத்தின் தயாரிப்பாளர்களாகும். ஒரு திரைப் படத்தின் இயக்குநரின் பாத்திரம் சிறந்த இயக்குனர் விருதின் மூலம் மதிப்பிடப்படுவதால், சிறந்த திரைப்பட விருதின் உரிமையாளர் அதன் தயாரிப்பாளராகும். இம்முறை 2020ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான விருதினை “The Newspaper” திரைப்படத்திற்காகப் பெற்றுக் கொண்ட ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கு அது முக்கியத்துவ மிக்கதாக அமைவது சரசவிய விருது விழா வரலாற்றில் சிறந்த தயாரிப்புக்காக அவர் மூன்று தடவைகள் (சுத்திலாகே கதாவ 1986, சிறிமெதுர 1990, “The Newspaper” 2024) விருதினைப் பெற்றுக் கொண்டதனாலாகும். சிறந்த தயாரிப்புக்காக மூன்று தடவைகள் விருதினைப் பெற்றுக் கொண்ட தயாரிப்பாளர் ஒருவரை சரசவிய விருது விழா வரலாற்றில் இதற்கு முன்னர் நாம் காணவில்லை. இவ்வாறு மூன்று வருடங்கள் சரசவிய விருதினைப் பெற்றுக் கொண்ட ஒரே தயாரிப்பாளர் கலாநிதி பந்துல குணவர்தனவாகும்.

The Newspaper திரைப்படத்திற்கு கிடைத்த சர்வதேச விருது

"சுத்திலாகே கதாவ" மற்றும் "சிறிமெதுர" ஆகிய திரைப்படங்கள் 100 நாட்களுக்கு மேல் திரையிடப்பட்டு வருமானத்தை ஈட்டி, பார்வையாளர்களின் கவனத்தையும் ஈர்த்ததைக் குறிப்பிட வேண்டும். கலைப் படங்கள் வணிக ரீதியாக வெற்றி பெறுவது பெரும்பாலும் நடைபெறுவதில்லை.

மூத்த ஊடகவியலாளரும் எழுத்தாளருமான தேனகம சிறிவர்தன சூரியவினால் உண்மைக் கதையைத் தழுவியதாக திவயின பத்திரிகைக்கு எழுதப்பட்ட “அயோமா” என்ற நாவல் கலாநிதி பந்துலவின் கவனத்தை ஈர்த்ததோடு, அதன் இயக்கத்தை பராக்கிரம நிரியெல்லவிடம் ஒப்படைத்து அவர் அந்தத் திரைப்படத்தைத் தயாரித்தார். இங்கு, ஜாக்சன் ஆண்டனியின் நடிப்புத் திறன் 1996ஆம் ஆண்டு சரசவிய விருது விழாவின் போது பாராட்டப்பட்டது.

“அயோமா” (1995) திரைப்படம் வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினை தீவிரமடைந்து நாடு முழுவதும் குண்டுகள் வெடித்து மக்கள் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் திரையிடப்பட்டது. மறுபுறம் அந்தக் காலத்தில் உள்ளூர் திரையுலகம் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்தது. சினிமாத் திரைப்படத் தயாரிப்புத் துறையில் சிறிதுகாலம் ஒதுங்கியிருந்த கலாநிதி பந்துல குணவர்தன, அரசியல் துறையில் தன்னை அதிகம் அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்.

சுமார் இரண்டு தசாப்த கால மௌனத்தின் பின்னர், கலாநிதி பந்துல குணவர்தன, ரிச்சர்ட் டி சொய்சாவின் கொலையை அடிப்படையாகக் கொண்டு திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க, அதனை மூத்த ஒளிப்பதிவாளர் நிலேந்திர தேசப்பிரியவிடம் ஒப்படைத்தார்.

இதன் பிரதான பாத்திரமான மனோராணி சரவணமுத்துவின் பாத்திரத்தில் நடிப்பதற்கு தெரிவாகி இருந்தது முன்னணி அழகுக்கலை நிபுணரான ஸ்வர்ணா மல்லவராச்சியாகும். இங்கு ஆரம்பவிழா நடத்தப்பட்டு, ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, அனைத்து நடிகர், நடிகைகளுக்கும் முற்பணமும் வழங்கப்பட்டது. கலாநிதி பந்துல குணவர்தன என்னிடம் ஒருமுறை கூறியது போல், இந்தப் படத்தின் தயாரிப்பை நல்லாட்சி அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் தடை செய்திருந்தனர்.

கலாநிதி பந்துல குணவர்தனவின் பழைய மாணவராக இருந்த சரத் கொத்தலாவல “தன்ஹா ரதி ரகா” என்ற திரைப்படத்திற்கு வழங்கிய பங்களிப்பை நினைவுகூர்ந்த அவர், குமார திரிமதுரவுடன் இணைந்து எழுதிய “The Newspaper” திரைப்படத்தின் திரைக் கதையை கொண்டு வந்தார். இந்த திரைக்கதையை வாசித்த பந்துல குணவர்தன அக்கதையை மிகவும் விரும்பினார். அதற்கான காரணத்தையும் அவரது வரவிருக்கும் தயாரிப்புகளையும் அவர் என்னிடம் இவ்வாறு கூறினார்.



“அப்போது சர்வதேச ஊடகங்கள் இலங்கையின் நற்பெயரை சர்வதேச ரீதியில் மிக மோசமாக களங்கப்படுத்தியிருந்தன. நாம் ஒரு கொடூரமான கொலைகார இனம் என்ற கருத்தை உலகம் முழுவதிலும் ஊடகங்கள் உருவாக்கியிருந்தன. இந்த நாட்டில் ஊடகச் செயற்பாட்டின் நடைமுறை அனுபவங்களையும் நான் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் தான் மீடியாவின் யதார்த்தத்தைப் பற்றிக்கூறும் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க வேண்டும் என்று நினைத்தேன். இந்தப் திரைப்படத்தை சரத் மற்றும் குமார இருவரும் இயக்கினால் உலக சாதனை படைக்கும் என்று நினைத்தேன்.

திரைக் கதையை எழுதிய இருவரும் இயக்கி நடித்திருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

அதற்கு முன்னர் மேடை நாடகம் மற்றும் டெலி நாடகக் கலைஞர்களாக பிரபலமடைந்திருந்த குமார திரிமதுர மற்றும் சரத் கொத்தலாவல ஆகியோர் இந்தப் படத்தினை இயக்கியது மட்டுமில்லாமல், சர்வதேச விருதுகளையும் வென்றனர். எனவே இது எனது மிகச் சரியான முடிவு என்று உணர்கிறேன். அதன்பிறகு, புதிய இயக்குனர்கள் தங்கள் முதல் படங்களை உருவாக்குவதற்கு அர்த்தம் தரும் திட்டத்தை தொடங்க வேண்டும் என்று நினைத்தேன். அதன் பிரகாரம், நான் மற்றொரு விருது பெற்ற தயாரிப்பாளரான எச். டி. பிரேமசிறி மற்றும் முன்னணி எடிடிங் கலைஞரான ரவீந்திர குருகே ஆகியோரை "தமரசித் தேரே" தயாரிப்பு நிறுவனத்தில் இணைத்துக் கொண்டேன்.

அதன் அடுத்த கட்டமாக, அதுவரை மேடை நாடகங்களையும், தொலைக்காட்சி நாடகங்களையும் உருவாக்கிய பேராசிரியர் ஆரியரத்ன அதுகலையவின் வேண்டுகோளின் பேரில், தனது திரையுலகப் பிரவேசத்தைக் குறிக்கும் வகையில் "சஹோா" (2023) என்ற திரைப்படத்தைத் தயாரித்தார். இது பல்கலைக்கழகத்தை அடிப்படையாகக் கொண்ட திரைப்படமாகும். சினிமா அம்சங்கள் இருந்த போதிலும், துரதிர்ஷ்டவசமாக அது போதுமான விமர்சன கவனத்தையும் பரந்த பேச்சுக்களையும் பெறவில்லை. பல சர்வதேச விருதுகளும் அதற்குக் கிடைத்து. கடந்தகாலத்தில் நிலவிய கொவிட் தொற்றுநோய் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளும் இதற்கு காரணமாக இருந்தன. கொவிட் தொற்று நோய்க் காலத்தில் திரைப்படத்தை திரையிடுவதற்கு எமது தயாரிப்பாளர்கள் பயந்தனர். நான் அந்தச் சவாலைப் பொறுப்பேற்று “The Newspaper” திரைப்படத்தைத் திரையிட்டதன் பின்னர் ஏனைய தயாரிப்பாளர்களும் அவர்களது திரைப்படங்களைத் திரையிட ஆரம்பித்தார்கள். நான் பராக்கிரம நிரியெல்லவை சினிமா இயக்குனராக அறிமுகப்படுத்தி இரண்டு திரைப்படங்களைத் தயாரித்த போதிலும் அவர் அதன் பின்னர் சினிமா தயாரிப்பில் பங்களிக்காமையால் அவரைப் போன்ற படைப்பாளர்களின் படைப்புத்திறன் வீணாகிப்போனது. எனவே நான் மீண்டும் அவரைக் கொண்டு திரைப் படம் ஒன்றைத் தயாரித்தேன். அது “சிஹின குமாரி” என்ற திரைப்படமாகும். அது இரண்டு கதாபாத்திரங்களை மட்டுமே கொண்ட வித்தியாசமான ஒரு தயாரிப்பாகும். இதுதவிர எனது மற்றுமொரு திரைப்படத் தயாரிப்பு, முழுவதுமாக முடிவடைந்துள்ள திரைப்படம் "ஆதர அந்தய". இதனை அசோகா அதாவுத ஹெட்டி இயக்கியுள்ளார்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நெருக்கடிகளில் ஒன்று அந்நிய செலாவணி நெருக்கடியாகும். நாட்டில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் துறையாக திரைப்படங்களை உருவாக்க வேண்டும் என்பதே எனது எதிர்கால எதிர்பார்ப்பாகும். 13ஆவது பெங்களூர் திரைப்பட விழாவில், ஆசியாவின் இரண்டாவது சிறந்த திரைப்படமாக “The Newspaper” திரைப் படம் விருது பெற்றபோது 3000 அமெரிக்க டொலர் பரிசாகக் கிடைத்தது. கடந்த சரசவிய விருது வழங்கும் விழாவில் மூன்றாவது முறையாக சிறந்த தயாரிப்புக்கான விருதினை கலாநிதி பந்துல குணவர்தன “The Newspaper” திரைப்படத்திற்காகப் பெற்றுக்கொண்டார். அதேபோன்று 2020ஆம் ஆண்டின் சிறந்த ஒளிப்பதிவு திரைப்படத்திற்குரிய விருதும் அவருக்குக் கிடைத்தது முக்கியஅம்சமாகும்.

### சுத்திலாகே கதாவ

கலை ஒளிப்பதிவு அம்சங்களைத் தவிர, இந்தப் படத்தில் வரும் தற்போதைய பிரபலமான தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் காணப்படும் பிரபலமான அம்சங்கள் அடங்கியிருப்பதே இவ்வாறான விருதுக்கு வழிவகுத்தது என்பது உறுதியானதாகும். இத்திரைப்படம் 8 சரசவிய விருதுகளை வென்றது.

(சிறந்ததயாரிப்பு பந்துல குணவர்தன, எச். டீ. பிரேமசிரி, ரவீந்திர குருகே, சிறந்த ஒளிப்பதிவு –குமார திரிமாதுர, சரத் கொத்தலாவல, சிறந்த நடிகர் –குமார திரிமதுர, சிறந்த பாடகி –நந்தா மாலினி –தோலேதியத் கீதய சிறந்த பாடலாசிரியர் –பேராசிரியர் சுனில் ஆரியரத்ன –தோலேதியத் கீதய, சிறந்த ஒப்பனை –பிரேமலால் லியனகே, சிறந்த ஒளிப்பதிவு –சந்தன ஜயசிங்க, திறமை விருது –சிந்தக வாஸ்)

ஊடக யதார்த்தத்தை வெளிப்படுத்தும் திரைப்படங்கள் இலங்கைத் திரையுலக வரலாற்றில் மிகவும் அரிதானவை. மீண்டும் பின்னோக்கிப் பார்க்கையில், ஊடக யதார்த்தத்தை வெளிப்படுத்தும் இயக்குனரின் கவனம் செலுத்தப்பட்ட இரண்டு இலங்கைத் திரைப்படங்கள் எனக்கு நினைவிற்கு வருகின்றன. டி. பி. வர்ணசிறியின் "சத்யகிரஹனா" (1987) என்ற திரைப்படம் அவற்றில் ஒன்றாகும். கடந்த காலங்களில் ஊடக தணிக்கை இருந்தது. இரண்டாவது “The Newspaper” ஆகும். எனவே, அரிய பொருள்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச ரீதியாகவும் உள்ளூரிலும் பாராட்டுகளைப் பெற்ற படைப்பாக இது இலங்கைத் திரையுலகில் ஒரு வலுவான அடையாளமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

**கலாநிதி நுவன் நயனஜித்குமார**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**


## இலங்கை வங்கி

### பெறுமதிமிக்க ஆதனங்கள் விற்பனைக்கு

| ஆதன இல. | நகரம் | விபரமும் அமைவிடமும் | ஆதனத்தின் வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 426 | ஊருபொக்க | ஓவிட்டவத்த பெரலபானத்தர வடக்கு, ஊருபொக்க | காணியும் வீடும் | 1 ரூட் 23.0 பேச் |
| 511 | குருணாகல் | வேபொட பில்லேவ பிதுருவெல்ல கிராமம், உகுமிய | வெற்றுக் காணி | 44.7 பேச் |
| 526 | யாழ்ப்பாணம் (சுழிபுரம்) | வரையறுக்கப்பட்ட கே.எம்.கே. சீ ஃபூட்ஸ் (தனியார்) நிறுவனம் நொச்சிக்குழி இல. 343, காரைநகர் வீதி, மூளாய், சுழிபுரம், யாழ்ப்பாணம் | காணியும் தொழிற்சாலைக் கட்டடங்களும் | 1 ரூட் 10.52 பேச் |
| Tri Star | புத்தல | வரையறுக்கப்பட்ட ட்ரை ஸ்ரார் அப்பரல்ஸ் (தனியார்) நிறுவனம் (1991.12.01இல் இருந்து 99 ஆண்டுகள் குத்தகை) (நீதிமன்ற அனுமதிக்கமையவே விலை கூறுபவர் தெரிவுசெய்யப்படுவார்) | காணியும் தொழிற்சாலைக் கட்டடங்களும் | 02 ஏக்கர் ரூட் 33.315 பேச் |

ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து (உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களுக்கான விலைகூறல்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மீளளிக்கப்படாக் கொடுப்பனவாக 2000 ரூபாவையும் (மேலதிகமாக பெ.சே.வரி @18% + SSCL @2.5% அறவிடப்படும்) மீளளிக்கப்படக்கூடிய கொடுப்பனவாக 50,000 ரூபாவையும் செலுத்தி 2024.04.08 வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைகூறுவோர், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தொடர்புடைய ஆதன இலக்கத்துடன் ‘PROP/04/2024’ எனக் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட கடித உறையினுள் இட்டு 2024.04.30 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் 2024.04.30 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த அலுவலகத்தில் நடைபெறவுள்ள விலைகூறல் திறப்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைகூறுவோரால் அனுப்பப்படும் விலைகூறல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

**முகவரி,**
இலங்கை வங்கி,
பெருநிறுவன அறவிடற் பிரிவு கையகப்படுத்தப்பட்ட ஆதனங்கள் அலகு
3ஆம் மாடி, தலைமையகம், ‘இலங்கை வங்கிச் சதுக்கம்’
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01

**தொலைபேசி**
உதவிப் பொது முகாமையாளர் (பெருநிறுவன அறவிடல்) – 011-2386080 / 011-2203410
சிரேஷ்ட முகாமையாளர் – 011-2321170 / 011-2203429 / 076 9627068
உதவி முகாமையாளர் – 011 220 3470 / 071 8418898

**மின்னஞ்சல்** – mgrforeclosed@boc.lk
*www.boc.lk என்ற இணையதளத்தில் விசேட அறிவித்தல்களின் கீழுள்ள விற்பனைக்குள்ள ஆதனங்கள் பகுதி மற்றும் இலங்கை வங்கி முகநூற் பக்கம் என்பவற்றைப் பார்வையிடவும்.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



# அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# சர்வதேச நாணய நிதியத்தின் விடயத்தில் எதிர்க்கட்சியினர் இரட்டை நிலைப்பாடு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வழங்கிய பேட்டி

**எதிர்க்கட்சியினர் சர்வதேச நாணய நிதியத்துக்கு ஒரு கருத்தையும், நாட்டு மக்களுக்கு மற்றொரு கருத்தையும் கூறி இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாட்டின் பிந்திய அரசியல் நிலைவரங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான நிதிஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து எம்முடன் அமைச்சர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் இணங்கிய உடன்படிக்கைக்கு தமது கட்சிக்கு உடன்பாடில்லை என்று தேசிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: அவர்களின் பொறுப்பற்ற அறிக்கைகள் அவர்களின் நிலைமையைப் பிரதிபலிக்கின்றன. ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் சில உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டாக வேண்டும். தேசிய மக்கள் சக்தி என்பது இந்திய எதிர்ப்புகளைக் கொண்ட ஒரு கட்சி. இப்போது இந்தியாவுடன் இணைந்துள்ளது. அவர்கள் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக மக்களைக் குழப்பும் வகையில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். எனினும், மக்கள் இது விடயத்தில் தெளிவாக உள்ளனர்.

**கே: தேசிய மக்கள் சக்தி மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியும் தமது அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றனவே?**

பதில்: சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்ற முடியுமா என்று தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட உடன்பாடு ஏற்பட்ட பிறகு அரசாங்கம் மாறினாலும், உடன்பாட்டில் உள்ள விடயங்கள் அப்படியேதான் இருக்கும். ஆனால் யாராவது அப்படி ஒரு மீளாய்வினை மேற்கொண்டால் நன்றாக இருக்கும். இதனைச் செய்ய முடியுமா, இல்லையா என்பதை வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்க முடியும்.

**கே: தமது அரசாங்கத்தின் கீழ் கடன் மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்படும் என அக்கட்சியின் பொருளாதார சபையின் உறுப்பினரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். இதை முயற்சிக்க முடியுமா?**

பதில்: அது எப்படி முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாட்டு மக்களுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்த வேண்டும். மற்றைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து மறுசீரமைப்பதில் சில உடன்பாடுகள் ஏற்படுகின்றன. எதிர்க்கட்சிகளுடன் அரசு பேசி வருகிறது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்த போது அவர்கள் அப்படிச் சொல்லவில்லை.

**கே: யார் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட நிபந்தனைகளை ஒரு கட்சியின் விருப்பத்திற்கு அமைய மாற்றியமைக்க முடியுமா?**

பதில்: அதாவது, இவர்கள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடம் பேசும்போது ஒரு விடயத்தைச் சொல்கின்றார்கள், மக்களிடம் வந்து வேறொரு விடயத்தைச் சொல்கின்றார்கள். நாட்டில் தமது அரசியல் கட்சியை நிலைநிறுத்துவதற்குத் தேவையான பின்னணியை தயார்படுத்துவதே அவர்களின் நோக்கமாகும். இது ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியின் செயல் அல்ல. நாட்டில் நெருக்கடி ஏற்படும் போது, அனைவரும் பொறுப்புடன் ஒன்றுபட வேண்டிய நேரம் இது. எனவேதான் 'கட்சி பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்' என ஜனாதிபதி தொடர்ந்தும் அழைப்பு விடுத்து வருகின்றார். ஆனால், அதை நாட்டின் அறிவுள்ள மக்கள் புரிந்து கொண்டதால், எதிர்காலத்தில் மக்களின் ஸ்திரத்தன்மையை அறிந்து கொள்ள முடியும். எங்களுடைய யோசனைகளை விட சிறந்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்க ஜனாதிபதி அவர்களுக்கு வாய்ப்பளித்தார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்த அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு கதை பேசுகின்றனர்.

**ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் அரசாங்கத்தை நிறுவி நாட்டை ஸ்திரப்படுத்த முடியும். நாட்டின் நலனுக்காகவும், மக்களுக்காகவும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதை விட ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதே சிறந்தது**

**கே: இலங்கையின் பொருளாதாரப் பாதை மற்றும் பணவீக்கத்தைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது. அரசாங்கம் பயணிக்கும் திசையை அவர்கள் பாராட்டுகிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறதா?**

பதில்: சர்வதேச நாணய நிதியம் மட்டுமன்றி, உலக வங்கியும் வெளியிட்ட அறிக்கைகளைப் பார்த்தால் அரசாங்கத்தின் முயற்சிகளின் வெற்றி தெரியும். குறுகிய காலத்தில் நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்திருப்பது வியப்பளிக்கிறது என அவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்களின் உதவி கிடைத்த அதேநேரம், நாமும் திட்டமிடல்களை சரியாக மேற்கொண்டு நடைமுறைப்படுத்தியதால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது. உலகின் மற்றைய வீழ்ச்சியடைந்த 20 நாடுகளில் குறுகிய காலத்தில் மீட்சிபெற்ற நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆனால், கிணற்றில் உள்ள தேரைகள் போன்ற இவர்கள், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக வேலைசெய்யும் சிலர் மக்களைக் குழப்பி வருகின்றனர்.

**கே: எதிர்வரும் 12 மாதங்களில் இலங்கைப் பொருளாதாரத்தில் சாதகமான வளர்ச்சி காணப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும் எனக் கூறமுடியுமா?**

பதில்: அரசாங்கம் என்ற வகையில் பொதுஜன பெரமுனவின் அணி ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுகின்றது. கோட்டாபயவின் காலத்திலும் இதே குழுவே இருந்தது. சிரேஷ்ட உறுப்பினர்களைக் கூட்டி அதிகாரங்களை வழங்கியதன் விளைவினை நாம் அனுபவித்தோம். ஆனால் தற்போதைய ஜனாதிபதி அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் காரணமாகவே நாடு இந்த நிலையை அடைந்துள்ளது.

**கே: சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ள அடுத்த தவணை கடன் மூலம் மக்கள் சற்று நிம்மதியடைய முடியுமா?**

பதில்: 2022 மே மாதத்தில் நாட்டில் இருந்த நிலைமையையும் இன்று நாட்டின் நிலைமையையும் பார்க்கும்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தெளிவாகத் தெரிகிறது. இது எல்லா இடங்களிலும் பரிணமிக்கின்றது. டொலர் இருப்பு அதிகரித்திருப்பதுடன், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இன்றி கிடைத்து வருகின்றன. அரசாங்கத் துறையில் சம்பள உயர்வு சாத்தியமாகியுள்ளது. எதிர்காலத்தில் வரிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**வரி வசூலிப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் அரசினால் நிவாரணம் வழங்கக் கூடியதாகவுள்ளது**

**கே: 18 வயது நிரம்பிய அனைவரும் வரிக்கான கோப்புகளை ஆரம்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டபோதும், இவ்விடயம் தற்பொழுது அதிகம் பேசப்படுவதில்லை. அது ஏன்?**

பதில்: 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வரிக்கோப்பைத் தொடங்குவது என்பது அனைவரும் வரி செலுத்தப் போகின்றனர் என்பதைக் குறிக்காது.

(20ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய தேர்தலில் துரும்பாக மாறிய கச்சதீவு விவகாரம்!



இந்தியாவில் விரைவில் மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்பாக கச்சதீவு விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ளது. 1974 ஆம் ஆண்டு இந்திரா காந்தி அரசால் இலங்கைக்கு கச்சதீவு தாரைவார்க்கப்பட்ட சம்பவம் மற்றும் அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெற்று வெளியிட்டிருக்கிறார் பா.ஜ.க. தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை.

மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாக்கு நீரிணை பகுதியில் உள்ள கச்சதீவு இந்திய அரசியலின் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுவில் இருக்கும் தகவல்களை பா.ஜ.க மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை செய்தியாளர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இதன்படி, 1974 ஆம் ஆண்டு கச்சதீவை இலங்கைக்கு வழங்குவது தொடர்பாக முடிவெடுத்த போதே இத்தகவல், வெளியுறவுத் துறை செயலாளர் கேவல் சிங் அவர்களால் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டதாக அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

எனவே கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டதில், தி.மு.கவின் பங்களிப்பும் முழுமையாக உள்ளதென்பதே பா.ஜ.கவின் நிலைப்பாடாக உள்ளது. இதனையே தமது ட்விட்டர் பதிவில் பிரதமர் நரேந்திர மோடியும் குறிப்பிட்டுள்ளார்.

'நம்ப முடியாத கட்சி காங்கிரஸ்' என நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தியா - இலங்கைக்கு இடையே பாக்குநீரிணை பகுதியில் 285 ஏக்கர் பரப்பளவில் (1.15 சதுர கிலோ மீட்டர்) அமைந்துள்ளது கச்சதீவு. மக்கள் எவருமே வசிக்காத இடமாகும் இந்த சிறிய தீவு. எரிமலை வெடிப்பு காரணமாக இத்தீவு உருவாகி இருக்கலாம் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கையாகும்.






தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து 33 கிலோ மீட்டர் வடகிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியிலும், இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இருந்து 62 கிலோ மீட்டர் தென்மேற்கு பகுதியிலும் கச்சதீவு அமைந்துள்ளது.

கச்சதீவில் மக்கள் எவரும் வசிப்பதில்லை. அங்கு ஒரேயொரு கத்தோலிக்க தேவாலயம் மட்டும் உள்ளது. ஆண்டுதோறும் பெப்ரவரி அல்லது மார்ச் மாதம் அங்குள்ள அந்தோனியார் திருத்தலத்திற்கு இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பக்தர்கள் சென்று திருவிழா கொண்டாடுவது வழக்கம். கடந்த 2023 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் இருந்து ஏறத்தாழ 2,500 பக்தர்கள் கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவுக்குச் சென்றனர். இவ்வருடம் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற திருவிழாவை தமிழ்நாடு மீனவர்கள் புறக்கணித்தனர்.

1975 ஆம் ஆண்டுக்கு முன்புவரை அங்கு தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். அத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட பின்னர் நிலைமை மாற்றமடைந்தது.

சுதந்திரத்திற்குப் பின்னர் நடந்த சம்பவங்கள் குறித்த சில தகவல்கள் தற்போதைய தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு (RTI) மூலம் தெரியவந்துள்ளது. இதன் மூலம், அப்போது இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வர பல்வேறு வழிகளை இந்தியா ஆலோசித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக 1961 ஆம் ஆண்டில் பேசிய பிரதமர் ஜவஹர்லால் நேரு, கச்சதீவை இலங்கைக்கு கொடுப்பதற்கு நான் தயங்க மாட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார். 1974 ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. ஆனாலும் தீவில் மீன் பிடிக்கவும், வலைகளை காயவைக்கவும் இந்திய மீனவர்களுக்கு இருந்த உரிமை 1976 ஆம் ஆண்டு 'எமர்ஜன்சி' காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு ஒப்பந்தத்தின் மூலம் மறுக்கப்பட்டது.

**குட்டித்தீவை இலங்கைக்கு தாரைவார்த்தமைக்காக காங்கிரஸ் மீது பழியைப் போடுகின்றது பா.ஜ.க!**

இதனைத் தொடர்ந்து கச்சதீவு அருகே பாரம்பரிய இடத்தில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டு மீனவர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டனர். அதேவேளை இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் சூட்டுக்கு இலக்கான சம்பவங்களும் இடம்பெற்றன. இதுவரையான காலப்பகுதியில் 700 இற்கும் மேற்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டதாக தமிழகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தியா - இலங்கை இடையிலான பாக்குநீரிணையில் இருக்கும் கச்சதீவு பாதுகாப்பு ரீதியாக முக்கியத்துவம் பெறுவதைப் போன்று மீனவர்களின் வாழ்வாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பவளப்பாறைகள் நிறைந்த இப்பகுதியில் இயல்பாகவே மீன்வளம் அதிகமாக காணப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்கையில், சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர்களைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், கச்சதீவை மீட்பதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்து கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

கச்சதீவு மீட்பு என்பது தமிழக அரசியல் களத்தில் புதிய முழக்கம் அல்ல. தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த தி.மு.கவும் அ.தி.மு.கவும் கச்சதீவை மீட்போம் என பல தேர்தல்களில் வாக்குறுதி வழங்கியுள்ளன.

நாடாளுமன்றத்திலும் 1960களிலும் சரி, தற்போதும் சரி இந்த விவகாரம் பேசப்பட்டு வருகிறது. இந்த விவகாரம் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் நேரத்தில் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க என கட்சிகள் ஒன்றின்மீது ஒன்று மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 74 மீனவர்களை இலங்கை கைது செய்துள்ளது. தமிழக மீனவர்களின் 67 மீன்பிடிப் படகுகள் இலங்கையிடம் உள்ளன. இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இந்தியாவினால் கச்சதீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த போது, இந்தப் பகுதிகளின் மீது இலங்கையின் கவனம் குறைவாகவே இருந்தது. இதனால் தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பது பெரிய பிரச்சினையாக இருந்ததில்லை.

ஆனால் 2009 இல் போர் முடிந்த பிறகு, இலங்கை தனது கட்டுப்பாட்டை தீவிரப்படுத்தியது. அதன் பிறகு தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும்,படகுகள் கைப்பற்றப்படுவதும் அதிகமாகியுள்ளன.

1974 ஆம் ஆண்டு இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அப்போது இந்தியப் பிரதமராக இந்திரா காந்தியும் இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இருந்தனர்.

அந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளுக்கு இடையேயான எல்லை வரையறுக்கப்பட்டு கச்சதீவு இலங்கைக்குச் சொந்தம் என முடிவானது. எனினும், மீன்பிடி உரிமையும், பயணிகள் விசா இன்றி கச்சதீவு சென்று வரும் உரிமையும் இந்திய மீனவர்களுக்கு பாதுகாக்கப்பட்டு, மீன்வலைகளை உலர்த்தவும் அனுமதி இருந்தது.

ஆனால், அதன் பின்னர் 1976 ஆம் ஆண்டு, இரு நாடுகளுக்கு இடையே மற்றொரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, "இந்திய மீனவர்களும் அவர்களது மீன் பிடிப் படகுகளும் இலங்கைக் கடல் பகுதியிலும் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார மண்டலப் பகுதியிலும் இலங்கையின் அனுமதியில்லாமல் மீன்பிடிக்க அனுமதி இல்லை" என்று கூறியது இந்த ஒப்பந்தத்தின் ஷரத்து.

(20ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

# இந்திய இலங்கை மீன்பிடி பிரச்சினைக்கான நிலையான தீர்வு?





**கடந்த வாரத் தொடர்**

இதற்கிடையில், இரண்டு ஒப்பந்தங்களின்படி, இலங்கை மீனவர்கள் தமக்கு தவிர்க்கப்பட்ட பகுதிக்கு செல்வதைத் தவிர்த்தனர்.

வடமேற்கில் சிலாபத்திலிருந்து கிழக்கில் முல்லைத்தீவு வரையிலான பரந்த வளைவில் தமிழ்நாட்டு இழுவை படகுகள் கைப்பற்றப்பட்ட போது, இந்திய மீனவர்களும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் கச்சத்தீவு தீவை மீட்டெடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த கடற்பரப்பில் உள்ள உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம், தமிழக மீனவர்களின் தொடர்ச்சியான ஊடுருவல்களாலும், இலங்கை அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளாலும் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகிறது.

மாறாக, இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு முயற்சிகள், கடல் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டு, அடிமடி இழுவை மீன்பிடித்தல் போன்ற அழிவுகரமான மீன்பிடி முறைகளிலிருந்து மீன் வளங்களைப் பாதுகாப்பதன் மூலம், குறைந்த எண்ணிக்கையிலான இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்தாலும், ரோந்து மற்றும் தடுப்புக்காவல்களை அதிகரிக்க வழிவகுத்தது.

இந்திய மீனவர்களின் "பாரம்பரிய" மீன்பிடி உரிமைக்கான கோரிக்கைக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான முயற்சிகளுக்கும் இடையிலான இந்த மோதல் சர்ச்சையை சிக்கலாக்குகிறது.

இந்திய இலங்கை மீன்பிடித் தகராறுக்கான தீர்வு இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது, நிலையான மீன்பிடித்தல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் சர்வதேச கடல் எல்லைகளை கடைப்பிடித்தல் என்பவற்றை உள்ளடக்கியது.

இழுவை படகுகளின் உரிமையாளர்களுடனான பேச்சுவார்த்தை, ஒத்துழைப்பு மற்றும் அவர்களுக்கெதிரான எதிரான தண்டனைக்குரிய நடவடிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறைக்கு இது அழைப்பு விடுக்கிறது.

கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு தீங்கு விளைவிக்கும் அடிமடி இழுவை அழிவுகரமான மீன்பிடி முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கு நிலையான மீன்பிடி நடைமுறைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேலும் வளைகுடா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் பல்லுயிர் பாதுகாப்பிற்கான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

மேலதிகமாக, நிறுவப்பட்ட கடல் எல்லைகளை மதிப்பது ஒவ்வொரு நாட்டினதும் பிராந்திய கடல்களுக்குள் மீன்பிடி நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் முக்கியமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும்வாழ்வாதார நிலைத்தன்மையை அது உறுதி செய்கிறது.

பல தசாப்தங்களாக இடம்பெற்று வரும் சட்டவிரோதமாக கடத்தல், உரிமம் இன்றிய மீன்பிடி மற்றும் இலங்கையில் சட்டங்களால் தடை செய்யப்பட்ட அடிமடி இழுவை மீன்பிடியில் ஈடுபடுதல் போன்றவற்றுக்கு உடனடி தீர்வு காண இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்ச்சியான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு அவசியம்.

மேலும் கடலில் வரையறுக்கப்பட்ட வளங்களின் மீதான அழுத்தத்தை குறைக்க 2000 இழுவை படகுகளை மூன்று ஆண்டுகளுக்குள் அகற்ற 2017 இல் தொடங்கப்பட்ட திட்டத்தின் தோல்வியை இந்தியா நிவர்த்தி செய்ய வேண்டும். ஒரு விரிவான மற்றும் கூட்டு அணுகுமுறையானது, உடனடி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, கடற் சூழலின் நீண்ட காலப் பாதுகாப்பை உறுதிசெய்து, அதைச் சார்ந்திருக்கும் சமூகங்கள் தப்பிப்பிழைப்பதை உறுதி செய்கிறது.

இந்திய மீனவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துவது, அவர்களில் பெரும்பாலானோர் தினக்கூலிகள், மற்றும் இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் இருத்தலியல் பிரச்சினைகள் ஆகியவை மீன்பிடி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதில் தவிர்க்கப்படக் கூடாது.



**ரசங்கா குமாரிஹாமி**
ஆராய்ச்சியாளர்
பாத்ஃபைண்டர் அறக்கட்டளை

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் அமீர் அஜ்வத் (நளீமி)



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் செவ்வாய் (16.04.2024) இரவு 08.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில்" முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து புகழ்சேர்த்தோர் வரிசையில் சவூதி அரேபியாவின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமனம் பெற்றிருக்கும் சட்டத்தரணி அஷ்ஷெய்க் ஓ.எல். அமீர் அஜ்வத் (நளீமி) அதிதியாக கலந்து கொள்கிறார்.

1990 களில் 'இளைஞர் இதயம்' நிகழ்ச்சியை தொடராக மிகச்சிறப்பாக நடத்தி, நேயர்களதும், குறிப்பாக இளையோர்களதும் பேரபிமானம் பெற்றார். இளையோருக்கான வழிகாட்டக்கூடிய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி, இவர் நடத்திய இந் நிகழ்ச்சியில் பங்கேற்ற பலர் ஒலிபரப்புத்துறையிலும், இதர துறைகளிலும், உச்சம் தொட்டவர்களாக இருக்கிறார்கள்.

'இன்னும் இஸ்லாமிய நற்சிந்தனை', திருகுர்ஆன் விளக்கம் என்பனவற்றோடு ஆங்கில மொழியிலான ஸஹர் சிந்தனையும் வழங்கியுள்ளார்.

O.L. அமீர் அஜ்வத் நளீமி, இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் தற்போதைய மேலதிக செயலாளராவார்.

ஓமான், யெமன் குடியரசுக்கான முன்னாள் இலங்கை தூதுவராவார்.

ஜாமியா நளீமியா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணி, மற்றும் சட்ட முதுமாணிப் பட்டம் பெற்றவர்.

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக 1997 இல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். நிகழ்ச்சியை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பொறுப்பாளர் பாத்திமா ரினுஷியா தயாரித்தளிக்கிறார்.




**சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல்ஸ் லிமிட்டட்**

**2024 ஆம் ஆண்டின் சிங்கள/ தமிழ் புத்தாண்டு விடுமுறைக் கால எல்லையின்போது எரிபொருள் விநியோக செயற்பாடானது பின்வருமாறு முன்னெடுத்துச் செல்லப்படும்.**

| திகதி | | கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோக இடங்கள் |
|---|---|---|---|
| | | கொலொன்னாவ, முத்துராஜவெல முனையங்கள் பேரளவிலான டிப்போக்களின் எண்ணெய் தாங்கி தொகுதிகள் | கொலன்னாவ,முத்துராஜவெல முனையங்கள் பேரளவிலான டிப்போக்களின் எண்ணெய் தாங்கி தொகுதிகள் |
| 2024.04.08 (திங்கட்கிழமை) | | 2024.04.09ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.09 செவ்வாய்கிழமை) | | 2024.04.10ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.10 (புதன்கிழமை) | | 2024.04.11 வியாழக்கிழமையன்று அவசர சேவைகளுக்காக மாத்திரம் விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.11 (வியாழக்கிழமை) | | 2024.04.12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.12 (வெள்ளிக்கிழமை) | சிங்கள / தமிழ் புத்தாண்டிற்கு முன்தினம் | 2024.04.15ஆம் திகதி திங்கட்கிழமையன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.13 (சனிக்கிழமை) | சிங்கள-தமிழ் புத்தாண்டு தினம் | மூடப்பட்டிருக்கும் | மூடப்பட்டிருக்கும் |
| 2024.04.15 (திங்கட்கிழமை) | | 2024.04.16 ஆம் திகதி விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |

| | கொலொன்னாவ தாங்கி | | முத்துராஜவெல முனையம் |
|---|---|---|---|
| | விநியோக அலுவலகம் | போக்குவரத்து அலுவலகம் கட்டளைகள் பிரிவு | விநியோக அலுவலகம் |
| தொலைபேசி இலக்கம் | 112572336, 112572158 | 0112531324, 0112696542, 112532131/0115668472 | 0112947586/0113193924,113193923 |
| தொலைநகல் | 112572380 | 112531325 | 112947589 |

**விநியோக முகாமையாளர், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரெஜ் டெர்மினலஸ் லிமிட்டட்.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

LITRO GAS

**PROCUREMENT NOTICE**
**FOR THE SUPPLY OF LPG COMPACT VALVES**
**FOR DOMESTIC LPG CYLINDERS**
**FOR LITRO GAS LANKA LIMITED**
**PROCUREMENT No: LGLL/OPS/006/ICB/2024**

**INTERNATIONAL COMPETITIVE BIDDING (ICB)**

The Chairman Ministry Procurement Committee (MPC) on behalf of Litro Gas Lanka Limited invites sealed bids from eligible and qualified bidders for the supply of 510,000 numbers of LPG Compact Valves for Domestic LPG Cylinders for Litro Gas Lanka Limited.

The bids should be submitted by reputed manufacturers who have at least ten years' experience in the field of Supplying LPG Compact Valves for LPG Cylinders to both local and foreign markets.

The Bidder shall furnish as part of its' bid, a Bid Security in the form of a Bank Guarantee from a commercial bank operating in Sri Lanka. The bid security shall be valid up to **16th October 2024**.

The value of the bid security should be **USD 24,000.00**.

The bid documents will be issued only to eligible prospective bidders at the payment of a non-refundable fee of **USD 120.00 in the form of a pay order from a registered commercial bank operating in Sri Lanka or a bank transfer to a specified account**. The bid document may be collected on any working day (Mon-Fri) between 9:30am - 3:00pm from **10th April 2024** up to **20th May 2024 (both days included)**.

The duly completed Tender Documents should be deposited in the Tender Box located on the 03rd Floor of the Litro Gas Lanka Limited Head Office, no 267, Union Place, Colombo 02, Sri Lanka on or before **3:00pm on 21st May 2024. The opening of bids will be conducted at the 4th Floor auditorium of the above premises soon after the bid closing.**

The Chairman
Ministry Procurement Committee
Litro Gas Lanka Limited
267, Union Place
Colombo 02
Sri Lanka
T.P. – 011 2327714
Fax – 011 2327608

**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு**

**இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபை (CAASL)**

**SP/2024-01**

**செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்**

தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஒரு வருட காலத்திற்கு செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையின் சிரேஷ்ட பதவிநிலை அலுவலர்களுக்கு பதின்மூன்று (13) எண்ணிக்கையுடைய வாகனங்களை (கார்கள்) வாடகைக்கு அமர்த்துவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை இசிவிஅ இன் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலம் நடத்தப்படும்.

குத்தகைக்கு எடுப்பவர் விபத்துக்கள் அடங்கலாக அனைத்து பராமரிப்பு தொடர்பான கட்டணங்களையும் முழுமையான காப்புறுதியையும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். வாகனத்தின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகியன 24 மணித்தியாலங்களுக்கு மேலாக சென்றால் அல்லது பழுதுபார்த்தல்களை பூர்த்தி செய்வதற்காக 24 மணித்தியாலங்களுக்கு குறைவாக சென்றால் குத்தகைக்கு விடுபவர் அதே இன வாகனமொன்றை பதிலீடு செய்தல் வேண்டும்.

வாகனமானது 2016 ஆம் ஆண்டிற்கு பின்னராக உற்பத்தி செய்யப்பட்டிருப்பதுடன் மிகச்சிறந்த நிலையிலிருத்தல் வேண்டும்.

வாகனத்தை குத்தகைக்கு விடுபவர் இலங்கையில் வாகன உரிமைப் பெயருக்கான அனுமதி பெற்ற வாகன விற்பனையாளராகவும் ஆகக் குறைந்தது 15 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள வாகனங்களை கொண்டுள்ளவராகவும் நிதியிடல் நிறுவகமாகவும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றவராகவும் குத்தகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் கம்பனியொன்றாகவுமிருத்தல் வேண்டும்.

மாதாந்த குத்தகை தொகைக்காக மாதத்திற்கு 3000 கி.மீ. தூரத்தை செலுத்தியிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 112358824 என்ற தொலைபேசியூடாக மற்றும் **mgrrdp@caa.lk** என்ற மின்னஞ்சல் வழியாகவும் CAASL இன் பிரதான பெறுகை அலுவலகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை, இல. 152/1, மினுவங்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரியில் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Bids for hire vehicles for Civil Aviation Authority of Sri Lanka on lease basis”** என குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் சேவை அதிகாரசபை.**

UCSC

**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனம்**

**பெறுகை அறிவித்தல்**

**சிற்றுண்டிச்சாலைக்காக விலைமனுகோரல்**

**(UCSC/S/NCB/APB/2024/02)**

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனத்திற்குரித்தான சிற்றுண்டிச்சாலையை 02 வருட காலத்திற்கு நடாத்திச் செல்வதற்காக 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சிற்றுண்டிச்சாலையாளர்களிடமிருந்து 2024 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை பெறுகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- பெறுகை மாதிரிப் படிவங்கள் மற்றும் அது தொடர்பான விபரங்களை அரச வேலை நேரங்களில் கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவில் அல்லது https://ucsc.cmb.ac.lk/tender-notice-for-ucsc-canteen-2024/ எனும் இணையதளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- மீளளிக்கப்படாத 1,000.00 பண வைப்பொன்றை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை, சிரேஷ்ட உதவி பதிவாளர் / கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் குறித்த பெறுகை மாதிரிப் படிவங்கள் மற்றும் விபரங்களை 2024 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி வரையான (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி) வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட 2024 ஏப்ரல் 30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்வி நிறுவனத்தின் கல்வி மற்றும் வெளியீட்டு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- சகல விலைமனுக்கள் தொடர்பிலான தீர்மானங்களையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பதிவாளர்,**
**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கல்வி நிறுவனம்,**
**இல. 35, ரீட் மாவத்தை,**
**கொழும்பு - 07.**

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வின் 854 ஆவது பாகம் எதிர்வரும் புதன்கிழமை (10) மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் ச.இந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் 'சமகால ஊடகங்களில் தமிழ்மொழிப் பயன்பாடு' எனும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.ஜெ.யோகராசா உரை நிகழ்த்தவுள்ளார்.

### இலங்கைக்கு தடையின்றி பயணிக்கலாம்

# பயண ஆலோசனையை புதுப்பித்தது பிரிட்டன்



இலங்கை தற்போது அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம் காரணமாக பிரிட்டன் தனது பிரஜைகளுக்காக வெளியிட்டுள்ள இலங்கைக்கான பயண ஆலோசனையை (Travel Advisory) 2024 ஏப்ரல் 05ஆம் திகதி முதல் புதுப்பிக்க முடிவு செய்தது.

அவசரகால மருத்துவ சேவைகளுக்கான அணுகல், நாட்டுக்குள் நுழையும் போது பாதுகாப்புத் தேவைகள், வீதிப் பாதுகாப்பு, நாட்டின் பாதுகாப்பு நிலைமை, சுகாதார வசதிகளுக்கான அணுகல் ஆகியவற்றில் முந்தைய தகவல்களை புதுப்பித்துள்ளது. இதற்கமைய உணவு, எரிபொருள் மற்றும் மருந்து தட்டுப்பாடு குறித்து முந்தைய ஆலோசனையிலிருந்த தகவல்கள் புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை போன்ற சுகாதார சேவைகளிலுள்ள சவால்களும் நீக்கப்பட்டுள்ளன.

தற்போது இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பாக சுற்றுலாப் பயணிகள் மத்தியில் தெளிவான புரிதலை ஏற்படுத்துவதற்காக முன்னைய சுற்றுலா ஆலோசனையின் மூலம் வழங்கப்பட்ட எதிர்மறையான தகவல்களை நீக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதுடன், லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பிரித்தானிய அதிகாரிகளிடம் அவ்வப்போது விடயங்களை முன்வைத்தது.

ஜனவரி 01 மற்றும் மார்ச் 27 க்கு இடைப்பட்ட காலத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 53,928 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இதன் மூலம் ஐக்கிய இராச்சியம், இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் மூன்றாவது பெரிய நாடாக உள்ளது.

இந்த புதுப்பிக்கப்பட்ட சுற்றுலா ஆலோசனையானது இலங்கை சுற்றுலாத்துறைக்கு மேலும் உத்வேகத்தை வழங்கும்.

### இலங்கையிலிருந்து கடத்தி சென்று

# கடலில் வீசப்பட்ட 06 கிலோ தங்கக்கட்டிகள் மீட்பு

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு இராமேஸ்வரம் கடலில் வீசப்பட்ட 06 கிலோ தங்கக்கட்டிகள் இந்தியாவில் மீட்கப்பட்டன. இலங்கையிலிருந்து படகு மூலம் கடத்தல்காரர்கள் தங்கக் கட்டிகளை கடத்துவதாக இந்திய மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் அதிகாலை இந்திய கடலோர காவல்படை மற்றும் சுங்கத்துறை உதவியுடன் மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் ரோந்து சென்றனர். ரோந்துப் படகை கண்டதும் கடத்தல்காரர்கள் தங்கக்கட்டிகளுடன் வேகமாக தப்பி செல்ல முயன்ற போதும், இவர்களை மேற்படி அதிகாரிகள் துரத்திச் சென்ற போது தங்கக்கட்டிகளை கடத்தல்காரர்கள் கடலில் வீசினர். படகிலிருந்த 03 பேரை அதிகாரிகள் மடக்கி பிடித்து கைது செய்து விசாரணை நடத்தினர்.

இலங்கையிலிருந்து கடத்திய தங்கக்கட்டிகளை ரோந்துப் படகை கண்டதும் பயந்து கடலில் வீசியதாக சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வேதாளை மற்றும் மண்டபத்துக்கு இடைப்பட்ட முயல்தீவு அருகே கடல் பகுதியில் வீசப்பட்ட தங்கக்கட்டிகளை தேடும் பணியில் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினர் ஈடுபட்டனர். இதற்காக இந்திய கடலோர காவல் படையின் ஸ்கூபா டைவிங் நீச்சல் பயிற்சி பெற்ற வீரர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் கடலில் வீசப்பட்ட தங்கக்கட்டிகளை அவர்கள் மீட்டதுடன், சுமார் 06 கிலோ தங்கக்கட்டிகள் இருந்தன. இத்தங்கக்கட்டிகளை இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகம் கொண்டு சென்றது.

மொத்தம் 06 கிலோ தங்கக்கட்டிகள் மட்டும் தானா? அல்லது வேறு தங்கக்கட்டி பார்சல்கள் இன்னும் கடலுக்குள் கிடக்கிறதா? வேறு எங்கும் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என பல்வேறு கோணங்களில் கைதான 03 பேரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கக் கட்டிகள் பல கோடி ரூபா மதிப்பிருக்கும். கடத்தல்காரர்கள் இலங்கையிலிருந்து தங்கக்கட்டிகளை கடத்தி வருவது, அதிகாரிகளை கண்டதும் கடலில் வீசுவது போன்ற சம்பவங்கள் தற்போது அடிக்கடி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – இந்தோனேஷிய வர்த்தக உடன்படிக்கை பேச்சு

இலங்கைக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையில் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைக்கான முதல் சுற்று பேச்சுவார்த்தை ஏப்ரல் 03ஆம், 04ஆம் திகதிகளில் நிகழ்நிலையில் நடைபெற்றது.

பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையில் இந்தோனேஷியா ஐந்தாவது பெரிய பொருளாதாரமாகும். இந்தோனேஷியாவுடன் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் கையெழுத்திடுவதன் மூலம் விரிவான பொருளாதார பங்காளித்துவத்தின் இதயமான ஆசியானுடனான வர்த்தக உறவுகளை ஆழப்படுத்த இலங்கை அரசாங்கம் முயல்கிறது.

2022 இல் இந்தோனேஷியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மொத்த வர்த்தகம் 383.59 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததுடன், இந்தோனேஷியாவை நோக்கிய வர்த்தகத்தில் சாதகமான இருப்பும் உள்ளது. இந்த நாட்டுக்கான இந்தோனேஷியாவின் ஏற்றுமதி 334.69 மில்லியன் அமெரிக்க டொலர், அந்த நாட்டுக்கான இலங்கையின் ஏற்றுமதி 48.9 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

இந்தோனேஷியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முக்கிய பொருட்களாக தேங்காய் எண்ணெய், இறப்பர், இரும்பு மற்றும் புகையிலை உள்ளன.

இந்த உடன்படிக்கையில் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருட்களின் பட்டியலில் வரி குறைத்தல் அல்லது நீக்குதலில் இந்த ஒப்பந்தம் கவனம் செலுத்தும். மேலும் இரு நாடுகளும் சுங்க நடைமுறைகளை எளிமையாக்கவும், கட்டணம் இல்லாத தடைகளை குறைக்கவும், சரக்குகளின் இயக்கத்தை விரைவுபடுத்தவும் ஒத்துழைக்கும் விதத்தில் இப்பேச்சுவார்த்தை அமைந்தது.

## அநுராதபுரம் மஹாபோதிக்கு...

புத்தரிசி விழா, அட்டமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரத்ன நாயக்க தேரரின் ஆலோசனைக்கமைய விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தால் 57ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னர் காலத்திலிருந்து நடைபெற்றுவரும் இந்த சம்பிரதாய விழாவில் நாடு முழுவதிலுமிருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்து, 'மழை, விளைநிலங்கள் செழிக்க' வேண்டியும், விவசாயத்தில் நாடு தன்னிறைவு அடைந்து வளமான பொருளாதாரம் ஏற்பட வேண்டியும் பிரார்த்தனை செய்தனர்.

அட்டமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரத்ன நாயக்க தேரர், தங்கப்பாத்திரத்தில் புத்தரிசியை நிரப்ப ஆரம்பித்தார்.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயனத்துக்கு மத்தியில் தங்கப்பாத்திரத்தில் புத்தரிசியை நிரப்பும் விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

தேசிய புத்தரிசி விழாவின் நினைவுப்பதிப்பும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விவசாயப் பிரேரணையை அநுராதபுரம் மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் புஞ்சிரால விவசாயி முன்வைத்தார்.

இதன்போது ஆதிவாசித் தலைவர் வன்னில எத்தோ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேன் வழங்கினார்.

அட்டமஸ்தானாதிபதி கண்டிகளவிய பிரதம சங்கநாயக பூஜ்ய பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர் இங்கு விசேட அனுசாசனை உரை நிகழ்த்தியத்துடன், விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், இராஜாங்க அமைச்சர்களான டி.பி.ஹேரத், செஹான் சேமசிங்க, காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.சந்திரசேன, துமிந்த திஸாநாயக்க, இஷாக் ரஹ்மான், வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித், முன்னாள் அமைச்சர் பீ.ஹரிசன், ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட பலர் விழாவில் கலந்துகொண்டனர்.

## தொழிலாளர் அனைவருக்கும்...

தயாரிக்கப்பட்டுள்ளதுடன், புதிய நலன்புரி சட்டத்தின்படி முச்சக்கரவண்டிச் சாரதிகள், தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள், சுயதொழில்களில் ஈடுபடும் வெல்டர்கள், கொத்தனார்கள் உட்பட சகல தொழிற்றுறையினரும் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு உரிமை உடையவர்களாகின்றனர்.

முறைசாரா தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள், பொது சமூக பாதுகாப்பு அமைப்புகளின் கீழ் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் ஒன்றிணைப்பாக உருவாக்கப்படும் புதிய நிதியத்தின் உறுப்பினர்களாக இணைக்கப்படுவதுடன், அதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ய அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளடக்கிய குழுவொன்றை ஜனாதிபதி நியமிப்பார். ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமும் இணைந்து உருவாக்கவுள்ள புதிய சமூக பாதுகாப்பு நிதியத்தில், முறைசாரா தொழில்சார்ந்தவர்களை உறுப்பினர்களாக இணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடைமுறை தொடர்பான அறிக்கையை இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக இக்குழு தெரிவித்துள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் புதிய தொழிலாளர் பாதுகாப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், அதனை ஒரு சில மாதங்களில் நடைமுறைப்படுத்த தேவையான பணிகளை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தற்போது முன்னெடுத்து வருகின்றார். புதிய வேலைவாய்ப்பு பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் தனியார் துறையில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தற்போதைய உரிமைகளை விட தொழிலாளர்களின் தொழில்நிலை, அவர்களின் தொழில் பாதுகாப்பு, அவர்களின் தொழில் கௌரவம் போன்ற அதிக உரிமைகள் இச்சட்டத்தின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படும்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவத்தின் போது தொழில் வழங்குநருக்கு சுமையை ஏற்படாத வகையில் சிறப்பு பிரசவகால உதவித்தொகை வழங்கப்படும்.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையீட்டின் கீழ் உருவாக்கப்படவுள்ள புதிய வேலைவாய்ப்பு சட்டத்தின்படி முச்சக்கரவண்டிச் சாரதிகள், தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள், சுயதொழில் செய்யும் வெல்டர்கள், மேசன்மார் உட்பட சகல தொழில் வல்லுநர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு உரிமையுடையவர்களாக இச்சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

## இந்தியாவின் ஆய்வு யோசனை...

தொடர்பாக கலந்துரையாட கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்ததுடன், இந்திய வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா உட்பட உயர்மட்ட அதிகாரிகள் குழுவுடன் அவர் கலந்துரையாடினார்.

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் தரைவழிப்பாதை அமைக்கப்பட்ட பின்னர், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் உட்பட ஏனைய நடவடிக்கைகளால் இலங்கைக்கு அதிக நன்மைகள் கிடைக்குமென்று இந்திய அரசாங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இலங்கையையும் தென்னிந்தியாவையும் இணைக்கும் தரைவழிப்பாதை அமைக்கப்பட்ட பின்னர், இரு நாடுகளுக்கும் இடையில் இறக்குமதி, ஏற்றுமதிக்கு எல்லையற்ற வகையில் அதிக வாய்ப்புகள் உள்ளதாக, அரசாங்கத்தின் சிரேஷ்ட செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

கப்பல் போக்குவரத்தை விட நெடுஞ்சாலை போக்குவரத்தின் மூலம் போக்குவரத்து கட்டணம் குறைக்கப்படுவதால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலை குறையுமெனவும் அச்செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் சுற்றுலாப் பயணிகள் குறைந்த செலவில் இலங்கை வரக்கூடிய வசதி, அண்மையில் இந்தியா கையொப்பமிட்ட மத்திய கிழக்கு பொருளாதார சட்டத்தில் இலங்கை இணையும் திறன், இரு நாடுகளுக்கும் இடையிலான மின்சார பரிமாற்றத்தை இலகுபடுத்துதல், இலங்கையால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்றவற்றிலிருந்து அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்து, அம்மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்கவும் வாய்ப்பு கிடைப்பது உட்பட பல நன்மைகள் இலங்கைக்கு கிடைக்குமென, அரசாங்கம் தெரிவித்தது.

## புத்தாண்டை முன்னிட்டு...

மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்கு விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை முன்னெடுத்து வருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். புத்தாண்டின் போது தமது சொந்த இடங்களுக்கு செல்லவும் புத்தாண்டின் பின்னர் கொழும்புக்கு மீண்டும் திரும்பவும் இவ்வாறு விசேட பஸ், ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 05ஆம் திகதி முதல் இ.போ.ச. பஸ் சேவைகள் இடம்பெறுவதுடன், கொழும்பிலிருந்து 17ஆம் திகதிவரை 2,270 விசேட பஸ் சேவைகள் இடம்பெறும். ஏப்ரல் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஏனைய இடங்களுக்கு 1,400 பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளதாக, இ.போ.ச. தலைவர், பொறியியலாளர் லலித் அல்விஸ் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை விசேட ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளதுடன், நாளாந்தம் 10 விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும், இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி, ஹட்டன், பதுளை, பண்டாரவளை, நானுஓயாவரையும் மருதானையிலிருந்து காலி, மாத்தறை, பெலியத்தைவரையும் விசேட ரயில் சேவைகள் இடம்பெறும். வழக்கமான ரயில் நேர அட்டவணையிலும் ரயில் சேவைகள் இடம்பெறுமெனவும், ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

## அமைச்சர் ஜீவனுக்கு...

உலக இளம் தலைவர் பதவிக்கு இலங்கையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் தெரிவுசெய்யப்படுகின்றமை இதுவே முதல் தடவையாகும்.

பின்தங்கிய நிலையிலுள்ள சமூகங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல், சமூக நீதிக்காக குரல் கொடுத்தல், அனைத்து இலங்கையர்களுக்கும் சுத்தமான மற்றும் சுகாதார பாதுகாப்புமிக்க குடிநீரை குறைந்த விலையில் கிடைக்க செய்தல், நீர் துறையில் மறுசீரமைப்பு ஆகியவற்றை தான் அமைச்சு பதவி ஏற்றதிலிருந்து புரட்சிகரமான மாற்றங்களுக்காக அமைச்சர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றார். அதற்கான வேலைத்திட்டங்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை அவர் வழங்குகின்றார்.

பொதுச் சேவையில் அவரது அர்ப்பணிப்பும் புதிய அணுகுமுறையிலான அவரது தலைமைத்துவமும் தேசியளவில் சிறந்த, நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது இளம் உலக தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதன் மூலம் சர்வதேச அளவிலும் அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

YGL சமூகம் என்பது உலகளாவிய எதிர்காலத்தை வடிவமைப்பில் உறுதிபாட்டை பகிர்ந்துகொள்ளும் 1000க்கும் மேற்பட்ட இளம் தலைவர்களை கொண்ட தனித்துவமான சமூகமாகும். அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தொலைநோக்கு பார்வை, தலைமைத்துவப் பண்பு மற்றும் அயராத முயற்சிக்கு கிடைத்த அங்கீகாரமே இத்தெரிவாகும்.

# எங்கள் கருத்து...

## வரிகள் சம்பந்தமாக மக்களிடம் நிலவுகின்ற தவறான கருத்துகள்!

எனவே மக்களுக்காக அரசாங்கம் செயற்பட வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் அதற்கான நிதிப்பங்களிப்பை அரசுக்கு வழங்க வேண்டியது அவசியமாகின்றது. அதுவே வரி ஆகும்.

வரிகள் சம்பந்தமாக மக்களில் ஒரு பிரிவினரிடம் தவறான கருத்து நிலவுகின்றது. 'வரி என்பது மக்களைச் சுரண்டுகின்றதொரு ஏற்பாடு' என்று அவர்கள் தவறாக எண்ணுகின்றனர். அக்கருத்துக்கு வலுசேர்ப்பதைப் போன்று எதிரணி அரசியல்வாதிகளும் பிரசாரம் செய்கின்றனர். இதன் காரணமாக வரி என்பது மக்களைச் சுரண்டும் நடவடிக்கையென்று பலர் தவறாகக் கருதுகின்றனர்.

எந்தவொரு நாட்டிலும் அரச இயந்திரங்கள் மக்கள் நலனுக்காக இரவுபகலாக இயங்க வேண்டியது அவசியம். மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள்> நலிவடைந்த மக்களுக்கான வாழ்வதார உதவிகள் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை அரசாங்கத்தினால் மாத்திரமே நிறைவேற்ற முடியும். இதற்கான நிதியை மக்களின் வரிவருமானம் ஊடாகவே அரசாங்கம் திரட்டிக் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வரிநடைமுறையானது ஐரோப்பிய நாடுகளில் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கடந்த அரசாங்க காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவானதற்கு வரிவீதம் குறைக்கப்பட்டதும் பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் தற்போது வரி செலுத்தும் முறைமையில் பெரிதும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதன் காரணமாகவே மக்களுக்கான நிவாரணத் திட்டங்களை தற்போது நிதிநெருக்கடியின்றி செயற்படுத்த முடிவதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக முன்னேறி வருவதற்கும் வரிமுறைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சீர்திருத்தமே காரணமாகும்.

நாட்டின் பொருளாதாரம் சீராக இருந்தாலேயே மீண்டுமொரு நெருக்கடி உருவாகாமல் தவிர்க்க முடியுமென்பதை மறந்துவிடலாகாது.

## தினகரன் தில்லைக்கு...

தில்லைநாதன், ஊடகத் தூது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஊடகத் தூது மடல் இரண்டாவது வெளியீட்டு விழாவும் 'ஊடகவியல் கற்போம்' தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணைய யூரியூப் தள திறப்பு விழாவும் அண்மையில் யாழ். கொழும்புத்துறை பீச் ரோட்டிலுள்ள பிசப் சவுந்தரம் மீடியா நிலையத்தில் நடைபெற்றது.

ஊடகத் தூது மடலின் பிரதம ஆசிரியர் அருட் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, 50 ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் வடமராட்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தில்லைநாதன், ஊடகத் தூது மடலின் 2024ஆம் ஆண்டுக்கான ஊடகத் தூது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த ஊடகவியலாளரும் தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான வீரகத்தி தனபாலசிங்கம், மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வேல்நந்தகுமார், ஓய்வுநிலை ஆசிரியர் சாள்ஸ் அரியகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (மேலதிக விபரம் 21ஆம் பக்கத்தில்)

## டென்மார்க்கில்...

இந்நிலையில் உலகின் முன்னணி பொறியியல், கட்டடக்கலை நிறுவனமான ரம்போல் நிறுவனத்தின் குழு பொருளியல் வியூக இயக்குநராக ராம்போல் குழுமத்தில் அலர் தருமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

டென்மார்க்கின் பொருளாதார வளர்ச்சியில் பல்வேறு பங்களிப்புகளை நல்கிவரும் அலன் தருமன், அந்நாட்டு அரசாங்கத்தினதும் பல்வேறு உயர் பொருளாதார நிறுவனங்களினதும் ஆலோசகராக பணியாற்றுகிறார்.

பொருளியலிலும் அரசியல் விஞ்ஞானத்திலும் சிறப்பு முதுமாணி கற்கை, பொருளியல் மூலோபாய கற்கை உள்ளிட்ட கற்கைகளை நிறைவு செய்துள்ளார்.

அலன் தருமனின் மதிநுட்பமான பொருளியல் அறிவை டென்மார்க் அரசாங்கம் சிறந்த முறையில் பயன்படுத்தி வருவது தமிழருக்கு கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகும். புலம்பெயர் தமிழரும் டெனிஸ் இலக்கியத்தை தமிழுக்கு கொண்டு வந்தவருமான தருமன் தர்மகுலசிங்கத்தின் புதல்வரே அலன் தருமன் ஆவார்.

சர்வதேச ரீதியில் பொறியியல், கட்டடக்கலையில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும் ஆலோசனை நிறுவனமாகவும் இயங்கிவரும் ரம்போல் நிறுவனம், 1945ஆம் ஆண்டு டென்மார்க்கில் நிறுவப்பட்டது.

35 நாடுகளுக்கு தன்னுடைய சேவையை விஸ்தரித்துள்ள ரம்போல் நிறுவனம், இலட்சக்கணக்கானவர்களுக்கு தொழிவாய்ப்பு வழங்கி வரும் உலகளாவிய முன்னணி நிறுவனமாக உள்ளது. நிலையான சமூகங்களை உருவாக்குவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் உலகளாவிய அறிவுத் தளத்துடன் ஆழமான உள்ளூர் நுண்ணறிவு மற்றும் அனுபவத்தை உலகத்துடன் இணைத்து பயணிப்பதே இந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். (மேலதிக விபரம் 22ஆம் பக்கத்தில்)

## ஜனாதிபதி தேர்தலில்...

மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தற்போது பரவலாக பேசப்பட்டு வருவதால் இது தொடர்பாக அவர் காணொளியொன்றின் மூலம் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எம்.பி. தகுதியானவரென நாம் கருதுகிறோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களை அல்லாத பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களம் இறங்குவது பொருத்தமானதாக இருக்கும். ஆகையால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மனோ கணேசன் எம்.பி., தமிழர் சார்பாக போட்டியிடும் பட்சத்தில் அதனை சிவசேனை அமைப்பின் சார்பில் நாம் வரவேற்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## 'கெலிப்சோ' சுற்றுலா...

நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும் இணைந்துகொண்டார்.

அமைச்சருடன் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பதுளை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் மேஜர் சுதர்சன தெனிபிட்டிய, அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க உள்ளிட்ட பலரும் இப்பயணத்தில் இணைந்துகொண்டனர்.

## தலைமன்னார் – தனுஷ்கோடியை...

சென்னை ஓ.எம்.ஆர்.காரப்பாக்கத்தைச் சேர்ந்த பிரபல ஆழ்கடல் நீச்சல் பயிற்சியாளர் அரவிந்த் தருண்ஸ்ரீ (வயது 44), இவரது மகள் தாரகை ஆராதனா (வயது 09), தமிழக கடலோர பாதுகாப்புக் குழும காவல் கண்காணிப்பாளர் ஹரிகிரண் பிரசாத் மகன் நிஷ்விக் (வயது 07) ஆகிய மூவரும் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிவரையான பாக். ஜலசந்தி கடல் பகுதியை நீந்திக் கடப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை, இலங்கைத் தூதரகம், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சிடம் அனுமதி பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து இவர்கள் மூவரும் இராமேஸ்வரத்திலிருந்து விசைப்படகு, ஒரு நாட்டுப் படகில் கடந்த செவ்வாய்க்கிழமை தலைமன்னாருக்கு வந்தனர். இந்நிலையில் தலைமன்னாரிலிருந்து புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு நீந்தத் தொடங்கி, அன்றையதினம் பிற்பகல் 3.30 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனையை அடைந்தனர்.

இவர்களை இந்திய கடலோர பாதுகாப்புப் படையினர், தமிழக கடலோர பாதுகாப்புக் குழுமத்தினர் வரவேற்று சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# மர்ஹூமா ஷஹ்னா ஸப்வானின் "எரியும் நட்சத்திரம்" நூல் நயவுரை

சங்க காலத்தில் தமிழ் இலக்கிய மரபானது செய்யுள் இலக்கியமாகப் படைக்கப்பட்டு வந்துள்ளது. அக்கால புலவர்களின் கவிதைகள் கருத்துச் செறிவும் சொற் செறிவும் மிக்கனவாகக் காணப்பட்டன. அதன் பின்னரான காலப்பகுதிகளில் மரபுக் கவிதை, வசன கவிதை, புதுக் கவிதை, நவீன கவிதை, பின் நவீனத்துவக் கவிதை, தன்முனைக் கவிதை, ஹைக்கூ கவிதை என படித்தரங்கள் மாற்றமடைந்து வந்துள்ளன.

செய்யுள் இலக்கியங்கள் கற்றோருக்கு மாத்திரமே புரிந்த காலம் மாறி பாரதியாரின் காலத்தில் எழுதப்பட்ட உரைநடைக் கவிதைகள், பெரும்பாலான மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றன. பிற்காலத்தில் பிரதேச மொழி நடையில் எழுதப்படும் படைப்புகள், வாசிப்பின் மீதுள்ள ஆர்வத்தைத் தூண்டின எனலாம்.




தென் மாகாணத்தைப் பொறுத்தளவில் எழுத்து மொழிக்கும், பேச்சு மொழிக்கும் பாரியளவு வித்தியாசங்கள் காணப்படுகின்றன. சில சமயங்களில் பேச்சினிடையே சிங்களச் சொற்களும் ஊடுருவிக் காணப்படுகிறது. படைப்பாக்கத்தின் போது பிரதேச மொழி வழக்கை வாசகர்கள் விரும்புவதால் படைப்பாளர்கள் அதில் அதிக கவனம் செலுத்தலாயினர். அதேபோல தென்னிலங்கைப் படைப்பாளிகள் கவிதைகள் மீது அதிக முனைப்புக்காட்டி வந்துள்ளனர். இதில் ஆன்மிகம் சார்ந்த அதாவது பக்தி இலக்கியங்களே மிகவும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டன.

தென்னிலங்கை என்ற வரையறைக்குள் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களே உள்ளடங்குகிறது. எனினும் மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி 'ஈழத்து தமிழ் இலக்கியத் தடம்' என்ற தனது நூலில் தென்னிலங்கை என்பது இலக்கிய ரீதியாக பாணந்துறை முதல் திக்குவல்லை வரையான பிரதேசம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையின் முன்னோடிக் கவிஞர்கள் என்று நோக்கும் போது அதில் மிக முக்கியமான கவிஞர்களாக கவிஞர் ஏ. இக்பால் மற்றும் திக்குவல்லைக் கமால் ஆகியோரைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

"எரியும் நட்சத்திரம்" கவிதை நூலாசிரியர் தர்காநகர் ஷஹ்னா ஸப்வானும் தென்னிலங்கையைச் சேர்ந்தவராகின்றார். இவர் சிறுவயதிலிருந்தே இலக்கியத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர் என்பதை அவருடைய கவிதைத் தொகுதி மூலம் தெரிந்து கொண்டேன்.

பாடசாலைக் காலத்திலிருந்தும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலிருந்தும் இவருக்கு கவிதைத் துறை மீது ஒரு அலாதியான ஈடுபாடு இருந்திருக்கிறது.

அத்துடன் இத்துறையில் தனது பெயரையும் பதிக்க வேண்டும் என்பதுவும் ஷஹ்னா ஸப்வானின் ஆசையாக இருந்திருக்கிறது. இவருடைய இந்த விருப்பத்தின் வெளிப்பாடாகவே 'எரியும் நட்சத்திரம்' என்ற இந்தக் கவிதைத் தொகுதி 113 பக்கங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.

இந்தப் பெண் கவிஞர் எங்கள் எல்லோரையும் விட்டு மறைந்துவிட்டார். இனி எங்களுக்கென்ன என்று நினைக்காமல் இவருடைய கவிதைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தெடுத்து, இவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் வகையில் 'இளம் தாரகையின் தூரிகை' என்ற குழும உறுப்பினர்களான இவருடைய நண்பர் குழாம் இந்தக் கவிதை நூலை வெளியிட்டு வைப்பது பெரும் மகிழ்வுக்குரியது, பாராட்டுக்குரியது.

இந்தப் பணிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த களு/ ஸாஹிரா கல்லூரியின் பிரதி அதிபரான, நூலாசிரியரின் தந்தை ஏ.எச். எம். ஸப்வானும் பாராட்டுக்குரியவர்.இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள வலம்புரி கவிதா வட்டத் தலைவர் கவிஞர் என். நஜ்முல் ஹுசைன், நூலாசிரியர் ஷஹ்னா ஸப்வான் பற்றிக் குறிப்பிடும் போது,

விடை கொடுத்துச் சிறகடித்தாள் ஷஹ்னா ஸப்வான். கவிதை நடைக்குள்ளே சிறைப் பிடித்துத் தொட்டாள் தொடுவான். என்று குறிப்பிட்டு நூலாசிரியரின் சில கவிதைகளை நயந்து தனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

(19 ஆம் பக்க பார்க்க)

**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**


## வீடுகளை நிர்மாணிப்பதற்கு மாத்தளை, கேகாலை, காலி, குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் பெறுமதி வாய்ந்த 199 காணித்துண்டுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் விற்பனை செய்தல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் மாவட்டங்களில் அமைந்துள்ள 199 காணித்துண்டுகளை வீடமைப்பு அபிவிருத்தி விடயங்களுக்காக மட்டும் விற்பனை செய்தல் சார்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| மாவட்டம் மற்றும் காணியின் அமைவிடம் | காணிக்கு பிரவேசிக்கும் வழித்தடம் | துண்டுகளின் எண்ணிக்கை | பொது வசதிகள் | குறைந்த பட்ச மற்றும் அதி கூடிய மதிப்பீட்டு விலை (ரூபா) |
|---|---|---|---|---|
| **மாத்தளை** | | | | |
| 1. கொட்டுவே கெதர வீடமைப்புத் திட்டம் | மாத்தளை கூம்பியன்கொட கண்டி வீதியில் கூம்பியன்கொட தபால் நிலையம் அருகில் உள்ள வீதியில் 1/4 கி.மீற்றர் செல்லும் போது அடையும் சதோச மொத்த களஞ்சியம் அருகில் இருந்து 1/2 கி.மீ சென்ற பின் காணியை அடையலாம் | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 1,376,000.00 |
| 2. லக்கல ம.வீ. 30 வீடமைப்புத் திட்டம் | தம்புள்ள கண்டி A9 வீதியில் நாஉல அரங்கல தொழில்சார் பயிற்சி அதிகார சபை அருகில் - இவ்வீடமைப்புத் திட்டத்திற்கு பிரவேசிக்கும் வீதி அமைந்துள்ளது. | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 1,048,125.00 |
| 3. கனுமுல்யாய வீடமைப்புத் திட்டம் | தம்புல்ல கண்டி A9 வீதியில் நாஉல மின்சார சபை அமைந்துள்ள பாதையில் 200 மீற்றர் சென்று மின்சார சபையின் விடுமுறை இல்லத்தின் அருகில் இடதுபக்கம் உள்ள பாதையில் 500 மீற்றர் தூரத்தில் காணி அமைந்துள்ளது. | 25 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 546,100.00 முதல் 795,500.00 வரை |
| 4. ஆடிஸ்மலே வீடமைப்புத் திட்டம் | மாத்தளை தம்புள்ள A9 வீதியில் 18 கி.மீ சென்றபின் மடவல உல்பத்த நகரை அடையலாம். அங்கிருந்து முன்னோக்கி 01 கி.மீ செல்லும் போது சந்திக்கும் நாலந்த கைத்தொழில் பேட்டை அருகில் தெற்காக உள்ள நாலந்த தோட்டத்திற்கு பிரவேசிக்கும் பாதையில் 1 கி.மீ செல்லும் போது ஆடிஸ்மலே காணியை அடையலாம். | 63 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 352, 600.00 முதல் 526,750.00 வரை |
| 5. ரங்கிரிகம வீடமைப்புத் திட்டம் | தம்புல்ல - ஹபரண வீதியில் இனாமலுவ சந்தியில் திரும்பி சீகிரிய வீதியில் 08 கி.மீ சென்றபின் சந்திக்கும் ரங்கிரிகம சந்தியில் தெற்காக திரும்பி 1/2 கி.மீ வரை செல்லும் போது விஹாரைக்கு அருகில் இருந்து காணி அமைந்துள்ளது. | 61 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 56,545.00 முதல் 262,300.00 வரை |
| 6. தம்புளுகம வீடமைப்புத் திட்டம் | தம்புல்ல மணிக்கூட்டு கோபுரம் அருகில் இருந்து 1/2 கி.மீமட்டில் A9 வீதியில் செல்லும் போது இடதுபக்கம் தம்புளுகம கம் உதா வளாகத்தில் அமைந்துள்ளது. | 9 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 4,837,500.00 முதல் 8,062,500.00 வரை |
| **கேகாலை** | | | | |
| 1. எத்னாவல வத்த வீடமைப்புத் திட்டம் | கொழும்பு கண்டி பிரதான வீதியில் தும்வலதெனிய முச்சந்தியிலிருந்து தெற்காக திரும்பி உடுவக்க வீதியில் 01 கி.மீ முன்னால் செல்லும் போது பாதையின் இடதுபக்கம் இவ் வீடமைப்புத் திட்டம் அமைந்துள்ளது. | 12 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 193,375.00 முதல் 581,875.00 வரை |
| **காலி** | | | | |
| 1. இகல்கந்த வீடமைப்புத் திட்டம் | எல்பிட்டிய - அளுத்கம பிரதான பாதையில் 1 கி.மீ செல்லும் போது ரத்னசிரி கல்லூரி அருகில் இடது பக்கம் உள்ள பாதையில் 100 மீற்றர் செல்லும் போது இவ் வீடமைப்புத்திட்டத்தை அடையலாம் | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 198,875.00 |
| 2. அக்மீமன மெ.வி.30 திட்டம் | காலி - மாத்தறை வீதியில் எரமுதுகஹ சந்தியிலிருந்து யட்டகல பன்சல பாதையில் 11/2 கி.மீ செல்லும் போது கிராமத்தை அடையலாம். | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 752,500.00 |
| **குருநாகல்** | | | | |
| 1. வன்னிகம வீடமைப்புத் திட்டம் | நிக்கவரெட்டிய நகரில் இருந்து குருநாகல் பாதையில் 05 கி.மீ தூரத்தில் குருநாகல் திசையில் செல்லும் போது வன்னிகம மாதிரிக் கிராமத்தை அடையலாம் | 2 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 1,355,575.00 முதல் 1,612,500.00 |
| 2. நிக்கவரெட்டிய மெதி 10/20 (இந்திஹேன) | பாதெனிய - கொபெய்கனே வீதியில் கொபெய்கனே நகரிற்கு 01 கி.மீ தூரத்தில் வீதிக்கு முகப்பாக அமைந்துள்ளது. | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 1,612,500.00 |
| 3. வத்துயாயவத்த வீடமைப்புத் திட்டம் | கொழும்பு 05, நீர்கொழும்பு வீதியில் நான்காம் மைல் கல்லில் இடது புறம் திரும்பி 02 கி.மீ வரை செல்லும் போது ரஞ்சனகம சந்தியிலிருந்து தெற்காக 300 மீ அளவு செல்லும் போது வத்துயாயவத்த வீடமைப்புத் திட்டத்தை அடையலாம் | 4 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 1,273,875.00 முதல் 1,720,000.00 |
| 4. ஜனஜயபுர வீடமைப்புத் திட்டம் | மஹோ நகரில் இருந்து நாகொல்லாகம வீதியில், நீதிமன்ற வீதியில் 1 கி.மீ வரை செல்லும் போது ஜனஜயபுர ஜன உதான கிராமத்தை அடையலாம் | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 752,500.00 |
| 5. பண்டுவஸ்நுவர மெ.நி.05 | ஹெட்டிபொல நகரில் இருந்து குளியாப்பிட்டிய வீதியில் 02 கி.மீ வரை செல்லும் போது பாதைக்கு முகப்பாக பண்டுவஸ்நுவர மெ.நி.05 (பலகனேவத்தவை) அடையலாம் | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 2,130,650.00 முதல் 3,364,750.00 வரை |
| 6. தெய்யகம வீடமைப்புத் திட்டம் | மஹோ நகரில் இருந்து வைத்தியசாலை வீதியில் 03 கி.மீ செல்லும் போது தெசியகம மாதிரிக் கிராமத்தை அடையலாம் | 4 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 118,250.00 முதல் 131,150.00 வரை |
| 7. நிக்கவரெட்டிய மெதி 10/20 (ஹுளுகல்ல) | நிக்கவரெட்டிய நகரில் இருந்து மாஹோ வீதியில் 03 கி.மீ சென்ற பின்பு ஹுளுகல்ல சந்தியை அடையலாம். அங்கிருந்து அம்பன்பொல வீதியில் 50 மீற்றர் செல்லும் போது நிக்கவரெட்டிய மெ.நி 10/20 (ஹுளுகல்ல) வை அடையலாளம். | 1 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 827,750.00 |
| **பொலன்னறுவை** | | | | |
| 1. பொலன்னறுவை தேசிய வீடமைப்புத் திட்டம் | பொலன்னறுவை நவநகரில் இருந்து கதுருவெல பிரதான வீதியில் (1/2 கி.மீ) சிறுவர் இல்லத்திற்கு முன்பாக இடது இன்டர்லொக் பாதையில் 10 மீற்றர் தூரத்தில் இடதுபக்கம் இக்காணியின் பகுதி அமைந்துள்ளது | 4 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 3,225,000.00 முதல் 3,257,250.00 வரை |
| 2. மின்னேரிய மெ.நி.10 சி.புர | மின்னேரிய முதல் பொலன்னறுவை பிரதான வீதியில் 4 கி.மீ சென்ற பின்பு பிரதான பாதைக்கு அருகில் சி.புர 17 1/2 உப தபாலகம் முன்னால் உள்ள மாவத்தையூடாக இக் காணிக்குப் பிரவேசிக்கலாம் | 5 | நீர்/மின்சாரம்/வீதி வசதிகள் உண்டு | 1,182,500.00 |

**விண்ணப்பதாரரிடம் இருக்க வேண்டிய தகைமைகள்**
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடு/மாடி வீடு/வீட்டுச்சொத்து அல்லது வீடொன்றை கட்டக்கூடிய காணித்துண்டொன்றை இதற்கு முன்பு கொள்வனவு செய்யாதவராக இருத்தல் வேண்டும்.

விலை மதிப்பிடப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு திறந்த விலைமனுக்களின் கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**காசு செலுத்த வேண்டிய விதம்**
காணிச் சொந்தக்காரர்களை தேர்ந்தெடுக்கும் நேர்முகத்தேர்வின் போது விண்ணப்பிக்கும் காணித்துண்டின் முழுமையான பெறுமதியை ஒரே முறையில் செலுத்துவதற்கு இணங்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை கிடைப்பதுடன் பகுதிகளாக செலுத்தப்படுமாயின் பெறுமதி அறிவிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்படும் தினம் முதல் 14 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட விலையில் குறைந்தபட்சம் 25% தொகையை ஒரே முறையில் மிகுதியை 03 மாதத்திற்குள்ளும் வட்டி இன்றி செலுத்துதல் அல்லது 25% தொகையை 14 நாட்களுக்குள் செலுத்தி, மிகுதியை அதிகூடியதாக பத்து (10) வருட காலத்திற்குள் 12.5% வருடாந்த வட்டியுடனும் சமமான தவணைகளில் செலுத்துதல் வேண்டும். (வெட் வரியுடன்)

**விண்ணப்பிக்க வேண்டிய விதம்**
மீளளிக்கப்படாத ரூ.1000/- விண்ணப்பப்படிவக் கட்டணத்தை மற்றும் மீளளிக்கப்படும் ரூ.2000/- வைப்புக்கட்டணத்தை விண்ணப்பதாரரின் பெயரில் செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறித்த விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களை வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாத்தளை, கேகாலை, காலி, குருநாகல் மற்றும் பொலன்னறுவை என்ற மாவட்ட அலுவலகங்களில் 2024.04.08 முதல் 2024.04.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும்:**
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக பிரதிநிதிகள் அல்லது வேறு நபர்களை நியமித்து இருக்காவிடின், சகல விசாரணை மற்றும் அறிவுறுத்தல்களை கீழ்க்காணும் மாவட்ட முகாமையாளரிடம் அல்லது தலைமையகத்தில் முகாமையாளர் (காணி விற்பனை) இடம் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். குறித்த காணித்துண்டுகள் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடிவது அந்தந்த மாவட்டங்களில் அமைந்துள்ள காணித்துண்டுகள் சம்பந்தமான விபரங்கள் மாத்திரமாகும்.

**விபரங்களுக்கான விசாரணைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) சொத்து முகாமைத்துவ பிரிவு, முகாமையாளர் (காணி விற்பனை) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு - 02. தொ.பே - 011-2430702 | மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாத்தளை தொ.பே - 066-2222134 | மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கேகாலை தொ.பே - 035-2229738 | மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல் தொ.பே - 037-2222014 | மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை பொலன்னறுவை தொ.பே - 027-2246362 | மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை காலி தொ.பே - 041-2234232 |

**தலைவர்**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
**சேர்.சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்த, கொழும்பு - 02**



## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்தப் பெயர் | தலைப்பு |
| **MOE/STHRD/SB//F23:** | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பகுப்பாய்வு உயிர் தொழில்நுட்பவியலுக்கு தளபாடங்களின் (''பொருட்கள்'') பெறுகை. |
| **MOE/STHRD/CRG/R2/SB1-E1:** | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் கற்கைநெறி பீடத்திற்கு Clean Room ((Type 3)-1 பெறுகை (''பொருட்கள்" என அழைக்கப்படுவது) |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி | 2024.05.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 145 மில்லியன் அஜடொ இற்கு நிகரான நிதியை கல்வி அமைச்சின் கீழுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD Project) அமுல்படுத்தும் ஆகுசெலவிற்காக இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்திற்காக செலவழிக்க உத்தேசித்துள்ளது. ஆஅவ இன் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இதில் பங்குபற்றலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் சார்பாக, பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் ('கொள்வனவுக்காரர்') இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் கற்கைநெறி பீடத்திற்கான மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ('பொருட்கள்') அழைக்கின்றார்.

   பூர்த்தி செய்யவேண்டிய காலப்பகுதியானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 90 நாட்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றுவதற்கான பின்வரும் முக்கிய தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை செயற்பாட்டின் இலக்கங்கள் மற்றும் விளக்கம் | கடந்த 3 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றின் பெறுமதியானது பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தன்மை மற்றும் சிக்கல்தன்மை 6 ஆம் பிரிவில் விளக்கப்படுத்தப்பட்டுள்ள வழங்கலின் நோக்கத்தின் நிகராக பிரதான வழங்குனராக சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் (இலங்கை ரூபாவில்) | கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது தற்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளுக்காக கணிக்கப்பட்ட பின்வரும் ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு (இலங்கை ரூபாவில்) |
|---|---|---|
| **MOE/STHRD/SB/F23:** | | |
| தொகுதி 1 - நனோதொழிற்நுட்பவியல் ஆய்வுகூடத்திற்கான தளபாடம் மற்றும் களஞ்சியசாலை | 10,051,840.00 | 25,129,600.00 |
| தொகுதி-2 – ரொபோடிக்ஸ் ஆய்வுகூடத்திற்கு வேலைக்கான வாங்குகள் மற்றும் ஆய்வுகூட ஸ்டுல்கள் | 6,282,400.00 | 15,706,000.00 |
| தொகுதி-3 – ஆய்வுகூட தளபாடம்-வளிமண்டலவியல் ஆய்வுகூடத்திற்கு | 6,282,400.00 | 15,706,000.00 |
| தொகுதி-4- 2 ஆம் உயிராற்றல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட தளபாடம் | 6,282,400.00 | 15,706,000.00 |
| **MOE/STHRD/CRG/R2/SB1-E1:** | | |
| தொகுதி-1 – Design, supply and installation of Clean Room (Min ISO Class 7) | 33,588,800.00 | 83,972,000.00 |

4. ஆஅவ இன் பொருட்களின் பெறுகை தனிக்கட்ட-ஒரு உறை நடைமுறைக்கு அமைவாக பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்கும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் கற்கைநெறிப் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**
   **ZIP Code: 70140**
   **தொலைபேசி: 045-2280081**
   **மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர் மேலேயுள்ள முகவரிக்கு மேலே குறிப்பிட்டுள்ள பெறுகை இலக்கங்களை குறிப்பிட்டு ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இ.ரூபாவை (ஐந்தாயிரம் இலங்கை ரூபாவை மாத்திரம்) பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக STHRD செயற்றிட்ட கணக்கிலக்கத்திற்கு (அனைத்து தொகுதிகளுக்கும் ஒரு ஆவணம்) வைப்புச் செய்த பின்னர், மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். 2024.04.08 ஆம் திகதியிலிருந்து மின்னஞ்சல் வழியாக வங்கி பணவைப்புத் துண்டை சமர்ப்பிப்பதன் பின்னரே ஆவணம்/ ஆவணங்கள் அனுப்பப்படும். இழப்பு அல்லது தாமதமான ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கு எவ்வித கடப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
7. 2024.05.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு உங்கள் விலைமனுவை விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையின் மூலப்பிரதியுடன் ஒப்படைக்கவும்.

   **செயற்றிட்டப் பிரதிப் பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **STHRD செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் கற்கைநெறிப் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**

   ஒவ்வொரு பெறுகைக்கும் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு அடையாளமிடப்படல் வேண்டும்.

| ஒப்பந்தப் பெயர் | தலைப்பு |
|---|---|
| **MOE/STHRD/SB/F23:** | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் கற்கைநெறி பீடத்தின் ஆராய்ச்சி கட்டிடத்திற்காக தளபாடங்களின் பெறுகை ('பொருட்கள்') |
| **MOE/STHRD/CRG/R2/SB1/E1** | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் கற்கைநெறி பீடத்திற்கு உயிர் ஆற்றல் உபகரணங்களின் பெறுகை 1 (C/H/N Elemental Analyser (''பொருட்கள்") |

விலைமனு முன்னோடிக் கூட்டமானது ஒன்-லையின் வழியாக இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் கற்கைநெறி பீட சபை அறையில் நடைபெறும்.

8. விலைமனுவின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP Code: 70140**

**திகதி: 07.04.2024**

# அட்டாளைச்சேனை ஊரும் அரிய மீன்கள் வரலாறும்

24.03.2024 அன்றைய தொடர்

'எருமைநக்கி'என்கிற கடல்மீனை அனேகர் உண்பதில்லை. ஏனெனில் அது திருக்கையின் முகஅமைப்பில் உள்ள மீன். ஆனால் அது உடல் நோய்க்கு அருமருந்து. தூக்கத்திலும் விழிப்பிலும் தன்னையறியாமல் மலசலம் கழித்துவிடும் பழக்கமுள்ள சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் எருமைநக்கி என்கிற மீனை பிச்சைப் பரிசாரி





நெருப்பிலிட்டுச் சுட்டுக் கொடுத்தார். அந்த சுட்ட மீனைத் தின்ற நோயாளிகள் சுகதேகியாகினர். இப்படி அவரது அபார மருத்துவ அறிவையும் அபார சேவையையும் நினைவு கூரும்போது நெஞ்சம் நெகிழ்கிறது.

விலாங்கு மீன்கள் வியப்பளிப்பவை. பலர் இதை உண்பதில்லை. இதை உண்டவர்கள் அதன் சுவை மறப்பதில்லை. அதன் தோற்றம் கண்டு பலர் உண்ண விரும்புவதில்லை. விலாங்குமீன் வழுவழுப்பான தோலுடையது. தலை பாம்மைப் போன்றது. வால் மீனைப் போன்றது. உடம்பு நீளமானது. சேற்று நீரிலும் ஆற்று நீரிலும் வாழ்கின்றது. 397 இனங்களைக் கொண்ட விலாங்கு மீன்கள் கொண்ட சங்க இலக்கியத்தில் 'மலங்கு'என்ற புறநானூறு பாடல் (பக்: 61) பதியப்பட்டுள்ளதாக நவில்கிறார் தமிழக எழுத்தாளர் நாஞ்சில்நாடன்.

'பாம்பிற்கொரு தலைகாட்டி ஒருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டும் ஆங்கு
மலங்கு அன்ன செய்கை மகளிர் தோள் சேர்வார்
விலங்கு அன்ன வெள்ளறிவினார்'

என்பது எவ்வளவு நுட்பமான நூற்பா. முற்காலத்துப் பள்ளு இலக்கியங்கள் ஏறத்தாழ நூறு மீன்களைப் பற்றிப் பேசுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை ஆற்றுமீன்கள். தமிழில் ஐம்பதுவகை நூல்கள் உண்டென்றும் அவற்றில் 27 நூல்களே அச்சிடப்பட்டதெனக் கூறும் நூலாசிரியர் பள்ளு இலக்கியம் பற்றிச் சொல்லும் சேதி சுவாரசியமானது.

பிச்சைப் பரிசாரி இந்த விலாங்குமீனை' மருந்து மீன்'என்கிறார். 'அது பிற மீன்களைப் போலல்லாமல் வித்தியாசமான தோற்றத்தில் இருந்தாலும் அது அபார சத்துக்கள் நிறைந்தது. அந்த மீனைச் சமைத்து அடுத்த நாள் சாப்பிட்டால் அது எவ்வளவு சுவையானது மட்டுமல்ல சுகாதாரமானது என்பதை அதைச் சாப்பிட்டவர்களால்தான் உணரமுடியும்' என்கிறார்.

அமெரிக்கா–கனடா–அவுஸ்திரேலியா–ஐரோப்பா போன்ற தேசத்து ஆறுகளில் வாழும் இந்த மீனினம் வளர்ந்து ஆயிரக்கணக்கில் கூட்டம் கூட்டமாய் ஒன்று சேர்ந்து ஏறக்குறைய 3500 கி. மீற்றர் தூரம் நீந்திக் கடந்து பெர்மூடாவுக்குப் பக்கத்தில் உள்ள வடஅட்லாண்டிக் பகுதியில் உள்ள சர்கோஸா எல்லையைஅடைகிறது. அவை அங்கேயே முட்டையிட்டு இறந்தும் விடுகின்றன. காலநிலை மாற்றத்திற்கேற்ப மறுபடி பொரித்த குஞ்சுகள் வளர்ந்து அவை ஆயிரக்கணக்கில் கூட்டம் கூட்டமாய் விரைந்துசென்று அமெரிக்க ஐரோப்பிய ஆற்றுப்பகுதிகளை வந்தடைகின்றன.இந்த மீனைப் போலவே அங்குள்ள விலங்குகளும் குளிர்காலம் தொடங்கு முன்பே வேறுநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து செல்கின்றன. கோடை வருமுன் புறப்பட்ட இடத்திற்கே மறுபடியும் திரும்பி வருகின்றன.

நன்னீரில் வாழும் மீனைவிட உப்புத் தண்ணீரில் வளரும் மீன்கள் ஒமேகா அமிலம் கொண்டவை. கடல்மீன்கள் கடற்பாசியை உண்கின்றன. ஆற்று மீன்களோ பூச்சி புழுக்களைத் தின்னுகின்றன. கடல் மீன்களெல்லாம் ஒமேகா அமிலக் கொழுப்புள்ளவை. தன் வீட்டில் மீனெண்ணெய் மீன்குளிசை என மீன்களின் அமிலக் கொழுப்பில் மருந்து தாயாரித்து கண் காது சம்பந்தமான நீரிழிவு நோயாளர்களின் உடல்நோய் தீர்த்த பிச்சைப்பரிசாரி 'மீன்தலையில்தான் அதிக தாதுக்களும் சத்துக்களும் ஆரோக்கிய கொழுப்புக்களும் உள்ளன'என்று மீன்தலையைச் சாப்பிடச் சொன்னார்.

மீன்தலை சாப்பிட்டால் மூட்டுவலி–பக்கவாதம் வீக்கம் மாரடைப்பு இதயநோய்கள் எல்லாம் இல்லாமல் போகும். பெண்களது மாதவிடாய்க் கால வயிற்றுவலியையும் அது போக்கும், குருதிஉறையா நோயை குணப்படுத்தும். கண்பார்வையைப் பிரகாசமாக்கும். உடல்நோய் எதிர்ப்புச்சக்தியையும் கூட்டிவிடும்' ஆக ,வாரத்தில் ஓருமுறையோ இரண்டு முறையோ மீன்தலை சாபபிட்டால் மொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்தத் தேவையான ஊட்டச்சத்துக்கள் நம் உடலில் சேர்ந்துவிடும்' என்று அறிவுரைத்தார்.

அட்டாளைச்சேனை ஆழ் கடற்பரப்பில் சூடை முதல் திமிங்கிலம் வரை ஆயிரக்கணக்கான மீனினங்கள் பிடிக்கப்படுகின்றன. அவையாவற்றினதும் சுவை அபாரமானவை. பாறை–கொடுவா–சூரை–சுறா–அறக்குளா– கணவா முரல் தளப்பத்து–தோறா–சீலா–திரளி என ஏராளமான மீன்கள் ஏற்றமுடையவை. இப்படி 1000க்கு மேற்பட்ட மீனினங்கள் உள்ள ஆழ் கடலுக்கு தினம் நடுநிசியில்; நீண்ட தூரம் படகுகளிலும் தோணிகளிலும் சென்று மீனவர்கள் மீன்பிடித்துக் கொணர்ந்து விற்கிறார்கள். ஆனால் எவ்வளவுதான் ஓய்வின்றி உழைத்தாலும் அவர்களது வலைபோலவே ஓட்டையாய் இருக்கிறது நிஜ வாழ்க்கை.

கடல்மீன்களில் பலவகை உள்ளன. ஒவ்வொரு மீனிலும் பல்லினம் உள்ளன. பாறை மீனிலும் சுறா மீனிலும் பல இனங்கள் உள்ளன. ஆனால் பாறை மீன்களைப் புசிப்பவர்களில் அதிகம் பேர் பாற்சுறாவை மட்டும்தான் விரும்பிச் சுவைக்கிறார்கள். சுறாமீன்கள் ஆபத்தானவை. ஆனால் உண்பதற்கு ஆரோக்கியமானவை. கடலில் குளிப்பவர்களுக்கும் நீந்துபவர்களுக்கும் மீன்பிடியாளர்களுக்கும் சவாலானவை. அவற்றின் பற்கள் அதி கூர்மையானவை. ஆனால் வெய்யிலில் காயவைத்த அவற்றின் தோலும் முட்களும்; எலும்புகளும் பீலிகளும் மனிதகுலத்திற்குப் பயனுள்ளவை விலையும் உயர்ந்தவை.

'இறால் மீன் வாங்கும்போது எப்போதுமே அதன் தலையைச் சரியாகப் பார்த்து வாங்கவேண்டும். இறால் மீன்களின் தலை,செவுள் (சுவாசப்பூ) சுத்தமாகவும் வலுவாகவும் உறுதியாகவும் இருந்தால் அதுபுதியது. இப்போதே (ஃபிறஷ்ஷானது) பிடிக்கப்பட்டது என்று அர்த்தம். இறாலில் உள்ள சத்துக்கள் அபரிமிதமானவை. கனிமச் சத்து அதிகமுள்ளவை. இரத்தத்தில் ஈமோகுளோபினை அதிகரித்து ஞாபகசக்தியையும் அதிகரிக்கிறது. நுரையீரல் நோய்க்கெதிராகவும் போராடுகிறது. மீன்முள் தொண்டையில் மாட்டிக்கொண்டால் ஒருகிளாஸ் தண்ணீரில் சிறிது உப்புப் போட்டுக் குடித்தாலே போதும். மீன் முள்ளை எடுக்க

*08 ஆம் பக்கம் பார்க்க*



**இனியவன் இசாறுதீன்**

## பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சு**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நிறுவனம், மாளிகாவத்த, கொழும்பு – 10**

**Repair of ATS Panel**

**Rectification of existing 1,250 A Capacity ATS panel by replacing defective items and Supply, Delivering , Installation testing and commissioning of 1,250 A Capacity By- Pass Panel For Nephrology Dialysis & Transplantation**

மாளிகாவத்த, ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நிறுவனம் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் சேவையை வழங்குதல் சார்பாக அதற்காக தகைமையுள்ள இலங்கையில் விற்பனை செய்வதற்கு வியாபார பதிவுடனான கம்பனிகளிடமிருந்து 2024.04.25 மு.ப. 10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| 01 | **Repair of ATS Panel** Rectification of Existing 1,250 Capacity ATS Panel by replacing defective Items and Supply, Delivering Installation, Testing and Commissioning of 1,250 A capacity By-Pass Panel for The National Institute for Nephrology Dialysis & Transplantation. | 01 | ரூ.2,500.00 |

01) கேள்வி ஆவணங்களை 2024.04.08 முதல் 2024.04.25 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.30 முதல் பி.ப.3.00 வரையயான காலத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ) பெறுகைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்தல்

ஆ) ஒரு கேள்வி ஆவணத்திற்கு ரூ.2500.00 இற்கு குறித்த ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நிறுவனத்தின் காசாளர் பிரிவிற்கு காசாக செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

இ) வியாபார பதிவுச்சான்றிதழின் உறுதி செய்த போட்டோப்பிரதியொன்றை சமர்ப்பித்தல்

02) கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre - Bid Meeting) 2024.04.18 மு.ப.10.00 இற்கு இந்த நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

03) கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் கொடுப்பனவு இன்றி பரீட்சித்துப் பார்க்கலாம்.

04) இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக 2024.04.25 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த நிறுவனத்தின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகை உள்ளிடும் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05) கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அதாவது 2024.04.25 மு.ப.10.00 இற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். பிரதேச பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நிறுவனம்,**
**மாளிகாவத்த, கொழும்பு - 10.**

**தொ.பே - 0112422335/0112422336**
**பெக்ஸ் - 0112422334**

## பெறுகை அறிவித்தல்

**லங்கா சதொச லிமிடெட்டுக்கு அச்சிடல் ஆவணங்கள் மற்றும் வெப்பக் காகிதங்களை வழங்குதல்**

லங்கா சதொச லிமிடெட்டுக்கு அச்சிடல் ஆவணங்கள் மற்றும் வெப்பக் காகிதங்களை வழங்குவதற்காகு விரும்பும் உள்நாட்டு வழங்குநர்கள், உள்நாட்டு முகவர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை லங்கா சதொச லிமிடெட்டின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

**விபரக்குறிப்புகள்**: விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு

| விலைக்கோரல் இல. | விலைமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) (ரூபா) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் | விலைமனுக்கள் திறக்கப்படுதல் |
|---|---|---|---|
| LSL/PRO/05/51/Printing Documents/2024 | - | - | 2024.04.18ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு |
| SL/PRO/05/52/Thermal Papers/2024 | 3,000.00 | 2024.04.22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு | 2024.04.29 ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு |

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களை மேற்கூறிய ஆவணக் கட்டணத்தைச் (மீளளிக்கப்படாதது) செலுத்தி **2024 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி வரையான** காலத்தில் பின்வரும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**லங்கா சதொச லிமிடெட் தலைமை அலுவலகம்,**
**3ஆம் மாடி (கொள்வனவுப் பிரிவு),**
**இல. 27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,**
**வொக்ஷொல் வீதி, கொழும்பு 02.**

விலைக்கோரல் முன்னோடிக் கலந்துரையாடல் **2024 ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு மேற்கூறிய முகவரியில் இடம்பெறும்.**

சமர்ப்பிக்கும் விலைமனுக்களை மேற்கூறிய திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் மேற்கூறிய முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த விலைக்கோரல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

வெப்பக் காகிதங்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற 525,500.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை (மீளளிக்கப்படும்) விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் மேற்கூறிய திகதியில் முடிவுறுத்தப்பட்டு அவ்வேளையிலேயே விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு தயவுசெய்து பின்வரும் அலுவலரைத் தொடர்புகொள்ளவும்,

திலினி - 070-1560428

இந்தக் கேள்வியைக் கையளித்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர் திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடெட்.**
**இல. 27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம், வொக்ஷொல் வீதி, கொழும்பு 02.**

## அகில இலங்கை சாரணர் இயக்கம்

( பதிவு செய்யப்பட்ட இலங்கை சாரணிய அமைப்பு)

**இலங்கையில் தலைமைத்துவத்தைப் பெறுவதற்கான உலக அமைப்பு**

கீழே தரப்பட்ட பதவிகளுக்காக இலங்கையிலுள்ள 18 வயதிற்கும் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆர்வம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தலைமையக ஆணையாளர்கள்
- தலைமையக உதவி ஆணையாளர்கள்
- மாகாண ஆணையாளர்கள்
- மாவட்ட ஆணையாளர்கள்
- பிரதேச ஆணையாளர்கள்
- சாரண ஆசிரியர்கள்

**சாரணியத்தை பயில்வதற்கு ஆர்வமுள்ள மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**விண்ணப்பிப்பதற்காக உங்களது சுயவிபரப்படிவம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை எமக்கனுப்பவும்.**



மின்னஞ்சல் : allceylonscoutmovement@gmail.com
இணையதளம் : www.srilankascout.org
முகநூல் பக்கம் : All Ceylon Scout Movement

**மரபுரிமை சாரணியத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக எம்முடன் இணையுங்கள்**

## PEOPLE'S BANK

**TENDER NOTICE**

**TENDER FOR PROVIDING SECURITY SERVICES FOR THE YEAR 2024/2027**

**TENDER NO. P - 026/2024**

Sealed tenders are hereby invited from reputed Private Security Firms for providing Security Service to People's Bank Head Office & nearest Departments, Regional Offices and Branches for the period of 01.10.2024 to 30.09.2027.

| | | | |
|---|---|---|---|
| 1 | Head Office and Departments | 14 | Matale Region |
| 2 | Ampara Region | 15 | Matara Region |
| 3 | Anuradhapura Region | 16 | Monaragala Region |
| 4 | Badulla Region | 17 | Nuwara Eliya Region |
| 5 | Batticaloa Region | 18 | Polonnaruwa Region |
| 6 | Galle Region | 19 | Puttalam Region |
| 7 | Gampaha Region | 20 | Ratnapura Region |
| 8 | Hambantota Region | 21 | Trincomalee Region |
| 9 | Jaffna Region | 22 | Wanni Region |
| 10 | Kalutara Region | 23 | Colombo South |
| 11 | Kandy Region | 24 | Colombo North |
| 12 | Kegalle Region | 25 | Colombo East |
| 13 | Kurunegala Region | 26 | Colombo West |

1. Tender document could be obtained upon payment of **Rs. 5,000/-** for tender as a non-refundable Tender Fee from the undermentioned office between 9.00 a.m. and 2.00 p.m. from 09.04.2024 to 30.04.2024 on working days of the Bank and the request letter of the company.
2. Each perfected tender document should be accompanied by a Bank Guarantee / Bid Bond from a Commercial Bank acceptable to the People's Bank for 3% of the total estimated value for each year, valid for a minimum period of **180 calendar days** from the date of opening the tender. Bank Pay Orders/Bank Drafts with minimum period of **180 calendar days** are also acceptable in lieu of Bid Bonds. Cheque drawn by the tenderer will not be accepted. A cash Deposit in the form of any type of account at People's Bank together with simple letter of set off can be accepted.
3. Sealed tenders may be sent by registered post or deposited in the Tender Box kept at the Supplies Department at No. 30/101, Kew Road, Colombo 02. Tender will be opened at 2.00 p.m. on the closing date of **15.05.2024.** Tenders received after 2.00 p.m. will be rejected and returned unopened.
4. Any clarification on the subject tender will be entertained up to 06.05.2024 either via Registered Mail to the below address or via the email (supplies@peoplesbank.lk) addressed to Chief Manager - Supplies.
5. Pre-bid Meeting will be held on 07.05.2024 at 10.00 a.m. at Supplies Department.
6. The Bank reserves the right to accept or reject any or all tenders received without assigning any reasons thereof and it is not bound to accept only the lowest quoted tender based on the price.
7. Further details could be obtained from Chief Manager (Supplies), People's Bank, Supplies Department, on the Telephone Nos. given below.

**Chief Manager (Supplies)**
**People's Bank, Supplies Dept.,**
**No. 30/101, Kew Road,**
**Colombo 02.**

**Tele. No: 2439577/8**
**Fax No. : 2439576**
**Web : www.peoplesbank.lk**
**Email : supplies@peoplesbank.lk**

PEOPLE'S BANK
Pride of the Nation

**இலங்கை தேசமானது ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் தேசிய ரீதியான தேர்தலொன்றுக்கு முகங்கொடுக்கவிருக்கும் தற்போதைய நிலையில், அரசியல் தலைவர்கள் இதற்காகத் தம்மைத் தயார்படுத்துவதில் தீவிரம் காட்டுகின்றனர்.**



# தேர்தல் நெருங்குகின்ற போதிலும் அரசியல் களத்தில் இன்னும் அமைதி!





## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## பிரதான அரசியல் கட்சிகளின் தேர்தல் நிலைப்பாடு தொடர்ந்தும் மர்மம்!

நன்கு கட்டமைக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தீவிரமான மந்திராலோசனைகளில் ஈடுபட்டு வருவதுடன், குறுகிய காலத்தில் பல அரசியல் கூட்டணிகளும் தோன்றியுள்ளன. ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் நடுப்பகுதியில் நடத்தப்பட வேண்டியிருக்கும் நிலையில், அதற்கு முன்னர் பொதுத்தேர்தலொன்று நடத்தப்படுமா என்ற விவாதங்களும் அரசியல் அரங்கத்தில் மேலோங்கியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என்பதை தற்பொழுது பெரும்பான்மையைக் கொண்டுள்ள பொதுஜன பெரமுன கட்சி விரும்புவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது விடயத்தில் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தீர்மானத்திற்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து முன்னெடுக்கப் பட்டுவரும் பொருளாதார சீர்திருத்தங்கள் முடிவடையும் வரை தேர்தல்கள் நடைபெறாது என்பதை அமைச்சரவைக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இரண்டு வெவ்வேறு கூட்டங்களில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் விரிவான பொருளாதார சீர்திருத்த செயல்முறை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு திறவுகோலாக உள்ளது என்றார்.

இதன் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பாய்வுத் திட்டம் ஜூலை இறுதியில் முடிவடையும்வரை ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட எந்தவொரு தேர்தலும் நடத்தப்படாது என அவர் கூறியுள்ளார்.

செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியிலிருந்து ஒக்டோபர் நடுப்பகுதி வரையான காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படலாம். சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவித் திட்டத்தின் மதிப்பாய்வு முடிவடைவதுடன், அரசியலமைப்பின் ஏற்பாடும் ஒருங்கிணையும் காலமாக இது இருக்கும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த மூலோபாய வரிசை முறையானது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தேர்தல் செயல்முறையால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது. அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப் பட்டுள்ள ஊடகங்களின் அறிக்கையிடலில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தல்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு ஜனாதிபதி அறிவித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடைபெறாது என்ற செய்தியை சிரேஷ்ட அமைச்சரவைப் பேச்சாளரும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்துவதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என்பது இதன் ஊடாகத் தெளிவாகத் தெரிகின்றது. 2023ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் போதிய நிதி இல்லாத காரணத்தினால் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும், முதலில் பொதுத் தேர்தலை நடத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினருடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பெரமுன ஸ்தாபகரும் முன்னாள் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ ஆகியோர் கோரியிருந்ததுடன், இது பற்றி ஜனாதிபதியுடன் பேச்சவார்த்தை நடத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியில் தேர்தல் மட்டுமன்றி மற்றுமொரு விடயத்திலும் பொதுஜன பெரமுன கட்சிக்குள் பாரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. அதாவது, இதுவரை காலமும் அக்கட்சியின் நிறுவுனரான பசில் ராஜபக்ஷ வகித்து வந்த தேசிய அமைப்பாளர் பதவி அதே குடும்பத்தைச் சேர்ந்த ஹம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டு கட்சியின் படிநிலையில் முக்கிய மாற்றம் உருவாக்கப் பட்டது.

இந்த அரசியல் நகர்வு பலரையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியிருந்தது. எந்தக் கட்சியிலும் தேசிய அமைப்பாளர் பதவி என்பது அடிமட்ட மட்டத்தில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளுடனும் தொடர்பை உருவாக்கிக் கொள்ளவும், கட்சியைக் கட்டியமைப்பதற்குமான முக்கிய பதவியாகும். உள்ளூராட்சி மன்ற, மாகாணசபை, மற்றும் பொதுத்தேர்தல்களுக்கான வேட்பாளர்கள் குறித்த முடிவுகளை எடுப்பது உள்ளிட்ட முக்கிய விடயங்களை இந்தப் பதவியை வகிப்பவர்களே அநேகமாக எடுப்பார்கள்.

எனவே பொதுஜன பெரமுனவுக்கு மிகவும் சக்திவாய்ந்த பதவியை நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளனர். நாமல் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த மகன் என்பதுடன், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகவும் இருந்துள்ளார்.

எவ்வாறாயினும், 37 வயதான அவர், பல தசாப்தங்களாக அமைச்சர்களாக இருந்த பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மத்தியில் சிரேஷ்ட உறுப்பினர் அல்ல என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு விடயமாகும். வயது குறைந்த, அனுபவம் குறைந்த அரசியல்வாதியான நாமல் ராஜபக்ஷ இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது கட்சியின் தலைமைத்துவத்தைப் பெறுவதற்கான குறுக்குவழி என்று சிலர் விமர்சனம் செய்துள்ளனர்.

ஒரு சிலர் இதனைப் பாராட்டியிருந்தாலும், ராஜபக்ஷ குடும்பத்தினருக்குப் பின்னரே தலைமைத்துவப் பொறுப்புக்களில் தாம் இருப்பதாக சில சிரேஷ்ட தலைவர்கள் அதிருப்தியை வெளியிட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐந்து தசாப்தங்களாக பண்டாரநாயக்க குடும்பத்தினால் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தது போன்றும், ஐக்கிய தேசியக் கட்சி முதலாவது அரைப்பகுதியில் சேனநாயக்க குடும்பத்தினால் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தது போன்றும் பொதுஜன பெரமுன ராஜபக்ஷ குடும்பத்தின் கைளிலேயே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுவதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த இளம் உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியின் தலைமைத்துவப் பண்புகளினால் ஈர்க்கப்பட்டு அவருக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் நிலையில், அவ்வாறான தரப்பினரைத் தொடர்ந்தும் தம்பக்கம் வைத்துக்கொள்வதற்காக இளம் தலைமைத்துவத்துக்கு தேசிய அமைப்பாளர் பதவியை வழங்கியிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

அது மாத்திரமன்றி இந்தப் புதிய பதவியானது நீண்டகால தலைமைத்துவத்துக்கான ஆரம்பகட்ட காய்நகர்த்தலாகப் பார்க்கப்படுகின்றது. அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின்னர் நடைபெறக்கூடிய அடுத்த தேர்தலே நாமல் ராஜபக்ஷவின் இலக்காக இருக்கின்றது. இவ்வருடம் மற்றும் அடுத்தவரும் நடைபெறக்கூடிய தேர்தல்கள் குறித்து நாமல் ராஜபக்ஷ பெரிதும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

2024 இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ அக்கட்சியின் வேட்பாளராக வேண்டுமா என்ற ஒரு சில விவாதங்கள் நடந்தபோதும், மஹிந்த ராஜபக்ஷவே இதில் பெரிய ஆர்வத்தை வெளிப்படுத்தவில்லை. இந்த ஆண்டு நடைபெற்ற வாக்கெடுப்பில் கட்சியின் வாய்ப்புகள் கணிசமாகக் குறைந்துவிட்டதே இதற்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

பொதுஜனப் பெரமுன கட்சி இவ்வாறு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் அதே நேரம், இதற்கெல்லாம் தாய்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தலைமைத்துவ சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது குறித்துத் தனக்குத் தெரியும் எனக் கூறிய கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலம் அளித்திருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு, நீதிமன்றமும் அழைப்பாணை விடுத்திருந்தது. எனினும், ஏற்கனவே வாக்குமூலம் அளித்திருப்பதால் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாக்குமூலம் அளிப்பதற்கான தேவை இல்லையென அவருடைய சட்டத்தரணிகள் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

இவ்வாறான பின்னணியில் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் எடுத்த முயற்சிகளுக்கும் நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோரை கட்சியின் பொறுப்புக்களிலிருந்து நீக்கி அவற்றுக்குப் புதியவர்களை நியமிக்க மைத்திரிபால சிறிசேன எடுத்த முயற்சிகளுக்கே நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு வழங்கியது.

(19ஆம் பக்கம் பார்க்க)

**பொதுஜன பெரமுன கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ள நாமல் ராஜபக்ஷவின் புதிய நியமனம்!**

# இந்தியர்களிடம் அதிகரிக்கும் அரசியல் விழிப்புணர்வு

## இந்தியா ஒரு நோக்கு

வாராந்த அலசல் 13

நந்தவனம் சந்திரசேகரன்





எதுவும் நிரந்தரம் இல்லை என்பது போல இந்திய அரசியலிலும் மாற்றம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. கோடை வெப்பம் அதிகரித்துள்ளதைப்போல இந்தியாவுக்கான மக்களவை தேர்தல் பரப்புரையும் சூடு பிடித்துள்ளது. அதிகாரம் தங்கள் கைக்குத்தான் வர வேண்டும் என்ற ஆசை எல்லாக் கட்சிகளுக்குமே இருக்கிறது. ஆனால், மக்கள் யாரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பது ஜுன் 4ஆம் திகதி தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் நாளில்தான் தெரியும்.

ஆளும் கட்சியான பா.ஜ.க எதிர்க்கட்சிகள் அனைவரையும் ஊழல்கட்சிகள் என்று விமர்சனம் செய்கிறது. ஊழல் குற்றவாளிகள் என்று கைது நடவடிக்கையும் எடுத்து வருகிறது. குறிப்பாக இரண்டு மாநில முதலமைச்சர்களை கைது செய்து சிறையில் அடைத்து இந்திய அரசியலில் சலசலப்பை உண்டாக்கியுள்ளது. டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்கண்ட முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் இருவரும் அமுலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் நேரத்தில் இருவரும் கைது செய்யப்பட்டது ஜனநாயக படுகொலை என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன. இரண்டு மாநில முதலமைச்சர்களின் கைதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ள இந்தியா கூட்டணியினர். டெல்லி ராம்லீலா மைதானத்தில் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தி பா.ஜ.க. வை கண்டித்ததோடு தேர்தல் பயத்தில் சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடிக்கும் ஒன்றிய அரசை கடுமையாக விமர்சனம் செய்துள்ளனர்.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் தலைமையேற்று நடத்திய ராகுல் காந்தி பேசும் போது. மக்களவை தேர்தலுக்கு முன்பாக எதிர்க்கட்சிகளை மிரட்டும் வகையில் இரண்டு மாநில முதலமைச்சர்களை கைது செய்து சிறையில் தள்ளிவிட்டு 4 கோடிஸ்வர தொழிலதிபர்களுடன் இணைந்து மேட்ச் பிக்சிங் சதி மூலம் மக்களவை தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று முயற்சி செய்வது வருகிறது. மக்களவை தேர்தலில் பா.ஜ.க கூட்டணி 400 க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என அவர்கள் முழங்குகிறார்கள்.

ஆனால், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம், மேட்ச் பிச்சிங் எதிர்க்கட்சி தலைவர்கள் மீதான அழுத்தம், ஊடகங்களை விலைக்கு வாங்குதல் என இவையெல்லாம் இல்லாமல் இருந்தால் பா.ஜ.க கூட்டணியால் 180 இடங்களைக் கூட தாண்ட முடியாது. என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இந்தியா கூட்டணி நடத்திய கண்டனப் பேரணியில் 5 கோரிக்கைகளையும் முன் வைத்துள்ளனர். மக்களவைத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளுக்கும் சமமான களத்தை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகள் மீது அமுலாக்கத்துறை, சிபிஜ, மற்றும் வருமான வரித்துறையின் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் தடுத்த நிறுத்த வேண்டும். ஜார்கண்ட முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும், டெல்லி முதல்வர் அரவிந்த கெஜ்ரிவால் ஆகியோர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்,

தேர்தலின் போது எதிர்க் கட்சிகளின் நிதியை வலுக்கட்டாயமாக முடக்கும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜ.க செய்த முறைகேட்டை விசாரிக்க உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என 5 கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

இதேபோல மேற்கு வங்க முதலமைச்சரும். திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜியும் பா.ஜ.க 400 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்றது. முதலில் 200 தொகுதிகளைத் தாண்டிக் காட்டுங்கள் பார்க்கலாம் என்று சவால் விடுத்திருக்கிறார். உலக நாடுகளின் பார்வையும் இந்திய அரசியல் மீது பதிவாகியிருக்கிறது. அமெரிக்காவும், ஜெர்மனியும் இந்தியாவில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் எனக் கருத்து தெரிவித்திருக்கின்றன. டெல்லி முதல்வர் அரவிந்த கெஜ்ரிவாலின் கைது தேர்தல் நேரத்தில் சரியானது அல்ல என்று ஐக்கிய நாட்டு சபை கருத்து தெரிவித்திருக்கிறது.

இது போன்ற கைதுகள், மிரட்டல்கள் அனைத்தும் இந்தியா கூட்டணியை வலிமையாக ஆக்கியதே தவிர, பலவீனப்படுத்தவில்லை. அரைக்க. அரைக்க சந்தனம் மணப்பதைப் போல. தாக்குதல் அதிகமாக அதிகமாக கூட்டணியும், கூட்டணித் தலைவர்களும் வலிமை அடைகிறார்கள். இதைத்தான் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பார்க்கிறோம் பா.ஜ.க சில மாதங்களுக்கு முன்பு வரையில் வெற்றி பெற்று விடுவோம் என்று கூறியது ஆனால், நாளுக்கு நாள் தோல்வியை நோக்கி வேகமாக பயணித்து வருகிறது என்று, இந்தியா கூட்டணியில் முதன்மை அங்கத்தினராக இருக்கும் தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேடை தோறும் முழங்கி வருகிறார்.

இந்தியா முழுவதற்குமான கள ஆய்வும் பா.ஜ.க பின்னடைந்து வருவதாகவே கருத்து தெரிவிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் பா.ஜ.க கடந்த பத்தாண்டுகளில் மக்களுக்கு செய்த நன்மைகள் என்ன என்பது பற்றி பரப்புரை செய்யாமல் எதிர்க்கட்சிகளை குற்றம் சாட்டுவதும், வருமானவரித் துறை மற்றும் அமுலாக்கத் துறையை வைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும், தங்களுக்கு ஆதரவு தராதவர்களையும் மிரட்டிப் பணிய வைத்து விடலாம் என்று ஜனநாயத்துக்கு விரோதமாக நடந்து கொள்வதையும் மக்கள் அவதானித்து வருகிறார்கள்.

மக்களின் கவனத்தை தங்கள் பக்கம் திருப்பவேண்டும் என்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி உட்பட பா.ஜ.க தலைவர்கள் பலரும் எதையாவது புதிது புதிதாக கிளப்பிவிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இந்தத் தேர்தல் நேரத்தில் இது தேவையா? என்று மக்களே முணுமுணுக்கும் அளவுக்கு அவர்களின் ஒவ்வொரு செயற்பாடும் இருக்கிறது. குறிப்பாக கச்சதீவை இலங்கைக்கு கொடுத்ததன் மூலம் காங்கிரஸ் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மிகப்பெரிய துரோகம் செய்து விட்டதாக நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் கருத்து தெரிவித்திருந்தார். கடந்த பத்து வருடமாக பிரதமர் நித்திரையில் இருந்தாரா? தற்போது தேர்தல் வரும் போதுதான் கச்சதீவு ஞாபகத்திற்கு வருகிறதா? என்று தமிழ் நாட்டு அரசியல் கட்சித் தலைவர்கள் வினா எழுப்புகின்றனர். பிரதமர் கச்சத்தீவு பற்றி கருத்து தெரிவிப்பது தேர்தலுக்கான நாடகம் என்று படிக்காத பாமரனுக்கு தெரிகிறது.

மக்களிடம் செல்வாக்கை இழந்து வரும் பா.ஜ.க தோல்விப் பயத்தில் எதைச் செய்வது. எதைச் செய்யக்கூடாது என்பதே தெரியாமல் தடுமாறுகிறது என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சொல்வது போல டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தேர்தல் சுற்றுப்பயணம் செய்து பா.ஜ.கவுக்கு எதிராக பரப்புரை செய்தால் அவர் கருத்துக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்று நினைத்து அவரது பரப்புரையை தடுக்கும் முயற்சியாகவே அவரைக் கைது செய்தனர்.

ஆனால், அரவிந்த் கெஜ்ரிவால் பரப்புரை ஏற்படுத்தியிருக்க வேண்டிய வரவேற்பை விட அவரைக் கைது செய்ததன் மூலமாக கிடைத்த அரசியல் விழிப்புணர்வு என்பது மிக அதிகம். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் இந்தியா கூட்டணியின் வெற்றிக்கு பா.ஜ.க.வின் பல தவறான முன்னெடுப்புகளே வழி வகுத்துக் கொடுக்கிறது என்றே சொல்லலாம்.

# தமிழகத்தில் பா.ஜ.க–தி.மு.க இடையே தீவிரமடையும் மோதல்

## இந்தியத் தேர்தல் நெருங்கி வருகையில் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் கையிலெடுத்துள்ள தேர்தல் ஆயுதம்!



**பொதுத்தேர்தல் நெருங்கும் வேளையில், அரசியல்வாதிகள் தேசத்தின் நீண்டகால நலன்கள், பிறநாடுகளுடன் கொண்டிருக்கும் இருதரப்பு உறவுகள் மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளை மறந்துவிட்டு முற்றுமுழுதாக வாக்குகளைச் சேகரிப்பதையே அடிப்படையாகக் கொண்டு களத்தில் இறங்குவது தெற்காசிய நாடுகளில் நிலவுகின்ற பாரம்பரியம் ஆகும். தெற்காசிய பிராந்தியத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என வர்ணிக்கப்படும் இந்தியாவும் இப்பாரம்பரியத்துக்கு விதிவிலக்கல்ல.**

இந்திய பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டு பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கும் தற்போதைய நிலையில், வழமை போன்று இலங்கை விவகாரம் அந்நாட்டின் பிரசார மேடைகளை சூடாக்கத் தொடங்கியுள்ளது.

அண்மையில் அரசியல் பிரசார மேடையொன்றில் உரையாற்றியிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 1974 இல் ஆட்சியில் இருந்தபோது தற்போதைய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

'எங்களால் காங்கிரஸை ஒருபோதும் நம்ப முடியாது. இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் நலன்களை பலவீனப்படுத்துவதுதான் காங்கிரஸின் 75 ஆண்டுகால உழைப்பு, இது இன்னமும் தொடர்கின்றது' என நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதேபோல, தமிழகத்தில் மாநில அரசை அமைத்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க) ஒப்புதலுடன் கச்சதீவு இலங்கைக்கு விடுவிக்கப்பட்டதாக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வீடியோ ஒன்றை வெளியிட்டு பரபரப்பான கருத்தைத் தெரிவித்தார்.

இதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிடுகையில், “1976 இல் கச்சதீவு மீன்பிடி உரிமையுடன் பறிக்கப்பட்டு விட்டது” என்றும், “மீன்பிடிக்கும் உரிமையைப் பெற வேண்டும். நாம் இலங்கை அதிகாரிகளுடன் அமர்ந்து பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இன்றும் எமது மீனவர்கள் கைது செய்யப்பட்டு படகுகள் கைப்பற்றப்படுகின்றன” என்றும் ஜெய்சங்கர் கூறியிருந்தார்.




இந்தக் கருத்துக்கள் தற்பொழுது அரசியல் பிரசார மேடைகளில் குறிப்பாக தமிழகத்தில் பிரதான இடம்பிடித்திருப்பதைக் காணக்கூடிதாகவுள்ளது. கச்சதீவு மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பப்பெறப்பட வேண்டும் என 2022 இல் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்த வேண்டுகோளை அப்போது அலட்சியப் படுத்தியிருந்த இந்தியப் பிரதமர், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு லோக்சபா தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தனது நிலைப்பாட்டை முற்றாக மாற்றியுள்ளார்.

தமிழகத்தில் சரிந்திருக்கும் தமது வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கான ஒரு யுக்தியாக இது பயன்படுத்தப்படுகின்றது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்துக்கான காரணங்களைப் புரிந்து கொள்வதில் சிக்கல் காணப்படுகின்றது. அருகில் உள்ள நாடுகளுக்கே முதலிடம் என்ற கொள்கையை எப்போதும் வலியுறுத்தும் மோடி, தமிழகத்தில் தமக்கான வாக்கு வங்கியை சீர்செய்வதற்காக காங்கிரஸையும், தி.மு.கவையும் இழிவுபடுத்தி தமிழக வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று கணிப்பிட்டிருக்கலாம்.

அதேசமயம் இது வெறும் தேர்தல் வித்தை என்று இலங்கை புரிந்து கொள்ளும் என்பதையும், தேர்தலுக்குப் பிறகு கொழும்புடன் வேலியை எளிதில் சரி செய்துவிட முடியும் என்பதையும் அவர் அறிந்திருக்கலாம்.




உண்மை என்னவென்றால், 163 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மக்கள் வசிக்காத கச்சதீவில் இந்தியாவுக்கு எந்த மூலோபாய அக்கறையும் இல்லை. மேலும் 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்திய-இலங்கை கடல்சார் ஒப்பந்தங்கள் கடல் எல்லையை வரையறுக்கும் போது, இலங்கையின் இறையாண்மையை புதுடில்லி அங்கீகரித்தது. இந்திய மீனவர்கள் வலைகளை உலர்த்துவதற்காக கச்சதீவில் இறங்குவதற்கு மட்டுமே சலுகை வழங்கப்பட்டது,

**கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுமாறு தமிழக தி.மு.க அரசு இதுவரை வலியுறுத்திய போது மௌனம் காத்து வந்த பா.ஜ.க அரசு, தற்போது தமிழ்நாட்டு வாக்குகளை வசீகரிக்க கச்சதீவு விவகாரத்தை தேர்தல் துரும்பாகப் பயன்படுத்துகிறது!**

ஆனால் அவர்களுக்கு மீன்பிடி உரிமை வழங்கப்படவில்லை.

நரேந்திர மோடிக்கு முன்னர் பிரதமர்களாக இருந்த மொரார்ஜி தேசாய், சரண் சிங், ஜனதா கட்சியின் சந்திரசேகர், பா.ஜ.கவின் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோரின் கடந்த 50 வருட ஆட்சியில் ஒவ்வொரு பிரதமர் தலைமையிலான அரசாங்கங்களும் ‘கச்சதீவு பிரச்சினைக்கு 1974 இல் ஒருமுறை தீர்வு காணப்பட்டது’ என்ற முடிவை ஏற்றுக்கொண்டிருந்தன.

2008 இல் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்றும், இந்தியாவுக்கு சொந்தமான எந்தப் பகுதியையும் இலங்கைக்கு விட்டுக்கொடுக்கவில்லை என்றும் இந்திய அரசாங்கம் நீதித்துறைக்கு அறிவித்திருந்தது.

தமிழகத்தில் மீனவ சமூகத்தின் வாக்கு வங்கிகளில் தங்கியுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க), அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க) போன்ற தமிழ்நாட்டின் திராவிடக் கட்சிகள் கச்சதீவுப் பிரச்சினையை ஒவ்வொரு தேர்தலின் போதும் கையில் எடுத்துக் கொள்வது வழமையான நிகழ்வாகும்.

இருந்தபோதும் இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து அதாவது கச்சதீவையும் தாண்டி கரையோரத்துக்கு மிகவும் அண்மைவரை சென்று மீன்பிடியில் ஈடுபடுவதும், இலங்கை கடற்படையினர் அவர்களைக் கைதுசெய்வதும் பின்னர் இந்திய அரசாங்கத்தின் தலையீட்டுடன் அவர்கள் விடுவிக்கப்படும் மாறிமாறி நிகழ்கின்ற காட்சிகளாகியுள்ளன.

லோக்சபா தேர்தலில் தமிழக வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே பாரதிய ஜனதாக் கட்சி கச்சதீவு விவகாரத்தை எடுத்திருப்பதாக இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் ஒஸ்டின் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கச்சதீவை மீண்டும் பெற்றுக் கொள்வது தேர்தலுக்குப் பின்னர் இந்திய அரசாங்கத்துக்கு இலகுவான விடயமாக அமைந்துவிடாது என இந்திய ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள ஒஸ்டின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அரசாங்கம் சர்வதேச கடல் எல்லையை மீறினால் அது இலங்கையின் இறைமையை மீறியதாக அமையும் என முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கூறிய கருத்தையும் அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

கச்சதீவு விவகாரம் அரசியல் ரீதியாக இவ்வாறு பேசப்பட்டாலும், நடைமுறையில் இலங்கை மீனவர்களுக்கு குறிப்பாக வடபகுதி மீனவர்களுக்கே பாதிப்பு அதிகமாக இருக்கும். ஏற்கனவே இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது அதிகரித்திருக்கும் நிலையில், கச்சதீவை இந்தியாவுக்கு வழங்கினால் அவர்கள் மீன்பிடித் தொழிலை முற்றாக மறக்க வேண்டியதாகவே இருக்கும்.

இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் பொட்டம் ட்ரோலிங் முறை கடல் வளத்தை முற்றாக அழித்து விடும் என்பது விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தமது கடல் வளத்தை அழித்துள்ள இந்திய மீனவர்கள் இலங்கை கடல் வளத்தையும் அழித்து வருவதாக வடபகுதி மீனவர்கள் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியிலேயே தேர்தலை மையமாகக் கொண்டு கச்சதீவு விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது.

**பி.ஹர்ஷன்...**

# அமெரிக்க மக்களிடையே எதிர்ப்பை உருவாக்கியுள்ள காஸா மீதான யுத்தம்!





## ஒருபுறம் காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள்; மறுபுறம் யுத்தத்தைத் தொடருவதற்கு இஸ்ரேலுக்கு ஆயுத உதவிகள்; அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாடு புரியாத மர்மம்!

**காஸா மீது முன்னெடுக்கப்பட்டுவரும் யுத்தம் இன்றுடன் (07.4.2024) ஆறாவது மாதத்தை எட்டியிருக்கிறது. காஸாவை சுடுகாடாக்கியுள்ள இப்போர், 33 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்களின் உயிர்களைக் காவு கொண்டுள்ளது. அதேநேரம் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் காயங்களுக்கு உள்ளாக்கியுள்ளது. காஸாவில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருப்பிடங்களை இழந்து, தற்காலிக கூடாரங்களிலும் முகாம்களிலும் தங்கியுள்ளனர்.**

இந்த யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு முழுஉலகமுமே கோரி வருகிறது. யுத்தத்தை முன்னெடுக்கும் இஸ்ரேலிலும் கூட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோராத தேசமே கிடையாது.

ஐ.நா பொதுச்சபை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில், சர்வதேச நீதிமன்றம் என உலகளாவிய கட்டமைப்பு நிறுவனங்கள் மாத்திரமல்லாமல், இந்த யுத்தத்திற்கு ஆரம்பத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவு நல்கிய நாடுகளும் கூட தற்போது யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றன. யுத்தநிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளும் தொடருகின்றன. இருந்தும் யுத்தம் இன்னும் நிறுத்தப்படவில்லை. உயிரிழப்புக்கள் நீடிக்கின்றன. பட்டினியும், வறுமையும் தலைவிரித்தாடுகின்றன.

இவ்வாறான நிலையில் காஸா யுத்தமானது அமெரிக்காவிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. இப்போரில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதே நேரம் அமெரிக்காவின் விமானப்படை வீரரொருவர் தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார். மற்றொரு விமானப் படை வீரரொருவர் வெள்ளை மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். அத்தோடு அமெரிக்க வெளிவிவகார துறையின் அரசியல்இராணுவ விவகாரங்களுக்கான பணியகத்தின் பணிப்பாளர், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகத்தின் அதிகாரி, கல்வித் துறை அதிகாரி என உயர் பதவிகளை வகிப்பவர்களும் தம் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

அமெரிக்காவின் இஸ்ரேலுக்கான ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்த வண்ணமுள்ளன. இந்த யுத்தம் ஆரம்பமான சொற்ப காலத்தில் அதாவது கடந்த நவம்பர் மாதத்தின் தொடக்கத்தில், அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை இஸ்ரேலுக்கு 14.5 பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளுக்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது. அத்தோடு நின்றுவிடாது இஸ்ரேலுக்குத் தேவையான இராணுவ உதவிகளை வழங்கவும் அமெரிக்கா தவறவில்லை.

அதாவது வருடா வருடம் 3.8 பில்லியன் டொலர்களை அமெரிக்கா இஸ்ரேலுக்கு உதவியாக வழங்கி வருகிறது. இது இஸ்ரேல் வரவு செலவுதிட்டத்தில் 16 சதவீதமாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தொடங்கிய இந்த உதவி தொடர்ந்தும் நீடித்து வருகிறது. இதற்கு மேலதிகமாகவே காஸா மீதான யுத்தம் ஆரம்பித்த பின்னர் இராணுவ தளபாடங்கள், ஆயுதங்கள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அமெரிக்கா முன்னெடுக்கிறது.



அமெரிக்க வெள்ளைமாளிகை முன்பாக உண்ணாவிரதத்தை தொடங்கியுள்ள அமெரிக்கப்படை வீரர்

இந்த யுத்தத்திற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவி, ஒத்துழைப்புக்களை நல்குவதற்கு ஆரம்பம் முதல் அமெரிக்காவில் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களாக ஆரம்பமான இந்த எதிர்ப்புக்கள் அமெரிக்காவில் உயர்பதவி வகித்த பல உயரதிகாரிகள் பதவி விலகவும் வழி வகுத்துள்ளன. குறிப்பாக அமெரிக்க வெளிவிவகார துறையின் அரசியல் இராணுவ விவகாரங்களுக்கான பணியகப் பணிப்பாளர் ஜோஷ் போல் (Josh Paul) கடந்தாண்டு (2023) ஒக்டோபரில் பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து 2024 ஜனவரியில் கல்வித்துறை அதிகாரியான பலஸ்தீனிய அமெரிக்கர் தாரிக் ஹபாஷ் (Tariq Habash) தமது பதவியை இராஜினாமா செய்தார். வெளியுறவுத்துறையின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகத்தின் அதிகாரி அனெல் ஷெலின் (Annelle Sheline) கடந்த வாரம் பதவி விலகியுள்ளார்.


தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட அமெரிக்க விமானப்படை வீரர்

இதேவேளை இப்போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க விமானப்படை வீரரான (வயது 25) ஆரோன் புஷ்னெல் (Aaron Bushnell) வொஷிங்டனில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்கு வெளியே கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி இராணுவ உடையுடன் தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார். காஸா மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கப் படைவீரரே தீக்குளித்து எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். அவர் தனக்குத்தானே தீ மூட்டிக்கொள்ள முன்னரும், தீ மூட்டிக் கொண்ட பின்னரும் 'பலஸ்தீனுக்கு விடுதலை... பலஸ்தீனுக்கு விடுதலை' என்று குரல் எழுப்பியுள்ளார். பலஸ்தீன மக்களின் அவலம் அவரைப் பாதித்துள்ளது.

மேலும் அமெரிக்க விமானப்படையின் மற்றொரு சிரேஷ்ட வீரரான (வயது 26) லாரி ஹெபர்ட் (Larry Hebert) வெள்ளைமாளிகைக்கு முன்பாக காஸா மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த திங்களன்று (01.04.2024) உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். காஸா மக்களைப் பட்டினி போட்டும் குண்டுகளைப் பொழிந்தும் கூட்டாகத் தண்டிப்பதை எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ள அவர், காஸாவில் நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்படுவதோடு, இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவதை நிறுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, அமெரிக்காவில் அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், பெரும்பான்மையான அமெரிக்கர்கள் இப்போது காஸாவில் இஸ்ரேலின் போரை எதிர்க்கின்றனர். கல்லப் (gallup) என்ற நிறுவனம் நடத்திய இக்கருத்துக் கணிப்பில் 55 வீதமான அமெரிக்கர்கள் காஸா மீது இஸ்ரேல் முன்னெடுக்கும் யுத்தத்தை அங்கீகரிக்க மறுத்துள்ளனர். வெறும் 36 சதவீதத்தினர்தான் இப்போருக்கு ஆதரவளிப்பதாக அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம் காஸாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்கான அமெரிக்க குடியரசுக் கட்சியின் ஆதரவு நவம்பரில் 71 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும் அது மார்ச்சில் 64 சதவீதமாக வீழச்சியடைந்துள்ளது. ஆனால் ஜனநாயகக் கட்சியின் ஆதரவு 36 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைந்துள்ளது என்றும் கல்லப் நிறுவனம் நடாத்திய கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்க செனட்டர்கள் பலரும் காஸா மீதான யுத்தத்திற்கு ஆதரவு அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காஸாவில் யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி, பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கி வந்த அமெரிக்கா, கடந்த 25 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்காது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள வொஷிங்டன் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மைக்கல் சிங் (Michael Singh) 'காஸா யுத்தத்திற்கு எதிரான உள்நாட்டு அழுத்தம், நேசநாடுகளின் வேண்டுகோள்கள் என்பவற்றின் காரணமாகவே அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்காது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை' என்றுள்ளார்.

இந்நிலையில், 2.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை இஸ்ரேலுக்கு வழங்க அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அனுமதியளித்துள்ளது. 2000 இறாத்தல் கொண்ட குண்டுகள் 1000 அடிகளுக்கு (300 மீற்றர்) அப்பால் உள்ளவர்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(19ம் பக்கம் பார்க்க)



**மர்லின் மரிக்கார்...**

**யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவில் அதிகாரிகள் பதவி விலகல், உண்ணாவிரதம்; விமானப்படை வீரர் தீக்குளித்து தற்கொலை!**

# Q4 2023 சமூக வழிகாட்டுதல்கள் அமுலாக்க அறிக்கையை வெளியிடும் TikTok

பாதுகாப்பான மற்றும் நேர்மறையான Online சூழலை வளர்ப்பதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சியில், TikTok 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்கான அதன் சமூக வழிகாட்டுதல்கள் (Community Guidelines) அமுலாக்க அறிக்கையை வெளியிட்டது.

இந்த வெளியீடானது TikTok இன் வெளிப்படைத்தன்மை, பாதுகாப்பு



மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றில் நிலையான உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது, மேலும் நம்பிக்கையை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது மற்றும் அதன் உலகளாவிய சமூகத்திற்கு பாதுகாப்பான தளத்தை உறுதி செய்கிறது.

2023ஆம் ஆண்டின் அக்டோபடி சம்பர் காலப்பகுதியில், TikTok இன் செயலூக்கமான நடவடிக்கைகள் உலகளவில் 176,461,963 வீடியோக்களை அகற்ற வழிவகுத்தது, இது பிளாட்ஃபார்மில் பதிவேற்றப்பட்ட அனைத்து வீடியோக்களிலும் சுமார் 1.0% ஆகும். இவற்றில் கணிசமான பகுதி, 128,300,584 வீடியோக்கள், தானியங்கு கண்டறிதல் தொழில்நுட்பங்கள் மூலம் அடையாளம் காணப்பட்டு அகற்றப்பட்டன, அதே நேரத்தில் 8,038,106 வீடியோக்கள் மேலும் மதிப்பாய்வு செய்தபின் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டன.

குறிப்பிடத்தக்க வகையில், வழிகாட்டுதல்களை மீறிய சுமார் 89.9% வீடியோக்கள் Post செய்யப்பட்டு 24 மணி நேரத்திற்குள் அகற்றப்பட்டன, மேலும் காலாண்டில் செயலில் அகற்றும் விகிதம் 96.7% ஆக இருந்தது. இளைய பாவனையாளர்களை பாதுகாப்பதற்கான உலகளாவிய முயற்சியாக, TikTok 13 வயதுக்குட்பட்ட தனிநபர்களின் சந்தேகத்திற்குரிய 19,848,855 கணக்குகளையும் நீக்கியுள்ளது.

TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் அனைத்து பாவனையாளர்களுக்கும் பாதுகாப்பான, உள்ளடக்கிய மற்றும் உண்மையான சூழலை வளர்ப்பதற்காக மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. வழிகாட்டுதல்கள் அனைத்து உள்ளடக்கம் மற்றும் பாவனையாளர்கள் முழுவதும் ஒரே மாதிரியாக செயல்படுத்தப்படுகின்றன, TikTok அதன் அமுலாக்க நடவடிக்கைகளில் நிலைத்தன்மை மற்றும் நேர்மைக்காக பாடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

TikTok அதன் சமூக வழிகாட்டுதல்களை மீறும் உள்ளடக்கத்தை அடையாளம் காணவும், மதிப்பிடவும் மற்றும் நடவடிக்கை எடுக்கவும் புத்தாக்கமான தொழில்நுட்பம் மற்றும் மனித மதிப்பாய்வுகளைப் பயன்படுத்துகிறது. Community Guidelines Enforcement Reportஇன் காலாண்டு வெளியீடு, நீக்கப்பட்ட உள்ளடக்கம் மற்றும் கணக்குகளின் அளவு மற்றும் தன்மை பற்றிய விபரங்களை வழங்குகிறது, முழு வெளிப்படைத்தன்மைக்கான TikTok இன் நிலைப்பாட்டை உறுதி செய்கிறது.


## தினகரன் வாரமஞ்சரி — சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வேலைவாய்ப்பு

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

கல்கிசையில் நிறுவனத்திற்கு Junior multy duty cleark பெண்கள் தேவை. சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் தொடர்பு 077 7782499. 024038

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பவுசர் கொள்கலன் லொறி, கனரக வாகனம் (Bowser, Container, Lorry, Heavy Vehicle) மற்றும் அனைத்து வாகனமும் (Light Vehicle van) ஓட்ட த்தெரிந்த அனுபவமுடைய சாரதிகள் தேவை. வயது 30 முதல் 55 இடைப்பட்டவர்கள் நேர்முக தேர்வுக்கு வரலாம். இலவச தங்குமிடம். குறைந்த விலையில் உணவு வழங்கப்படும். இல. 18, வெயிளமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 076 6200300. 024119

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கடுபெத்தையில் அமைந்துள்ள வீட்டில் தங்கி கடமையாற்றுவதற்கு 30 40 வயதிற்கிடைப்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை. மேலதிக விசாரணைகள் 011 2651129, 071 2738804. 022822

கொழும்பு கம்பனி பங்களாவிற்கு காவற்காரர், தோட்டக்காரர் தேவை. 60 - 65 தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள். சம்பளம் 43,000/= + பகல் உணவு + தேநீர் + சிறந்த தங்குமிட வசதிகள். 0773480490. 023553

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

பத்தரமுல்லையில் உள்ள fast food உணவகத்திற்கு ஒரு CHEF இற்கான வேலை வாய்ப்பு தங்குமிடம் உணவு வழங்கப்படும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தொடர்பு 077 2245229. 023849

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

எமது புத்தளத்தில் அமைந்துள்ள விலங்குப் பண்ணைக்கு ஊழியர்கள், ஊழியர் குடும்பம் தேவை. குடும்பத்திற்கு சம்பளம் 75000/ 0756079079, 077 8140679. 024051

குருநாகல், தொடம்கஸ்லந்த பிரதேசத்தில் அமைந்துள்ள றப்பர் தோட்டம் ஒன்றின் பராமரிப்பு பணிகளுக்காக தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு சாமர 072 9792009. 023934

### பொது

**431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு**

கந்தானையில் புத்தம் புதிய நவீன சொகுசான சக்கர நாற்காலி விற்பனைக்கு. தொ.பே. 070 2588094. 023808

### காணி/தோட்டம்

**601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு**

பன்னிப்பிட்டியவிற்கு அருகில் 10.8 பேர்ச் 6000 ச.அடி தளபாடமுடனான ஆடம்பர வீடு 5 படுக்கையறைகள், 2 குளியலறைகள், நவீன சமையலறை மற்றும் CCTV, சூரிய சக்தி, BIO GAS, வெப்ப நீர், A/C அறைகள், மினி பார், 2 வாகன நிறுத்துமிடங்கள். 071 8 00 8019, 071 2529564. 019988

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கொள்ளுப்பிட்டியவில் முகாந்திரம் வீதியில் இரு மாடி வீடு, 3 படுக்கை அறைகள், 2 குளியலறைகள் உள்ள வீடு விற்பனைக்கு.0775262362. 018999

10 Perch land for Immidiate sale in high commercial/ Residential area in Kollupitiya Galle Road. Please contact 0772474761.023578

மொறட்டுவ, மோல்பே, தெயகசவ் மாவத்த, இல. 02 இல் 11.52 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு. ஒரு பேர்ச் 21 இலட்சம். பேசித் தீர்க்கலாம். கடுபெத்த வளாகத்திற்கு அருகில். சிங்களத்தில் அழைக்கவும். 0714518577. 023529

**620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு**

கொழும்பு சிலாபம் பாதைக்கு 300 m தங்கொட்டுவ பாதையில் ஜப்பான் பாலத்திற்கு அருகில் 23 பேர்ச் விற்பனைக்கு. 0741612109, 0777 850610. 024043

### தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா

*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

### சீகிரிய மற்றும் பிதுரங்கல மலைப்பாறைக் காட்சிகளுடன் சீகிரியவில் முதன்மையான சொத்துக்கள்



- உடன் விற்பனைக்காக 2 ஏக்கர் மற்றும் 8 ஏக்கர் காணிகள் உண்டு. விடுமுறை பங்களா மற்றும் மத்திய அளவு கடை ஹோட்டலுக்கு உகந்தது
- 2 ஏக்கர் காணியானது சரியான முறையில் அமைந்துள்ளது பாரிய குளத்திற்கு முகப்பாகவும் நெல் வயல்கள் ஒரு பக்கத்திலும் பசுமையான வனப்பகுதி மறுபக்கத்திலும் உள்ளன.
- 8 ஏக்கர் காணிக்கு 20 அடி பாதையின் வழியாக செல்ல இயலும் என்பதுடன் உங்கள் வீட்டு வாசலில் மின்சாரமும் உள்ளது.
- தெளிவான உறுதிகள். கொழும்பிலிருந்து 3 மணித்தியாலங்கள் மாத்திரமே.

சீகிரிய குன்றிற்கு 5 நிமிடங்கள் மாத்திரமே.

077 88 10 244 தயவு செய்து தரகர் தேவையில்லை.

### HOUSE FOR SALE RATHMALANA

10 PURCHASE
UP STAIR HOUSE FOR SALE
4 Bedrooms, 3 Bathrooms,
1 Servent bathroom , 2 Pantries,
2 Balconies Parking for two vehicles
100m from Galle Road
0775 931 766

### வெற்றுக் காணி விற்பனைக்கு

கிளென் நீர்வீழ்ச்சி வீதி

நுவரெலிய

19.5 பேர்ச்சுக்கள்
முதன்மையான அமைவிடம்
பாரிய தனிமையான இடம் - 400 மீற்றர்கள் அரலிய கிறீன் ஹில்ஸ் ஹோட்டலிலிருந்து.

2.4 மில்லியன் ரூபா பேர்ச்சொன்று. பேசித்தீர்க்கலாம்

தொடர்பிலக்கம் : 0777 397 093



### GRAND FATHER CLOCKS COLLECTION FOR SALE



Contact: 0777 658 621
No:620B,Highlevel Road,Wijerama,Nugegoda.

### HOLIDAY COTTAGE SITUATED AT AVISSAWELLA



SLEEPS 15 ONLY
Rs 15,000/- PER DAY
COOKS AVAILABLE
Rs 3,000/- PER DAY
0777 271 443 (RANIL)
1.15 HOURS FROM COLOMBO

### வாரமஞ்சரி BUDGET adz — போட்டோ குறும் விளம்பரம்



Nissan March HK11 Reg. 2002, GP - xxxx AC power, new tyres, 119,000 kms Price Negotiable

0712 399 331

1602 - NA



Excellent condition Toyota (KG- LH-172V) diesel van manufactured in the year 2001 is for sale to the highest offer - Colombo 0777 766 928

kut-01

### TWO STOREY HOUSE FOR SALE IN NAWINNA



2 storey 3000 sq. ft. house built on 11.5 perches. Walking distance to Nawinna Ayurveda Hospital. Double garage parking and 20 feet road access and ample parking for visitors. 5 bedrooms with 2 downstairs and 3 upstairs. Large terrace with additional separate access. Spacious office room with bathroom. Servants room with bathroom, Architecturally designed for maximum natural light and ventilation with cooling floors with cut cement of earth colours. Solar hot water, jacuzzi from Foster and Reed, and luxury bath fittings, Teak doors and windows. Semi furnished including Master bedroom suite and Teak dining table and chairs.

Telephone : 0761 928 455

### TWO STORIED HOUSE FOR SALE IN QUIET , RESIDENTIAL NEIGHBOURHOOD IN COLOMBO 5,

OFF POORWARAMA RD



6 Bedrooms, 4 Toilets, Servants room & toilet, Kitchen, Pantry, Store room, Garage, Solar system, Hot water, CCTV, Fully tiled, 2,100 sq.ft., 19p. land, Parking for about 6 vehicles, Garden in front and back

OWNER LEAVING THE ISLAND HIGHEST OFFER

Call or whatsapp on - 0772 974 814
Call on week days - 0112 764 637



0777 394 679 | 070 663 33 88

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

Pay online and save your precious time
Acc. No. 000000377 Corporate Branch

E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# காஸா மீதான இஸ்ரேல் தாக்குதல்கள்: போரியல் உத்திகளின் பலவீனம்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேல் ஹமாஸ் போர், பிராந்திய மற்றும் சர்வதேசத் தளத்தில் அதிக பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. மேற்குலகநாடுகளதும் அரபு நாடுகளதும் தொண்டு பணியாளர்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் ஒருபுறம் அமைய, மறுபக்கத்தில் ஈரானின் சிரியாவில் அமைந்துள்ள தூதரகம் மீதான இஸ்ரேலியத் தாக்குதல் பிராந்தியப் போர் பற்றிய உரையாடலைத் தொடக்கியுள்ளது. இஸ்ரேல் ஹமாஸ் போர் பிராந்திய, சர்வதேசப் பரிமாணம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்த போதிலும் நடைமுறையில் இதுவரை இப்போர் அத்தகைய நிலையினைத் தொடவில்லை என்றே தோன்றுகிறது. அதற்கு மேற்குலகம் மட்டுமல்ல ஈரான் மற்றும் அராபிய நாடுகளும் பிரதான காரணமாகத் தெரிகிறது. இப்போர் இஸ்ரேல் ஹமாஸ் முழுநீளப் போராகவே காணப்படுகிறது. அதுவே தற்போதைய அராபிய நாடுகளது உத்தியாகவும் அமைந்துள்ளது. அதனால் இஸ்ரேல் எதிர்பார்க்கப்பட்ட வாய்ப்புக்களை அடைய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் மீதான நெருக்கடியைத் தேடுவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகவுள்ளது.

01.04.2024 சிரியாவின் மெசே மாவட்டத்தில் நெடுஞ்சாலையில் இருந்த ஈரானிய தூதரகக் கட்டத்தை நோக்கிய இஸ்ரேலிய விமானங்கள் நடாத்திய தாக்குதலில் ஈரானின் ஏழு இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதாக ஈரானிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. ஈரானியப் படையின் மூத்த தளபதி பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெசா ஜாஹேடி அவரது துணைத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் முகமது ஹாடி ஹஜி ரஹிமி ஆகிய இரு பிரதான தளபதிகள் கொல்லப்பட்டதாக ஈரானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இத் தாக்குதலில் சிரிய இராணுவமும் கொல்லப்பட்டதாகவும் சிரிய இராணுவம் அறிவித்துள்ளது.

03.04.2024 இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் தன்னார்வ தொண்டுப் பணியாளர்கள் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவுஸ்ரேலியா, பிரித்தானியா மற்றும் போலந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் அமெரிக்கா மற்றும் கனடா நாட்டுப் பிரஜைகளும் கூட என்பது குறிப்பிடத்தக்கதாகும். 100 தொன் உணவுப் பொதிகளை இறக்கும் போதே இச்சம்பவம் நடைபெற்றதாக தெரியவருகிறது. இத்தாக்குதலுக்கு உலகநாடுகள் மத்தியில் பாரிய கண்டனம் எழுந்துள்ளது. இஸ்ரேலிய தாக்குதலை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தொலைபேசியில் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவுடன் உரையாடியுள்ளார். இரு தலைவர்களும் மனிதாபிமானப் பணியாளர் மீதான தாக்குதலையடுத்து அதற்கு தீர்வுகாணும் விதத்தில் கலந்துரையாடியுள்ளனர். ஏற்கனவே ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்திற்கு அமெரிக்கா வாக்களிக்காது நடுநிலை வகித்ததற்கு இஸ்ரேல் பாரிய கண்டனத்தை வெளிப்படுத்தியது. அதுமட்டுமன்றி, இஸ்ரேல் தனித்து இயங்கப் போவதாகவும் மேற்குநாடுகளது ஆதரவு தேவையற்றதெனவும் நெதன்யாகு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறித்த இரு சம்பவங்களும் இஸ்ரேலின் தாக்குதலை மட்டுமல்ல இஸ்ரேலின் அரசியலையும் தனிப்பட்ட ரீதியில் நெதன்யாகுவின் அரசியல் இருப்பையும் பாதித்துள்ளது. அதனை விரிவாக விளங்குதல் அவசியமானது.

முதலாவது, இஸ்ரேல் தனித்து விடப்படும் நிலைஅதிகம் உணரப்படுகிறது. அது ஒன்றும் இஸ்ரேலுக்கு புதியதல்ல. ஆனால் அராபிய நாடுகளின் தலைவர்கள் விழிப்படைந்துள்ள தற்போதைய சூழலில் இஸ்ரேல் மேற்கிலிருந்து தனிமைப்படுவது ஆபத்தானது. அதனை மேற்குலக நாடுகளின் தலைவர்கள் உணரும் நிலையில் இஸ்ரேலிய தலைவர்கள் இல்லை, என்பது அல்ல பிரச்சினை. மேற்குத் தலைவர்களையும் உலகத்தையும் யூதர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எத்தனிக்கும் உத்தியையே மேற்குடனான முரண்டுபிடித்தலில் இஸ்ரேல் அடைய முனைகிறது. மேற்குக்கும் இஸ்ரேலுக்குமான உறவு பலமானது. அதனை இலகுவில் பலவீனப்படுத்தமுடியாது. அது இருதரப்பின் நலன்களில் தங்கியுள்ளது. அதனால் தற்போது எழுந்துள்ள முறிவு நிரந்தரமானதல்ல. அது உலகத்தை திட்டமிட்டு கையாளும் உத்தியாகும். தொண்டுப் பணியாளர்கள் கொல்லப்பட்டதற்கு மன்னிப்புகோரிய இஸ்ரேல் உலகளாவிய கண்டனத்திற்கு முகங்கொடுக்கத் தயாராகிவிட்டது. தரைவழித் தாக்குதல் அதிக பாதிப்பை இஸ்ரேலுக்குகொடுத்துள்ளது, என்பதை அதன் அணுகுமுறைகளிலிருந்து உணரமுடிகிறது.

இரண்டாவது, இஸ்ரேலின் ஈரானிய, சிரியத் தூதரகம் மீதான தாக்குதலை தொண்டுப் பணியாளர் மீதான தாக்குதல் மூலம் கையாண்டுள்ளதாகவே தெரிகிறது. அத்தகைய தாக்குதலை இஸ்ரேல் பல தடவை ஈரான் மீது நிகழ்த்தியுள்ளது. சிரியா மீதும் ஈரானிய ஆதரவு கிளர்ச்சிக் குழுக்கள் மீதும் இஸ்ரேல் தொடர்ச்சியாக தாக்குதல் நிகழ்த்தி வருகிறது. தற்போதைய தாக்குதலை வெளிப்படையாகவே இஸ்ரேல் நிகழ்த்தியுள்ளதுடன் அதன் விளைவுகள் குறித்து எந்தவித இஸ்ரேல் வெளிப்படுத்தவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். ஆனாலும் ஈரானின் தூதரகத்தின் மீதான தாக்குதலின் போது ஈரானிய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டமை ஈரான் இஸ்ரேல் மீதான கிளர்ச்சிக் குழுக்களின் தாக்குதலை எப்படிக் கையாளுகின்றது என்பதைவெளிப்படுத்துகிறது. இது அராபிய நாடுகளின் தற்போதைய உத்தியாகவே தெரிகிறது. ஈரானின் மூத்த தளபதி சுலைமானி கொல்லப்பட்டபோதும் இத்தகைய நகர்வுக்கான முக்கியத்துவமே காணப்பட்டது. அதனை அமெரிக்கா வெளிப்படையாக தாம் மேற்கொண்டதாக அறிவித்தது. அதுவும் இஸ்ரேலிய, அமெரிக்க கூட்டுத் தாக்குதலாகவே காணப்பட்டது. அவ்வாறே ஈரானிய அணுவிஞ்ஞானி மீதான தாக்குதலும் இஸ்ரேலிய அமெரிக்கக் கூட்டுத் தாக்குதலாகவே காணப்பட்டது. எனவே ஈரான் மீதான தாக்குதல் தொடர்ச்சியானதாகவும் இராணுவ தளபதிகளை இலக்கு வைத்தும் அமைந்துள்ளமை அதன் இராணுவ இருப்பை முழுமையாக சீர்குலைப்பதன் மூலம் இஸ்ரேலிய இருப்பைத் தக்கவைக்க திட்டுமிடுகிறது. இஸ்ரேலிய அமெரிக்க கூட்டின் திட்டமிடல் அதிக சாதகமான நிலையையும் அத்தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவது, ஈரான் இப்போரில் ஈடுபடுமாயின் இஸ்ரேல் அதிகமான வாய்ப்புக்களை தனதாக்கும் என்பது மட்டுமல்லாது மேற்கின் ஒத்துழைப்பு இலகுவாக கிடைக்குமென இஸ்ரேல் கருதுகிறது. அமெரிக்கா மற்றும் மேற்கு மட்டுமல்ல யூதர்களும் நெதன்யாகுக்கு எதிரான போராட்டத்தைக் கைவிடும் நிலை ஏற்படும் என இஸ்ரேலியத் தரப்பு கருதுகிறது. ஈரான் மட்டுமல்ல ஏனைய அராபிய நாடுகளும் போரில் ஈடுபடுவது இஸ்ரேலுக்கு இலாபகரமானதென மேற்கு நாடுகளும் கருதுகின்றன. போரை நீண்ட காலத்திற்கு இழுத்தடித்துவிட்டு அராபிய நாடுகளைத் தாக்குவதும் இஸ்ரேல் மேற்குலகத்தின் உத்தியாக உள்ளது. ஆனால் அராபிய நாடுகள் கிளர்ச்சிக் குழுக்களை வைத்துக் கொண்டு போரை நகர்த்தத் திட்டமிடுகின்றன. அதனாலேயே இரு தரப்பும் போரில் சமவலுவுடைய உத்திகளால் நகர்கின்றன. ஆனால் இரு தரப்பும் எதிரிகளின் வாய்ப்புக்களுக்காக காத்திருக்கின்றன என்பது யதார்த்தமானதாகவே உள்ளது.



நான்காவது, ஈரானை இப்போரில் ஈடுபடுத்துவதென்பது தனித்து ஈரானைத் தோற்கடிப்பதல்ல. மாறாக மேற்காசியாவின் அரசியல் இராணுவ வலிமையை அமெரிக்க இஸ்ரேல் கூட்டு தக்கவைப்பதற்கான உத்தியாகவே உள்ளது. செங்கடலை மையப்படுத்திய போர் என்பது மேற்குலகத்தின் வர்த்தக இருப்பை பாதிக்கும் விடயமாக மாறியுள்ளது. அதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் ஈரான் பலவீனப்படுவதன் வாயிலாக கிளர்ச்சிக் குழுக்களை தோற்கடிக்க முடியுமெனக் கருதுகின்றன. அவ்வாறு கிளர்ச்சிக் குழுக்கள் வீழ்வதன் மூலமே செங்கடல் மற்றும் சுயஸ்கால்வாய்ப் பகுதி மேற்கின் கைகளுக்குள் பாதுகாப்பனதாக இருக்கும். அதனால் இஸ்ரேல் தாக்குதல் ஈரானை நோக்கியதாக உள்ளது. ஈரானை நிலஅடிப்படையில் கைப்பற்றுவதென்பது கடினமான இலக்காகும். அதனால் அதன் இராணுவ வலிமைமீது இலக்குக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் நகர்கின்றன.

ஐந்தாவது, ஐ.நா முதல் அமெரிக்கா வரை இஸ்ரேல் மீதான கண்டனம் முதன்மையடைந்துள்ளதென்பதைக் காட்டிலும் பிரித்தானியாவின் ஆயுத தளபாட விநியோகம் பற்றிய எச்சரிக்கையே இஸ்ரேலை அதிகம் பாதித்துள்ளது. அதற்காக இஸ்ரேலுக்கான ஆயுதவிநியோகத்தை பிரித்தானியா முழுமையாக கைவிடும் என்று கூறிவிடமுடியாது. மாறாக இஸ்ரேலை நெருக்கடியிலிருந்து பாதுகாப்பதற்கான உத்தியாகவே பிரித்தானிய எச்சரிக்கை அமைந்துள்ளது. அமெரிக்காவின் தேர்தலும் ஆட்சி மீதான நெருக்கடியும் அத்தகைய எச்சரிக்கைகளை உருவாக்கியிருக்கிறதே அன்றி முழுமையான தோற்கடிப்புக்கானதோ அல்லது மனிதாபிமான நகர்வுக்கான நடவடிக்கையோ கிடையாது. தமது நாடுகளில் எழவுள்ள எதிர்ப்பினை முடிவுக்குக் கொண்டு வரும் திட்டமிடலுடனேயே மேற்குலகத் தலைவர்கள் இயங்குகின்றனர்.

எனவே இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலானது அதன் போர் உணர்வை மட்டுமல்ல அதன் தாக்குதலின் முதன்மையைக் கோடிட்டுக்காட்ட உதவுகிறது. எல்லாத் தளத்திலும் போரை இஸ்ரேலிய அமெரிக்க கூட்டுத் திட்டமிட்டு நகர்த்துகிறது. இதில் இஸ்ரேல் மீதான கண்டனங்களும் எச்சரிக்கைகளும் இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கான வழிமுறையாகவே தெரிகிறது. அதன் மூலம் போரை நீடிக்கவும் அதனால் ஈரான் மற்றும் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவளிக்கும் சக்திகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையை மேற்குலகம் கடைப்பிடிக்க திட்டமிடுகிறது.

அதன் பிரதிபலிப்பே இஸ்ரேலிய ஆட்சியாளர் மீதான அழுத்தமாகும். இதனால் இஸ்ரேல் ஒன்றும் தனிமைப்படுவதோ மனிதாபிமான நகர்வுகள் பாலஸ்தீன மக்களுக்கு சாதகமானதாக அமையும் என்றோ கருதிவிட முடியாது.

## சூரிய கிரகணம் 2024:

# நாளை உலகம் இருளில் மூழ்குமா?



2024 ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் நாளை ஏப்ரல் 8 ஆம் திகதி தோன்றும். 2024 ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் இலங்கையில் தென்படாது. நாசாவின் கூற்றுப்படி, முழு சூரிய கிரகணம் வட அமெரிக்காவைக் கடந்து, மெக்சிகோ, அமெரிக்கா மற்றும் கனடாவைக் கடந்து செல்லும். நாசாவின் கூற்றுப்படி, இது 2044 வரை அமெரிக்காவில் இருந்து தெரியும் கடைசி முழு சூரிய கிரகணமாக இருக்கும். இது தெற்கு பசிபிக் பெருங்கடலில் தொடங்கும்.

முழு சூரிய கிரகணத்திற்கு ஒரு நாள் முன்பு, சந்திரன் பூமியிலிருந்து 3,60,000 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். இது சந்திரனுக்கும் பூமிக்கும் இடையிலான மிக நெருக்கமான தூரம். எனவே, இது அருகாமையில் இருப்பதால் வழக்கத்தை விட வானத்தில் பெரியதாகத் தோன்றும் இது சூரிய கிரகணத்திற்கு சரியான அமைப்பை உருவாக்கும் மற்றும் அழகான காட்சியையும் உருவாக்கும்.

வானிலை சீராக இருந்தால், வட அமெரிக்க கண்டத்தில் முழுமையாக சூரிய கிரகணத்தை அனுபவிக்கும் முதல் இடம் மெக்ஸிகோவின் பசுபிக் கடற்கரையாக இருக்கும். காலை 11:07 க்கு இது தென்படும். மெக்சிகோவுக்குப் பிறகு, அமெரிக்கா, ஓக்லஹோமா, ஆர்கன்சாஸ், மிசோரி, இல்லினொய்ஸ், கென்டக்கி, இந்தியானா, ஓஹியோ, பென்சில்வேனியா, நியூயார்க், வெர்மான்ட், நியூ ஹாம்ப்ஷயர் மற்றும் மைனே வழியாக பயணிக்கும். டென்னசி மற்றும் மிச்சிகனின் சிறிய பகுதிகளும் முழு சூரிய கிரகணத்தை அனுபவிக்கலாம். கிரகணம் தெற்கு ஒன்ராறியோவில் கனடாவுக்குள் நுழைந்து, கியூபெக், நியூ பிரன்சுவிக் பிரின்ஸ் எட்வர்ட் தீவு மற்றும் கேப் பிரெட்டன் வழியாக தொடரும்.

பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் சூரிய கிரகணத்தை பாரக்கக் கூடாது. சூரியனை நேரடியாகப் பார்ப்பது பாதுகாப்பானது அல்ல, மேலும் சூரிய கிரகணத்தை வெற்றுக் கண்ணால் பார்ப்பது தீங்கு விளைவிக்கும். எனவே, சூரிய பார்வைக்கான சிறப்பு கண் பாதுகாப்பு (வழக்கமான சன்கிளாஸ்களைப் போன்றது அல்ல)கண்ணாடியை அணிய வேண்டும். இருப்பினும், முழு சூரிய கிரகணம் மட்டுமே சூரிய கிரகணத்தின் ஒரே வகையாகும், அங்கு பார்வையாளர்கள் தங்கள் சூரிய பார்வை கண்ணாடிகளை சிறிது நேரத்தில் அகற்றலாம். சந்திரன் சூரியனை முற்றிலுமாக மறைக்கும் குறுகிய காலத்தில் இதைச் செய்யலாம்.

நாளை நிகழவிருக்கும் சூரிய கிரகணத்தை லட்சக்கணக்கான பார்வையாளர்கள் நிலத்தில் இருந்து பார்ப்பார்கள். ஆனால் ஒரு சில அதிர்ஷ்டசாலி நாசா விமானக் குழுவினர் அதை மிக நெருக்கமாகப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

நாளை ஏப்ரல் 8 (திங்கட்கிழமை) வட அமெரிக்கா முழுவதும் முழு சூரிய கிரகணம் நிகழும். சுமார் 3.1 கோடி மக்களால் அதை கண்டுகளிக்க முடியும். இந்த நிகழ்வை கண்டுகளிப்பதற்காக பெரும் எண்ணிக்கையில் மக்கள் அங்கு பயணிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் இவை அனைத்தும் மோசமான வானிலை காரணமாக நிறைவேறாமல் போகலாம். கடந்த 1999ஆம் ஆகஸ்ட் மாதம் பிரிட்டனில் நிகழ்ந்த கிரகணத்தை பார்க்க முடியாமல் மேக கூட்டங்கள் மறைத்துவிட்டன என்பது நினைவுகூரத்தக்கது. எனவே ஒரு குறிப்பிட்ட இடத்தில் சராசரியாக 375 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே நிகழும் முழுச் சூரிய கிரகணத்தை நீங்கள் பார்க்க வேண்டும் என்றால், அதற்கான சிறந்த வழிதான் என்ன?

நாசாவின் இரண்டு பிரத்தியேக WB57 விமானங்களில் மெக்சிகோ கடற்கரையில் இருந்து பறக்க உள்ளன. தென்மேற்கிலிருந்து வடகிழக்கு வரை கிரகணத்தின் முழுமையான பாதையை அவர்கள் பின்தொடர்வார்கள்.

சந்திரன் சூரியனைக் கடக்கும்போது ஏழு நிமிடங்கள் அவர்கள் அதன் நிழலில் இருப்பார்கள். அதே நேரத்தில் அவர்கள் தரையில் இருந்தால் அவர்கள் நான்கு நிமிடங்கள் மட்டுமே அதன் நிழலில் இருந்திருக்கமுடியும்.

சுமார் 50,000 அடி (15 கிமீ) உயரத்தில் பல உபகரணங்களுடன் அவர்கள் கிரகணத்தின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்வார்கள்.

“இது மிகுந்த உற்சாகம் தருகிறது" என்று இரண்டு விமானங்களில் ஒன்றின் சென்சார் உபகரண இயக்குனரான நாசா விமானி டோனி கேசி கூறுகிறார். "நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன். இந்தப்பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். கிரகணத்தின் நிழல் உங்களுக்கு முன்னே செல்லும் அந்தத் தருணத்தின் அனுபவத்தை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்," என்றார் அவர்.

சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியவை ஒரே நேர்கோட்டில் வருகின்ற போது சந்திரன் சூரிய ஒளியை முற்றிலும் மறைக்கும் வகையில் இருக்கும்.

இதன்போது, சந் தி ரன் முழு கிரகணத்தை உருவாக்கி, சூரியனின் முழு மேற்பரப்பையும் மறைக்கும். சந்திரனின் ஒளி பூமியின் மேற்பரப்பில் பயணிக்கும் சிறிய பகுதி முற்றிலும் இருட்டாகிறது.

இந்த நிகழ்வின் போது பூமியில் வசிக்கும் மக்கள் கிரகணத்தை ஓரளவு பார்க்க முடியும். இம்முறை மெக்சிகோவின் பசிபிக் கடற்கரை நகரமான மசாட்லானில் (Mazatlan) இருந்து கனடாவின் நியூஃபவுண்ட்லேண்டின் கிழக்கு கடற்கரை வரை உள்ள மக்கள் இதனை காண வாய்ப்புள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனினும் குறித்த சூரிய கிரகணத்தினை இலங்கையில் காண முடியாது.

வானியல் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் இதுபற்றிக் கேட்டபோது, நாளை ஏப்ரல் 08 ஆம் திகதி நிகழவுள்ள முழு சூரிய கிரகணம் இலங்கையில் தெரியாது, அமெரிக்கா மற்றும் வட அமெரிக்காவிற்கு மட்டுமே தெரியும் என்று கூறினார்.

சூரிய கிரகணத்தை இலங்கை வாழ் மக்கள் எப்போது காண முடியும்?

ஆகஸ்ட் 02, 2027 – பகுதி சூரிய கிரகணம்
ஜுலை 22, 2028 – பகுதி சூரிய கிரகணம்
மே 21, 2031 – ஒரு வளைய சூரிய கிரகணம்
ஏப்ரல் 11, 2070 – முழு சூரிய கிரகணம்,





# தெனியாய நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் கும்பாபிஷேகம் இன்று

இந்து மகா சமுத்திரத்தை அழகு செய்ய எழில் முத்தாய் காட்சி தரும் நீர்வளமும், நில வளமும் கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் இலங்கை திருநாட்டின் தென் மாகாணத்தில் உள்ள நகரங்களில் தெனியாய நகரும் ஒன்று.

இந்த நகர் தேயிலை தோட்டங்களினால் சூழப்பட்டுள்ளது. இந்த நகரில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திற்கு கீழே நாலா புறங்களிலும் நெல் வயல்களினால் சூழப்பட்டுள்ள ஒரு சிறு குன்றில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் எழுந்தருளி ஏறத்தாழ ஏழரை தசாப்தங்களாக அருள்பாலித்து வருகிறார்.



வட மாகாணத்தில் இருந்து வர்த்தகம் செய்யும் நோக்கத்துடன் தெனியாய நகரில் குடியேறிய அமரர் வேலுப்பிள்ளை இன்னும் பலருடன் சேர்ந்து ஒரு கோயிலை அமைப்பதற்காக மூன்று ஏக்கர் காணியை விலை கொடுத்து வாங்கி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலை கட்டுவித்து 1959ஆம் ஆண்டின் இறுதியில் மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார்.

அமரர் வேலுப்பிள்ளைக்கு பின்பு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பு அமரர் பெ.உ.சுப்பையாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்பு அவரின் மகனான உ.சு.கோவிந்தசாமி சபையின் பொருளாளர் பதவியை பொறுப்பேற்று நா.மு. சண்முகத்தை தலைவராகவும் ஆர். பொன்னுசாமியை செயலாளராகவும் கொண்டு சபை நடவடிக்கைகள் கிரமமாக இடம்பெற்றன.

அமரர் எஸ்.எம்.தங்கையா, திருவாளர்கள் சபாபதி, தம்பித்துரை மற்றும் தெனியாய நகரிலுள்ள வர்த்தகர்கள், தெனியாய நகரைச் சுற்றியுள்ள தோட்டங்களிலுள்ள முக்கியஸ்தர்கள் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் முழு ஒத்துழைப்பை அவ்வப்போது பெற்று கோவில் வருடாந்த திருவிழாக்கள் உட்பட அனைத்து தேவைகளும் நிறைவேற்றப்பட்டன.

உ.சு.கோவிந்தசாமி காலமான தன் பின்பு சி.பக்தசீலன் கோவிலின் அறங்காவலர் பதவியுடன் பொருளாளர் பதவியையும் பொறுப்பேற்று நா.மு.சண்முகம் தலைவராகவும் ஆர்.பொன்னுசாமி செயலாளராகவும் கொண்டு கோவிலின் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் பின் ச. அருள்நாதன் தலைவராகவும் செ. மனோ சிவநாதன் செயலாளராகவும் சி.பக்தசீலன் பொருளாளராகவும் செயல்பட்டு கோவில் செயல்பாடுகளை முன்னெடுத்தார்கள். அதன் பின்பு 27.11.1997 வியாழக்கிழமை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் பாலஸ்தாபனம் நடைபெற்று 2003ஆம் ஆண்டு இறுதியில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதன்பின்பு கோயில் பரிபாலன சபையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. தற்போது கோவில் திருப்பணி குழுவினரின் தீர்மானங்களுக்கு ஏற்ப தெனியாய ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் பாலஸ்தாபனம் நிகழும் சர்வமங்களகரமான சோபகிருது வருடம் பங்குனி திங்கள் 25ஆம் நாளான இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தசி திதியும் சித்தாமிர்த யோகமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய முற்பகல் 11 மணி 51 நிமிடத்தில் பாலஸ்தாபனம் இடம்பெற திருவருள் கூடியுள்ளது.

பாலஸ்தாபனம் சம்பந்தமான அனைத்து சமய கிரியைகளும் யாழ். நகர் இணுவில் தர்ம சாஸ்தா குருகுலத்தின் சிவ ஸ்ரீ ஆதி சௌந்தராஜக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சி. பக்தசீலன்,**
**முன்னாள் அறங்காவலர்**

# உரிமைகளைப் பெற்றுத் தரும் 'மலையக தமிழர்' எனும் அடையாளம்

இலங்கையை பொருளாதார ரீதியில் மேம்பாடடையச் செய்யும் நோக்கத்துடன் தென்னிந்தியாவிலிருந்து 1823ஆம் ஆண்டு வருவிக்கப்பட்ட மக்களின் வழித்தோன்றல்களே நாடளாவிய ரீதியில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்கள். அந்த மக்களில் எஞ்சியுள்ளோர் பெருந்தோட்டங்களில் இருந்து படிப்படியாக வெளியேறி வெவ்வேறு துறைகளில் பணிபுரிகின்றனர்.

எனவே இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களில் இரு தரப்பினர் உள்ளார்கள். தோட்டத் தொழிலாளர்களை முதலாவதாக குறிப்பிட்டால் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதோரை இரண்டாவது தரப்பினர் எனக் குறிப்பிடலாம்.

இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களில் தோட்டங்களை விட்டு வெளியேறி தோட்டங்களுக்கு வெளியே நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்பவர்கள் தமக்கான முகவரிகளை கொண்டவர்களாக வாழ்வதனால் அவர்களுக்கு தபால் விநியோகம் நேரடியாகவே இடம் பெறுகிறது.

ஆனால், இந்த நாடெங்கிலும் உள்ள பெருந்தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களாக பணிபுரிவோரின் வீடுகளுக்கு இலக்கம் குறிப்பிடப் படாததனாலும் லயன் அறைகளில் குடியிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு இத்தனையாவது லயனில் இத்தனையாவது வீடு எனக் குறிப்பிடாததனாலும் தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டில் இருநூற்றொரு வருட வரலாற்றைக் கொண்டிருப்பினும் அவர்களுக்கு இன்டர்நெட் யுகம் என வர்ணிக்கப்படும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் முகவரிகள் தோட்ட நிர்வாகங்களினால் உரிய விதத்தில் வழங்கப்படவில்லை. இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கான தபால் விநியோகம் அவ்வப்போது கிரமமாக இடம் பெறாமையினால் தோட்டத் தொழிலாளர்கள் தாம் வங்கிகளில் அடகு வைத்த நகைகளை இழந்துள்ளார்கள். ஏனெனில் வங்கிகள் அடகு நகைகளை ஏலத்தில் விடப்போவதாக அறிவிக்கும் கடிதங்கள் உரிய காலத்தில் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உரிய நேரத்தில் கடிதங்கள் கிடைக்காதமையால் தொழில் வாய்ப்புகளையும் இழந்ததோடு உரிய நேரத்தில் பரீட்சைகளில் தோற்ற முடியாத சூழ்நிலைக்கு உள்ளாகின்றார்கள்.



கடந்த ஜனவரி மாதத்தில் மாவத்தகம மூலன்கந்த தோட்டத்தில் வசிக்கும் ஜீவரட்ணம் சுரேஷ்குமார் தான் வாழ்ந்த தோட்டத்தில் 300 குடும்பங்கள் வசிப்பதாகவும், நாட்டில் இருநூறு ஆண்டுகால வரலாறு கொண்ட அந்த மக்களுக்கு இன்னும் முகவரி வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். ஒன்பது மாதங்களில் நாடெங்கிலும் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய முகவரியை அரசாங்கம் வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கான முகவரியை வழங்க இதுகாலவரை நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் தமக்கென ஒரு இன அடையாளத்தை குறிப்பிட முடியாமல், குடிசன மதிப்பீட்டின் போதும், தம்மை வாக்காளர்களாக பதிவு செய்துகொள்ள நிரப்ப வேண்டிய விண்ணப்ப பத்திரங்களிலும் மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் தம்மை இலங்கை தமிழர் எனவும் இந்திய தமிழர் எனவும் குறிப்பிடுவதன் மூலம் பல வழிகளிலும் பாதிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளித் தமிழர்கள் தம்மை மலையக தமிழர் என குறிப்பிட்டு அவர்களுக்குரிய இன விகிதாசாரத்திற்கு ஏற்ப உரிமைகளை பெற வேண்டும்.

இந்த நாட்டின் வரலாற்றை அலசி ஆராய்ந்தால் தோட்டத் தொழிலாளர் குடும்பம் ஒன்றிற்கு ஏழு பேர்ச்சர்ஸ் காணி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு அந்த காணிகளில் தனித்தனி வீடுகளை நிர்மாணித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை முதன் முதலாக முன் வைத்தவர் மலையக மக்களின் ஸ்தாபகத் தலைவரான பெரியசாமி சந்திரசேகரன். அவர் தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் ஏறத்தாழ ஆறாயிரத்து ஐந்நூறு வீடுகளை நிர்மாணித்து வழங்கினார்.

அதன் பின்பு மலையக புதிய கிராமங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த பழனி திகாம்பரம் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகளை நிர்மாணித்து வழங்கினார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் குடியிருப்புகளும், குடியிருப்புகளை சுற்றியுள்ள காணிகளும் சொந்தமாக வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்க தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புகளை முன்புறமாகவும் பின்புறமாகவும் விஸ்தரித்து இடவசதியை அதிகரித்து கொண்டார்கள்.

ஆனால், இதுகாலவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களோ வீட்டுரிமை பத்திரங்களோ வழங்கப்படவில்லை. எனவே, தற்போதைய அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சராக பதவி வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரான ஜீவன் தொண்டமான், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான ஜனாதிபதியின் ஆலோசகரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளருமான வடிவேல் சுரேஸ், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் ஆகிய மூவரும் மேலே குறிப்பிட்டுள்ள மூன்று விடயங்களையும் துரிதமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அவற்றிற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அத்தோடு, இந்த நாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா 10 பேச்சர்ஸ் வீதம் காணிகளை பெற்றுக் கொடுத்து தோட்டத் தொழிலாளர்களை இந்த நாட்டில் காணியுரிமை கொண்டவர்களாக உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலையகத் தலைவர்கள் சமூக நலன் கருதி செயல்படின் அவர்கள் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தை பெறுவார்கள் என்பதில் கிஞ்சித்தும் ஐயம் இல்லை.

நோயாளி ஒருவரின் உடலை பரிசோதித்து அவருக்குள்ள நோயை இனங்கண்டு அதற்கு சிகிச்சை அளிப்பது போன்று இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளி தமிழர்களின் பிரச்சினைகளை இனம்கண்டு மலையக மக்களுக்கான தலைவர்கள் உரிய விதத்தில் செயல்பட வேண்டியமை காலத்தின் கட்டாய தேவை என்பதை மறுக்க முடியாது. பொறுத்திருந்து பார்ப்போம்.

**இவதன்**

# 200 ஆண்டுகால வரலாற்றில் ஒரு மைல்கல்

# பெருந்தோட்டங்களில் கள உத்தியோகத்தர்களாக பெண்கள் நியமனம்

எழில் கொஞ்சும் மலையகத்தின் இயற்கைக்கு பின்னால் பெருந்தோட்ட பெண்களின் சொல்லிலடங்கா வலிகளும் வேதனைகளும் உள்ளன.

இலங்கையில் இலவசக்கல்வி, இலவச மருத்துவம், சர்வஜன வாக்குரிமை, ஏனைய சமூகநலன் திட்டங்கள் காரணமாக ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பெண்கள் கணிசமான அளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். எனினும் நாட்டின் உற்பத்தித்துறையில் பெரும் பங்காற்றும் பெருந்தோட்டபெண்கள்மிகவும்பின்தங்கிய நிலையிலேயே இன்றும் வாழ்கின்றனர்.

அவர்களது போராட்டம், சிறுவயது முதலே, போசாக்கு, கல்வி, போக்குவரத்து, பாதுகாப்பு என்று ஆரம்பித்து விடுகின்றது. அது அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றது.

தாம் செய்யும் தோட்டத் தொழிலுக்கு அப்பால் வீடுகளில் உணவு தயாரித்தல், உணவுபரிமாறல், பாத்திரங்களைத் துப்புரவுசெய்தல், அன்றாடத் தேவைகளுக்காக நீர், விறகு போன்றவற்றை சேகரித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல் என அன்றாடம் பல சுமைகளை தோளில் சுமக்கின்றனர் மலையக பெருந்தோட்ட பெண்கள்.

எனினும் குடும்பத்திலும் சரி வேலைத்தளங்களிலும் சரி அவர்களுக்கான கௌரவமான வாழ்க்கை, சமூக அந்தஸ்து, பால்நிலை சமத்துவம், பாதுகாப்பு என்பன கிடைப்பதில்லை.

தேயிலைத்தோட்டங்களில் பணியாற்றும் மொத்த தொழிலாளர்களில் 60 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாக இருக்கின்றனர். எனினும் அவர்களை மேற்பார்வை செய்பவர்கள், தலைமைத்துவத்தை வழங்குபவர்கள் ஆண்களாகவே இருக்கின்றனர்.

தீர்மானங்கள் மேற்கொள்ளும் மட்டங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்படுகின்றது. 200 வருடங்களாக அவர்கள் அதே தொழில் நிலைகளிலேயே இருக்கின்றனர்.

இதனால் வேலைத் தளங்களில் பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். உடல் உழைப்புச் சுரண்டல், பாலியல் சுரண்டல் போன்ற அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர். சில இடங்களில் பெண் என்ற காரணத்தினால் புறம் தள்ளப்படுகின்றனர்.

தமது பிரத்தியேக பிரச்சினைகளை வெளிப்படையாக பேசமுடியாது அசௌகரியத்துக்குள்ளாகின்றனர். எனவே இப்பிரச்சினைகள் தீர வேண்டுமென்றால் அடிமட்டத்திலிருந்து பெண் தலைமைத்துவம் பெருந்தோட்டத்துறையில் உருவாக்கப்பட வேண்டும்.

ஒருசில தோட்டங்களில் பெண் தொழிலாளர்களுக்கு மேற்பார்வைக் குழுத் தலைவர் (கங்காணி) என்ற பதவி நிர்வாகங்களால் வழங்கப்பட்டது. எனினும் அதுவும் விரல் விட்டு எண்ணுமளவிலேயே இருந்தது. அதற்கு அதிகப்படியாக பெண் தோட்ட கள உத்தியோகத்தர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை.



எனவே இவற்றை கருத்திற் கொண்டு தலவாக்கலை பெருந்தோட்ட நிர்வாகம் தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் பெண் தோட்ட கள மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சியளித்து, இலங்கையில் முதல் முறையாக தேயிலை தோட்டங்களில் பெண் தோட்ட கள மேற்பார்வையாளர்களை அறிமுகப் படுத்தியது.

இதுதொடர்பில் தலவாக்கலை பெருந்தோட்ட மனித வள முகாமைத்துவ பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் கருத்து தெரிவிக்கையில்,

156 வருடகால வரலாற்றை கொண்ட பெருந்தோட்டத்துறையில் 60 சதவீதத்துக்கு மேல் பெண் தொழிலாளர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்களை மேற்பார்வை செய்பவர்கள், அவர்களுக்கு தலைமைத்துவத்தை கொடுப்பவர்கள் ஆண்களாகவே இருக்கின்றனர். தலைமைத்துவப் பதவிகளில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. எனவே தலவாக்கலை பெருந் தோட்டம், பெண் கள உத்தியோகத்தர்களை நியமிக்கும் வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்தது. எனினும் இத்திட்டத்தை முன்னெடுப்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை நிறுவனம் என்ற ரீதியில் நாங்கள் முகம் கொடுத்தோம். பெண்கள் தேயிலை தோட்ட கள உத்தியோகத்தர்களாக வருவார்களா? இதை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்ற சந்தேகம் இருந்தது. எனவே தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் பயிற்சி அபிவிருத்தி ஆய்வுப் பிரிவின் ஊடாக மலையக பெருந்தோட்ட பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டோம். அதில் இத்திட்டத்துக்கு பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருப்பதை அறிந்துகொண்டோம். அதற்கமைய தேயிலை தோட்ட கள உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பெண்களை கள உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கான 4 மாதகால பயிற்சிநெறியொன்றை வழங்குவததற்காக அடிப்படைக் கல்வித் தகைமைகளை உள்ளடக்கிய பிரசுரங்கள் (Brochures) தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன. இவை பத்திரிகை மற்றும் சமூகவலைத் தளங்களின் ஊடாக பகிரப்பட்டன.

இலங்கையின் எல்லாப் பிரதேசங்களிலும் வசிக்கக்கூடிய விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏறத்தாழ 450க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

எனினும் நாங்கள் தேயிலை தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுக்கத் தீர்மானித்தோம். அதற்கமைய தோட்டப் பின்னணி, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை சித்தி, மொழி அறிவு, தலைமைத்துவ பண்பு போன்ற விடயங்கள் தகைமைகளாகப் பார்க்கப்பட்டன. அதற்கமைய இறுதியாக 24 பேரை தலவாக்கலை, தெனியாய ஆகிய



பகுதிகளிலிருந்து தெரிவுசெய்து அவர்களுக்கு விவசாய தொழில்நுட்ப அறிவு, மனிதவள முகாமைத்துவம், கணக்கியல் அறிவு, தேயிலை ஏற்றுமதி, தலைமைத்துவ அறிவு, களப் பயிற்சி போன்ற பயிற்சிகளை வழங்கினோம். களப் பயிற்சி தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனிகளுக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களில் வழங்கப்பட்டதுடன் ஏனைய பயிற்சிகள் தலவாக்கலை, தெனியாய தேயிலை ஆராய்ச்சி நிலையங்களில் நடைபெற்றன.

பயிற்சிக் காலத்தில் எம்மோடு இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், தேசிய தொழிலாளர் கற்கை நிலையம், தொழில் திணைக்களம், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன இணைந்திருந்தன. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) ஊடாக இவர்களுக்கு NVQ 4 சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் ரூ.15 ஆயிரம் சம்பளமாக வழங்கப்பட்டது. இறுதியாக தேயிலை ஆராய்ச்சி சபை ஊடாக 24 பேர் தெரிவுசெய்யப்பட்டு பட்டமளிப்பு விழாவொன்றை ஏற்பாடு செய்து அதில் பதவி நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கு அடிப்படை சம்பளமாக ரூ. 30000 வழங்கப்படுகின்றது. இது தவிர பெருந்தோட்ட கம்பனிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்குரிய சலுகைகள் அனைத்தையும் இவர்களும் அனுபவிக்கலாம். அதாவது வீட்டுவசதி போன்ற சலுகைகளை குறிப்பிடமுடியும். இவர்களுக்கான தொழில் பயிற்சிகளுக்கென்று 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஊடாக மலையக பெருந்தோட்ட பகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெண்கள் தங்களுடைய பிரச்சினைகளை கதைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி ஆண் தேயிலை கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து எந்தவித பாகுபாடுமின்றி இப்பெண்கள் பணிபுரிகின்றனர். குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளது.

பெண் தொழிலாளர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் பயமின்றி கதைக்கின்றனர். இது தலவாக்கலை பெருந்தோட்டத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என அவர் தெரிவித்தார்.

அதேபோல் ஹற்றன் பிளான்டேஷன்ஸ் தோட்ட நிர்வாகமும் பெருந்தோட்ட பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் தோட்ட உத்தியோகத்தர் தொழில் துறையில் விசேடமாக மேற்பார்வையாளர்கள் தரத்தில் இதுவரை முக்கியத்துவம் வழங்கப்படாதிருந்த பெண்களுக்கு முக்கிய இடத்தை வழங்கியுள்ளது.

அதுமட்டுமின்றி பல பெருந்தோட்ட கம்பனிகளும் பெண் தோட்ட கள உத்தியோகத்தர்களை நியமிப்பதில் அக்கறை காட்டிவருகின்றது.



**வசந்தா அருள்ரட்ணம்...**




# வஞ்சித்தல்!

நீ கண்கொத்திப் பாம்பு
உன் பார்வைவிஷம்
விழுந்த இடத்திலிருந்தே
என் கிளை பிரிந்திற்று

கூட்டுப் பிரார்த்தனையின்
அதிஉச்ச நம்பிக்கையை
நீ வீசிய சிறு கல்
பின் சிதைத்தும் விட்டது

இன்றைய நாளில்
தனித்த தண்டவாளமாய்
இழுபட்டு போவதாய்
வாழ்வின் இருப்பு

இந்த வதைகளில்
எந்த ரசமும் இருப்பதற்கான
சாத்தியமும் இல்லை இனி...
இது வெறும் மெழுகுச் சிலையாய்
உருகி வடிந்து உறையும்
என்பதைத் தவிர எதுவுமில்லை

தவத்தின்
உச்சக்கட்டங்களை தாண்டி
மனம் விரும்பியதென்று மார்தட்டி
பசி மறந்து, துயில் துறந்து
பெருக்கிய முற்றம்

இன்றுன் ஆக்கிரமிப்பின்
அத்துமீறல்களுக்குள் அகப்பட்டு
சீர்குலைந்து சிதறிய வாசலாய்

பொறிகலங்க வைக்கும் அறங்களை
புகட்டவும், போதிக்கவும்
சாத்தியமாகும் உன்னால் என்பதை
சாட்சி பகிர்ந்தன
சமகால நடவடிக்கைகள்

வார்த்தைகளால் தீயிட்டு
கொளுத்தவும்
வஞ்சித்தலால் கூந்தல்
கட்டி விரட்டவும்
அறியுமாயிருந்த உனக்கு
இழப்பு, தவிப்பு எதையும் நீ
அறிந்துணர அவகாசம் எடுக்கவில்லை

சுவைமிகு என் மனசின் துணுக்குகளை
படித்துப் பார்க்க தவறும்
எல்லாக் காலத்திலும்
ரசம் வடியும் தேனியாய்
இறுதிக்கணம்வரை
நான் சுற்றியலைவேன்
நீ கலைத்துவிட்ட இவ்வெளியில்!

ரோஷான் ஏ.ஜிப்ரி

# நரக விடுதலை வேண்டும்

அழகா யென்னை படைத்தவனே
அநாதைகளின் கண்ணீர் துடைத்தவனே
அழுது நானும் கேட்கிறேன்
அருள்வாய் அறிவை ரஹ்மானே

சீராய் உறுப்புகள் ஆக்கியவனே
சிறப்பாய் மடமை போக்கியவனே
கரமேந்தி நானும் கேட்கிறேன்
கருணை காட்டு ரஹ்மானே

கட்புல னெனக்கு தந்தவனே
காரிருளிலு மெனைப் பார்ப்பவனே
வருந்தி நானும் கேட்கிறேன்
வறுமையை போக்கு ரஹ்மானே

கேட்கும் செவிகள் ஈந்தவனே
கோடி புண்ணியங்கள் புரிந்தவனே
வாடி நானும் கேட்கிறேன் உள
வன்மையை போக்கு ரஹ்மானே

பொன்னும் பொருளும் தந்தவனே
பொறுப்புடன் வாழச் சொன்னவனே
கண்ணீர் சிந்திக் கேட்கிறேன்
கலைஞானம் தருவாய் ரஹ்மானே

சதையால் எலும்புளை போர்த்தியவனே
சடுதியில் கெடாது காத்தவனே
இதமாய் நானும் கேட்கிறேன்
எகினை தருவாய் ரஹ்மானே

சொந்தங்கள் மண்ணில் சேர்த்தவனே
சுகமா யென்னை பார்த்தவனே
எந்தநாளும் அழுது கேட்கிறேன்
இறையன்பை தருவாய் ரஹ்மானே

எண்ணிலா அருள்கள் புரிந்தவனே
ஈமானை என்னுள் பொழிந்தவனே
அனுதினமும் நான் கேட்கிறேன்
அருள் நெருக்கம் தருவாய் ரஹ்மானே

நரக நெருப்பை எரிப்பவனே
நம்மை யதில் கரிப்பவனே
நெருப்பை நான் அஞ்சுகிறேன்
நரகவிடுதலை தருவாய் ரஹ்மானே

வரக்காமுறையூர் ராசிக்

# புனித ரமழான்

பாவக் கறைகளைப் போக்கிடும்
படைத்தவன் தந்தருளே நோன்பு!
பசியெனும் ஏழையின் உணர்வு
பணக்காரனுக்கும் கடமையே நோன்பு!

பட்டினியாய் இருப்பதுவல்ல மாண்பு
படைத்தவனும் விரும்பிடும் நோன்பு!
பகைவன் இப்லீஷ்க்கும் விலங்கிட்டு
பார்வையில் இறையச்சம் பேணிடு!

பகல்பொழுது பசித்திருக்கும் விரதம்
பகைவனிடமும் இருப்பதில்லை குரோதம்!
பிறை கண்டே நோன்பெடுப்பார்
பிறர் குறைகளையும் தின்னாதிருப்பார்!

படைத்தோனை தொழுவதே இன்பம்
புவனத்தில் விலகிடுமெல்லாத் துன்பம்!
புனித ரமழானில் மலர்ந்த மறைவேதம்
புர்கானைத் தினமோதுமே உள்ளம்!

பாங்கோசை நாமும் செவி கேட்டிட
பாதங்கள் விரைந்தோடும் தொழுதிட!
படைத்தவனை தொழுதிடவே நாமும்
புனிதராக்கிடும் இறைதியானம் தினமும்!

பகிர்ந்து கொடுத்திடுவோம் தர்மம்
புசித்திடுவார் ஏழைகளும் இன்பம்!
புன்னகையில் முகமலர்வதும் தர்மம்
படைத்தவன் தந்திடுவான் சுவனம்!

பரிவுடன் பகிர்ந்துகொள் ஏழைவரி
படைத்தோன் நரகத்தை மூடும்வழி!
பற்றிக்கொள் சர்தார் நபிவழி
படைத்தவனிடம் உனக்கானது சுவனவழி!

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு



# இன்னுமா நீ தூக்கம்...

யாரிடம் அழுதிட
யாரிடம் புலம்பிட
யாரிடம் கெஞ்சிட...
யார் முன்னே கண்ணீர் சிந்திட...
யாரிடமும் முடியாது...
யாவையும் அறிந்த அவன்
முன்னே தவிர...

இறுதி இரவின்
இறுதிப் பாகத்தில்
இதயப் பாரங்களை
இறக்கிவைக்க
இறைவனே இறங்கி வந்துவிட்டான்..
இன்னுமா நீ தூக்கம்...

இல்லாமைகள்
இயலாமைகள்...
தேவைகள்...
தேடல்கள்...
தேக்கிவைத்த மனக் கவலைகள்
இவையாவும்..
இரு சொட்டுக் கண்ணீரோடு
இல்லாமல் போகும்...
இரவின் இறுதிப்பாகத்தில்

இறைவனிடம் கையேந்து...

அழுது புலம்பு...
கெஞ்சிக் கேள்...
உடைந்து போன உன் இதயத்தை..
நொறுங்கிப்போன உன் வாழ்வை..
கஷ்டமான கடனை..
விட்டுப்போன உறவை...
விடைபெற்ற உயிர்களை..
ஆறாத ரணங்களை..
இன்னும்
ஆயிரம் தேவைகளை
அடுக்கடுக்காய் அவனிடம் முறையிடு..
மண்டியிட்டு மன்றாடு..

இறுதி இரவின்
இறுதிப் பாகத்தில்
இதயப் பாரங்களை
இறக்கிவைக்க
இறைவனே இறங்கி வந்துவிட்டான்..
இன்னுமா நீ தூக்கம்...

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

# வாழ்த் தினகரனை வாழ்த்

தொண்ணூற்று இரண்டு வருடங்களாய்
தொடர்ந்து தரும் செய்திகளால்
தொகையான வாசகர்களை
மிகையாய் பெற்ற தினகரனே

அச்சு ஊடக வரலாற்றில்
அசராமல் தடம் பதித்து
அஞ்சிடாமல் பல செய்திகளை
அழகுறத் தரும் தினகரனே

தேனான செய்திகளை
தெவிட்டாமல் தந்து நிதம்
வீணான செய்திகளை
விளையாட்டாகவும்
தந்திடாத தினகரனே

சவால்கள் பலவற்றை
சாதுரியமாய் வென்று
சாதனைகள் பலதைக் கண்ட
சாகாவரம் பெற்ற தினகரனே

தரமான செய்திகளை
தனக்கே உரித்தான பாணியில்
தத்ரூபமாய் தருவதில்
தன்னிகரில்லா தினகரனே

கலையுலகில் கால் பதிப்போருக்கு
கரிசனையாய் களம் தந்து
நிலையான பெயரைப் பதிந்திட
நிதர்சனமாய் வழிதரும் தினகரனே

தினந்தோறும் நற் செய்திகளை
திரட்டியே தந்து நற்
திசை நோக்கியே பயணிக்கும்
திமிரில்லா தினகரனே

உள்நாட்டு வெளிநாட்டு செய்திகளை
உடனுக்குடனே தெரிவித்து
பல்லின மக்களையும் கவர்ந்திழுக்கும்
பத்திரிகையாம் தினகரனே

விருதுகள் பலதை வென்று வாசகர்
விருப்பமாய் செய்திகள் தந்து
வில்லங்கமில்லா தகவல்களை
விரைவாகத் தந்து விடும் தினகரனே

நடுநிலையாய் கருத்துக்களை
நயமாறத் தெறிக்க விடுவதில்
நாடறிந்த நல்ல பத்திரிகையாய்
நாமறிந்த தினகரனே

பல்சுவை அம்சங்கள் பலதை
பளிச்செனத் தாங்கி வந்து
பழிச்சொல் கேட்டிடாத
பக்குவமான தினகரனே

நூற்றாண்டை நோக்கிய பயணம்
நூதனமாய் அமையட்டும்
நூறாண்டும் கடந்து
வெற்றிநடை போட்டிட
நூறாயிரம் கரங்கள் பிரார்த்திக்கட்டும்.

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

# உலக சிட்டுக்குருவிகள் தினம்

மனை சுற்றி திரிய
மனம் கொத்தி போவாய்
பெறுக மானிடர்
அழிக்க உன் குடில்
மறைந்து போகிறாய்

அழகு சிட்டே!
அழகுக்கு எளிமை நீயாய்
அன்புக்கும் இலக்கணம் சொல்வாய்
அரிதாய் போனாய்
குயிலல்ல நீ
மறைந்து பாடி மனம் ஈர்க்க

எனை சுற்றி கீச்சிட
கெஞ்சும் உன் இணையோடு பார்த்திட
உனையும் கொஞ்சிடும்
உன் குஞ்சும் அன்னையோடு கீச்சிட
இதமாகும் இதயம் அங்கே
குத்தகைக்கு உன் மொத்தம் எடுத்தது பாரும்

குடியமர குடிலில் ஓரிடம் தந்தேன்
குடிக்க நீருடன் பாத்திரம் வைத்தேன்
வஞ்சம் கொண்ட நெஞ்சம்
சிட்டே நாளைக்கு
நானும் உன்னிடம் பட்டே...

இமையி...



# ரத்தினமே ரமழானே...!

ஒட்டு மொத்த
ஒவ்வாமைக்கும்
ஒன்றித்த ஔடதமாய்
ஒளியேற்ற வந்த ரமழானே...!

கறையுற்ற
கல்நெஞ்சத்தையும்
கரைத்துருக்கும் கலையழகாய்
கண்தோன்றிய ரமழானே...!

தகித்த இதயத்தையும்
தாகித்த இதழ்களையும்
தணிக்கும் தடாகமாய்
தரணியடைந்த ரமழானே...!

அகமும் புறமும்
அழுக்ககற்றிப் புதுப்பிக்கும்
அரும் ஓடையாய்
அவனி சேர்ந்த ரமழானே...!

இகபர ஈடேற்றமாய்
இறை வசனம் சுமந்த திருமறை
இறக்கி அருளப்பட்ட
இன்ப காலமே ரமழானே...!

இரவிலும் விழித்து
இச்சைகள் ஒழித்து
இறை பொருத்தமடைய
இன்பத்தேன் சுவைக்கிறோம்
ரமழானே...!

மண்ணில் பூத்த
மணக்கும் மலராய் உனை
மனதோடு ஆரத்தழுவிட பல
மடங்காய் நன்மைகள் தருவாய்
ரமழானே...!

பாத்திமா சில்மியா
மாவனல்லை.



# என்னைக் காணவில்லை

நெடுநாட்களாக
என்னைக் காணவில்லை
எங்கு தேடியும்
என்னை என்னால்
கண்டு பிடிக்க முடியவில்லை

நான் இல்லாத பொழுதுகளில்
என்னைக் குறைகூறுபவர்கள்
என்னைத் திட்டுபவர்கள்
அவர்களிற்கு பதில் சொல்ல
எல்லா இடமும் தேடுகின்றேன்
என்னைக் காணவில்லை

என் வருகையின் போது
புன்னகைத்தும் மகிழ்ந்தும்
மனதினுள் வெறுத்தும்
எனக்கான அவதூறுகளின்
சந்தர்ப்பங்களினை
எதிர்பார்ப்போருக்காகவும்
பதில் சொல்வதற்காக
என்னைத் தேடுகின்றேன்
என்னைக் காணவில்லை

அநீதிகளை கண்டு
நீதி கேட்கவில்லை
பொய்களை மெய்களாக
நம்பத்தொடங்கிவிட்டேன்

சந்தர்ப்பங்களுக்கேற்ப
சந்தங்களில் கைதட்டுகிறேன்



அவர்களைப் போலவே
ஆதலால்
என்னைக் காணவில்லை என
என்னைக் கண்டவர்கள்
கண்கலங்கி செல்கின்றனர்

இணுவில் வாகீசன்

# வெளிநாட்டு வாழ்க்கை

நீள்சுமைகள்
குடும்பத்தை
வதைத்து
நிம்மதியற்ற நிலையில்
தவிக்கையில்
வாழ்வுக்கான பாதையை
செப்பனிட்டு
வளமான எதிர்காலம் கண்டிடவே
தோள்மீது பாரத்தைத் தானேற்றுத்
துடைத்துமே எறிந்திடத் துணிந்திடவே !
ஆழ்கடல் தாண்டிச் சென்றங்கு
அறியாத் தேசத்தில் நின்றிடவே !

விழியது நீர்தேக்கி வெதும்பி
வெந்திடும் மனதோடு ஆறுதலற்று
மொழியது புரியாத தேசத்தில்
மௌனத்தைப் பதிலாகக் கொடுத்துக்
கழியுடல் போலிங்கு உணர்வதைக்
களைந்து பெறுமதியான தொகைக்கு
வழியதைக் கண்டிடவே வாழ்வில்

வருத்தும்
பணியானாலும்
ஏற்றிடுவீர்

வலைமீது
மாட்டிக் கொண்டு
வசமிழந்த
மானைப் போலிங்கு
தலைகோதும்
ஆறுதல் இல்லாது
தவித்திடும் நிலையில் இங்கே
அலைபேசி
சுமந்து வந்திடும்
அன்னை
தேசத்தின் குரலிலே
மலைபோல மனப் பாரமும்
மறைந்தே சென்றிடும் பனிபோல

நலமது நிறைந்த வாழ்வில்
நிழலதைக் குடும்பம் சுவைத்திடவே!
தலமதை நம்பியே வந்தோரை
தாங்கிடும் தேசத்தின் கரங்களில்
பலதேச மனிதர்களை சந்தித்த
பசுமை கலந்த பயணத்தில்
சிலகால உறவுகளின் பிரிவுகள்
சிற்றெறும்பாக மனதை வருத்தும்

சுட்டெ ரிக்கும் வெயிலில்
சுடும ணல் தரையினிலே
தொட்டே எடுத்த பணியது
தொய்வே அற்றும் இருந்திடவே
விட்டு வந்த உறவின்
விடியல் கண் முன்னே!
பட்டொ ளிரவே பாடுபட்டே
பசிமறந்து உழைத்து
மகிழ்கின்றீர்



ஏரூர் றமீஸ்
ஏறாவூர்

# ஒரேயொரு வாழ்விற்காக எத்தனை முறை வீழ்வதடா

ஒரேயொரு முறை இவ்வாழ்வை
வாழ்ந்து தீர்ப்பதற்காக
எத்தனை முறை வீழ்கிறோம்
எத்தனை முறை எழுகிறோம்

எத்தனை பருவங்களென
துளிர்த்து இலைக்கிறோம்
எத்தனை இலைகளென
பழுத்து சருகென உதிர்கிறோம்

எதிரும் புதிருமான
எத்தனை மாந்தர்களை சந்தித்து
அலட்சியமாக கடந்து செல்கிறோம்

எத்தனை நேசங்களில் துவழ்கிறோம்
எத்தனை பிரிவுகளில் தோய்கிறோம்

எத்தனை சிரிப்புகளை சொரிகிறோம்
எத்தனை கண்ணீரை காய்ச்சுகிறோம்

முலையூட்டிப் பறவைகளென
எத்தனை ஒளியை நிராகரிக்கிறோம்
மின்மினி பூச்சிகளென
எத்தனை இருளை வாசிக்கிறோம்

இரவின் குறு நிலத்தில்
எத்தனை கனவுகளை பயிரிடுகிறோம்

அதில் எத்தனை கனவுகளை
அறுவடை செய்கிறோம்

ஒரேயொரு முறை வாழ்ந்து தீர்க்கும்
இந்த அற்ப வாழ்விற்காக
எத்தனையெத்தனை
முகங்களை அணிய மாய்கிறோம்

இந்த நிரந்தரமற்ற வாழ்வு
அப்படி என்னதான் அற்புதங்களை
நமக்கு நிகழ்த்திக் காட்டுகிறதோ

ஜமீல்



# 'குரோதி' என்ற பெயரில் உதயமாகின்றது சித்திரைப் புத்தாண்டு

இன்னும் ஒருவார காலத்தில் உதயமாகவிருக்கும் சித்திரைப் புது வருடத்தை வரவேற்பதற்கு தமிழ் சிங்கள மக்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலுள்ள இரு பிரதான இனத்தவர்களான தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உரித்தான பண்டிகை என்பதால் இது தமிழ் சிங்கள புதுவருடம் என்றே சொல்லப்படுகிறது. உண்மையில், இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும், பௌத்த சமயத்தைச் சேர்ந்த சிங்கள மக்களுமே இந்த சித்திரைப் புதுவருடத்தைக் கொண்டாடி வருகிறார்கள். தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்புகளுக்கு சித்திரைப் புதுவருடம் சான்றாக அமைந்துள்ளது. எனினும், இப்புதுவருடத்தைக் கொண்டாடுவதில் இருபகுதியினரும் தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள்.

ஜனவரி மாதத்தில் உதயமாகும் ஆங்கிலப் புதுவருடம் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரியதாக இருந்தபோதிலும், உலகிலுள்ள சகல நாடுகளும் அரச மற்றும் பொதுக் கருமங்கள் தொடர்பாக ஆங்கிலப் புதுவருடத்தையே பின்பற்றுவதால், சர்வதேச ரீதியில் அது முக்கியத்துவம் பெறுகிறது. உலகளாவிய ரீதியில் நாட்காட்டிகளும், நாட்குறிப்பு ஏடுகளும் ஆங்கிலப் புதுவருடத்தை மையமாக வைத்து வெளியிடப்படுவதுடன், இதன் அடிப்படையிலேயே சகல பொது விடயங்கள் தொடர்பான நிகழ்வுகளும் வடிவமைக்கப்பட்டும், அட்டவணைப்படுத்தப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

டிசெம்பர் 31ஆம் திகதி உதயமாகும் ஆங்கிலப் புதுவருடத்தைப்போல, தமிழ் சிங்கள புதுவருடம் எப்போதும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிறப்பதில்லை. கிரகமண்டலத்தில் சூரியபகவானின் சஞ்சாரத்திற்கு அமையவே இப்புதுவருடம் பிறக்கிறது. அதாவது கிரகமண்டலத்திலுள்ள மேடம், இடபம் முதலான பன்னிரண்டு இராசிகளுள் முதலாவதான மேட இராசியில் சூரிய பகவான் பிரவேசிக்கும்போது முதலாவது மாதமாகிய சித்திரை பிறக்கிறது. இதுவே புதுவருடமாகவும், சூரியபகவானின் மேட இராசிப் பிரவேச நேரமே புதுவருடம் பிறக்கும் நேரமாகவும் கணிக்கப்படுகிறது.

இம்முறை உதயமாகும் 'குரோதி' வருடம் அறுபது தமிழ் வருடங்களின் சுற்று வட்டத் தொடரில் 38ஆவது வருடமாகும்.

சித்திரைப் புதுவருடம் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை இரவு உதயமாகிறது. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி அதேதினம் இரவு 8 மணி 15 நிமிடத்தில் மிருகசீரிடம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில், மிதுன இராசியில், துலாம் லக்கினத்தில், பூர்வ பட்ச சஷ்டி திதியில் பிறக்கிறது. அன்றையதினம் மாலை 4 மணி 15 நிமிடம் முதல் நள்ளிரவு 12 மணி 15 நிமிடம் வரை விஷு புண்ணியகாலமாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 13ஆம் திகதி இரவு 9 மணி 4 நிமிடத்தில் மிருகசீரிடம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில், மிதுன இராசியில், விருச்சிகம் லக்கினத்தில், பூர்வபட்ச சஷ்டி திதியில் பிறக்கிறது. அன்றையதினம் மாலை 5 மணி 4 நிமிடம் முதல் பின்னிரவு 1 மணி 4 நிமிடம் வரை மேட சங்கிரமண புண்ணியகாலமாகும்.

இந்தப் புண்ணியகாலத்தில் ஒவ்வொருவரும் தலையில் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்வது பாரம்பரிய சமய நடைமுறையாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி வெண்மையான பட்டாடை அல்லது வெள்ளைக்கரை அமைந்த புதிய ஆடையையும், நீலக்கல் அல்லது வைரம் பதித்த ஆபரணத்தையும் அணிவது உத்தமம் என்றும், திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கருநீலப் பட்டாடை அல்லது நீலக்கரை அமைந்த புதுவஸ்திரத்தையும், இந்திரநீலம் பதித்த ஆபரணத்தையும் அணிவது உத்தமம் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

புதுவருடத் தினத்தன்று சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதும் சமய பாரம்பரிய வழக்கமாகும். இம்முறை இரவு நேரத்தில் புதுவருடம் பிறப்பதால், மறுநாள் அதாவது 14ஆம் திகதி காலை சூரியோதயத்தின்போது பொங்கிப் படைப்பது பொருத்தமானது எனவும் உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள் 14ஆம் திகதி அதிகாலை சூரியோதயத்திற்கு முன்னர் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்யலாம் எனவும் சமய அறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

உதயமாகவிருக்கும் சித்திரைப் புதுவருடம் சில நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தோஷமாகும் என பஞ்சாங்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் (1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்), சித்திரை, விசாகம் (4ஆம் பாதம்), அனுஷம், கேட்டை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தோஷமாகவிருப்பதால், இவர்கள் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது அவசியம் என்பதுடன், தான தருமங்களையும், இறைவழிபாட்டையும் விசேடமாக செய்துகொள்ள வேண்டும்.

மலரும் புதுவருடத்தில் பொதுமக்களின் பொருளாதார நிலைமைகள் விஷயத்தில் தனுசு, மீனம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்களுக்கு லாபம்; மிதுனம், கன்னி, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்களுக்கு சமநிலை; மேடம், இடபம், கடகம், துலாம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்களுக்கு நஷ்டம்; சிங்க இராசியில் பிறந்தவர்களுக்கு பெருநஷ்டம் என்றும் பஞ்சாங்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை பொதுவான பலனாகும். சித்திரைப் புதுவருடம் பிறந்தால் கைவிசேடம் பரிமாறிக் கொள்வது ஒரு பாரம்பரிய வழக்கமாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் பணிபுரிவோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் கைவிசேடம் பெற்றுக் கொள்வார்கள்.

இந்தவகையில், வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 7 மணி 57 நிமிடம் முதல் 9 மணி 56 நிமிடம் வரையும், காலை 9 மணி 59 நிமிடம் முதல் நண்பகல் 12 மணி வரையும், அதேதினம் இரவு 6 மணி 17 நிமிடம் முதல் 8 மணி 17 நிமிடம் வரையும், மறுநாள் 15ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை 9 மணி 8 நிமிடம் முதல் 9 மணி 51 நிமிடம் வரையும், காலை 9 மணி 55 நிமிடம் முதல் 10 மணி 30 நிமிடம் வரையும் கைவிசேடம் பெறுவதற்குரிய சுபநேரங்களாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் 11 மணி 15 நிமிடம் வரையும், அதேதினம் மாலை 6 மணி 30 நிமிடம் முதல் 7 மணி 45 நிமிடம் வரையும், மறுநாள் 15ஆம் திகதி காலை 6 மணி முதல் 7 மணி 25 நிமிடம் வரையும், முற்பகல் 9 மணி 35 நிமிடம் முதல் 10 மணி 35 நிமிடம் வரையும் கைவிசேடம் பெறுவதற்குரிய சுபநேரங்களாகும். புதுவருடம் பிறந்தபின் நல்லநாள் பார்த்து தங்கள் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு விருந்துபசாரங்களில் கலந்து கொள்வதும், பெரியோர்களைச் சந்தித்து நல்லாசிகளைப் பெற்றுக் கொள்வதும் சிறப்பான பாரம்பரிய நிகழ்வுகளாகும்.

இந்தவகையில் 14ஆம் திகதி காலை 10 மணி முதல் 11 மணி 15 நிமிடம் வரையும், மறுநாள் 15ஆம் திகதி காலை 9 மணி 10 நிமிடம் முதல் 10 மணி 35 நிமிடம் வரையும் பொருத்தமான சுபநேரங்களாகும்.

உழைப்பையே தங்கள் வாழ்வின் ஜீவநாடியாகக் கொண்டிருப்பவர்கள் புதுவருடத்தில் தங்கள் தொழிற்கருமங்கள் மற்றும் புதுக்கணக்கு என்பனவற்றை ஆரம்பிப்பதற்கு 15ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை 9 மணி 10 நிமிடம் முதல் 9 மணி 50 நிமிடம் வரையும் காலை 10 மணி முதல் 11 மணி 30 நிமிடம் வரையும் சுபநேரங்களாக சொல்லப்பட்டுள்ளது. மலரவிருக்கும் இந்த குரோதி வருடத்தில், யாவற்றையும் சீர்தூக்கிக் கண்ட நற்பலன் ஏழு பங்கும், தீயபலன் இரண்டு பங்கும் என பஞ்சாங்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– அ. கனகசூரியர்

தமிழ் புத்தாண்டு 2024 :

# குரோதி வருடம் யாருக்கு அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும்?



தமிழ் வருடங்கள் அறுபதில் முப்பத்தெட்டாவது வருடமான குரோதி வருடம் இந்த ஆண்டு பிறக்கிறது. இந்த வருடம் பிறக்கும் நேரத்தில் உள்ள கிரக நிலை அமைப்பு, மேஷத்தில் சூரியன், குரு, கன்னியில் கேது, கும்பத்தில் செவ்வாய், சனி, மீனத்தில் புதன், சுக்கிரன், ராகு எனக் காணப்படுகிறது. இந்த வருடம் எப்படி இருக்கும் எனப் பார்க்கலாம்.

இந்த அமைப்பின் காரணமாக இந்த ஆண்டு பொதுவாக உலக அளவில் இயற்கைச் சீற்றமும், எதிரிகளால் பயமும் ஏற்பட வாய்ப்பு உண்டு. தகுந்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளால் இதைத் தவிர்க்கலாம். உலகம் முழுவதும் உள்ள பிரபலங்கள் உடல்நலனிலும் பாதுகாப்பிலும் கவனம் செலுத்துவது முக்கியமாக இருக்கும். எரிமலைச் சீற்றம், கடற்கொந்தளிப்பு, மலைப்பிரதேசங்களில் சரிவு, நெருப்பினால் விபத்துகள், இரசாயனக் கழிவுகளால் விபத்துகள் எனப் பலவகையிலும் பாதிப்புகள் வர வாய்ப்பு உண்டு. எனவே தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியம். அதேசமயம் மக்களிடையே ஒற்றுமை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் நாட்டம் ஏற்படும்.

இதன் தொடர்ச்சியாக 12 ராசிகளின் பலன்களை பார்க்கலாம்.

## மேஷம்

உயர்வுகள் வரக்கூடிய உன்னதமான ஆண்டு. பணியிடத்தில் பதவி, இடமாற்றம், ஊதிய உயர்வுகள் கைகூடும். மேலிடத்தால் உங்கள் திறமை உணரப்பட்டு தகுந்த பெருமைகள் தரப்படும். திடீர் பொறுப்பும், புகழும் திக்குமுக்காட வைக்கும். சமயத்தில் உடனிருப்போருடன் அனுசரித்துப் போகப் பழகினால், கிரகங்களின் அனுக்கிரகம் நிரந்தரமாக இருக்கும். குழப்பமும் கூச்சலுமாக இருந்த குடும்ப சூழல், இனி அமைதியும் ஆனந்தமுமாக மாறத்தொடங்கும். தம்பதியருக்கு இடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாட்டை செய்துமுடிக்க சந்தர்ப்பம் அமையும். சுபகாரியங்கள் கைகூடும். பணவரவு அதிகரிக்கும். வீடு, வாகனம், மனை, சொத்து சேரும். செய்யும் தொழில் பெரும் வளர்ச்சி பெறும். அயல்நாட்டு வர்த்தகங்கள் கைகூடும். புதிய முதலீடுகளை முறையாக யோசித்து செய்வது நல்லது. விவசாயத்தில் கணிசமான லாபம் கிடைக்கும்.

## ரிஷபம்

உங்களுக்கு நல்லவை அதிகரிக்கும் ஆண்டு. பணியிடத்தில் இருந்த பாதகமான சூழல் மறையும். திறமைகள் மதிக்கப்பட்டு ஏற்றமும் மாற்றமும் ஏற்படும். பொறுப்புகளில் அலட்சியமும் அவசரமும் கூடவே கூடாது. கையெழுத்திடும் சமயங்களில் கவனமாக இருங்கள். முக்கியமான கோப்புகளை பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். இல்லத்தில் இனிமை இடம்பிடிக்கும். வாழ்க்கைத் துணையுடன் சிறு வாக்குவாதமும் கூடாது. ஆடை, ஆபரணம் சேரும். பூர்வீக சொத்து லாபம் தரும். வாரிசுகளால் பெருமை சேரும். பழைய கடன்களை வசூல் செய்ய சந்தர்ப்பம் அமையும். குடும்பப் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்ய மூன்றாம் நபரை அணுக வேண்டாம். எந்தத் தொழில் செய்தாலும் ஏற்றமும் வளர்ச்சியும் ஏற்படும்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் உரிய நடைமுறைகளை முழுமையாகக் கடைப் பிடியுங்கள். அரசு, அரசியல் சார்ந்தவர்களுக்கு ஆதரவு அதிகரிக்கும். எதிரி பலம் ஒடுங்கும். பொது இடங்களில் நாவடக்கம் அவசியம். மாணவர்கள் திறமைக்கு உரிய உயர்வுகளைப் பெறலாம். சோம்பலை விரட்டினால் சாதனைகள் படைக்கலாம். கலை, படைப்புத் துறையினருக்கு வாய்ப்புகள் தேடி வரும். அவற்றை வீண் ஜம்பத்தால் விலக்கவேண்டாம். அவசியம் இல்லாத இரவுநேரப் பயணத்தைத் தவிருங்கள். விஷ ஜந்துகள், வளர்ப்புப் பிராணிகளிடமிருந்து விலகியே இருங்கள். நீரிழிவு, மூட்டுத் தேய்மானம், கொழுப்பு அதிகரிப்பு, காது, மூக்கு, தொண்டை பிரச்சினைகள் வரலாம்.

## மிதுனம்

மாற்றங்கள் வரக்கூடிய வருடம். அலுவலகத்தில் உரிய உயர்வுகள் தேடிவரும். அவசரமும் அலட்சியமும் எந்தப் பணியிலும் வேண்டாம். அனுபவம் மிக்கவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. வெளிநாடு, வெளியூர் சென்று பணியாற்றும் வாய்ப்பு சிலருக்கு வரலாம். இடமாற்றத்தைத் தவிர்க்காமல் ஏற்பது எதிர்காலத்தை வளமாக்கும். குடும்பத்துல குதூகலம் நிறையத்தொடங்கும். உறவுகள் சேர்க்கையும் அதனால் ஆதாயமும் ஏற்படும். வாரிசுகள் வாழ்க்கையில் சுபகாரியத் தடைகள் விலகும். வீடு, வாகனம் மாற்ற, புதுப்பிக்க நேரம் அமையும். குலதெய்வ வழிபாட்டிலும், வார்த்தைதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உணர்ந்து நடப்பது உத்தமம். செய்யும் தொழிலில் திடீர்வளர்ச்சி ஏற்படும். பங்குவர்த்தகத்தில் பெரும் முதலீடு வேண்டாம். அரசு, அரசியல் துறைசார்ந்தவர்கள் அடங்கியும் முடங்கியும் இருந்த சூழல் மறையும். புறம்பேசும் நபர்களை உடனே புறம்தள்ளுங்கள். உடனிருக்கும் யாரிடமும் வீண் கடுமை வேண்டாம்.

மாணவர்களுக்கு உயர்வுகளுக்கு உத்தரவாதம் கிடைக்கும்.

## கடகம்

பொறுப்புடன் செயல்படவேண்டிய ஆண்டு. அலுவலகத்தில் உங்கள் திறமை உரியவர்களால் உணரப்படும் தாமதமானாலும் பதவி, பொறுப்பு, இடமாற்றம் உங்கள் மனம்போல கைகூடும். பொறுப்புகளை திட்டமிட்டு செய்தால், உங்கள் உயர்வுகளுக்கு உத்தரவாதம் கிட்டும். வேலை தேடுவோர்க்கு மனம்போல வேலை அமையும். வீட்டில் நிம்மதி இடம் பிடிக்கும். தம்பதியரிடையே ஒற்றுமை உருவாகும். சுபகாரியத் தடைகள் நீங்க பெற்றோர் பெரியோர் வழிகாட்டலைக் கேளுங்கள். நட்புகள் விஷயத்தில் நீங்கள் மூக்கை நுழைக்க வேண்டாம்.

செலவுகளை சுப செலவுகளாக மாற்றிக்கொள்வது புத்திசாலித்தனம். செய்யும் தொழிலில் லாபத்தின் அளவுகோல் அதிகரிக்கும் கூட்டமைப்பில் சேர்ந்து செயல்படும் அமைப்பு உருவாகும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத் தடைகள் நீங்கும். கடன் தருவது, பெறுவதில் நிதானம் முக்கியம். அரசு, அரசியல் சார்ந்தவர்களுக்கு அனுகூலமான காலகட்டம். மேலிடத்தின் ஆதரவு அதிகரிக்கும். உடனிருந்தே உபத்திரவம் செய்பவர்களை உடனடியாக ஒதுக்குவது முக்கியம்.

## சிம்மம்

அமைதியாகச் செயல்படவேண்டிய ஆண்டு. அலுவலகத்தில் ஒருபோதும் அவசரம் அலட்சியம் கூடாது. சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் வரலாம். தவிர்க்காமல் ஏற்பது நல்லது. மேலதிகாரியிடம் பேசும்போது வீண் கர்வம் தவிருங்கள். அனுபவம் மிக்கவர்கள் ஆலோசனைகளைக் கேட்டால், நல்லவை நிச்சயம் நடக்கும். குடும்பத்தில் விடியல் வெளிச்சம் வரும். அதைத் தக்கவைக்க விட்டுக்கொடுத்தல் முக்கியம். யாருடைய தலையீட்டையும் குடும்பத்தில் அனுமதிக்க வேண்டாம். தம்பதியர் பரஸ்பரம் உடல்நலத்தில் கவனம் செலுத்துங்கள். அசையும், அசையா பொருட்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் மனம் போல் மதிப்பு உயரும்.

## கன்னி

ஏற்றமும், மாற்றமும் ஏற்படக்கூடிய ஆண்டு. பணியிடத்தில் உங்கள் பெருமை உயரும். புதிய மாற்றங்களால் நீங்கள் எதிர்பார்த்த ஏற்றங்கள் வரும். பதவி, ஊதியம் உயரும். உடனிருப்போர் ஆதரவு கிடைக்கும். அயல்நாட்டு பயண வாய்ப்பு சிலருக்கு தேடி வரும். புதிய பணி மாறும் முன் யோசித்து செய்வது நல்லது., குடும்பத்தில் நல்லவைகள் நடக்க தொடங்கும். வாழ்க்கை துணையால் அனுகூலங்கள் ஏற்படும். வாரிசுகளை கண்டிப்பதில் நிதானம் முக்கியம். அசையும், அசையா பொருட்சேர்க்கை ஏற்படும். பிற மொழி மனிதர்களால் ஆதாயம் உண்டு. வயதில் முதியவர்கள் வார்த்தைகளுக்கு மதிப்பளியுங்கள். செய்யும் தொழிலில் வளர்ச்சி தொடர்ச்சியாகும். பல கால கனவுகள் ஈடேறத்தொடங்கும். சிலருக்கு தொழில் மாற்றமும் அதனால் லாபமும் உண்டு. அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை ஆதாயத்தை அதிகரிக்கும். அரசு, அரசியல் துறைகளில் உள்ளோருக்கு உயர்வுகளுக்கு உத்தரவாதம் கிட்டும். சிலருக்கு புதிய பதவி பொறுப்பு வாய்ப்புகள் கைக்கூடும்.

## துலாம்

வார்த்தைகளில் நிதானம் இருந்தால், வாழ்க்கையில் வளம் வரும் ஆண்டு. சிலருக்கு பணி சார்ந்த அயல்நாட்டுப் பயண வாய்ப்பும் உண்டு. இல்லத்தில் இனிமை இடம்பிடிக்கும். தம்பதியரிடையே இருந்த சச்சரவுகள் மறையும். குடும்பத்துப் பெரியவர்கள் ஆலோசனை கேட்டால் சுபகாரியங்கள் கைகூடும். வாரிசுகள் உடல்நலம் சீராகும். பணவரவை சேமிக்கப் பழகுவது நல்லது. ஆடை, ஆபரணம் சேரும். கொடுக்கல் வாங்கலை நேரடி கவனத்துடன் செய்வது நல்லது. செய்யும் தொழில் எதுவானாலும் உழைப்புக்கு உரிய உயர்வுகள் வரும். அயல்நாட்டு வர்த்தகம் தடைநீங்கிக் கைகூடும்.

பூமி சார்ந்த வர்த்தகங்களில் நிதானம் தேவை. அரசு, அரசியல் சார்ந்தவர்களுக்கு படிப்படியாக உயர்வுகள் வந்து சேரும். மேலிடத்திடம் பேசும்போது பணிவே நல்லது. யாருக்கும் வாக்குறுதி தரும் முன் யோசியுங்கள். புதிய வாய்ப்புகளில் வீணாக பேதம் பார்க்க வேண்டாம். மாணவர்கள் மனதை ஒருநிலைப்படுத்துவது முக்கியம்.

## விருச்சிகம்

தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் ஆண்டு. பணியிடத்தில் உங்கள் பதவி, பொறுப்பு, ஊதியம் உயரும். அனுபவம் மிக்கவர்கள் ஆதரவு கிடைக்கும். மேலிடத்தால் உங்கள் திறமை உணரப்படும். சிலருக்கு பணி சார்ந்த பயணங்கள் அதிகரித்தாலும் அவை ஆதாயமே தரும். வீட்டில் விசேஷங்கள் வரத்தொடங்கும் விலகி இருந்த உறவுகள் தேடிவந்து அன்புகாட்டும். சுபகாரியங்கள் சுலபமாகக் கைகூடும். ஆடை, ஆபரணம், பொருட்சேர்க்கை ஏற்படும். புதிய அறிமுகங்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். பூர்வீக சொத்து சேரும். செய்யும் தொழிலில் வளர்ச்சி தொடர்ச்சியாக இருக்கும். அயல்நாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். கனரக தொழிலில் இருப்போர்க்கு கவனச் சிதறல் கூடாது.

அரசியல், அரசுத்துறை சார்ந்தவர்களுக்கு ஏற்றமும் மாற்றமும் ஏற்படும். சிலருக்கு திடீர் பதவி, பொறுப்பு வந்து சேரும்.

## தனுசு

கவனமாகச் செயற்பட்டால் கணிசமான நன்மைகள் கிட்டும் ஆண்டு. அலுவலகத்தில் திறமைக்கு உரிய உயர்வுகள் நிச்சயம் வரும். எந்த சமயத்திலும் அலட்சியமும் அவசரமும் கூடாது. மேலதிகாரிகளிடம் பேசும்போது வீண் ரோஷம் வேண்டாம். இப்போதைய பொறுமையே எதிர்கால ஏற்றம். இல்லத்தில் நல்லவைக்குக் குறைவிருக்காது. அவை நிலைக்க நாவடக்கம் முக்கியம். தம்பதியர் பிரச்சினையில் மூன்றாம் நபரை அனுமதிக்க வேண்டாம். சுபகாரியங்களில் ஆடம்பரம் தவிருங்கள். விலை உயர்ந்த ஆபரணங்களை பத்திரமாக வையுங்கள். வாரிசுகளால் பெருமை சேரும். செய்யும் வர்த்தகம் வாணிபத்தில் முறையான உழைப்பு இருந்தால் நிலையான முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகளில் அவசரம் வேண்டாம். அயல்நாட்டு வர்த்தகத்தில் சட்ட நடைமுறைகளில் அலட்சியம் கூடாது. அரசு, அரசியல் சார்ந்தவர்கள் அடக்கமாகச் செயல்படுவது நல்லது. பொது இடத்தில் வாக்குறுதிகள் தரும் முன் யோசியுங்கள்.

## மகரம்

எண்ணங்கள் ஈடேறக்கூடிய ஆண்டு. அலுவலகத்தில் உங்கள் திறமை உரியவர்களால் உணரப்படும். ஏற்றமும் மாற்றமும் எண்ணப்படியே வந்து சேரும். உடனிருப்போர் விஷயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரலாம். தவிர்க்க வேண்டாம். பொறுப்பு உயர்வை பொறுப்புடன் ஏற்றிடுங்கள். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். விசேஷங்கள் தொடர்ச்சியாக வரும்.

உறவுகளிடம் வீண் தர்க்கம் வேண்டாம். வாரிசுகளால் பெருமை சேரும். ஆன்மிகப் பயணங்கள் செல்லும் சந்தர்ப்பம் அமையும். வீடு, வாகனம், ஆபரணம் சேரும். தம்பதியரிடையே அந்நியோன்யம் உருவாகும். வர்த்தகம், வாணிபம் எதுவானாலும் அதில் லாபம் வளர்ச்சியாகும். புதிய முதலீடுகளை தெரிந்த தொழிலில் மட்டும் செய்வது நல்லது. வர்த்தக நிபந்தனைகளை யாருக்காகவும் மீறவேண்டாம்.

## கும்பம்

அடக்கமாகச் செயல்பட்டால், அனைத்திலும் நன்மை கிட்டும் ஆண்டு. பணியிடத்தில் துணிவை விடப் பணிவே நல்லது. உங்கள் பொறுப்புகளை நேரடியாக கவனியுங்கள். உடனிருப்போர் விஷயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். உங்கள் திறமைக்கு உரிய உயர்வுகள் நிச்சயம் வரும்.

அதற்குப் பொறுமையே முக்கியம். வீட்டில் நிம்மதி நிலவும். அது நிலைக்க விட்டுக்கொடுத்தல் முக்கியம். உறவுகளிடம் வீண் தர்க்கம் வேண்டாம். வாழ்க்கைத்துணை உடல்நலத்தில் கவனம் செலுத்துங்கள். விலை உயர்ந்த பொருட்களை பத்திரமாக வையுங்கள். மூன்றாம் நபரை மத்தியஸ்தம் செய்ய அழைக்க வேண்டாம். அன்பும் அமைதியுமே அனைத்திலும் நன்மை செய்யும். வர்த்தகத்தில் திடீர் வளர்ச்சி ஏற்படும். இந்த சமயத்தில் உழைப்பை உறுதியாக்குவது அவசியம்.

## மீனம்

தலைக்கனம் தவிர்த்தால், தலை உயர்ந்து நடக்கும் ஆண்டு. அலுவலகத்தில் பொறுப்புணர்வுடன் செயல்படுங்கள். எல்லாம் தெரியும் நினைவும் ஏனோ தானோ செயலும் கூடாது. இடமாற்றம் தாமதமானாலும் கைகூடும். பதவி, ஊதிய உயர்வு வேண்டுவோர் வீண் புலம்பல் தவிர்ப்பது முக்கியம். சிலருக்குப் புதிய பணி வாய்ப்பு கிட்டும். குடும்பத்தில் ஒற்றுமை இடம்பிடிக்கும். வாழ்க்கைத் துணையுடன் வாக்குவாதம் வேண்டாம். சுபகாரியங்களும் உறவுகள் வருகையும் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவை அறவே தவிருங்கள். கொடுக்கல் வாங்கலை உடனுக்குடன் குறித்து வையுங்கள். பிறமொழி மனிதர்களால் ஆதாயம் கிட்டும். வர்த்தகத்தில் வளர்ச்சி ஏற்படும். அது தொடர, தளர்ச்சி இல்லா உழைப்பு முக்கியம் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் முன் ஒருமுறைக்கு இருமுறை படியுங்கள். புதிய முதலீடுகளை நிதானித்துச் செய்யுங்கள்.

# எல்லோரையும் இணைத்து பெருநாளைக் கொண்டாடுவோம்



ஒவ்வொரு மனிதனும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதையே வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டிருக்கிறான். தனி மனிதன் சந்தோஷப்படுவதற்கு நிறையக் காரணங்கள் இருக்கலாம். அந்தச் சந்தோஷங்கள் அவனுக்கு மட்டுமானதாக, அவனது உற்றார், உறவினருக்கு மட்டுமானதாக பெரும்பாலும் அமைந்து விடுவதுண்டு. இவ்வாறான சந்தோஷங்களின் போது அவனைச் சூழ உள்ள பெரும்பாலானவர்களுக்கு இந்தச் சந்தோஷங்களில் பங்கெடுக்க முடியாத ஏக்கங்கள் நிலவுவதால் அவனுடைய சந்தோஷம் முழுமை பெறுவதில்லை.

அந்த வகையில் தன்னைச் சூழ உள்ள அனைவரும் ஒரேயடியாக சந்தோஷப்பட முடியுமாக இருக்கும் பொழுது தான், மனிதன் முழுமையாகச் சந்தோஷத்தை அனுபவிக்க முடிகிறது. அந்த நாள் தான் பெருநாளாக அமைகிறது. இவ்வாறு மனிதனின் சந்தோஷத்தை முழுமையாக்கக் கூடிய இரண்டு தினங்களை மனித உணர்வுகளை மதிக்கின்ற இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியிருக்கின்றது. இந்த இரண்டு பெருநாட்களையும் கொண்டாடுவதை இஸ்லாம் முஸ்லிம்களுக்குக் கட்டாயமாக்கியிருக்கிறது. இந்தப் பெருநாள் தினங்களில் யார் எந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் சந்தோஷப்படுபவர்களுடன் சேர்ந்து குதூகலிக்க வேண்டும்.

நபித்தோழர் அபூபக்கர் (ரழி) அவர்கள் நபியவர்களின் வீட்டுக்கு வந்தபோது இரண்டு இளம் பெண்கள் ரபான் அடித்து குதூகலித்துக் கொண்டிருந்தார்கள். நபியவர்கள் போர்வையால் மூடிக் கொண்டு படுத்திருந்தார்கள். அவர்களது செயலைக் கண்டு அபூபக்கர் (ரழி) அவர்கள் அந்தப் பெண்களை ஏசினார்கள். அப்போது நபியவர்கள் போர்வையிலிருந்து முகத்தைத் திறந்து, இன்று பெருநாள் அல்லவா, அவர்களை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். (புகாரி)



பெருநாள் என்பது மனிதர்கள் சந்தோஷம் அனுபவிக்கும் நாள். அவர்களது சந்தோஷத்துக்கு யாரும் தடைபோட முடியாது. அல்லாஹ்வை மறக்கடிக்காத எந்தச் செயற்பாட்டினாலும் தங்களது சந்தோஷத்தை அவர்கள் வெளிப்படுத்த முடியும். நபியவர்கள் பெருநாட்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அது உண்டு பருகி அல்லாஹ்வை நினைவுபடுத்தும் நாள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நபியவர்கள் பெருநாட்களை களியாட்டங்கள் மூலமும் குதூகலமாக்கியிருக்கிறார்கள். அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நானும் நபியவர்களும் ஓரிடத்தில் அமர்ந்திருந்தோம். அப்போது சிறுவர்களின் இரைச்சலும் கூச்சலும் கேட்டது. நபியவர்கள் எழுந்து பார்த்தார்கள். ஒரு எத்தியோப்பியப் பெண்மணி ஆடிக் கொண்டிருந்தாள். அவளைச் சூழ சிறுவர்களும் குதூகலமாக ஆடிக் கொண்டிருந்தார்கள். வந்து பாருங்கள் ஆயிஷா என நபியவர்கள் என்னை அழைத்தார்கள். நான் நபியவர்களின் தோளில் முகத்தை வைத்துக் கொண்டு அவருடைய தலைக்கும் தோளுக்கும் இடையால் பார்த்தேன். போதுமா, போதுமா என்று நபியவர்கள் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். நபியவர்களுடன் தொடர்ந்து அவ்வாறு இருப்பதை நாடியவளாக நான் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தேன் என அன்னை ஆயிஷா (ரழி) அறிவிக்கிறார்கள்.

பெருநாளுடைய இவ்வாறான கொண்டாட்டங்கள் அவை சமூகமாக இருந்து கொண்டாடப்படும் போது தான் சந்தோஷத்தை இரட்டிப்பாக்குவதை புலப்படுத்துகின்றன. பெருநாளின் பிரதான அம்சமாக அமைகின்ற பெருநாள் தொழுகை கட்டாயமாக கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டியதாகும்.

ஊரிலுள்ள அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று சேர்வது தான் இந்தத் தொழுகையின் சிறப்பம்சமாகும். தொழுகைக்காக ஒன்று கூடுகின்ற இடத்தில் மக்கள் முஸாபஹா மற்றும் முஆனகா செய்து அடுத்தவர்களை ஆரத்தழுவி தமது அன்பைப் பரிமாறிக் கொள்வது பெருநாளின் சந்தோஷங்களில் முக்கியமானதாகும்.

நபியவர்கள் பெருநாள் தொழுகைக்கு ஒரு வழியையும் திரும்பி வருவதற்கு வேறு வழியையும் பயன்படுத்தியிருப்பதும் அதிகமானவர்களைச் சந்திக்க முடியுமான நோக்கிலாகும். அந்த வகையில் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என அனைவருடனும் உறவுகளைப் பேணுவதற்கு பெருநாள் வழியமைத்துத் தருகிறது. பெருநாளின் முக்கியமான ஸுன்னத்துகளில் ஸதகாவும் ஒன்றாகும். அன்பளிப்புக்களைப் பரிமாறுவதன் மூலம் மக்களின் சந்தோஷம் பெருகுவது இதன் சிறப்பம்சமாகும்.

பெருநாள் அனைவருக்கும் ஒரே நாளாக அமைவது தான் பெருநாளின் சந்தோஷத்தை பன்மடங்காக்குகிறது என்ற வகையில் இந்தப் பெருநாள் குதூகலங்களில் அனைவரையும் இணைத்துக் கொள்வது முக்கியமாகிறது. குறிப்பாக அண்டை அயலவர்களை இணைத்து விருந்துகள் பரிமாறுதல், சிற்றுண்டி வேளைகளை ஏற்படுத்திக் கொள்ளல், வீடுகளுக்குச் செல்லுதல், அயலவர்களை மையப்படுத்திய கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்தல் என இதற்கான செயற்பாடுகள் விரிந்து செல்ல முடியும்.

அயலவர்கள் என்கின்ற போது அது முஸ்லிம்களாகத் தான் இருக்க வேண்டும் என்பதல்ல. சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வதில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள். அதனால் அயலவர்கள் முஸ்லிம்களாக இல்லாவிட்டாலும் அவர்களையும் எமது சந்தோஷத்தில் இணைத்துக் கொள்வதில் தான் உண்மையான சந்தோஷம் இருக்கிறது. அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் வயிறாரப் புசிப்பவன் உண்மை முஸ்லிமாக மாட்டான் என்ற வகையில் அண்டை வீட்டில் இருப்பவர் மாற்று மதத்தினர் என்பதற்காக அவர்களைப் பசியில் வாட விட்டு முஸ்லிம்களை மட்டும் அழைத்து விருந்து பரிமாறுவதில் உண்மையான சந்தோஷத்தைப் பெற முடியாது. பெருநாள் கொண்டாட்டத்தில் முஸ்லிம் சிறுவர்கள் திளைத்திருக்கும் பொழுது பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் அவர்கள் முஸ்லிமல்லாதவர்கள் என்பதற்காக ஒதுங்கியிருக்க வேண்டும் என்று நினைப்பது உண்மையான பெருநாள் கொண்டாட்டமாக அமைய முடியாது.

முஸ்லிம்களுடைய இரண்டு பெருநாட்களும் என்பது அயலவர், ஊர், பிரதேசம், நாடு என்பதைதையெல்லாம் தாண்டி மனிதர்களின் சந்தோஷத்தைப் பரிமாறிக் கொள்ளும் உலகளாவிய சந்தோஷப் பெருக்காகும். இவ்வாறிருக்கையில் தனது அண்டை வீட்டான் அவன் முஸ்லிமல்லாதவன் என்பதற்காக அவனை மகிழச் செய்யாமல் தவிர்ப்பது இந்த உலகளாவிய சந்தோஷப் பெருக்கை தடை செய்வதாக அமையும்.

எனவே பெருநாள் என்ற சந்தோஷத்தில் அனைத்து மனிதர்களையும் இணைத்து பெருநாளையாவது அனைவரும் சந்தோஷமாகக் கழித்தோம் என்ற திருப்தி அடுத்த பெருநாள் வரை நிலைக்கும் என்றிருந்தால் அவர்கள் தான் உலகிலே சந்தோஷத்தையும் அமைதியையும் நிம்மதியையும் பரப்பியவர்களாக அமைய முடியும்.

உலக மக்களுக்கு வழிகாட்டியாக அருளாக அல்குர்ஆன் அருளப்பட்ட ரமழானை நிறைவு செய்து கொண்டாடும் இந்தப் பெருநாளை அனைத்து மக்களுக்குமான பெருநாளாக மாற்றுவோம்.

**ஈத் முபாரக்**

பியாஸ் முஹம்மத்

## இயற்கைக்காக ஒரு நிமிடம்...

இயந்திர மனிதா!
நீ வெறும்
மனிதனாகவே வாழ்ந்து,
இயந்திரத்தினுள்
இரவு பகலாய் உன்னை
தியாகம் செய்து
பிறந்த நோக்கோ,
வாழும் நோக்கோ,
வாழப்போகும் நோக்கோ
அறியாமல்
நாளை மரணித்து மண்ணோடு
மண்ணாகி, மங்கிப்போக
அப்படியென்ன, உன்மேல்
உனக்கு இவ்வளவு
வெறுப்பு?.......

உன் கண்டுபிடிப்புகள் என நீ
மார்தட்டிக்கொண்டு
உறவாடும்
இந்த செயற்கை
இயந்திரங்களெல்லாம்,
என்ன உன் ராஜாங்கத்தில் உன்
விசுவாசமுள்ள மந்திரியா?
இல்லவேயில்லை
உன்னை மயக்கி உன்னையும்
உன் அடுத்த சந்ததியையும்
சமாதியாக்கும்
சூத்திரதாரன்,
உன்னையும்
உன் சந்ததியையும்
சோம்பேறிகளாக்கி அதுவே
ராஜாங்கம் நடத்த
போடும் தந்திரம்,
அதனாலே அதன் பெயர்
இயந்திரம்.

சற்றே செவிகொடு மனிதா......,
காற்றென்று ஒன்று உண்டு என
வாழ்நாள் முழுதும் நீ
மறந்திடினும்
அது உன்னை ஒரு கணம் கூட
விட்டு விட்டு வீசவில்லை.
அப்படி ஒரு கணம் இருப்பின்
உன் நிலை அதோ கதிதான்.

நீ ரசிக்காவிடினும் ........,
மலர்கள் உனக்காக வகை
வகையாய் பூத்து, உன் பார்வை
படாததால் வாடினும் அடுத்த
நாள் உனக்காக மலர
மறக்கவில்லை.
அந்த நிலா, இரவெல்லாம்
உனக்காக விளித்திருக்க
மறக்கவில்லை
அந்த கதிரவன், பகலெல்லாம்
உனக்காக சேவை செய்ய
மறக்கவில்லை.
அந்த வானம் வண்ணங்களை
மாற்ற மறக்கவில்லை
அந்த மேகம், வகை வகையாய்
மாற மறக்கவில்லை
இந்த பூமி சுழல
மறக்கவில்லை.

அப்படியிருக்க
உனக்கு மட்டும் ஏன்
இந்த மறதி?
நேரம் இல்லையா?
சற்றே உன் கைக்கடிகாரத்தைப்
பார், அதில் 24x60 நிமிடங்கள்
உண்டு
நான் கேட்பது ஒரு நிமிடம்
மட்டுமே.
இறைவன் என்ன
வேலையற்றவனா?
இத்தனையையும் வகை
வகையாய் உனக்கெனப்
படைத்து,
உன் பார்வை அதில் படாதா?
என ஏங்கிக்கிடக்க......
மூட மனிதா.....,
உலகத்தை பந்தாக்கி உன்
மேசையில் வைத்தாய்.
வானத்தை ஒரு அறைக்குள்
பூட்டி காட்சிப்
பொருளாக்கினாய்.
இணையம் என்ற பெயரில்
இயற்கையை மறக்கடிக்க
செய்தாய்.
இறைவனோடு
போட்டியா?......
எங்கே, உன் கையால் ஒரு
உலகம் உருவாக்கி அங்கே
உன் இயந்திரங்களுடன்
சென்று
வாழ் பார்க்கலாம்..
இறைவனுக்கும்
கோபம் வரும்.
அக்கணம் நீ
அழிந்தே விடுவாய்.
மனிதா.......
உன் கை படாமல் உருவான
அத்தனையும் இயற்கையே.
ஏன் நீயும் இயற்கையே.
எத்தனையோ இயற்கை,
அத்தனைக்குள்ளும்
எத்தனையோ அர்த்தங்கள்,
அற்புதங்கள்
ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு
அர்த்தத்தையேனும் கண்டுபிடி
உன் பிறப்பின் அர்த்தம் நீ
அறிவாய்
மரணத்தை மறந்தே விடுவாய்.

கற்களோடு கலந்து பழகி
அவற்றை உன் உருவில்
சிற்பமாக்கு
காற்றோடு கரைந்து அது
செல்லும் இடங்களிலெல்லாம்
உன் வாசத்தைப் பரப்பு
மழையோடு மகிழ்ந்துறவாடி
அதன் துளிகளை உன்
விம்பமாக்கு
கடலுக்கு பிள்ளையாகி அதன்
மடியில் அலையாகி
தவழ்ந்திடு
ஒவ்வொரு நாள்
இரவிலும்
ஒவ்வொரு கிரகத்தில்
வாழ்ந்திடு
பறவையோடு பறந்து
'பாஸ்போட்" இல்லாமலேயே
உலகம் சுற்று
மலையாகு, மடுவாகு,
மரமாகு,
மலராகு, மண்ணாகு,
வானாகு,
விண்வெளியாகு, காற்றாகு,
கடலாகு, கல்லாகு,
இயற்கையாகு...

இது சத்தியம்,
மரங்களோடு இரண்டு நாள்
பழகு,
மறுநாள் உன்னைப் பார்த்த
பின்பே அது பூக்கத்
தொடங்கும்
பூக்களோடு இரண்டு நாள்
பழகு,
உன்னிடம் சொல்லிவிட்டே
அது வாடத் தொடங்கும்
இயற்கைக்காக ஒரு நிமிடம்
ஒதுக்கு,
நீ மரணித்த போதிலும்,
கணவனை இழந்த போதிலும்
அவன் நினைவாக வாழும்
விதவை மனைவி போல் உன்
நினைவோடு இயற்கையைக்
காண்பாய்,
இதன் சந்ததிக்கு
உன் பெயரை
முதல் எழுத்தாக
கொண்டிருப்பாய்.

நான் கேட்பது
ஒரு நாளில் ஒரு
நிமிடமே
அது உன் வாழ்வில் எந்த
பாதிப்பையும் கொண்டு
வருமென நான்
நினைக்கவில்லை ஆனால்,
நீ ஒதுக்காது விடும்
அந்நிமிடம் உன் வாழ்வில்
நிம்மதியை கொண்டு
வருமெனவும் நான்
நினைக்கவில்லை.
எனவேதான்,
இயற்கைக்காக ஒரு நிமிடம்
ஒதுக்கு,
முடிந்த வரை இயற்கையோடு
வாழப் பழகு,
இயற்கையாக வாழப் பழகு,
இயற்கையாகு...........

எம்.எம்.சாதிஹா
உதவி விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# அறிவுச் சுரங்கம் நிகழ்ச்சியில் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் வெற்றி

## தலா 50 ஆயிரம் ரூபா பணப் பரிசில்கள் வழங்கி கௌரவிப்பு

ரமழான் மாதத்தை முன்னிட்டு *Colombo Commodities* நிறுவனம் வருடம் தோறும் நாடளாவிய ரீதியில் நடத்தி வரும் அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சி இம்முறை கடந்த 03.04.2024 அன்று கொழும்பு 10 அல்ஹிதாயா கல்லூரி அல்ஹாஜ் எம்.ஸி. பஹார்தீன் மண்டபத்தில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற திருகோணமலை வெள்ளை மணல் அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவர்களுக்கும் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்களுக்குமிடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்று முதலிடத்தைப் பெற்று, வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

இரண்டாம் இடத்தை திருகோணமலை வெள்ளை மணல் அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவர்களும் மூன்றாம் இடத்தை ஹெம்மாதகம அல்அஸ்ஹர் கல்லூரி மாணவர்களுக்கும் பெற்றுக் கொண்டனர்.

முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றிக் கிண்ணமும் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றிக் கிண்ணமும் மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் பதக்கமும் சான்றிதழும் *Colombo Commodities* நிறுவன தலைவர் டாக்டர் எம்.ஸி. பஹார்தீனால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக *Colombo Commodities* நிறுவனத்தின் தலைவர் டொக்டர் எம்.ஸி. பஹார்தீனும் விஷேட அதிதிகளாக *Colombo Commodities* நிறுவனத்தின் பணிப்பாளர்களான ஹாஜியானி திருமதி ஸஹ்ரியா பஹார்தீன், பாஸித் பஹார்தீன் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக கொழும்பு 10 அல்ஹிதாயா கல்லூரியின் அதிபர் ஏ.எப். ஸரூனா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பிரிவின் பொறுப்பாளர் திருமதி பாத்திமா றினூஸியா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



# கைத்தொழில் அமைச்சு

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

# பதவி வெற்றிடங்கள் – தலைமை அலுவலகம் / புல்மோட்டை பொறித்தொகுதி / தலைமை அலுவலகம்

முழுமையாக அரசுக்குரித்தான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. சிரேஷ்ட நிதி முகாமையாளர் (Senior Finance Manager)

**சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (HM 1-1)**
**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கல்வித் தகைமைகள் / தொழில்சார் தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நிதி / வர்த்தகமானி / கணக்கியல் துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

நிதி மற்றும் கணக்கியல் துறை தொடர்பில் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் / பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனம் / பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் இணை அங்கத்துவத்தைப் (ICA/CIMA/ACCA) பெற்றிருத்தல்

**மற்றும்**

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

(2) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் / பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனம் / பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் (ICA/CIMA/ACCA) பெற்றிருத்தல்

**மற்றும்**

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

### உள்வாரி விண்ணப்பதாரிகள்

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை தொகுதி Iஆம் தரத்தில் (MM 1-1) குறைந்தபட்சம் 05 வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**HM-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - HM-1-1, ரூபா 80,295/-=2,270X15 = 114,345/-

ரூபா 80,295/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாமலும் 66 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**HM-1-1 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. PED/1/2015, PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) எனும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகனம் எனும் இரண்டில் ஒன்று வழங்கப்படும்.

## 02. இரசாயனவியலாளர் - (Chemit)

**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

## 03. உள்ளக கணக்காய்வு அதிகாரி - (Internal Auditor Officer)

**முகாமைத்துவ சேவை தொகுதி (JM 1-2)**

**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நிதி / கணக்கியல் / வர்த்தகமானி தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Intermediate level of Institute of Charted Accountants of Sri Lanka - ICASL)

(3) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Charted Institute of Management Accounts - CIMA)

(4) பட்டய சான்றுபடுத்திய கணக்காளர் சங்கத்தின் (Association of certificate and Corporate Accounts -ACCA ) IIஆம் படிநிலை

(5) அரச தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா / உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (HNDA/ HNDC)

### உள்வாரி விண்ணப்பதாரிகள்

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் வகுப்பிற்கு இயைபான துறை பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**JM-1-2 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

**முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்**

சம்பள சங்கேத இலக்கம் - JM-1-2, ரூபா 43,355/-=755X10, 1,135X18 = 71,335/-

ரூபா 43,355/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

## 04. நிர்வாக அதிகாரி (Administrative Officer)

**முகாமைத்துவ சேவை தொகுதி (JM 1-2)**

**வெற்றிடம் நிலவும் இடம்: தலைமை அலுவலகம் (01 வெற்றிடம்)**

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### உள்வாரி விண்ணப்பதாரிகள்

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் தரத்திற்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**JM-1-2 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - JM-1-2, ரூபா 43,355/- = 755x10, 1,135x18 = 71,335/-

ரூபா 43,355/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை**: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

## 05. மொழிபெயர்ப்பாளர் (Translator)

**அமுலாக்கல் / ஆலோசனை சேவை, சேவை தொகுதி (MA 4)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழி தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட)

**குறிப்பு:** சிங்கள மொழியில் பட்டத்தைப் பெற்றிருந்தால் ஏனைய மொழியாக தமிழ் மற்றும் ஆங்கில மொழியை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அதேபோல் தமிழ் மொழியில் பட்டத்தைப் பெற்றிருந்தால் ஏனைய மொழியாக சிங்களம் மற்றும் ஆங்கில மொழியை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். (பட்டத்திற்கான ஏனைய மொழிப் பாடங்களில் சித்தியடையாதிருந்தால் பட்டத்தைக் கற்கும் மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஏனைய இரண்டு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர பரீட்சையில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்)

**MA-4 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MA-4, ரூபா 37,970/- =755X10, 930x15, 1,135x5 = 65,145/-

ரூபா 37,970/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

## 06. ஆய்வுகூட உதவியாளர் (Lab Assistant)

**முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவை தொகுதி (MA 2-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**தொழில்நுட்பத் திறன் / தேர்ச்சி**

ஆய்வுகூட உதவியாளர் பதவியின் கடமைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய தொழிற்றிறன் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**MA- 2-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MA-2-1, ரூபா 30,310/-=300X10, 350x7, 495x4, 660x20 = 50,940/-

ரூபா 30,310/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

## 07. முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)

**முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை தொகுதி (MA 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதி (03 வெற்றிடங்கள்)**

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**கல்வித் தகைமைகள்**

(1) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்

II. கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஆங்கில மொழி உட்பட ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சையை விடுத்து) சித்தியடைந்திருத்தல்

**அத்துடன்**

பதவிக்குத் தேவையான ஏனைய விசேடத்துவ தகைமைகள்: கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

### உள்வாரி விண்ணப்பதாரிகள்

(1) ஆரம்பத் தரம் - தொழில்நுட்பம் அல்லாத, அரைத் தேர்ச்சி, தேர்ச்சிபெற்ற சேவை தொகுதியின் கீழ் 'அ', 'ஆ' மற்றும் 'இ' என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்

II. கணிதம்

உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஆங்கில மொழி உட்பட ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

கணனி சொல்லாக்கம்/தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

(ஆ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தின் கீழ் குறைந்தபட்சம் 05 வருட காலம் தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MA-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MA-1-1, ரூபா 27,910/- = 300x10, 350x7, 495x4, 660x20 = 48,540/-

ரூபா 27,910/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

## 08. மேசன் (Mason)

ஆரம்ப தொழில் சேவை தொகுதி (PL - 3)

வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதி (01 வெற்றிடம்)

### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

கல்வி - கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

தொழிற்றிறன் / தேர்ச்சி

மேசன் வேலைக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் (NVQ) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல்**

1. மேசன் துறையில் ஐந்து (05) வருடகால அனுபவம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் மேசன் வேலைக்கு இயைபாக தேசிய தொழிற்றிறனில் (NVQ) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடையும் ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL-2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL-1) சேவை வகுதி பணியாளர்கள்.

**அல்லது**

2. மேசன் வேலைக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் (NVQ) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**PL-3 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - PL-3, ரூபா 26,290/-=270X10, 300x10, 330x10 ,350x12 = 39,490/-

ரூபா 26,290/-ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

### கொடுப்பனவுகள் மற்றும் அனுகூலங்கள்

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (புல்மோட்டை இயந்திரப் பொறித்தொகுதியில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு மட்டும்)
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள் (HM 1-1, MM 1-1, JM 1-2 பதவிகளுக்கு மட்டும்)
08. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும். (HM 1-1, MM 1-1 வகுதி பதவிகளுக்கு மட்டும்)

### அனுகூலங்கள்

01. வருடாந்த போனஸ்
02. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி பாதுகாப்பு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி பாதுகாப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
03. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு
    ii. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு ஒரு முறை வெளிவாரி சிகிச்சைக்காக 5000.00 ரூபா வழங்கப்படும்.
    iii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா வழங்கப்படும்.
04. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
05. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

### பொது நிபந்தனைகள்

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Payee Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது உங்களின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் சகல சான்றிதழ்களினதும் புகைப்படப் பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். (முறையாக சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

நீங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21ல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் தலைவருக்குக் கிடைக்கும் வகையில் 2024 ஏப்ரல் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

# SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA

## PROCUREMENT NOTICE

### Supply, Delivery and Installation of Hostel Furniture

**(SUSL/SU/NCB/Hostel Furniture/2024/01)**

Chairman, Department Procurement Committee, Sabaragamuwa University of Sri Lanka invites sealed bids from eligible bidders for Supply, Delivery & Installation of Furniture for hostels to the Sabaragamuwa University of Sri Lanka as described below.

1. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure.
2. Bidder should have at least Three years' experience in the relevant field in Sri Lanka.
3. Interested eligible bidders may obtain further information from the Senior Assistant Bursar/ Supplies **(Contact No. 045–2280311)** of the Sabaragamuwa University of Sri Lanka and inspect the bidding documents at the Supplies Branch of the University between **9.00 a.m. and 3.00 p.m.** from **08-04-2024 to 29-04-2024.**
4. A Complete set of bidding documents in English may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Bursar / Supplies, or softcopy of the bidding documents will be mailed by Supplies Division upon payment of a non – refundable fee of Rupees **5,000.00/=** either in cash at the Shroff Counter of the Sabaragamuwa University of Sri Lanka or to the credit of Bank of Ceylon, Sabaragamuwa University of Sri Lanka, Account No. **000002246976.** For the softcopy of the bidding documents, please send the non-refundable fee payment confirmation to **supplies@adm.sab.ac.lk.** The cash receipt of the Shroff or the Bank deposit slip shall be attached with the bidding documents. The documents may be purchased until 3.00 p.m. from **08-04-2024 to 29-04-2024.**
5. Bids must be delivered in duplicate to the address : **Senior Assistant Bursar, Supplies Branch, Sabaragamuwa University of Sri Lanka, Belihuloya** at or before **2.00 pm on 30-04-2024.** Please indicate **"Supply, Delivery & Installation of Hostel Furniture" - SUSL/SU/NCB /Hostel Furniture/2024/01, 30-04-2024"** on the left-hand corner of the envelope.
6. All bids must be accompanied by a Bid Security addressed to the **Vice Chancellor, Sabaragamuwa University of Sri Lanka,** valid for 120 days from the date of the bid opening as specified in the following Table.

| Type | Items | QTY (Nos) | Bid Security (Rs) (Itemwise) |
|---|---|---|---|
| Item No. 01 | Steel Bunker Beds | 218 | 163,500.00 |
| Item No. 02 | Steel Towel Racks | 99 | 18,500.00 |
| Item No. 03 | Steel Lockers | 213 | 96,000.00 |
| Item No. 04 | Fiber Table 3' x 2' | 75 | 13,000.00 |

7. Pre Bid meeting will be held on **18-04-2024.at 10.00 a.m.** in the Boardroom, Supplies Branch of Sabaragamuwa University of Sri Lanka or via zoom meeting platform.
8. Bids shall be deposited in the 'Tender Box' available in the Senior Assistant Bursar's Office of the University, or sent under Registered post to be received on or before the deadline to the address given in Clause No.5.
9. Late bids will be rejected. Bids will be opened **at 2.00 p.m. on 30-04-2024** in the presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening at the Boardroom, Supplies Branch of Sabaragamuwa University of Sri Lanka.

**Chairman,**
**Department Procurement Committee,**
**Sabaragamuwa University of Sri Lanka.**

---

**கல்வி அமைச்சு**

**திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு**

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்**

# வெற்றிடங்கள்

கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் கீழ் காணப்படும் இலங்கை ஜேர்மன், தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் குறிப்பிடப்படும் பதவிக்காக அன்றாட அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தச்சு தொழிலாளர் (PL-3)
02. மேசன் (PL-03)
03. சேவையாளர் (வாகன சேர்விஸ் செய்தல்) (PL-3)
04. பட்டறையாளர் (PL-3)

**தகைமைகள்:**
மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட துறைக்குள் விநியோகிக்கப்படும் தேசிய தொழிற் பயிற்சி தேர்ச்சி (NVQ) நான்காம் (04) மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் திறன் சான்றிதழை பதவியுடன் சம்பந்தப்பட்டதாக பெற்றிருத்தல் அல்லது 3 வருட சம்பந்தப்பட்ட துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள அளவு:** அன்றாடம் 1636.33

**சேர்த்துக் கொள்ளும் முறை:** செயன்முறை தொழில் பரீட்சை மூலம் மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்

**வயதெல்லை:** விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. தொழிலாளர் (PL-1)

**தகைமைகள்:** க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல்

**சம்பள அளவு:** அன்றாடம் ரூ. 1583.33

**சேர்த்துக் கொள்ளும் முறை:** நேர்முகப் பரீட்சை மூலம்

**வயதெல்லை:** விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சகல பதவிகளுடனும் சம்பந்தப்பட்ட பொத நிபந்தனைகள்**

- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரஜையாக இருத்தல்
- உடல் உள ரீதியில் நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றும் தகுதி இருத்தல்
- சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல்

ஊழியர் சேமலாப நிதிக்காக கொடுப்பனவில் 08% அறவிடப்படுவதுடன் அதற்காக நிறுவனத்தின் பங்களிப்பு 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% ஆகும்.

விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் ஆவணங்களில் போட்டோப் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வி மற்றும் தொழில் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்
(இ) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்
(ஈ) தேசிய அடையாளஅட்டை

முழுமையான விபரத்துடனான விண்ணப்பத்தை தம்மால் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2024.04.21ம் திகதிக்கு முன்னர் முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனித வளங்கள், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல. 582, காலி வீதி, கல்கிசை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை சரியாக குறிப்பிடுவதுடன் குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**பணிப்பாளர் அதிபர்,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,**
**இல. 582, காலி வீதி, கல்கிசை.**

---

SUNDAY OBSERVER ADZ | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

Gampaha - 033 22 23 464
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

Wattala - 011 2 937 989
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

Nilpanagoda - 077 8 627 321
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

Wattala - 011 2 932 511
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

Kochchikade - 031 22 78 359
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

Batuwatta - 071 8 921 271
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

Dunagaha - 077 3 517 752
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

Ja-Ela - 011 2 947 379
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

Negombo - 071 480 43 55
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

Katunayake - 077 4 115 998
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

Kandana - 011 2 233 651
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

Minuwangoda - 011 2 297 881
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

Katana - 031 2 241 687
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343

---

**கல்வி அமைச்சு** | **NAITA**

National Apprentice & Industrial Training Authority

**இந்த அதிகாரசபையின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

## சபையின் செயலாளர் மற்றும் சட்ட அலுவலகர் (ஒப்பந்த அடிப்படையில்)

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையில்/நிறுவனமொன்றில் அல்லது புகழ் வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் ஒரு (01) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவத்துடன் சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ்

**சம்பளம் மற்றும் ஏனைய நன்மைகள்:** பின்வரும் சம்பள மட்டத்தின் ஆரம்ப படி.
42,600-10x755-18x1,135 – 70,580 ரூபா. (JM 1-1)

**இதற்கு மேலதிகமாக:**

- விஷேட படி 5,000 ரூபா
- வாழ்க்கைச் செலவுப் படி 17,800 ரூபா
- மாதாந்தம் தொடர்பாடல் வசதிகள் 2,000 ரூபா வரையும்
- ஊ.சே.நி. இற்கு அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைச் செலவின் 10%, அதிகாரசபை அதே நிதியத்திற்கு 15% பங்களிக்கப்படும். அதிகாரசபையானது ஊ.ந.நி. இற்கு 3% ஐ பங்களிப்புச் செய்யும்.

**வயதெல்லை:** வயதானது 22 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்க திணைக்களங்களின் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும். 2024.04.26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் விரிவான சுயதரவு அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் உரித்தான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, இராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

www.naita.gov.lk

தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை,
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட, இராஜகிரிய,
தொலைபேசி: 011 2888782-5

---

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்துகொள்ளும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்கான விலைக்கோரல் அழைப்பு**

**2024-06-01 முதல் தொடங்கி 2025-05-31 வரை**

## தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்துகொள்ளும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) கீழ் பதிவு செய்துகொண்டுள்ள காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்கையின் பிரகாரம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பதிவுடன் வருடாந்தம் பல்வேறு நாடுகளுக்கு வெளியேறிச் சென்ற சுமார் 260,000 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விரிவான காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதை இந்தக் காப்புறுதித் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும். தகுதியுள்ள சேவை வழங்குநர்கள் (காப்புறுதி) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் குறிப்பிடப்படும் குறைந்தபட்ச நலன்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 25,000.00 ரூபா கட்டணத்தை 2024-04-08ஆம் திகதி முதல் 2024-04-26ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமர்ப்பித்து பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, முகாமையாளர் (பெறுகை) அவர்களிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

விலைமனுதாரர்கள் இலங்கையில் செயற்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 600,000.00 ரூபாவிற்கான வங்கி உத்தரவாதமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் பெற்று விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்களை உள்ளிடலாம்.

2024-04-29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் வேளையில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

எந்தக் காரணத்தைக் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை அமைச்சின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று நாராஹென்பிட்டி, மெஹெவர பியச, 7ஆம் மாடி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கலையரங்கின் 2024-04-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகை முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி: 011-2887585 / 011-288 0550**
**மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk**
**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**

## இலங்கை களனி பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடங்கள்

2022/2023 ஆம் கல்வியாண்டிற்காக பின்வரும் பதவிகளுக்காக 2024.04.24 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும்.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுனர்
- கனிஷ்ட புலமையாளர் (Junior Fellow)

**விஞ்ஞான கற்கைநெறிபீடம்**

கணிதம்/ தாவரம் மற்றும் மூலக்கூறு உயிரியல்/ இயற்பியல் மற்றும் இலத்திரனியல்/ வேதியல் / புள்ளிவிபரம் மற்றும் கணனி விஞ்ஞானம்/ நுண்ணுயிரியல் / விலங்கியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் மையம் / மென்பொருள் பொறியியல் கற்பித்தல் அலகு ஆகிய திணைக்களங்கள்.

**மனிதநேயங்கள் கற்கைநெறிபீடம்**

சிங்களம் / ஹிந்தி / பாளி மற்றும் பௌத்த கற்கை நெறிகள்/ ஆங்கிலம்/ சமஸ்கிருதம் மற்றும் கிழக்கு கற்கை நெறிகள்/ அழகியற்கலை / நாடகம், சினிமா மற்றும் தொலைக்காட்சி/ மொழியியல்/ நவீன மொழிகள்/ மேற்கத்திய முற்கால கலாச்சாரம் மற்றும் கிறீஸ்தவ கலாச்சாரம்/ ஆங்கில மொழி கற்பித்தல்.

**கற்கைநெறி பீடத்தின் அலுவலகம்**
**கல்வி அலகு**

**விண்ணப்பிக்கும் முறைமை :**

விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்-லையினூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. ஒன்-லையின் விண்ணப்பம், விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒன்-லையின் விண்ணப்பங்கள் 2024.04.24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**05.04.2024**



## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடம்

## இருதய நோய் மருத்துவ நிபுணர் பதவி
## (Post of Consultant Cardiologist)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள் : இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PGIM) இருதய நோயியலில் MD சபைச் சான்றிதழ் சகிதம் அரசாங்க அல்லது தனியார்துறை வைத்தியசாலைகளில் மருத்துவ நிபுணராகவிருத்தல்.

வயது : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும். (50 வயதிற்குக் குறைவானவர்கள் இல்லாத பட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டோர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு கவனம் செலுத்தப்படும்.)

சம்பள அளவு : ரூபா 118,800.00 - 12x3645.00 - 162,540.00 மாதாந்தம்.

சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்: நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2024-04-25ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2024-04-04.**



SPC

## இலங்கை அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபனம்

# பதவி வெற்றிடம்

அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபனமானது மருந்தாக்கங்கள் மற்றும் மருத்துவ சாதனங்களை அரசாங்க வைத்தியசாலைகளுக்கான ஏகஇறக்குமதியாளரும் இலங்கையில் மருந்தாக்கங்களின் தனியார் வைத்தியசாலைகளுக்கான விநியோகஸ்தருமாவார்.

பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொருந்தக்கூடிய தகைமையையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

### பெறுகை அலுவலகர்: (கப்பல்துறை மேடை) (Wharf) JM 1.1 – தரம் II

**தகைமைகள்:**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு பட்டம் அல்லது நிகரான தகைமை.

அத்துடன்

ஆ) கணனி அறிவு

அத்துடன்

இ) அரச கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச்சட்ட அமைப்பு/புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்று ஆகியவற்றில் கப்பல்துறை மேடை கடமைகளில் ஆகக் குறைந்தது ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**சம்பள மட்டம்** : 42,600–755x10,1135x18-70580 ரூபா (மாதாந்த வேதனமானது அண்ணளவாக ஏறக்குறைய 97,780)

**வயதெல்லை** : 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை வரம்பு பிரயோகிக்கப்படுத்தப்பட மாட்டாது.

**மேலதிக அனுகூலங்கள்:**

மாதாந்த வருகை உற்சாகப்படுத்தும் படி, பாவிக்கப்படாத விடுமுறைகளுக்கான படி, வருடாந்த மிகையூதியம் மற்றும் இலாபத்தின் பங்கு உற்சாகப்படுத்தும் படி, நலவுதவி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் ஊழியர் மற்றும் குடும்பத்திற்காக வைத்தியசாலையில் தங்கியிருந்து மருத்துவம் செய்வதற்கான மருத்துவ காப்புறுதி திட்டம் அடங்கலாக கவர்ச்சிகரமான அனுகூல தொடர்.

விண்ணப்பங்கள் முழுமையான சுயதரவு அடங்கலான வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதய நிலபரம், சம்பள அளவு மற்றும் மட்டம், முன்பு வகித்த பதவிகள், முன்னைய தொழில் வழங்குநரிடம் வேலைக்கு சேர்ந்த மற்றும் விலகிய திகதி அத்துடன் கல்விசார் மற்றும் சேவை சான்றிதழ்கள் அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்.

உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்பதை தயவு செய்து குறித்துக் கொள்ளவும்.

பொதுத் துறை அமைப்புகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களையடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2024.04.22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**இலங்கை அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபனம்**
**'மெஹெவர பியச',**
**16 ஆம் மாடி, 41, கிருள வீதி,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி: 011 2320356/9.**


## மர்ஹூமா ஷஹ்னா ஸப்வானின் "எரியும் நட்சத்திரம்"... (07ஆம் பக்கத் தொடர்)

'எரியும் நட்சத்திரம்' கவிதைத் தொகுதியின் உள்ளடக்கமானது எழுத்துலகம், மனதோடு கொஞ்சம், நேசம், குடும்பம் ஆகிய நான்கு உப தலைப்புக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன. நூலில் இடம்பிடித்துள்ள இவருடைய கவிதைத் தலைப்புகளைப் பொதுவாக நோக்கும் போது காலத்துக்குத் தேவையான, யதார்த்தமான பாடுபொருள்களைப் பிரதிபலிக்கின்ற பல்வேறு வகையான தலைப்புகளில் அமைந்துள்ளது.

'எரியும் நட்சத்திரம்' ஷஹ்னா ஸப்வானின் கன்னிக் கவிதைத் தொகுதியாகும். இந்த நூலிலுள்ள பல கவிதைகள் இது கன்னிக் கவிதைத் தொகுதி என்பதைப் பறை சாற்றி நின்றாலும்கூட சில கவிதைகள் கவிதைக்கேயுரிய இலக்கணங்களைப் பின்பற்றி கனதியான முறையில் சிறப்பாக அமைந்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். அகம் சார்ந்த மன உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற கவிதைகளைத் தேடி வாசிப்போர் நிச்சயமாக தர்காநகர் ஷஹ்னா ஸப்வானின் கவிதைகளையும் வாசிக்க முடியும்.

மொத்தத்தில் தமிழின் சிறப்பு, மானிட அவலம், நாட்டு நடப்பு, அனுபவப் பாடம், இயற்கையின் வனப்பு, போலி முகம், வாழ்வின் யதார்த்தம், ஆன்மிகம், துரோகம், நட்பின் தூய்மை, பெண்மையின் கண்ணியம், உணர்வுகளின் வெளிப்பாடு, தாய்ப் பாசம் போன்ற கருப்பொருட்கள் இவருடைய கவிதைவெளியை வியாபித்து நிற்கின்றன.

'எழுதுகோல்' என்ற முதலாவது கவிதை ஒரு மனிதனின் சிந்தனை சக்தியை எழுத்து வடிவமாக மாற்றும் எழுதுகோலின் பங்களிப்பு பற்றி பேசி நிற்கின்றது.

'யாவும் எனக்கு கவிதை தான்' என்ற கவிதையினூடாக நமது கவிஞர் எல்லாவற்றையும் தனது கவிதைக் கண் கொண்டு பார்க்கின்றார்.

பாரதி தொட்டு அத்துனையுமே இங்கு எனக்குக் கவிதை தான். காற்று, மரங்கள், பூக்கள் இவையெல்லாம் எனக்குக் கவிதை தான். சுட்டெரிக்கும் சூரியனும் எனக்கு கவிதை தான். கலைந்து செல்லும் மேகங்களும் எனக்குக் கவிதை தான். இரவில் எரியும் விண்மீன்களும் எனக்குக் கவிதை தான்.இரவை துவைக்கும் விடியலும் எனக்குக் கவிதை தான்..

என்று இவர் அனைத்தையும் தனது கவிதைக் கண் கொண்டே பார்க்கின்றார்.

இருளை நேசி விடியல் தெரியும்.. தோல்வியை நேசி வெற்றி தெரியும்.. மக்களை நேசி மனிதாபிமானம் தெரியும். தாயை நேசி அன்பு தெரியும். அன்பை நேசி அடிமைத்தனம் தெரியும். தந்தையை நேசி உழைப்பு தெரியும். உழைப்பை நேசி உயர்வு தெரியும். உன்னையே நீ நேசிஉலகம் உனக்கு அழகாய் தெரியும்..

'நேசம்' எனும் கவிதையில் நேசத்தின் மூலம் நாம் அடையும் பிரதிபலன்கள் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இனிமையான சொல்லாடல்களால் இக்கவிதை ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

இந்தக் கவிதை நூலை வாசிக்கும் அனைவரும் மறைந்த கவியாளுமை ஷஹ்னா ஸப்வானுக்காக கரமேந்திப் பிரார்த்திப்பார்கள் என்பது உறுதி. எல்லாம் வல்ல அல்லாஹ் இவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற மேலான சுவனத்தை வழங்குவானாக என்று நானும் இரு கரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்!!!


SPC

## இலங்கை அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபனம்

# பதவி வெற்றிடம்

அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபனமானது மருந்தாக்கங்கள் மற்றும் மருத்துவ சாதனங்களை அரசாங்க வைத்தியசாலைகளுக்கான ஏக இறக்குமதியாளரும் இலங்கையில் மருந்தாக்கங்களின் தனியார் வைத்தியசாலைகளுக்கான முன்னணியிலுள்ள இறக்குமதியாளரும் விநியோகஸ்தருமாவார்.

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருந்தக்கூடிய தகைமையையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

### (1) பிரதி பொது முகாமையாளர் (கொள்வனவு மற்றும் இறக்குமதிகள்) (எச்எம் 1.1)

**தகைமைகள்:**

1) சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/வர்த்தக நிர்வாகம்/மருந்தியல் / மருந்தகம் மருந்தகத்தில் பெற்ற பட்டப்படிப்பு பட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு பட்டம் அல்லது விஞ்ஞானமாணி விஷேட பட்டம்

அத்துடன்

2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தியல் துறையில் / மருந்தகம்/ சந்தைப்படுத்தல் / வர்த்தகம் / வர்த்தக நிர்வாகம் ஆகியவற்றில் பெற்ற பட்டப்பின் தகைமைப்பட்டம் (முதுமாணி)

அத்துடன்

3) அரச கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச்சட்ட அமைப்பு/புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்று ஆகியவற்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' பெறுகை மற்றும் இறக்குமதிகளின் மருந்தாக்கங்கள்/ பொருட்கள் ஆகிய துறைக்கு உரித்தான ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.

அல்லது

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட MBBS/ MD அத்துடன் இலங்கை மருத்துவ பேரவையில் சுதந்திரமான மருத்துவ செயற்பாட்டாளராக பதிவு பெற்றிருத்தல்.

அத்துடன்

இலங்கை பட்டப்பின் படிப்பு நிறுவகத்திலிருந்து பெற்ற பட்டப்பின் தகைமைகள் பட்டம்.

அத்துடன்

அரச கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச்சட்ட அமைப்பு/புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்று ஆகியவற்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' பெறுகை மற்றும் இறக்குமதிகளின் மருந்தாக்கங்கள்/ பொருட்கள் ஆகிய துறைக்கு உரித்தான ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.

சம்பள மட்டம் : 80,295-15x2270 ரூபா - 114,345 ரூபா.
அண்ணளவான மாதாந்த வேதனமானது ஏறக்குறைய 142,793 ரூபா

வயதெல்லை : 18 வயதிற்கு குறையாமலும் 55இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை வரம்பு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

### (2) பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) எச்எம் 1.1)

**தகைமைகள்:**

1) சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/வர்த்தக நிர்வாகம்/மருந்தியல் / மருந்தகம் மருந்தகத்தில் பெற்ற பட்டப்படிப்பு பட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு பட்டம் அல்லது விஞ்ஞானமாணி விஷேட பட்டம்

அத்துடன்

2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் /வர்த்தகம் / வர்த்தக நிர்வாகம் ஆகியவற்றில் பட்டப்பின் படிப்பு (முதுமாணி)

அத்துடன்

அரச கூட்டுத்தாபனம்/ சபை/ நியதிச்சட்ட அமைப்பு/புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்று ஆகியவற்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' பெறுகை மற்றும் இறக்குமதிகளின் மருந்தாக்கங்கள்/ பொருட்கள் ஆகிய துறைக்கு உரித்தான ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

சம்பள மட்டம் : 80,295-15x2270 ரூபா - 114,345 ரூபா.
அண்ணளவான மாதாந்த வேதனமானது ஏறக்குறைய 142,793 ரூபா

வயதெல்லை : 55 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் கவர்ச்சிகரமான அனுகூலங்கள் தொடரில் மாதாந்த வருகை உற்சாகப்படுத்தும் படி, பாவிக்கப்படாத சுகவீன விடுமுறை, வருடாந்த மிகையூதியம், இலாப பங்கீட்டு உற்சாகப்படுத்தும் படி, நலவுதவி அனுகூலம், மருத்துவ நன்மைகள் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம் ஊழியருக்கும் குடும்பத்தினருக்கும் வைத்தியசாலையில் தங்கியிருந்து மருத்துவம் செய்வதற்குமான காப்புறுதி திட்டம் உத்தியோகபூர்வமாகவும் சொந்தப் பாவனைக்கும் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் மாதாந்த எரிபொருள் படியும் அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் முழுமையான சுயதரவுடன் வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதய பதவி, சம்பள கட்டம் மற்றும் மட்டம், முன்னர் வகித்த பதவி, முன்னைய தொழில் வழங்குநருடன் சேர்ந்த திகதி முன்னைய தொழில்வழங்குநரை விட்டு விலகிய திகதி, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கலாக இருத்தல் வேண்டும்.

உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்பதை தயவு செய்து குறித்துக் கொள்ளவும்.

பொதுத் துறை அமைப்புகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களையடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2024.04.22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச மருந்தாக்கங்கள் கூட்டுத்தாபம்**
**'மெஹெவர பியச',**
**16 ஆம் மாடி, 41, கிருள வீதி,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி: 011 2320356/9.**


## தேர்தல் நெருங்குகின்ற...
(09ஆம் பக்கத் தொடர்)

அது மாத்திரமன்றி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டிருப்பதாகவும், கட்சியின் தலைவர் என்ற ரீதியில் அவரின் நடவடிக்கைகள் அக்கட்சியை வீழ்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லும் விதத்திலும் அமைந்திருப்பதால் இடைக்காலத் தடையுத்தரவை வழங்குமாறு அந்த மனுவில் சந்திரிகா கோரியிருந்தார்.

இதனை விசாரித்த நீதிமன்றம் இறுதி முடிவு எடுக்கப்படும்வரை இடைக்காலத் தடையுத்தரவை வழங்கியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்றிணைத்து எதிர்வரும் தேர்தலில் கூட்டணியொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டிருந்தார். இவ்வாறான கூட்டணியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு சந்திரிகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே சுதந்திரக் கட்சியின் உட்கட்சி மோதல் வலுவடைந்துள்ளது.

அது மாத்திரமன்றி, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்த வைப்பதற்கு அதாவது பாராளுமன்றத்தைக் கலைக்கச் செய்வதற்கான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருப்பதாகவும் கொழும்பு ஊடகமொன்று அறிக்கையிட்டுள்ளது.

பாராளுமன்றத்தைக் கலைப்பதாயின் 113 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் பிரேரணையொன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் போதும். ஆனால், 113 உறுப்பினர்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ள பொதுஜன பெரமுன எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்திருப்பதாக அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

விரைவில் நடைபெறக்கூடிய தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் தயாராகி வருவதை இந்த செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றபோதும், தீவிர பிரசாரங்களில் வெற்றிடமொன்று காணப்படுகின்றது. எந்தத் தேர்தல் முதலில் நடைபெறும் என்ற சந்தேகம் இந்த வெற்றிடத்துக்கு ஒரு காரணமாக இருந்தாலும், பாரிய புயல் ஒன்று அடிப்பதற்கு முன்னர் ஏற்படக்கூடிய அமைதியான காலநிலை போன்றே நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை காணப்படுகின்றது.

## அமெரிக்க மக்களிடையே...
(10ஆம் பக்கத் தொடர்)

அமெரிக்காவின் இச்செயலை உலகின் பல தலைவர்களும் அமெரிக்காவின் செனட்டர்களும் புத்திஜீவிகளும் மனித உரிமை ஆர்வலர்களும் கடுமையாக விமர்சித்துள்ளனர். இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கப்படக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ரபா மீது தரைவழி இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முஸ்தீபுகளில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்குவது யுத்தத்தை முன்னெடுக்க உதவுவதாகவே அமையும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காஸா மீது இஸ்ரேல் முன்னெடுக்கும் யுத்தத்திற்கு அமெரிக்கா ஆதரவளிப்பதற்கு உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் விமர்சனங்களும் எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டும் அமெரிக்க நிர்வாகம் ஆதரவளிப்பது அனைத்து மக்களையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

அதாவது 1917 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி பிரித்தானியாவின் அன்றைய வெளிவிவகார அமைச்சர், பலஸ்தீனில் யூதர்களின் தனி நாட்டு திட்டத்தை பல்ஃபோர் பிரகடனமாக அறிவித்தார். அதனை 1919 மார்ச் 03 ஆம் திகதி அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் நேசநாடுகளின் சார்பாக யூதர்களின் தாயகத்திற்கான கோரிக்கையை ஆதரித்தார்.

பின்னர் 1922 மற்றும் 1944 இல், அமெரிக்க பாராளுமன்றம் பால்ஃபோர் பிரகடனத்திற்கு ஆதரவாக தீர்மானங்களை நிறைவேற்றியது. 1948 இல் இஸ்ரேல் உருவானவுடன், அதை முதலில் அமெரிக்கா அங்கீகரித்தது. இவ்வாறு இஸ்ரேலுடன் நீண்ட நட்புக் கொண்டுள்ள அமெரிக்கா, 1972 முதல் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலில் இஸ்ரேலுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 50 தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தின் ஊடாக செல்லுபடியற்றதாக்கி உள்ளது.

அந்த வகையில் காஸா மீதான யுத்தநிறுத்தத்திற்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட நான்கு தீர்மானங்களில் மூன்றை அமெரிக்கா செல்லுபடியற்றதாக்கியும் உள்ளது.

இவ்வாறான பின்புலத்தில் தனது குடிமக்களதும் உலக நாடுகளதும் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது இஸ்ரேலுக்கு ஆதரவளித்து வருகிறது அமெரிக்கா.

# அட்டாளைச்சேனை ஊரும் அரிய மீன்கள் வரலாறும்

*08ஆம் பக்கத் தொடர்*

ஒரு பெரியதுண்டு வாழைப்பழத்தைத் தொண்டையில் சிறிதுநெரம் வைத்திருந்தாலே போதும் வாழைப்பழம் அப்படியே வாயில் சுரக்கும் உமிழ்நீருடன் மாட்டிக்கொண்ட மீன் முள்ளையும் சேர்த்து வயிற்றுக்குள் தள்ளிவிடும். அல்லது 1 – 2 கரண்டி ஆலிவ் எண்ணெயை விழுங்கினாலும் எண்ணெயின் வழவழப்பில் முள் வயிற்றுக்குள் சென்றுவிடும். அல்லது 1 டம்ளர் வினாகிரியைத் தண்ணீரில் கலந்து 1 கரண்டி எடுத்துக் குடித்தால் போதும் இந்த அவசர சிகிச்சையைச் செய்ய வேண்டும்'என்பார். திருக்கை மீன்களைப் பற்றி பன்னிருபள்ளு இலக்கியங்கள் உள்ளன. பெண்களுக்கு அருமருந்து உண்டென்றால் அது திருக்கை மீன்தான். இதை தாய்மார் சாப்பிட்டால் தாய்பால் சுரக்கும். அது உடம்பை முறுக்கிப் பிழிந்து கெட்ட நீர் கசடுகளை வெளியேற்றிவிடும். உடம்பையே திருகிக் கெட்டகழிவுகளை வெளியேற்றுவதால்தான் அதற்கு திருக்கைமீன் என்று சொல்வார்களாம். இது வித்தியாசமானமீன். உருவ அமைப்பில் மற்ற மீன்களிலிருந்து வேறுபட்டது. தட்டையான உடலமைப்புடையது. இதன் மேற்புறத்தில் இரண்டு கண்கள். கூர்மையான பற்கள் ரம்பம் போலிருக்கும். வாலின் முற்பகுதியில் இரண்டு கொடுக்குகள் இருக்கும். இந்தக் கொடுக்குகளால் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும். அதன் வால் உடலைவிட நீளமாக இருக்கும். அந்தவாலில் ஏராளமான மிகநுண்ணிய முட்கள் இருக்கும். கடலுக்கு அடியில் கும்மிருட்டில் கூட திருக்கை வாழும். அப்போது திடீரென ஒருவித ஒளியை உமிழ்ந்து மின்சார அதிர்வை ஏற்படுத்தி வெளிச்சம் பாய்ச்சும். இந்த வெளிச்சத்திற்குப் பயந்து எதிரி மீன்கள் ஓடிவிடும். பொதுவாக முட்களை நீக்கிவிட்டே மீனைச் சமைப்பார்கள். ஆனால் இதன் முட்களிலிருந்துதான் நிறைய மருந்துப் பொருட்கள் எடுக்கப்படுகின்றன. இதில் ஓமேகா3 அதிகம் இருக்கின்றது. உயர் ரத்தஅழுத்தத்தைக் குறைக்கும் சக்தி இந்த திருக்கை மீனுக்கு இருக்கிறது. பித்தம் தலைசுற்றல் வாந்தி–தலைமுடிஉதிர்வு போன்றவற்றைத் தடுக்கும். எலும்பு–பல் நோய் எதிர்ப்புமண்டலத்தை வலுப்படுத்தும். மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். ஆஸ்துமா இதயநோய் புற்றுநோய் நீரிழிவுநோய் போன்றவற்றின் அபாயத்தையும் குறைக்கும்.சூடை என்றழைக்கப்படும் மத்தி மற்றும் அயிலா திரளி சங்கரா போன்ற கடல்மீன்கள் ஓமேகா 3 என்ற அமிலச்சத்துக் கொண்டவை. ஓமேகா 3 கொழுப்பு அமிலம் மூளைக்கும் இதயத்திற்கும் மூட்டுவலிக்கும் மாமருந்தென்றும் மனச்சோர்வு மனஇறுக்கம் மனஅழுத்தம் போன்ற பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதாகவும் உடற்கொழுப்பின் அளவு குறைக்கப்படுவதாகவும் இதயத்துடிப்பு சீரடைவதாகவும் சமீபஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

## சர்வதேச நாணய...

*(04ஆம் பக்கத் தொடர்)*

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இதுதான் முறை. இருப்பினும், வருமானம் இல்லை என்றால் வரி செலுத்தத் தேவையில்லை. வரி வசூலிப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் நிவாரணம் வழங்கக் கூடியதாகவுள்ளது. இது மேலும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

**கே: அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் யார்? தற்போதைய ஜனாதிபதிக்கு பொதுஜன பெரமுன–வின் ஆதரவு கிடைக்குமா?**

பதில்: பொதுஜன பெரமுன கட்சி இது பற்றி இன்னமும் தீர்மானம் ஒன்றுக்கு வரவில்லை. இது குறித்து விவாதித்து எதிர்காலத்தில் முடிவு எடுக்கப்படும்.

**கே: பொதுஜன பெரமுனவினர் தற்போதைய ஜனாதிபதியை ஆதரிக்கின்றனரா?**

பதில்: அன்று எமது கட்சியின் தலைவரும் பிரதமரும் வெளியேறிய போது, சவால்களை ஏற்று பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவினோம். நாட்டில் அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்ட ஜனாதிபதிக்கு உதவினோம். உதவி செய்துள்ள நாம், தலைவனின் காலை ஏன் இழுக்க வேண்டும்?

**கே: முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமா அல்லது ஜனாதி–பதித் தேர்தல் நடத்தப்படுமா?**

பதில்: பாராளுமன்றத் தேர்தலை விட ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என நான் நம்புகிறேன். நாட்டு மக்களைப் பற்றி சிந்தித்தால் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். அரசியல் ரீதியாக நினைத்தால் பாராளுமன்ற தேர்தலுக்குச் செல்ல வேண்டும். ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பாராளுமன்றத் தேர்தலுக்குச் சென்றால் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது. பின்னர் ஒரு நிலையற்ற அரசாங்கம் உருவாகும். ஒரு நிலையான அரசாங்கத்தை இழந்தால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காமல் போகலாம். பின்னர் 2022 போல வீழ்ச்சியை நாடு சந்திக்கலாம். நாங்கள் எந்த அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை நடத்துவதற்கு உதவியதன் பலனை நாம் அனுபவித்து வருகிறோம்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் அரசாங்கத்தை நிறுவி நாட்டை ஸ்திரப்படுத்த முடியும். வேறு அரசியல் கட்சி வெற்றி பெற்றால் அவர்களுக்கும் அதே வாய்ப்பு கிடைக்க வேண்டும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டிற்கு மிகவும் முக்கியமானது என நான் நம்புகிறேன். நாட்டின் நலனுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதை விட ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதே சிறந்தது என நான் கருதுகிறேன்.

## இந்திய தேர்தலில்...

*(04ஆம் பக்கத் தொடர்)*

இரண்டொரு வாரங்களுக்கு முன்னர் பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் கச்சதீவு விவகாரத்தை எழுப்பினார். காங்கிரஸ் எப்படி நாட்டை பிளவுபடுத்தியது என்பதற்கு உதாரணமாக இந்திரா காந்தி கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை குறிப்பிட்டு அவர் பேசினார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், பா.ஜ.க ஆட்சிக்கு வந்த பிறகே தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர், மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க மாநாட்டில் பேசிய எடப்பாடி பழனிசாமி கச்சதீவை மீட்போம் என தி.மு.க கூறுவது பச்சைப் பொய் என்றும், அதை தாரை வார்த்துக் கொடுத்ததே தி.மு.கதான் எனவும் சாடினார்.

அப்போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்த தி.மு.க, கச்சதீவை தாரைவார்த்துக் கொடுப்பதற்கு எதிராக கேள்வி எழுப்பவில்லை என்றார்.

அ.தி.மு.க உருவாகி இரண்டு ஆண்டுகளில் 1974 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது கட்சியின் தலைவராகவிருந்த எம். ஜி. இராமச்சந்திரன், "தி.மு.க மத்திய அரசுக்கு சரியான வழிகாட்டுதல் வழங்கவில்லை" எனக் குற்றம் சாட்டினார்.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கச்சதீவு விவகாரம் தமிழக அரசியலில் மாத்திரமன்றி ஒட்டுமொத்த இந்திய அரசியலிலும் விவாதப்பொருளாகியுள்ளது. தி.மு.கவையும், காங்கிரஸ் கட்சியையும் கச்சதீவு விவகாரத்தில் பிரதமர் மோடி மற்றும் பா.ஜ.க தலைவர்கள் விமர்சித்து வருகிறார்கள்.

"ஒருமைப்பாட்டை பலவீனமாக்குவதுதான் 75 ஆண்டுகளாக காங்கிரஸ் செய்த செயல். காங்கிரஸ் கட்சியை எப்போதுமே நம்பவே கூடாது என்பதைத்தான் கச்சதீவு விவகாரம் வெளிப்படுத்துகிறது. கச்சதீவு விவகாரத்தில் காங்கிரஸின் நடவடிக்கை ஒவ்வொரு இந்தியரையும் கோபமடையச் செய்கிறது" எனக் கொந்தளித்துள்ளார் அண்ணாமலை.


**ஒரு பாதுகாப்பான இறக்கையின் கீழ் வளருங்கள்**

உலகளாவிய விருந்தோம்பல் கல்வியில் உள்நாட்டு வர்த்தக நாமம்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

**01. பணிப்பாளர் - நிதி (HM 1-1 வகுதி) கொழும்பு**

**ஒரு ஆற்றல்மிக்க தனிநபருக்காக திறக்கப்பட்டுள்ளது.**

- வரவு செலவுத்திட்ட நிர்வாகம், நிறுவனத்தின் நிதிக் கொள்கை மற்றும் அது தொடர்பான நடைமுறைகளை நிர்வகித்தல்.
- நிதி வள முகாமைத்துவம், கடன் கண்காணிப்பு, காசாளர் கடமைகள், வருமானக் கணக்காய்வு, கிரயம், சமுத்ரா ஹோட்டல் மற்றும் நிறுவனத்தின் அனைத்து கணக்குகளைக் கண்காணித்தல்.
- நிறுவனத்தின் நிதி முன்னறிவிப்பு மற்றும் பகுப்பாய்வுகளுக்கு பொறுப்பு கூறுதல்.
- முகாமைத்துவச் சபையினால் பிரதான நிறைவேற்று அதிகாரியின் வகிபாகத்திற்கு உதவுவதற்காக நிதிப் பணிப்பாளர் பதவிக்கு விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ வேலைகளை நிறைவேற்றுதல்.

**விண்ணப்பதாரரின் தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம்/ வியாபார முகாமைத்துவம்/ வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டம்,

**அத்துடன்**

நிதி/ கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம்/ வியாபார முகாமைத்துவம்/ வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் (ICASL/ CIMA/ ACCA) அங்கத்துவம் அல்லது இயைபுடைய தொழில்சார் நிறுவனமொன்றின் வேறு ஏதாவது சமமான தகைமைகள்.

**மற்றும்**

அரச சேவை, கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை/ நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் நிதித் துறைக்கு இயைபாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம்.

2. தொழில்சார் நிறுவனமொன்றின் (ICASL/ CIMA/ ACCA) முழுமையான அங்கத்துவம் அல்லது இயைபுடைய தொழில்சார் நிறுவனமொன்றின் வேறு ஏதாவது சமமான தகைமைகள்.

**அத்துடன்**

அரச சேவை, கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை/ நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் நிதித் துறைக்கு இயைபாக முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு இயைபான விடயத்துறையில் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் (MM1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

35 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இதில் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது?**

**சம்பள அளவு:** HM 1-1 - 2016 ரூபா (80,295 – 15 x 2,270 – 114,345)

**ஆரம்ப நிலை:** ரூபா 80,925.00 + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்புடைய மாதாந்தக் கொடுப்பனவு, போனஸ் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்றிறன் அடிப்படையில் செலுத்தப்படும்.

மாதாந்த தொழில்சார் கொடுப்பனவு, வாகனம் / எரிபொருள் கொடுப்பனவு என்பன அரசாங்க சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வழங்கப்படும்.

**02. உதவிப் பணிப்பாளர் - பராமரிப்பு (MM 1-2 வகுதி) கொழும்பு**

**ஒரு ஆற்றல்மிக்க தனிநபருக்காக திறக்கப்பட்டுள்ளது.**

- SLITHM மற்றும் சமுத்ரா ஹோட்டலின் அனைத்து நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு பொறுப்பாக இருத்தல்.
- மின்சாரம், நீர், தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் ஏனைய அலுவலகம் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குதல் உட்பட அனைத்து சேவைகளின் சீரான செயல்பாட்டிற்கு உதவுதல்.
- வளிச்சீராக்கம், கழிவு நீர் மற்றும் வடிகால் அமைப்பு மற்றும் குப்பைகளை சரியான முறையில் அகற்றுதல் உள்ளிட்ட மற்ற அனைத்து சேவைகளிலும் சுமூகமான செயல்பாட்டிற்கு பொறுப்பாக இருங்கள்.

**விண்ணப்பதாரரின் தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் (சிவில், மின்னியல் துறை) பட்டம்

**மற்றும்**

அரச சேவை, கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை / நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் சிவில் பொறியியல் அல்லது மின்சார பொறியியல் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு இயைபான விடயப்பரப்பில், கனிஷ்ட முகாமையாளர் (JM) வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இதில் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது?**

**சம்பள அளவு :** MM 1-2 - 2016 ரூபா (54,550 - 10 x 1,375 - 15 x 1,910 - 96,550)

**ஆரம்ப நிலை :** ரூபா 54,550.00 + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்புடைய மாதாந்தக் கொடுப்பனவு, போனஸ் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்றிறன் அடிப்படையில் செலுத்தப்படும்.

**03. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1-2 வகுதி)**

**04 வெற்றிடங்கள் - கொழும்பு**

**ஆற்றல்மிக்க தனிநபர்களுக்காக திறக்கப்பட்டுள்ளது.**

- அந்தந்த பிரிவின் அனைத்து கடிதப் பரிமாற்றங்களுக்கும் பொறுப்பாக இருத்தல்.
- பொருள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை சரியான முறையில் பராமரிப்பதற்கு பொறுப்பாக இருத்தல்.
- கடந்தகால பதிவுகளின் சரியான காப்பகத்திற்கு பொறுப்பாக இருத்தல்.
- தேவைப்படும் போதெல்லாம் அனைத்து நிர்வாக ஒழுங்குமுறைகள் மற்றும் நிதி விதிமுறைகளில் ஈடுபடுதல்.
- அலுவலக உபகரணங்களை இயக்குதல். (தொலைநகல், ஸ்கேனர், புகைப்படப் பிரதி இயந்திரம் போன்றவை)

**விண்ணப்பதாரரின் தகைமைகள்.**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

- சிங்களம் / தமிழ்
- ஆங்கில மொழி
- கணிதம்

**மற்றும்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர்ந்த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**ஆரம்ப நிலை** - திறனுடைய, ஆரம்ப நிலை - அரைத் திறனுடைய, ஆரம்ப நிலை - திறனற்ற வகுதியிலுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெறுவர்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

- சிங்களம் / தமிழ்
- ஆங்கில மொழி
- கணிதம்

**வயது:**

18 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இதில் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது?**

**சம்பள அளவு :** MA 1-2 - 2016 ரூபா [27,910 – 10x300 – 7x350 – 12x600 – 12 x710 – 49,080]

**ஆரம்ப நிலை :** ரூபா 27,910.00 + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்புடைய மாதாந்தக் கொடுப்பனவு, போனஸ் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்றிறன் அடிப்படையில் செலுத்தப்படும்.

**ஏனைய தகவல்கள்**

01. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான (EPF மற்றும் ETF) பங்களிப்பு
    அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் ஒன்றிணைந்த சம்பளத்தில் 10% மும், தொழில் வழங்குநரினால் 15% மும் பங்களிப்பு செய்யப்படும்.
    ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு செய்யப்படும்.
02. ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
03. போக்குவரத்துக் கொடுப்பனவு.
04. பின்வருவனவற்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    ஒரு மணித்தியாலத்திற்குள் பணியாற்றும் இடத்திற்கு நாளாந்தம் வரக்கூடியவர்கள், உயர்ந்த கணனி ஆற்றல் கொண்டவர்கள், இரு மொழிகளில் திறனுடையவர்கள், (சிங்களம் /ஆங்கிலம்)

**அனைத்து விண்ணப்பதாரர்களும் :**

அ. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ஆ. பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.
ஈ. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

முழுமையான சுயதரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை, கல்வித் தகைமைகள், சேவை அனுபவம் போன்ற இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் சகிதம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2024.04.26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**கவனிக்கவும் :** யாருடைய ஆதரவையும் பெற முயலுதல் தகைமையீனமாகக் கவனத்திற்கொள்ளப்படும்.

முழுமையற்ற, மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விருந்தோம்பல் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எங்களுடன் இணையுங்கள்!**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்,**
**இல. 78, காலி வீதி, கொழும்பு - 03.**
**பொதுவான விசாரணை: 011 – 2208300 நீடிப்பு 303/372**
**மேலதிக விபரங்களுக்கு: www.slithm.edu.lk**



**ஒரு பாதுகாப்பான இறக்கையின் கீழ் வளருங்கள்**

உலகளாவிய விருந்தோம்பல் கல்வியில் உள்நாட்டு வர்த்தக நாமம்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

**01. விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர் (AR 1 வகுதி)**

விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாக் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் நீங்கள் ஆர்வமாக உள்ளீர்களா? அடுத்த தலைமுறை தொழில்துறை தலைவர்களுக்கு கற்பிக்கும் மற்றும் ஊக்கமளிக்கும் திறமை உங்களுக்கு இருக்கிறதா? இனிமேலும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம் - இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) உங்களைப் போன்ற ஆற்றல்மிக்க நபர்களை எங்கள் மதிப்பிற்குரிய ஆசிரிய பீடத்தில் இணைய அழைப்பு விடுக்கிறது!

**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?**

- **மதிப்புமிக்க நிறுவனம்:** சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவக் கல்வியில் சிறந்து விளங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையின் முதன்மையான நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருத்தல்.
- **பயனுள்ள வேலை:** ஆர்வமுள்ள நிபுணர்களுக்கு உங்கள் அறிவையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதன் மூலம் விருந்தோம்பல் துறையின் எதிர்காலத்தை வடிவமைத்தல்.
- **புத்தாக்க நிலையம்:** துடிப்பான கற்றல் சூழலில் பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் குழுவுடன் இணைந்து பணியாற்றுதல்.
- **எழுச்சியூட்டும் அமைப்பு:** சுற்றியுள்ள பரவசமடையக்கூடிய இயற்கை காட்சிகள் மற்றும் வளமான கலாசார பாரம்பரியம் சகிதம் பிரம்மிக்க வைக்கும் இலங்கையின் இதய மையத்தில் வேலை செய்யுங்கள்.

**நாம் எதைத் தேடுகின்றோம்?**

- அனுபவம் வாய்ந்த கல்வியாளர்கள்: எங்கள் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கு உங்கள் கற்பித்தல் திறன் மற்றும் தொழில்துறை நுண்ணறிவுகளை கொண்டு வாருங்கள்.
- பொருள்வள வல்லுநர்கள்: அது ஹோட்டல் முகாமைத்துவம், சுற்றுலா சந்தைப்படுத்தல், சமையல் கலைகள் அல்லது விருந்தோம்பல் நிதி என எதுவாக இருந்தாலும், அனைத்து துறைகளிலும் உள்ள நிபுணர்களை நாங்கள் வரவேற்கிறோம்.
- ஊக்கமளிக்கும் வழிகாட்டிகள்: மாணவர்களை அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் முயற்சிகளில் சிறந்து விளங்க ஊக்குவிக்கவும், வழிகாட்டவும் மற்றும் அறிவுரை வழங்கவும்.
- உலகளாவிய கண்ணோட்டங்கள்: எங்கள் மாணவர்களுக்கான கற்றல் அனுபவத்தை வளப்படுத்த பன்முகத்தன்மை மற்றும் சர்வதேச முன்னோக்குகளை தழுவுங்கள்.

| ஒழுக்கமுறை | பதவிகள் | SLITHM அமைவிடங்கள் |
|---|---|---|
| தொழில்சார் சமையல் | 01 | கண்டி |
| பயணம் மற்றும் சுற்றுலா | 01 | கொழும்பு |
| உணவு மற்றும் பானங்கள் | 02 | அநுராதபுரம், கொழும்பு |

**விண்ணப்பதாரரின் தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் சிறப்புப் பட்டம் / மொழி பட்டம் (ஆங்கில மொழியில் விசேடத்துவம்)
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் பொதுப் பட்டம் / மொழி பட்டம் (ஆங்கில மொழியில் விசேடத்துவம்) அத்துடன் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா.
3. தொழில்சார் சமையலில் விசேடத்துவம் / உணவு மற்றும் பானம் / முன்னரங்கு இயக்கம் / ஹோட்டல் ஹவுஸ் கீப்பிங் சகிதம் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தின் முழுமையான பட்டம்.

   மற்றும்

   மூன்று நட்சத்திரம் அல்லது அதற்கு மேற்பட்ட வகைப்படுத்தப்பட்ட ஹோட்டலில் நிறைவேற்றுத் தரத்தில் தகைமைக்குப் பின்னரான 02 வருட கால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது:**

22 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

இதில் உங்களுக்கு என்ன கிடைக்கின்றது,

**சம்பள அளவு :** AR-1- 2016 ரூபா **[53,150/- - 10 x 1,375 – 15 x 1,910 - 95,550]**

**ஆரம்ப நிலை :** ரூபா 53,150.00 + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்புடைய மாதாந்தக் கொடுப்பனவு

போனஸ் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்றிறன் அடிப்படையில் செலுத்தப்படும்.

**ஏனைய தகவல்கள்:**

01. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான (EPF மற்றும் ETF) பங்களிப்பு
    அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் ஒன்றிணைந்த சம்பளத்தில் 10% மும், தொழில் வழங்குநரினால் 15% மும் பங்களிப்பு செய்யப்படும்.
    ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு செய்யப்படும்.
02. ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
03. போக்குவரத்துக் கொடுப்பனவு.
04. ஒரு மணித்தியாலத்திற்குள் பணியாற்றும் இடத்திற்கு நாளாந்தம் வரக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்:**

அ. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ஆ. பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.
ஈ. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

முழுமையான சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை, கல்வித் தகைமைகள், சேவை அனுபவம் போன்ற இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் சகிதம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2024.04.26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**கவனிக்கவும்:** யாருடைய ஆதரவையும் பெற முயலுதல் தகைமையீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற, மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விருந்தோம்பல் கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் எங்களுடன் இணையுங்கள்!**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்,**
**இல. 78, காலி வீதி, கொழும்பு - 03.**
**பொதுவான விசாரணை : 011-2208300 நீடிப்பு 303/372**
**மேலதிக விபரங்களுக்கு : www.slithm.edu.lk**

# கண்டியில் விசேட இப்தார்










கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் வரலாற்றில் முதல் தடவையாக நடைபெற்ற இப்தார் விசேட வைபவம் கண்டி லேக் வீதியில் அமைந்துள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் உயர்ஸ்தானிகர் டொக்டர் எஸ் ஆதிரா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மௌலவி பஸ்லுர் ரஹ்மான் மார்க்கச் சொற்பொழிவை ஆற்றியதோடு நோன்பு திறக்கின்ற அதானையும் துஆப் பிரார்த்தனையையும் மற்றும் மஹ்ரிப் தொழுகையையும் நடத்தினார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் ஏ. பீர்முஹம்மது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**இக்பால் அலி**

# ஜெர்மனி தமிழ் வானவை கௌரவித்த மூன்று சாதனைப் பெண்கள்





ஜெர்மனியில் இருந்து இயங்கி வருகின்ற தமிழ் வான் அவையின் நிறுவனர் கௌரி சிவபாலன் (கௌசி) சர்வதேச ரீதியில் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிறுகளில் இலக்கியச் சந்திப்பு நிகழ்வுகளையும் இலக்கிய ஆளுமைகளுடன் கலந்துரையாடல்களையும் மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வுகளையும், ஆளுமைகளை இனம்கண்டு அவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளையும் மேற்கொண்டு வருகின்றார். இவரது இந்த தமிழ் வானவை தளத்துக்கு உலகளாவிய ரீதியில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கின்றது.

எமது நாட்டிலே இருக்கின்ற பிரசித்தி பெற்ற ஆளுமைகளை வாழும் போதே வாழ்த்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அவர்களை இனம் கண்டு அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் சாதித்த விடயங்களையும் அவர்கள் பெற்ற விருதுகளையும் இன்றைய சமூகத்துக்கும் குறிப்பாக இளையோர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ் வானவை மூலம் அவர்களை கௌரவப்படுத்தி சமூக வலைத்தளங்கள் மூலமாக வெளி உலகத்துக்கு தெரியப்படுத்தி வருகின்றார். அவருக்கு பலரும் பக்க பலமாக இருந்து செயல்படுகின்றார்கள். அந்த வகையில் கடந்த மாதம் 29ஆம் திகதி தமிழ் வானவை நடத்திய மகளிர்தின சிறப்பு நிகழ்ச்சியில், எமது நாட்டின் மூன்று சாதனைப் பெண்களுக்கு விருதுகள் கொடுத்து கௌரவித்தது.

கௌரவிக்கப்பட்ட மூன்று சாதனைப்பெண்களும் முறையே முனைவர் மனோன்மணி சண்முகதாஸுக்கு "பைந்தமிழ் ஔவை" என்ற விருது வழங்கப்பட்டது. பேராசிரியர் சித்திரலேகா மௌனகுருவுக்கு "பெண்ணிய செயல்வாதி" என்ற விருது வழங்கப்பட்டது. பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடிக்கு "செயலற்றுச் செம்மல்" என்ற விருது வழங்கப்பட்டது.

**கோவிலூர் செல்வராஜன்**
**இலண்டன்**
**தமிழ் வான் அவை**
**உறுப்பினர் ஜெர்மனி**

# யாழ். பல்கலைக்கழக ஆவணப்பட விழா

**நாளை திங்கட்கிழமை 2 மணிக்கு**




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் பத்து ஆவணப்படங்கள் நாளை 08ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் திரையிடப்படவுள்ளது. தமிழரின் பாரம்பரியமாக விளங்கும் தவில் இசைக்கருவியின் உருவாக்கமும் நுட்பமும் பற்றிய பதிவான 'தவில் கொட்டு', காரைநகரின் ஊரி கிராமப் பெண்கள் தமது சொந்தக் கால்களில் நின்று மீன்பிடித் தொழிலாற்றுவது பற்றிப் பேசும் 'அலைமகள்', தீயில் எரிந்து போன லயன் குடியிருப்புகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கிடைக்கும் எனக் காத்திருக்கும் மலையக மக்களின் துன்பங்களைப் பதிவுசெய்யும் 'தணல்', மட்டக்களப்பிலுள்ள வேப்பவெட்டுவானில் செங்கல் கைத்தொழில் தயாரிப்பு மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டும்; 'கல்வாடி', மலையகப் பெண்கள் மாதவிடாய்க் காலங்களிலும் மலைகளில் ஏறிக் கொழுந்து பறிப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி பேசும் 'கசிவு', தற்சார்பு வாழ்க்கை முறை ஊக்குவிப்புப் பற்றிச் சிலாகிக்கும் 'உயிர்மை', தமிழர் கட்டடமரபின் பொக்கிஷங்களில் ஒன்றைக் கால ஆவணப்படுத்தும் 'நாற்சார் வீடுகள்', கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் பணிச்சுமைகளை வெளிக்காட்டும்; 'காவலின் காயங்கள்', மலையக மக்களின் நில உரிமை பற்றிய சவால்களைப் பேசும் 'நிலம்', வயல்வெளிகளில் இராக்காவல் காக்கும் விவசாயிகளின் வாழ்வியலைப் பதிவுசெய்த 'உறங்கா விழிகள்' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த ஆவணப்படங்கள் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் எண்மியக் கதைசொல்லல் கற்றலின் பெறுதிகளாக அமைவதும், வருடந்தோறும் ஆவணப்படத் திரையிடலை ஊடகக் கற்கைகள் துறை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.



சுகாதார மேம்பாட்டிற்கான வைத்தியசாலையாக செயற்பட்டுவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்ட ஆரோக்கிய உணவகம் ஒன்று அண்மையில் வைபவ ரீதியாக முன்னாள் அமைச்சரும் தேசிய காங்கிரசின் தேசிய தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் ஏ எல். அதாவுல்லாவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலை அத்தியட்சகர் ரீ.எம்.எஸ் .ரீ. ரஜாப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லாஹ், இவ்வைத்தியசாலைக்கு ஆற்றிவரும் அரிய சேவைகளையிட்டு பொன்னாடை போர்த்தப்பட்டு ஞாபகார்த்த விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். வைத்திய நிபுணர் டாக்டர் ரிப்ஷான் ஜெமீல் அதாவுல்லாவுக்கு பொன்னாடை போர்த்தினார். வைத்தியசாலை குழுவின் தலைவர் பொறியியலாளர் வை..பீ. சமத் அன்னாருக்கு நினைவுப்பரிசு வழங்கினார். (படம்: எம்.எ.பகுர்டீன் அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# லண்டன் நகரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இப்தார்





லண்டன் நகரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பிரித்தானியாவில் கொஸ்மோஸ் என்ற இலங்கை முஸ்லிம் அமைப்பின் கூட்டமைப்புடன் இணைந்து இப்தார் நிகழ்வொன்றை அண்மையில் நடத்தியது.

பிரித்தானியாவின் வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் நுஸ்ரத் கனி விஷேட அதிதியாக கலந்து கொண்டார். இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகம உட்பட முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். ஹெரோ நகரிலுள்ள இலங்கை பள்ளிவாசலின் இமாம் ஷேக் தல்ஹா சித்திக், ரமழானின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார். கொஸ்மோஸ் அமைப்பின் தலைவர் சாகிர் நவாஸ் இப்தார் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு நன்றி தெரிவித்தார். பல இஸ்லாமிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



# தினகரன் ஊடகவியலாளர் தில்லைநாதனுக்கு விருது





ஊடகத் தூது மடல் இரண்டாவது வெளியீட்டு விழாவும். 'ஊடகவியல் கற்போம் தமிழ் கத்தோலிக்கச் செய்தி லங்கா இணைய யூரியூப் தள திறப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை யாழ். கொழும்புத்துறை பீச் றோட்டில் அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் ஊடகத்தூது மடலின் பிரதம ஆசிரியர் அருட்கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஊடகத் தூது விருது வழங்கலும் இடம்பெற்றது.

இதன் போது ஊடகத் துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் தினகரன் ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடகத் தூது மடலின் 2024ஆம் ஆண்டுக்கான ஊடகத் தூது விருது வழங்கப்பட்டதோடு முதல் பிரதியும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த ஊடகவியலாளரும் தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான வீரகத்தி தனபாலசிங்கம், மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார், ஒய்வுநிலை ஆசிரியர் சார்ள்ஸ் அரியகுமார் ஆகியோரும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டார்கள்.





கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்காரின் தலைமையில் கொலன்னாவ கொல பலகாய ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# கொழும்பு விவேகானந்தாவின் மகளிர்தின நிகழ்வும் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியும்

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பெண்கள் பிரிவினர் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடத்தும் மகளிர்தின நிகழ்வு இன்று ஏப்ரல் 07ஆம் திகதி காலை 9.30 முதல் நண்பகல் 12 மணி வரை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியான ஓல்கோட் மாவத்தை, மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் வேல்ராணி கார்த்திகேசுவும், சிறப்பு விருந்தினராக மனிதவள ஆலோசகர் ராஜீ ரவிச்சந்திரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அதன்பின்னர் பழைய மாணவர் சங்கத்தின் மகளிர் பிரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய வலைப் பந்தாட்டபோட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தகுதிபெற்ற Ice Storm அணியுடன் Griffindor அணியும் மூன்றாமிடத்துக்கான போட்டியில் அக்கினி சிறகுகள் அணியுடன் Dominant Divas அணியும் நேருக்கு நேர் மோதவுள்ளன. ஆண்டுதோறும் நடைபெறும் இந்நிகழ்வின் மூலம் கிடைக்கும் நிதி கல்லூரி மாணவர்களின் விளையாட்டு செயற்பாடுகளுக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் வழங்கப்படும் என பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

மகளிரை கௌரவிக்கும் இந்நிகழ்வுகளுக்கு விவேகானந்தாவின் பழைய மாணவ, மாணவிகள் வருகைதர வேண்டுமென பழைய மாணவர் சங்கம் கோருகின்றது.



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட காஸா சிறுவர்களுக்கு சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்தில் சேகரிக்கப்பட்ட.ஒரு தொகைப் பணம் அதிபர் எம்.எஸ்.எம்.சைபுதீன் தலைமையில் கல்முனை வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எச்.முகம்மட் ஜாபீரிடம் ஒப்படைக்கும் போது பிடிக்கப்பட்ட படம். கல்முனை வலய கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், ஆசிரியர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். படம் நன்பிட்டிமுனை தினகரன் நிருபர்



# படித்ததும் பகர்வதும் 186





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### இது பண்டிகைக் காலம்!



பல இனங்களைச் சேர்ந்த, பல மதங்களைப் பின் பற்றுகின்ற, பல மொழிகளைப் பேசுகின்ற, பலதரப்பட்ட மக்கள் ஒன்றாக வாழ்கின்ற அழகிய நாடு இலங்கை. இந்நாட்டில் இம்முறை மூன்று முக்கிய மதங்களைப் பின்பற்றுகின்றவர்களது பெருநாள் கொண்டாட்டங்கள் ஒரே வாரத்தில், அடுத்தடுத்த நாட்களில் வருவது அபூர்வமான, மகிழ்ச்சி மிக்க நிகழ்வாக அமைந்துள்ளது. சிங்கள, தமிழ் புத்தாண்டும், முஸ்லிம்களின் ரமழான் முடிவில் வருகின்ற 'ஈதுல்பித்ர்' நோன்புப் பெருநாள் கொண்டாட்டமும் இம்மாதம் 11, 12, 13ஆம் திகதிகளில் இடம் பெறுவதால் இலங்கையில் இம்மாத பண்டிகைக் கொண்டாட்டம் இரட்டிப்பு விசேடம் பெற்றதாக திகழ்கின்றது என்றால் மிகையல்ல.

சிங்கள, தமிழ் மக்கள் பொதுவான சூரிய கலண்டரை பின்பற்றுகின்ற அதேவேளை, முஸ்லிம்கள் பிறைக் கலண்டரையே பின்பற்றுவதால் இத்தகைய நிகழ்வு ஏற்படுகின்றது. பொதுவான கணக்கீட்டின் படி பார்க்கும் போது, 33 வருடங்களுக்கு ஒரு முறை இத்தகைய சிறப்பான நிகழ்வு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்களவர்கள், தமிழர்கள் மட்டுமன்றி சிங்களம் பேசுகின்ற பெரும்பாலான கிறிஸ்தவர்களும் கூட இலங்கையில் சிங்கள, தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களில் பங்குபற்றுவதால் இவ்வருட இப்பண்டிகைக் காலம் மேலும் சிறப்புப் பெறுகிறது.

உண்மையில் பல்லின மக்கள் ஒன்றாக வாழும் நாட்டில் பெரும்பாலான இனங்கள் ஒன்று சேர்ந்து பண்டிகைகளை கொண்டாடும் பொழுது ஒரு மகிழ்ச்சியான சூழல் உருவாவதோடு பரஸ்பர புரிந்துணர்வு வளர்ந்து சகவாழ்வு சிறக்க வழி ஏற்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தை ஒவ்வொருவரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

ஒருவருக்கொருவர் பண்டிகைக்கால வாழ்த்துக்களை தெரிவித்தல், இன, மத மொழி வேறுபாடின்றி ஒருவரை ஒருவர் நேரடியாக சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளல். பண்டிகைக்கால உணவுப் பொருட்களைப் பரிமாறிக் கொள்ளல், கூட்டாக பண்டிகைக்கால நிகழ்சிகளை ஒழுங்கு செய்தல், அவற்றில் அனைவரும் ஒற்றுமையோடு பங்கு பற்றி பங்களிப்பு செய்தல் போன்ற நல்ல வழிகளில் இத்தகைய கூட்டுப் பண்டிகை காலத்தை அர்த்தமுள்ளதாக ஆக்க முடியும்.

'வேற்றுமையில் ஒற்றுமை' கண்டு, பல்லினத்தில் இணக்கப்பாடு கொண்டு, கருத்து வேறுபாடுகளைக் களைந்து, அன்பு, நட்பு, பாசம் என்பவற்றை பகிர்ந்து, சகலரும் சந்தோசமாக சகவாழ்வுடன் வாழ திடசங்கற்பம் பூண்டு, அதற்காக இதயச்சுத்தியோடு செயல்படும் மனப் பக்குவம் அனைவருக்கும் ஏற்பட வேண்டும்.

தத்தமது பண்டிகைளை சிறப்பாக கொண்டாடி, ஒருவருக்கொருவர் புரிந்துணர்வை ஏற்படுத்தி, ஒற்றுமையை வளர்த்து, மகிழ்ச்சியோடு வாழ, இந்த பண்டிகைக் காலத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த பெருநாள் வாழ்த்துக்களை முன்கூட்டியே நிறைவாகத்தெரிவித்துக்கொள்கிறோம்.

அனைவருக்கும் இனிய, இதயம் நிறைந்த, மகிழ்ச்சியான, இனிக்கும் முன்கூட்டிய பெருநாள் நல் வாழ்த்துக்கள்!

## பிரிந்தார் பெருமை

### அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். இப்ராஹீம் மௌலவி



இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வாழ்ந்த மிகப் பிரபலமிக்க ஆளுமை அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். இப்ராஹீம் மௌலவி கடந்த மார்ச் 30 ஆம் திகதி (2024.03.30) தனது 87ஆவது அகவையில் இவ்வுலகைப் பிரிந்தார். மிகச் சிறந்த சமூக, சன்மார்க்கத் தலைவராக, அறிஞராக, சமூக சேவையாளராக, கல்வியியலாளராக திகழ்ந்து இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

ஸ்ரீலங்கா ஜமாத்தே இஸ்லாமி அமைப்பின் தலைவராக சுமார் 16 ஆண்டுகள் பணிபுரிந்துள்ள இவர், இலங்கை இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் (ISDB) புலமைப் பரிசில் திட்டத்தின் மாணவர் ஆலோசகர், சர்வதேச இஸ்லாமிய தொண்டு அமைப்பின் (ISCO) ஸ்தாபக உறுப்பினர், இஸ்லாமிய நாகரிகம் தொடர்பான பல்கலைக்கழக, தேசிய கல்விப் பாடத்திட்டங்களுக்கான பங்களிப்பாளர், ஜாமியா நளீமியா நிறுவனத்தின் ஆரம்ப பாடத்திட்ட குழு உறுப்பினர், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உப தலைவர், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிருவாக உறுப்பினர் என பல நிறுவனங்களிலும், அமைப்புகளிலும் இணைந்து பல்வேறு வகைப்பட்ட சேவைகளை செய்துள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் பெண்களுக்கான பிரபலமான கல்லூரியான ஆயிஷா சித்தீகா கல்லூரியினதும், சிங்கள மொழியிலான முதல் அரபுக் கல்லூரியான தன்வீர் அகடமியினதும் ஆரம்ப கர்த்தாவும் இவராவார். இதைத் தவிர மாதம்பை இஸ்லாஹியா அரபுக் கல்லூரி, புத்தளம் இஸ்லாஹியா மகளீர் கல்லூரி நிறுவனங்களையும் நிறுவுவதில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்.

இவரது பங்களிப்புகளில் மிகவும் பிரத்தியேமாக குறிப்பிடத்தக்க விடயம் அல்குர்ஆனுக்கு, உலகப் பிரசித்தி பெற்ற சன்மார்க்க அறிஞரான மௌலானா மௌதூதியினது 'தப்ஹீமுல் குர்ஆன்'எனும் விளக்க உரை நூல் தொகுதியை சிங்கள மொழியில் மொழிபெயர்த்து வெளியிடச் செய்ததாகும். இவரது தலைமையிலான குழு சுமார் 10 வருடங்கள் பாடுபட்டு 12 தொகுதிகளாக இதனை வெளியிட்டு வைத்தமை வரலாற்றுச் சாதனையாகும்.

முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு செயல்பட்ட இவர், 1970களின் இறுதிப் பகுதியில் அல்லது 1980களின் ஆரம்ப பகுதியில், காலஞ்சென்ற மசூத்ஆலிமோடு இணைந்து 'இத்திஹாதுல் முஸ்லிமீன்' எனும் சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தை உருவாக்குவதற்காக பாடுபட்டார். இதற்கென நாடெங்கிலும் விஜயம் செய்து பல முயற்சிகளை செய்தமையை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன். அக்காலப்பகுதியில் காலஞ் சென்ற ரூஹுள் ஹக் மௌலவியுடன் இணைந்து எங்களது ஊருக்கு விஜயம் செய்தார். எங்கள் வீட்டுக்கு வருகை தந்ததிலிருந்தே அவருடனான எனது தொடர்பு ஆரம்பமானது.

1986இல் நான் கொழும்பு வந்ததிலிருந்து அவரோடு பல்வேறு சமூக, சமய பணிகளில் இணைந்து செயற்படக் கிடைத்தமையால் எமது நட்பு மேலும் நெருக்கமானது. இது நான் பெற்ற பாக்கியமாகும்.

அரபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் என பல மொழிகளில் சரளமாக பேசும் வல்லமை பெற்ற அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். இப்ராஹீம் மௌலவி சிறந்த எழுத்தாளருமாவார். ஸ்ரீலங்கா ஜமாத்தே இஸ்லாமியின் மாத இதழாக வெளி வந்த 'அல்ஹஸனாத்' சஞ்சிகையின் தலைமை ஆசிரியராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இவர் வழங்கிய பல நிகழ்ச்சிகள் மிகவும் பிரபலம் பெற்றவையாக திகழ்ந்தன.

ஆசிரியராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, மிகச் சிறந்த சொற்பொழிவாளராக, சகலரையும் கவர்ந்த சன்மார்க்கப் போதகராக, பல்வேறு அமைப்புகளின் தலைவராக, உறுப்பினராக, பல முக்கிய நிறுவனங்களை நிர்மாணிப்பதில்முன்னோடியாக என பல தளங்களில், பலவிதமான ஆளுமைகளில் மறக்க முடியாத அளப்பரிய சேவைகளை செய்துள்ள அஷ்ஷெய்க் ஏ. எல். எம். இப்ராஹீமின் மறைவு, எந்தவகையிலும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

எல்லாம் வல்ல இறைவன் அவரது நற்பணிகளை அங்கீகரித்து, மறு உலக வாழ்வை வெற்றியாக்கி, அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் மேலான சுவர்க்கத்தை வழங்கியருள்வானாக!

## நெஞ்சோடு நெஞ்சம்

### சிங்கள, தமிழ் புத்தாண்டு



சிங்கள, தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள் ஒன்றாக வருவது விசேடமானது. சிங்களப் புத்தாண்டு தமிழரின் பண்பாட்டில் இருந்தே தோன்றியது என்றும் கூறப்படுகிறது. இவ்விரு சாரார்களின் கொண்டாட்டங்களிலும், பல ஒற்றுமைகள் இருப்பதைக் காண முடிகிறது.

புத்தாண்டு பிறக்கப் போகிறது என்றதும் வீடுகளுக்கு சுண்ணாம்பு அடித்தல், வெள்ளை பூசுதல், வர்ணம் பூசுதல் எனக் குதூகலத்துடன்ஆரம்பிக்கின்றனர். புத்தாண்டுக்கு முதல் வீட்டை சுத்தம் செய்தல், சீர்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

புத்தாண்டு நிகழ்வுகளை பஞ்சாங்க நேரக்கணிப்பீட்டின் படியே தமிழர்கள் செய்வது வழக்கம். சிங்களவர்களும் அப்படியே செய்கின்றார்கள். 'பஞ்சாங்கம்' எனும் சொல், சிங்களவர்களால் "பஞ்சாங்க" என்று "ம்" எழுத்தின் ஒலிப்பின்றி பயன்படுத்துகின்றனர். இச்சொல்லுக்கு "லித்த" எனும் வேறு ஒரு சொல்லும் சிங்களவர்களின் வழக்கத்தில் உள்ளது.

தமிழர்களின் புத்தாண்டு உணவுகளில் பணியாரமும், வாழைப்பழமும் முதன்மை பெறுகின்றன. சிங்களவர்களிடமும் அவையே முக்கிய அங்கம் வகிக்கின்றன. புத்தாண்டுக்கு சில நாட்களுக்கு முன்பே வாழைக் குலைகளைப் பழுக்க வைக்கப்பதும், பணியாரம் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதும் பாரம்பரியமாக இடம்பெற்று வருகின்றன.

சுபநேரப்படியே காரியங்களை ஆரம்பித்தல், உறவினர்களைச் சந்தித்தல், பெரியோர்களிடம் ஆசீர்வாதம் பெறுதல், கை விசேசம் வழங்குதலும், பெறுதலும், பன்சல, கோவில்களுக்கு செல்லுதல் போன்ற பல விடயங்களை இப்பண்டிகைக் காலத்தில் சிங்களவர்களும், தமிழர்களுள் ஒரே விதத்திலேயே செய்வதை கவனிக்கக் கூடியதாக இருக்கிறது.

புத்தாண்டைக் கொண்டாட காத்திருக்கும் சிங்கள, தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் முன்கூட்டியே மகிழ்ச்சி பொங்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

### 'ஈதுல்பித்ர்' நோன்புப் பெருநாள்

இஸ்லாமிய மாதங்களில் ஒன்பதாவது மாதமான ரமழான் மாதம் முஸ்லிம்களுக்கு மிக முக்கிய மாதமாகும். இந்த மாதத்தில் தான் உலகப் பொதுமறை புனித அல்குர்ஆன் பூமிக்கு மனிதனின் வழிகாட்டியாக இறங்கியது. ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதும் உலகத்தின் சகல பாகங்களில் வாழும் முஸ்லிம்களும் அம்மாதம் முழுவதும் நோன்பிருப்பர்.



ஒரு முஸ்லிமுடைய புலனடக்கத்தையும், மனக் கட்டுப்பாட்டையும் உருவாக்கும் சிறந்த ஆன்மிகப் பயிற்சியாக இது உள்ளது. நோன்பின் அடிப்படை நோக்கம் வெறுமனே பசித்திருப்பதும் தாகித்திருப்பதுமல்ல.. இந்தப் பயிற்சியின் மூலம் இறையச்சத்தை தம்மில் வளர்த்துக்கொள்வதேயாகும்.இதனை அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது.

ரமழான் மாதத்தைத் தொடர்ந்து, ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறை தென்பட்டதும் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவர். ஒரு மாத காலமாக இறைவன் கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்து பசித்திருந்தும், தாகித்திருந்தும், புலன்களைக் கட்டுப்படுத்தியும் நோன்பு நோற்ற முஸ்லிம்கள் தமது கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சியை இப்பெருநாள் தினத்தன்று கொண்டாடுகின்றனர். இது ஈகைத்திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. தருமமே இத்தினத்தின் முக்கிய செயற்பாடாக உள்ளது..

'ஈதுல்பித்ர்' நோன்புப் பெருநாளைக் கொண்டாட தயாராகும் முஸ்லிம்கள் அனைவருக்கும் முன்கூட்டியே மகிழ்ச்சி பொங்கும் நோன்புப் பெருநாள் நல் வாழ்த்துக்கள்!

### கவிக் 'கடி'கள்

| | |
|---|---|
| கொட்டும் மழையில் | விழுகின்றன |
| குடை விரித்தும் | பனிப்பொழிவு |
| நனைகின்றன | |
| காளான்கள் | குளிர்காலம் |
| | காடுகள் மூடி |
| மழைத் தூறல் | கிடக்கின்றன |
| காற்றோடு நாசிக்குள் | மூடுபனி |
| நுழைகின்றன | |
| மண் வாசனை | கோடைக் காலம் |
| | பாதை ஈரமாக |
| வெண்ணிற மேகம் | கிடக்கின்றது |
| உறைந்து துகள்களாய் | கானல்நீர் |

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு

### செந்தமிழ் அது தேன் தமிழ்



சமூக ஊடகங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கில சொற்களுக்கு இணையாக சிலரால் பயன்படுத்தப்படும் தமிழ் சொற்கள்.

### பொன் மொழி அது பொய்யா மொழி
### நாவு நல்லதாகட்டும்!

❖ ஆயிரம் வார்த்தைகளை அன்பாகப் பேசும் நாவு தான், சிலவேளை உயிரைக் கொல்லும் அளவிற்கு கசப்பான வார்த்தைகளையும் பேசி விடும்.

❖ அதிக தீமைகளின் பக்கம் நம்மை அழைத்துச் செல்வதும் நாவு தான். பல உறவுகளைப் பிரிப்பதும் நாவு தான்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# நாற்பதாம் அகவை காணும் அலனுக்கு வாழ்த்துக்கள்!

புலம்பெயர் தமிழரும் டென்மார்க் நாட்டின் இளம் பொருளியல் நிபுணருமான அலன் தருமன், உலகின் முன்னணி பொறியியல், கட்டிடக்கலை நிறுவனமான ரம்போல் நிறுவனத்தின் குழு பொருளியல் வியூக இயக்குனராக ரம்போல் குழுமத்தில் பணிபுரிகின்றார்.

டென்மார்க் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பல்வேறு பங்களிப்பை நல்கிவரும் அலன் தருமன், அந்நாட்டு அரசாங்கத்தினதும், பல்வேறு உயர் பொருளாதார நிறுவனங்களினதும் ஆலோசகராக பணியாற்றி வருகிறார். இவர் பொருளியலிலும் அரசியல் விஞ்ஞானத்திலும் சிறப்பு முதுமாணி கற்கையை கொப்பன்கேகன் பல்கலைக்கழகத்திலும், பிரான்ஸ் இன்ஸ்சியாட் பல்கலைக்கழகத்தில் பொருளியல் மூலோபாய கற்கையையும், கொப்பன்கேகன் பிசினஸ் இனஸ்சிரூசனிலும் கற்களை நிறைவு செய்துள்ளமை சிறப்பாம்சமாகும்.

இவருடைய மதிநுட்பமான பொருளியல் அறிவை டெனிஸ் அரசாங்கம் சிறந்த முறையில் பயன்படுத்தி வருவது தமிழருக்கு கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகும். ஜி.இ.ஓ.பொருளாதார நிறுவனத்தின் ஸ்தாபகர், என்.என்.ஐ.ரி. நிறுவனத்தின் வியாபார, மூலோபாய இயக்குனர், இம்பிளிமென்ற் கவுன்சில் பொருளியல் கட்டமைப்பு ஆலோசகர் என பல துறைகளில் பணியாற்றிவரும் அலன் தருமன், புலம்பெயர் தமிழரும் டெனிஸ் இலக்கியத்தை தமிழுக்கு கொண்டுவந்தவருமான தருமன் தர்மகுலசிங்கத்தின் புதல்வராவார்.

சர்வதேச ரீதியில் பொறியியல், கட்டடக்கலையில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும் ஆலோசனை நிறுவனமாகவும் இயங்கிவரும் ரம்போல் நிறுவனம் 1945ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டில் நிறுவப்பட்டது. 35 நாடுகளுக்கு தன்னுடைய சேவையை விஸ்தரித்துள்ள ரம்போல் நிறுவனம், இலட்சக்கணக்கானவர்களுக்கு தொழிவாய்ப்புகளை வழங்கி வரும் ஒரு உலகளாவிய முன்னணி நிறுவனமாக திகழ்கிறது.

நிலையான சமூகங்களை உருவாக்குவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் உலகளாவிய அறிவுத் தளத்துடன் ஆழமான உள்ளூர் நுண்ணறிவு மற்றும் அனுபவத்தை உலகத்துடன் இணைத்து பயணிப்பதே இந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

நிபுணத்துவம், புதுமை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் நிலையான மாற்றத்திலிருந்து வரும் அபாயங்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்வதோடு தொழில்நுட்ப நிபுணத்துவம், டொமைன் அறிவு மற்றும் டிஜிட்டல் திறன்களை ஒன்றிணைப்பதன் மூலம் வாடிக்கையாளர்களை மேம்படுத்துவதற்கும், இயல்பாகவே நிலையானதாக இருக்கும் புதிய வணிக மாதிரிகளை உருவாக்குவதற்கும் ஆதரவளிக்கும் உலகளாவிய நிறுவனமாக ரம்போல் நிறுவனம் திகழ்கிறது.

அத்துடன் 17000 வல்லுநர்கள் ரம்போலின் செயல்பாட்டு மையத்தில் பணிபுரிவதுடன், கட்டடிடங்கள், போக்குவரத்து, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம், நீர், மேலாண்மை ஆலோசனை மற்றும் கட்டடக்கலை & நிலப்பரப்பு தொடர்பான விடயங்களுக்கு தீர்வுகளை வழங்குகின்றது.

மேலும், உலகளாவிய காலநிலை இலக்குகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் பரிஸ் உடன் படிக்கையுடன் இணைந்து தங்களுடைய சேவையை முன்னெடுக்கும் ஒரு நிறுவனமாகவும் திகழ்கிறது.



சாதனையாளர் பலருடைய வாழ்க்கை வரலாற்றை நாம் கவனித்துப் பார்த்தால், ஒரு பொதுப்பண்பு அதில் இழையோடுவதை அவதானிக்க முடியும்.

இவர்களில் அனேகமானவர்கள் தமது முப்பதாவது வயதிலேயே அருஞ்சாதனை படைத்துள்ளதைக் காணமுடியும். ஒரு மனிதனுடைய வாழ்வில் முப்பதாம் வயது முக்கியமானது.

இயேசுநாதர், புரட்சிக்கவிஞர் பாரதி ஆகியோரின் வாழ்க்கையே இப்போது எனது மனதில் தோன்றுகின்றது. இவர்கள் மறைந்த பின்னரும் இவர்களின் செல்வாக்கு பிரமிக்கத்தக்க வகையில் மனிதர்களை மாற்றியுள்ளது. இப்போதைக்கு இந்த இருவருமே எமக்குப் போதும்! அவசியமானால் கூகிளில் பிரபல சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துப் பார்க்கலாம்.

இதே வரிசையில் ஈழத்தமிழர் அலன் தருமகுலசிங்கத்தையும் நாம் வைத்துப் பார்ப்பதற்குத் துணியலாம் என நான் எண்ணுகின்றேன்

புலம்பெயர் ஈழத் தமிழரும், டென்மார்க் நாட்டின் இளம் பொருளியல் நிபுணருமான அலன் தருமகுலசிங்கம், 35 நாடுகளில் இயங்கிவரும் உலகின் முன்னணி பொறியியல், கட்டடக்கலை நிறுவனமான ரம்போல் நிறுவனத்தின் குழு பொருளியல் வியூக இயக்குனராக ரம்போல் குழுமத்தில் பணிபுரிகின்றார் என்ற சங்கதி ஈழத்தமிழரின் திறமைக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

இது மட்டுமன்று! டென்மார்க்கின் பொருளாதார வளர்ச்சியில் பல்வேறு பங்களிப்பை வழங்கிவரும் அலன் தருமன், அந்நாட்டு அரசாங்கத்தினதும், பல்வேறு உயர் பொருளாதார நிறுவனங்களிலும் ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார்.

கொப்பன்கேகன் பல்கலைக் கழகத்தில் பொருளியியலிலும், அரசியல் விஞ்ஞானத்திலும் சிறப்பு முதுமானி கற்கையையும், பிரான்ஸ் இன்சியாட் பல்கலைக் கழகத்தில் பொருளியல் மூலோபாய கற்கையையும் நிறைவு செய்துள்ளமை இவருடைய கல்வித் திறமையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு பல்துறைகளில் வெற்றிகரமாகச் செயற்பட்டுவரும் எமது அலனுக்கு மேலும்பல சாதனைகளைப் புரிவதற்கு சந்தர்ப்பங்கள் காத்துக் கிடக்கின்றன. மேலே குறிப்பிட்டவை யாவும் முப்பது வயதுச் சாதனைகள். அவருடைய நாற்பது வயதுக்குப் பின்னர் மேலும் பல சாதனைகளை அவர் ஆற்றுவார் என் நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

குறிப்பாக, எமது ஈழத்தமிழரின் புரையோடிப்போன பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அலன் போன்ற இளைய சந்ததியினரால்தான் முடியும் என்பது எனது கருத்து.

பொருளாதாரமே பெரும்பாலும் பல பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் என்பதை நாமறிவோம். தமது நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட யூத இனம் எவ்வாறு பல நாடுகளில் தம்மை வெற்றிகரமாக வேரூன்றிக் கொண்டதோ அவ்வாறே எமது இனமும் இன்று பல நாடுகளில் சிதறி வாழ்கின்றது. ஏராளமான வெற்றிகளையும் பெற்றுள்ளது. இங்கு வாழ்கின்ற அலன் போன்ற இளையோர் பலர் தத்தம் துறைகளில் நிபுணர்களாக விளங்குகின்றனர்.

இவர்கள் யாவரையும் இணைத்துக் கொண்டு, யூதர்கள் நிறுவியது போன்று ஒரு நிதிநிலையத்தை நாம் உருவாக்கிச் செயற்பட்டால் இலங்கையின் பொருளாதாரத்தில் எம்மால் செல்வாக்குச் செலுத்த முடியும்.

அன்றைய பிரச்சினைகள் இன்று மாற்றமடைந்துள்ளதை தற்போதைய தலைவர்கள் உணர்வதாகத் தெரியவில்லை. மூடிக்கொண்ட கதவுகளைத் திறப்பதற்கு அவர்கள் தம்மிடமுள்ள பழைய சாவிகளையே உபயோகிக்கின்றனர் போலத் தோன்றுகின்றது. கதவுகள் எப்போதுமே மூடிக்கொண்டு இருந்தால்தான் தமது வாழ்க்கையை வெற்றிகரமாகத் தொடரமுடியும் என்று அவர்கள் எண்ணுகின்றனரோ தெரியவில்லை.

இவர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையின்மையே எமது இனத்துக்கு கிடைத்த சாபம் எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

அலனுடைய சாதனைகளுக்கு அடித்தளமாக இருப்பது அவருடைய அன்புத் தந்தை தருமகுலசிங்கத்தின், தூரநோக்குச் சிந்தனைகளும், நேர்கொண்ட பார்வையும், பல்துறை ஆளுமையுமே என்பது உண்மை.

நானும் அவரும் நான் மேலே குறிப்பிட்ட விடயங்களையிட்டுப் பலமுறை பேசிக் கலந்துரையாடி இருக்கின்றோம். காலம் கனியும் என அவர் காத்திருக்கின்றார்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படுமென்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்கு. அதற்கு அலன் ஒரு அற்புதமான உதாரணம்!

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை

என்நோற்றான் கொல் எனும் சொல் என்றும் அவரே கூறியுள்ளர்.

தந்தையும் தனயனும் இணைந்து மேலும் பல சாதனைகளைப் புரிந்து, எமது ஈழத்தமிழர்களுக்குமே மாத்திரமன்றி, உலகெங்கும் வாழ்கின்ற ஏதிலிகளுக்கு உதவியாக வாழவேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றேன்!

நிலக்கிளி
பாலமனோகரன் பாறூம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 109

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | 11 | 12 | 13 | |
| 14 | 15 | | 16 | | 17 |
| 18 | | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | | 25 | | 26 |

பெயர் ..................................................
வகுப்பு ..................................................
தொலைபேசி இல ..................................................
பாடசாலை பெயர் ..................................................
வதிவிட முகவரி ..................................................
..................................................
.............................. ..........................................
மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மின்சாரத்தையும், வெப்பத்தையும் எளிதாகக் கடத்தக் கூடியதும், வன்மைத்தன்மையுடையதுமான (பாதரசம் தவிர்ந்தவை) பதார்த்தங்களின் பொதுப்பெயர் இது. இரும்பு, வெள்ளி, தங்கம், பித்தளை, செப்பு, நாகம் போன்றவையெல்லாம் இச்சொல்லினுள் அடங்குவன.
(8) மீனவர்கள் பயன்படுத்துகின்ற மீன்பிடி உபகரணங்களில் பிரதானமானது இது.
(10) கடுமையான குளிர்காலநிலை நிலவுகின்ற பிரதேசங்களில், குளிரில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக மக்கள் அணிகின்ற ஆடை இது. முன்னரெல்லாம் செம்மறி ஆடுகளின் உரோமங்களில் இருந்து இந்த ஆடை தயாரிக்கப்பட்டது. ஆனால் இன்று செயற்கையான இழைகளால் குளிருக்கான ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன.
(14) சூரியக் குடும்பத்தில் உள்ள கிரகங்களில், 'கவர்ச்சிகரமான கிரகம்' என்று வர்ணிக்கப்படுகின்ற கிரகம் இது. சூரியக் குடும்பத்தில் சூரியனிலிருந்து இக்கோள் ஆறாவதாக அமைந்துள்ளது. சூரியக் குடும்பத்தில் வியாழனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய கோள் இதுவாகும்.
(19) தளவுருக்களில் ஒழுங்கான வடிவம் கொண்டது இது. எண்ணிக்கையற்ற சமநீளமுள்ள சமச்சீர் அச்சுகள், பரிதி, மையப்புள்ளி கொண்ட உருவம். (தலைகீழான சொல்)
(23) மழை பெய்யாத, கடுமையான வரட்சி நிலவுகின்ற காலப்பகுதியைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) கருங்கல், மரம் போன்றவற்றில் செதுக்கல் வேலைப்பாட்டுக்கான உபகரணம் இது.
(3) விவசாயம் என்பதை இவ்வாறும் கூறலாம்.
(5) மணலும், மணல் சார்ந்த இடமுமான பிரதேசம் இது.
(8) புவியைச் சூழ்ந்து காணப்படுவது. கண்களால் பார்க்க முடியாவிடினும் அடர்த்தி, கனவளவு கொண்ட சடப்பொருள் இது. அசைந்தால் காற்று எனப் பொருள்படும்.
(10) காய் பழுத்த பின்னர் இப்பெயர் பெறுகின்றது.
(12) சிறுவர்கள் மாத்திரமன்றி, பெரியவர்களும் நூல் கட்டி, வானத்தில் பறக்கவிட்டு மகிழ்வது இது.
(14) இருவருக்கிடையில் அல்லது இருதரப்பினருக்கிடையில் ஏற்படுகின்ற மோதலை இவ்வாறு குறிப்பிடலாம்.
(17) உலகம் என்பதை இவ்வாறும் கூறலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 108

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அல்லி 04. விழி 07. எள் 10. உமி
12. கடை 15. மகன் 18. கொக்கு 23. விசா

**மேலிருந்து கீழ்**

01. அம்மி 03. எலி 05. ஆழி
08. மகள் 11. உலக்கை 13. சாக்கடை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 107

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ.என். ஸல்மா அப்ளல்**
தரம் 04A, மாறை/ வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை,
இல. 411, அழுத் வீதிய வெலிகம.

**2. எம்.ஏ.எம். அத்லான்**
தரம் 07, தி/ கிண்ணியா தேசிய பாடசாலை,
இல. 112, நகரசபை வீதி, கிண்ணியா.

**3. பத்ரியா ஜெஹான்**
தரம் 05B, கைரியா பெண்கள் பாடசாலை,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை.

**4. டி. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
இல. 100/1, உடையார் வீதி, காரைதீவு - 02

**5. ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

**6. எம்.எச்.எம் ஸைட்**
தரம் 05B, அல் ஹிலால் மத்திய கல்லூரி,
நீர்கொழும்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 109
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**ஈகை : வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து**

***தெளிவுரை :***
*வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது.*

## கவரிமான்



**"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்"** என்கிறார் திருவள்ளுவர் (969ஆம் குறள்)

கவரிமான் மயிர் உதிர்ந்தால் தற்கொலை செய்து கொள்ளும்.

அதேபோல், மானம் மிக்கவர்கள், தம் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டால் தற்கொலை செய்து கொள்வார்கள் என்பது பொதுவாக இந்தக் குறளுக்குக் கூறப்படும் விளக்கம்.

ஆனால், இப்படி ஒரு மான் இருப்பது பற்றி அறிவியல் புத்தகங்களில் இல்லையே? குழப்பமாக இருக்கிறது அல்லவா? அந்தக் குறளைக் கவனமாகப் பாருங்கள். அதில் சொல்லப்பட்டு இருப்பது கவரி மான் அல்ல, கவரி மா! ஆம். கவரி மா என்று ஒரு விலங்கு இருக்கிறது.

அதைத்தான் நம் மக்கள் கவரி மான் என்று கூறுகின்றனர். இமயமலைப் பகுதியில் வாழும் இந்த விலங்கைதான் வள்ளுவர் சொன்னது. முடி சடை போல தொங்கக் கூடிய விலங்குதான் கவரிமா. இந்த முடியை வெட்டி எடுத்து செயற்கை முடி உருவாக்குவது வழக்கம். 'கவரி' என்பதில் இருந்துதான் சவரி முடி என்ற இன்றைய சொல் உருவானது. மா என்பது விலங்குகளுக்கு உரிய பொதுவான சொல். அப்படியென்றால், இந்தக் குறளுக்குப் பொருள் என்ன? பனிப் பகுதியில் வாழும் கவரிமாவுக்கு, அதன் முடி கடுங்குளிரில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது. அதன் முடி நோயினால் உதிர்ந்தாலோ, மனிதர்களால் வெட்டப்பட்டாலோ, குளிரினால் இறந்து விடும்.

அதேபோல், சில மனிதர்கள், அவர்கள் பெருமைக்கு இழுக்கு நேர்ந்து விட்டால், அவர்கள் வாழ்வது அரியதாகி விடும். எனவே, குறள் சொல்வதில் தவறு இல்லை.

ஆனால் 'கவரிமா' வைக் கவரிமான் எனப் புரிந்து கொள்வது தான் தவறு.

## இவ்வார மழலை



இளங்கோ தமிழ்ப்பிரியன்
கமல் – மேனகா

## அறியாததை அறிவோம்

1. கிறிஸ்தவ ஆலயங்களில் முதன் முதலில் மெழுகுவர்த்திகளை ஏற்றி வணங்கும் முறை ஜெர்மனியில் தான் தோன்றியது. இந்நாட்டு மக்கள் முதன் முதலாக கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு தினத்தன்று மெழுகுவர்த்தி ஏற்றி தேவாலயங்களில் வணங்கினர். பின்னர் அதுவே எப்போது தேவாலயம் சென்றாலும் மெழுகுவர்த்தி கொண்டு செல்லும் பழக்கமாக உலகம் முழுதும் மாறி விட்டது.
2. நாடுகளின் முதல் செயற்கைக் கோள்கள்
அமெரிக்கா - எக்ஸ்ப்ளோரர்
ரஷ்யா - ஸ்புட்னிக் 1
ஜப்பான் - ஓசுமி
சீனா - ஸிஸோம் I
பிரான்ஸ் - A I
3. முதன் முதலாக தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட பொருள் - சிலுவை
4. ராணி எலிசபத் தான் முதலில் சட்டைக்கு கொலர் வைத்து அணிந்து கொண்டவர். அதன் பிறகே, ஆண்களின் சட்டைக்கான கொலர் உருவானது.
5. மனிதன் விண்வெளிக்குச் செல்லலாம் என முதன் முதலில் கூறி அதற்கான தத்துவங்களை உள்ளடக்கி நூலாக எழுதியவர் சேர் ஐசக் நியூட்டன்.
6. தீயதைப் பார்க்காதே, கேட்காதே, பேசாதே என உணர்த்தும் மூன்று குரங்குகள் புகழ்ப் பெற்றவை. அவை ஜப்பான் நாட்டின் நிக்கோ என்ற புத்தர் கோயிலின் ஓவியங்களாகும். அதைத்தான் பொம்மைகளாக விற்பனை செய்கின்றனர். அவ் ஓவியத்தினை ஹிதாரி ஜிஸ்கோ என்ற ஓவியர் வரைந்துள்ளார். அந்தக் குரங்குகளுக்கு மிஜாடு, சிகஜாடு, இவஜாடு என ஜப்பானில் பெயர்கள் உண்டு.

கு. அவினாஷ் - வத்தளை

## சிறுவர் சித்திரங்கள்





க. கிஷாலன்
தரம் - 09, லசாலி ஆங்கில பாடசாலை, கொழும்பு 13

## மழையே வா

மழையே மழையே வா! வா!
மண்ணில் பொலிவைத் தா! தா!
செழித்த பயிர்கள் விளைந்திடவே
சீராய் மழையே வா! வா!

வளமும் நலமும் சேர்ந்திடவே
விளைந்து மழையே வா! வா!
உழவர் ஏக்கம் போக்கிடவே
உயிர்களை காத்திட வா! வா!

மனது குளிரவே வா! வா!
வரட்சி போக்கிடவே வா!வா!
வாட்டம் நீக்கிடவே வா! வா!
பஞ்சம் அகலவே வா! வா!

தவிக்கும் வெம்மை தணிந்திடவே
நயமாய் மழையே வா! வா!
பகைமை வறுமை பறந்திடவே
பாரோர் போற்றிட வா! வா!

கவிச்சுடர்
கல்லொளுவை பாரிஸ்



## ஐஸ்கிரீம் கோன்

கோன் ஐஸ் வாங்கி, அதிலிருக்கும் ஐஸ்கிரீமை அடுத்தவருக்குக் கொடுத்துவிட்டு அந்த வேஃபர் கோனை மட்டும் சாப்பிடும் பழக்கம் நம்மில் அதிகமானோருக்கு இருக்கிறது.

அந்த கோன் எப்படி அறிமுகமானது என தெரியுமா? Italo Marchion என்பவரால் 1896ஆம் ஆண்டு நியூயோர்க்கில் ஐஸ்கிரீம் கோன் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கான உரிமையை 1903ஆம் ஆண்டு அவர் பெற்றார். ஆனாலும் ஐஸ்கிரீம் கோன் அறிமுகமானது வேறொரு இடத்தில்.

1904ஆம் ஆண்டு அமெரிக்காவின் செயிண்ட் லூயிஸ் நகரில் நடந்த பொருட்காட்சியில் ஐஸ்கிரீம் கடை ஒன்று மிக அதிகமாக ஐஸ்கிரீம்களை விற்றுத் தீர்த்தது. ஒரு கட்டத்தில் ஐஸ்கிரீமை வைத்துக் கொடுக்க தட்டுகள் தீர்ந்து போன நிலையில், பக்கத்துக் கடையில் இருந்த Hamwi என்பவர் உதவிக்கு வந்தார். அவர் வேஃபர் போன்ற பிஸ்கட்டுகளைச் செய்து விற்றுக்கொண்டிருந்தார்.

ஐஸ்கிரீம் கடை அளவிற்கு அவர் கடையில் கூட்டமில்லை. ஐஸ்கிரீம் கடைக்காரரின் பிரச்சினையைப் புரிந்துகொண்ட அம்மனிதர், தன் பிஸ்கட்டுகளை கோன் வடிவில் செய்து அதில் ஐஸ்கிரீம்களை வைத்துக் கொடுக்கச் சொன்னார். அந்த ஐடியா வேலை செய்ய, அன்றிலிருந்து பிரபலமானதுதான் ஐஸ்கிரீம் கோன்.



## செய்து பாருங்கள்





# தொலைபேசி – கணினி திரைகளுக்குள் மறைக்கப்பட்டிருக்கும் பாரம்பரிய விளையாட்டுக்கள்



**ஊதித் தள்ளு**
மூச்சு மண்டலம் வலுப்பெறும் செரிமான சிக்கல் குறையும். சிக்கலை கையாளும் மதி கூடும். பொறுப்பும் புரிந்துணர்வும் கூடும்.

பாரம்பரிய விளையாட்டுக்கள் சிறுவர்களின் உடல் உள உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. ஆனால், இன்றைய நவீன உலகில் கணினி, கையடக்க தொலைபேசி திரைகளால் இவ்விளையாட்டுக்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன.

அதேவேளை சமூக வலைதளங்கள், திரைபடங்கள், தொலைக்காட்சிகள், குறிப்பாக தொலைபேசிகள் நமது வருங்கால சந்ததியினரை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. முன்னர் பாடசாலைகளில் விளையாட்டிற்கு என்று சில மணி நேரம் ஒதுக்கி, பழமையான விளையாட்டுகளை கற்று கொடுப்பார்கள். நவீன காலத்தில் பாரம்பரிய விளையாட்டுக்கள் மெல்ல மெல்ல அழிந்து வருகின்றன.

முன்பு கிராமத்தில் தெருக்களில் சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக கூடி விளையாடிக் கொண்டிருப்பார்கள். தற்போது கைத்தொலைப்பேசிகளுக்கு அதிக நேரத்தை விரையமாக்கும் மாணவர்கள் விளையாட்டை மறந்து போகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு விளையாட்டை பற்றி சிந்திப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. அவர்களின் திறமைகள் அனைத்தும் தொலைப்பேசிக்குள் முடங்கி விடுகின்றன.



**கயிறிழுத்தல்**
விடாமுயற்சி, தன்னம்பிக்கை கூடும். குழு மனப்பான்மை வளரும். உடல் உறுப்புகள் வலுப்பெறும். கால்களின் நிலைத்தன்மை கூடும்.



**கிட்டிப்புள்**
குறித்திறன் அதிகரிக்கும். அளவீட்டு கணிதமுறை விளங்கும். ஆபத்து காலத்தில் உதவியாகும். கைகள் வலுப்பெறும்.



**கட்டைக்கால்**
கைகள் வலுப்பெறும். கால்கள் நெகிழ்வுத்தன்மை பெறும். முழு உடலும் ஒருங்கே செயல்படும். கழுத்து வலுப்பெறும்

இன்றைய தலைமுறையினரில் பாரம்பரிய விளையாட்டுக்கள் என்றாலே என்ன என்று கூட தெரியாத சிலர் இருக்கின்றனர். விளையாட்டுக்கள் வீட்டில் விளையாடுவது, வீட்டிற்கு வெளியே விளையாடுவது என 2 பிரிவாக உள்ளது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான ஆடுபுலிஆட்டம், ஜல்லிக்கட்டு, உறியடி, வழுக்கு மரம், சிலம்பாட்டம், பச்சை குதிரை, வண்டிப்பந்தயம், கபடி, திருடன் பொலீஸ், பல்லாங்குழி, தாயம், சில்லுக்கோடு, பாண்டி, கண்ணா மூச்சி, பூப்பறிக்க வருகிறோம், நொண்டி, ஊதித் தள்ளு, கயிறிழுத்தல், கிட்டிப்புல், அச்சாங்கல் போன்ற விளையாட்டுகளும் சிறுவர், சிறுமியர்கள், இளைஞர்களால் விளையாடப்பட்டன.

இதுபோன்ற சுவாரஸ்யமான விளையாட்டுகளை இன்று கிராமங்களில் பார்க்க முடிவதில்லை. சிறுவர்களின் உலகத்தை தற்போது கார்டூன் தொலைபேசிகளும் வீடியோ விளையாட்டுக்களும் ஆட்டிப்படைத்து கொண்டிருக்கின்றன.

அழிந்து வரும் பாரம்பரிய விளையாட்டுக்களை பற்றி வருங்கால தலைமுறைகள் தெரிந்து திட்டங்கள் வகுக்க வேண்டியது எமது தார்மீக கடமையாகும்.



**அச்சாங்கல்**
கண் திறன் கூர்மையடையும். செயல் வேகம் அதிகரிக்கும். மூச்சுவிடாமல் பாடல் பாட இயலும். எண்ணிக்கை எளிதாக விளங்கும்.



**பல்லாங்குழி**
இருக்கும் இடத்தில் இருந்து எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணம் வளரும்.

# மஞ்சரி விளையாட்டு



# ரோஹித்தும் பாண்டியாவும்



சொந்த நாட்டில் இப்படி அவமானப்படுவோம் என்று ஹார்திக் பாண்டியா ஒரு போதும் நினைத்திருக்கமாட்டார். இந்திய பிரீமியர் லீக் தொடர் ஆரம்பித்து மும்பை இந்தியன்ஸ் அணி அடுத்தடுத்து தோல்விகளை சந்திக்கும்போது பாண்டியாவுக்கு அரங்கில் இருக்கும் ரசிகர்களின் கேலிகளும், கூச்சல்களும் அதிகரித்திருக்கின்றன.

மும்பாய் இந்தியன்ஸின் ஆஸ்தான தலைவராக இருந்த ரோஹித் ஷர்மாவிடம் இருந்து தலைமை பொறுப்பை ஏற்றது தொடக்கம் பண்டியா மீதே எல்லோரது கண்களும் திரும்பியிருக்கிறது. ரோஹித்துக்கு என்றே மும்பையில் ரசிகர் பட்டாளம் ஒன்றே இருக்கும்போது அரங்கில் அவர்களுக்கு தொந்தரவு பொறுக்க முடியவில்லை.

மும்பை இந்தியன்ஸுக்கு ரோஹித் ஐந்து முறை சம்பியன் கிண்ணத்தை வென்று கொடுத்திருக்கிறார். கடந்த மாதம் ஐ.பி.எல் பருவம் ஆரம்பிக்கும் முன்னர் வரை இந்திய அணியில் அனைத்து வகை கிரிக்கெட்டுக்கும் ரோஹித்தான் தலைவராக இருந்தார்.

ஆனால் குஜாரத் அணியில் இருந்து வந்த சகலதுறை வீரர் பாண்டியாவிடம் தலைமைப் பொறுப்பை தூக்கிக் கொடுத்தது ரோஹித் வாதிகளுக்கு சகிக்க முடியவில்லை.

இத்தனைக்கும் பாண்டியா மும்பை அணிக்கு புதியவரல்ல. 2015 தொடக்கம் 2021 வரை அந்த அணி ரோஹித் தலைமையில் நான்கு சம்பியன் கிண்ணங்களை வென்றபோது அணியில் இருந்தவர்தான். பின்னர் 2022 இல் அவரை மும்பை விடுவித்தபோது புதிதாக வந்த குஜராத் டைட்டன்ஸ் அள்ளிக்கொண்டது. அவரின் தலைமையில் அந்த ஆண்டு கிண்ணத்தை வென்ற குஜராத் கடந்த ஆண்டு இறுதிப் போட்டி வரை முன்னேறி சென்னையிடம் தோற்றது.

இப்பேர்ப்பட்ட பெருமையுடன் மீண்டும் மும்பைக்கு திரும்பி தலைமை ஏற்ற முதல் மூன்று போட்டிகளிலும் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்தது நிலைமையை மேலும் மோசமாக்கி இருக்கிறது. அரங்கில் இருக்கும் மும்பை ரசிகர்களே பாண்டியாவை நோக்கி கூச்சலிடுவது இம்முறை ஐ.பி.எல். இல் விசித்திரமான காட்சி. ஒரு சந்தர்ப்பத்தில் மைதானத்திற்கு நாய் ஒன்று புகுந்தபோதும் அதற்கு ரசிகர்கள் பாண்டியா... பாண்டியா... என்று கூச்சலிட்டது இதன் உச்சம்.

அதிலும் கடந்த திங்கட்கிழமை (01) மும்பை தனது சொந்த மைதானமான வான்கடேவில் களமிறங்கியபோது நிலைமை மேலும் மோசமாக இருந்தது.

ஆனால் சென்னை அணியின் நிலைமை இதற்கு முழுவதும் முரணாக இருந்தது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினால் அதன் தலைவர் மஹேந்திர சிங் தோனியை கொண்டாடுவது போல் வேறு எவரும் கொண்டாடுப்படுவதில்லை என்பது தான் உண்மை. 'தல' தோனி என்று ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படுவதும் அணித் தலைவர் என்பதற்கு அப்பால் அவர் தலைக்கு மேல் வைத்து கொண்டாடப்படுவதும் ஐ.பி.எல். தொடங்கிய காலத்தில் இருந்து நடக்கும் ஒன்று.

அப்பேர்ப்பட்ட தோனியை தலைமைப் பதவியில் இருந்து நீக்கிய சென்னை அணி ருதுராஜ் காய்க்வார்டை புதிய தலைவராக திடீரென்று அறிவித்தது. ஆனால் ரசிகர்களிடம் எந்த சலசலப்பும் இருக்கவில்லை. அவர்கள் தோனியை கொண்டாடுவதை நிறுத்தவும் இல்லை.

ஆனால் பாண்டியாவுக்கு கிடைத்த வரவேற்பு என்பது முற்றிலும் முரணானது.

குஜராத் டைடன்ஸ் அணியில் இருந்து 1.8 மில்லியன் டொலருக்கு மும்பை அணியால் வாங்கப்பட்ட பாண்டியா, வந்த விரைவிலேயே தலைவராக உயர்த்தப்பட்டார். அதனை ரோஹித் ரசிகர்கள் ஏற்பதாக இல்லை.

ரோஹித் என்பவர் மும்பை அணியை பொறுத்தவரை இன்றியமையாதவர். 2013 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங்கிடம் இருந்து தலைமை பதவியை ஏற்ற அவரின் கீழ் மும்பை இந்தியன்ஸ் அணி ஐந்து முறை ஐ.பி.எல். பட்டத்தை வென்றது.

இந்த நிலையில் பாண்டியா தலைமை பொறுப்பை ஏற்றது ஒரு பக்கம் ரசிகர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியதோடு அந்த அணி முதல் மூன்று போட்டிகளிலும் தொடர்ந்து தோல்வியை சந்தித்தது அந்த கோபத்தை மேலும் அதிகரித்தது.

குஜராத் டைட்டன்ஸ் உடனான தோல்வியுடன் இம்முறை ஐ.பி.எல். இனை ஆரம்பித்த மும்பை, பின்னர் சன்ரைசஸ் ஹைதராபாத் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியிடம் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்தது.

அதிலும் ராஜஸ்தான் றோயல் அணியுடன் சொந்த மைதானத்தில் நடந்த போட்டியின்போது ரசிகர்கள் பாண்டியாவை பார்த்து கூச்சிலிட, அறிவிப்பாளராக செயற்படும் முன்னாள் வீரர் சஞ்சே மஞ்ரேகர் 'ஒழுக்கமாக நடக்கும்படி' கூற வேண்டியதாயிற்று.

ஆனால் ரசிகர்களின் கூச்சல் நிட்கவில்லை. ஒரு கட்டத்தில் நிறுத்தும்படி ரோஹித் செய்கை செய்ய வேண்டியதாயிற்று.

இந்திய டி20 அணியின் அடுத்த தலைவராக வருவார் என்று எதிர்பார்க்கப்படும் இந்திய ரசிகர்களால் பெரிதும் கொண்டாடப்படும் 30 வயதான பாண்டியா கூட, 'அன்று இரவு கடினமாகத்தான் இருந்தது' என்கிறார்.

எப்போதும் எதிரணிக்கு சவாலான வீரராக இருக்கும் பாண்டியா மும்பை அணியில் தனது முதல் வெற்றியை எதிர்பார்த்திருக்கிறார். மும்பை அணி இப்போது ஐ.பி.எல். புள்ளிப் பட்டியலில் பத்து அணிகளில் பத்தாவது இடத்தில் இருக்கிறது.

முந்தைய போட்டியில் ரசிகர்கள், ரோஹித் கோசம் எழுப்ப மும்பை பந்துவீச்சாளர்கள் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிக்கு 277 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தது. இது ஐ.பி.எல். வரலாற்றில் அதிகூடிய ஓட்டங்களாகவும் இருந்தது.

ஐ.பி.எல். வர வர குறுகிய குலமரபை பெற்று வருவதாக மூத்த கிரிக்கெட் வர்ணனையாளரான ஹர்ஷா போக்லே, 'கிரிக்கின்போ' இணையதளத்திற்கு குறிப்பிட்டிருக்கிறார். 'அதிக போட்டித் தன்மை ஏற்பட்டு வருவதோடு அதில் மேலும் பலர் உள்வாங்கப்படுகிறார்கள்' என்கிறார்.

ராஜஸ்தான் அணிக்கு ஆடும் இந்திய சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்தர் அஷ்வின், ரசிகர்கள் அமைதி காக்க வேண்டும் என்கிறார்.



'இந்த வீரர் எந்த நாட்டை பிரதிநிதித்துவம் செய்கிறார் என்பதை மக்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். இது எமது நாடு' என்று அஷ்வின் தனது யூடியுப் பக்கத்தில் குறிப்பிடுகிறார். 'ரசிகர்களின் மோதல் என்பது இத்தனை அசிங்கமான வகையில் இருக்கக் கூடாது' என்கிறார்.

இந்திய அணி கடந்த காலத்தில் சச்சின் டெண்டுல்கர், சவ்ரவ் கங்குலி மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோர் தலைமையில் அந்த ஒவ்வொரு வீரர்கள் ஆடிய கடந்த காலத்தை பற்றியும் அஷ்வின் ஞாபகமூட்டுகிறார்.

'சவ்ரவ் கங்குலி, சச்சின் டெண்டுல்கர் தலைமையில் ஆடியதோடு அதற்கு நேர்மறையாகவும் நடந்தது. இந்த இருவரும் ராகுல் டிராவிட்டின் கீழ் ஆடினார்கள். இந்த மூவரும் அனில் கும்ப்ளேவின் கீழ் ஆடியதோடு இவர்கள் அனைவரும் எம்.எஸ். தோனியின் கீழ் விளையாடினார்கள். இவர்கள் தோனியின் கீழ் ஆடியபோது அனைவரும் கிரிக்கெட் ஜாம்பவான்களாக இருந்தார்கள். தோனி கூட விராட் கொஹ்லியின் தலைமையில் ஆடினார்.'

இது போக ஆடுகளத்தில் பாண்டியாவின் நடத்தை, குறிப்பாக ஸ்லிப் திசையில் இருந்த ரோஹித்தை பௌண்டரி எல்லைக்கு களத்தடுப்புச் செய்ய அனுப்பியது, போட்டி முடிவில் பந்துவீச்சு பயிற்சியாளர் லசித் மாலிங்கவுக்கு கைகொடுக்காமல் விலகிச் சென்றது, மைதானத்திற்கு வெளியில் பாண்டியாவுக்கு மாலிங்க இருக்கையை கொடுத்தது போன்ற அணி ஒன்றில் வழக்கமாக நடக்கும் சின்னச் சின்ன பிரச்சினைகளைக் கூட ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் பெரிதுபடுத்தி காட்டியது அவர் மீதான கோபத்தை பெரிதுபடுத்த நன்றாக உதவி இருக்கிறது.

ஐ.பி.எல். போன்ற பணம் கொட்டும், விளம்பரங்களில் அதிகம் தங்கியிருக்கும் லீக் கிரிக்கெட்டுகளில் இவ்வாறான பிரச்சினைகள் சகஜம் என்பதை கிரிக்கெட் உலகம் இப்போதுதான் அனுபவிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் கால்பந்து போன்ற விளையாட்டுகளில் இது காலம் காலமாக நடக்கிறது. இங்கிலாந்து பிரீமியர் லீக், ஸ்பெயினின் லாலிகா என்று கழக மட்டத்திலான கால்பந்து போட்டிகளில் ரசிகர்களின் மோதல்கள் ஒரு 'மினி போர்' போல இருக்கும்.

பாண்டியாவுக்கு தலைமை வழங்கப்பட்டது தொடர்பில் மும்பை இந்தியன்ஸ் நிர்வாகம் ஒரு விளக்கத்தை கொடுக்கத் தவறியது கூட நிலைமையை மேலும் மோசமாக்கியது.

இம்முறை ஐ.பி.எல். தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் நடந்த மும்பை இந்தியன்ஸின் செய்தியாளர் சந்திப்பு யூடியுபில் கூட நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. பாண்டியா குஜாராத்தில் இருந்து வந்ததை அடுத்து தலைமை பொறுப்பு வழங்கப்படும் சாத்தியம் பற்றியும் அப்போது கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் அதற்கு பதில் அளிப்பதில் இருந்து அவர் அமைதி காத்தார், கடைசியில் மற்றொரு கேள்விக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

மும்பை பயிற்சியாளர் மார்க் பௌச்சரை செய்தியாளர்கள் சந்தித்தபோதும் இதே நிலைமை தான் ஏற்பட்டது. இந்த பருவத்தில் ரோஹித்திடம் இருந்து பாண்டியாவுக்கு தலைமைப் பொறுப்பை வழங்கியதற்கான காரணம் பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோதும் மயான அமைதியே நிலவியது. பௌச்சர் எந்த பதிலும் அளிக்கவில்லை.

மைதானத்தில் பண்டியா பௌண்டரிகள் அடிக்கும்போதும் பிடியெடுப்புகளைச் செய்யும்போதும் தனது சொந்த ரசிகர்களின் கைதட்டல்களையும் அவ்வப்போது பெறுகிறார். மும்பையில் தன் மீதான அங்கீகாரத்திற்கு பாண்டியா செய்ய வேண்டியது இதுதான். தனது திறமையை வெளிப்படுத்துவது மாத்திரமன்றி அணியையும் வெற்றியை நோக்கி வழிநடத்தினால் ரசிகர்களின் கூச்சல், கேலிகள் குறைந்து அதுவே ஆதரவாக மாறிவிடும். கடைசியில் பாண்டியாவும் தலைக்கு மேல் வைத்து கொண்டாடப்படுவார். இதுதான் ஐ.பி. எல். போன்ற கிரிக்கெட்டின் மரபு.

**எஸ்.பிர்தௌஸ்...**

# குறிப்புகள்



## சதம் பெறாது சாதனை

பங்களாதேஷுக்கு எதிராக சட்டொக்ராமில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 531 ஓட்டங்களை பெற்றபோதும் டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய சாதனை ஒன்றை படைத்தது. அந்த இன்னிங்ஸில் இலங்கையின் எந்த வீரரும் சதம் பெறவில்லை. நிஷான் மதுஷ்க (57), திமுத் கருணாரத்ன (86), குசல் மெண்டிஸ் (93), தினேஷ் சந்திமால் (59), தனஞ்சய டி சில்வா (70) மற்றும் கமிந்து மெண்டிஸ் (ஆட்டமிழக்காது 92) என்று ஆறு வீரர்கள் அரைச்சதம் பெற்றபோதும் ஒருவர் கூட சதம் சேர்க்கவில்லை.

அதாவது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு வீரரும் சதம் பெறாது இன்னிங்ஸ் ஒன்றில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்களாக இது சாதனை படைத்தது.

அதுவும் கிட்டத்தட்ட 48 ஆண்டு சாதனையையே இலங்கை அணி முறியடித்தது. 1976 ஆம் ஆண்டு கான்பூரில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 524 ஓட்டங்களை பெற்றது. ஆனால் ஒருவர் கூட சதம் பெறவில்லை. அதிகூடிய ஓட்டங்களே மஹிந்தர் அமர்னாத் பெற்ற 70 ஓட்டங்கள் தான்.

இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் சில்ஹெட்டில் பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 280 ஓட்டங்களை பெற்றபோது தனஞ்சய டி சில்வா (102) மற்றும் கமிந்து மெண்டிஸ் (102) இருவரும் சதம் பெற்றனர். இருவரும் இணைந்து இரட்டைச் சத இணைப்பாட்டத்தை (202) கூட பகிர்ந்து கொண்டனர். இதன்மூலம் இரட்டைச் சத இணைப்பட்டம் பெறப்பட்ட இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற மிகக் குறைந்த மொத்த ஓட்டங்களாக அது சாதனை படைத்திருந்தது.

## பரிதாப சாதனை

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் யாரும் எடுக்கக் கூடாத சாதனையை சில வீரர்கள் படைத்திருக்கிறார்கள். அதாவது டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டில் இளம் வயதில் மரணத்தவர்கள் என்ற சாதனை கவலையானது.

அதில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்த சாதனையை படைத்தவர் பங்களாதேஷ் சகலதுறை வீரர் மன்சூருல் இஸ்லாம் ரானா. 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் ஆறு டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கிறார். ஆனால் 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குல்னாவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் கொல்லப்படும்போது அவருக்கு 22 வயது மாத்திரமே.

இந்த வரிசையில் அடுத்த இடத்தில் இருப்பவர் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் ஆர்ச்சி ஜன்சன். இவர் 1929 ஆம் ஆண்டு அடிலெயிட்டில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான தனது கன்னி டெஸ்ட் போட்டியிலேயே 164 ஓட்டங்களை பெற்றார். அப்போது அவருக்கு வயது வெறும் 19 தான். ஆனால் நான்கு ஆண்டுகள் கழித்து காசநோய் காரணமாக அவர் மரணித்தார்.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டிலும் மரணித்த இளம் வீரர் என்ற சாதனையும் மன்சூருக்கே சேரும். அவர் மரணிக்கும்போது 25 ஒருநாள் சர்வதேச போட்டிளில் ஆடி இருந்தார். இந்த வரிசையில் இரண்டாவது இடத்தில் இலங்கையில் ஸ்டான்ட்லி டி சில்வா உள்ளார். இரண்டே இரண்டு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடிய அவர் 1980 இல் வீதி விபத்தொன்றில் மரணிக்கும்போது வயது 23.



டி20 சர்வதேச கிரிக்கெட்டில் இளம் வயதில் மரணித்தவர் என்ற கவலை அவுஸ்திரேலியாவின் பிலிப் ஹகஸை சாரும். 2014 ஆம் ஆண்டு நடந்த போட்டி ஒன்றில் பந்து தலையில் பட்டு மரணிக்கும்போது அவரது வயது 26 தான் ஆகிறது. அவர் 26 டெஸ்ட், 25 ஒருநாள் சர்வதேச போட்டிகளுடன் ஒரே ஒரு டி20 சர்வதேச போட்டியில் ஆடியிருந்தார்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## மஞ்சரி சிறுகதை

# வாழ வைக்கும் தர்மம்

"என்ன நடந்த ஹாஜி?"

"ஏன்ட புள்ள... ஏன்ட புள்ள...

ஹசரத் ஏன்ட புள்ளக்கி நடந்தத பாருங்க ஹசரத்."

"பொறுமையா இரிங்க

ஹாஜி... பொறுமையா இரிங்க.. அல்லாஹ்வுக்காக பொறுமையா இரிங்க"

ஹசரத் அன்வர் ஹாஜியாரை ஆறுதல்படுத்தினார்.

"நேத்து பெமிலில எல்லாரும் சேந்து ட்ரிப் ஒண்டு போனம், வரக்கொல ராவாகிடுச்சு. எங்கட நேரம் ஹசரத் ஒரு வளைவுல வேன திருப்பகொல திடீரென்று லொரியொன்டு வந்த அதுல முட்டிடாம சைட் குடுக்கப் போய் வேன் பள்ளத்துல விழுந்துட்டு. அவ்வளவு பெரிய பள்ளம் இல்ல ஆனா, விழுந்த வேகத்துல மகள் வெளியில போயிட்டு விழுந்துட்டா. தலையில பலத்த அடி இப்ப ஐசியூல பேச்சு மூச்சில்ல ஹசரத். மாமிட கை ஒடஞ்சி. ராத்தாட கால் முள்ளு வெடிச்சி. மத்தவங்களுக்கு சின்ன சின்ன காயம் தான்"

தழுதழுத்த குரலில் விபரித்தார் அன்வர் ஹாஜியின் தம்பி ரயிஸ் ஹாஜி.

"அல்லாஹ்வுக்கு சுக்ர் செய்ங்க ஹாஜி. இதோட போனது போதும் மகளுக்கு சரியாவிடும் அல்லாஹ் இருக்கிறான்"

அன்வர் ஹாஜியின் முதுகை தடவிய படியே ஆறுதலான வார்த்தைகளுடன் சில ஆலோசனைகளையும் வழங்கத் தொடங்கினார் ஹசரத்.

"ஹலோ சொல்லுங்க..."

"ஹலோ ரமீலா என்ன செய்றீங்க? புள்ளகள் எங்க?"

"தூங்குறாங்க..."

"பகல் என்ன செஞ்சீங்க?

" "பருப்பும், சோறும்"

"ராவக்கி என்ன?"

"ஒன்னும் இல்ல புள்ளகள் பசியில தூங்கிட்டாங்க."

இதைக் கேட்டதும் ரிஷாடின் உள்ளம் துடித்தது. கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்தது.

"யா அல்லாஹ் எங்களுக்கு ஏனிந்த நிலை?"

ஏண்ட புள்ளகள் பசில தூங்ககொல நான் எப்படி நிம்மதியா இருக்கிற?"

அவன் உள்ளத்தால் இறைவனுடன் முறையிட்டுக் கொண்டான்.

"நீங்க தூங்கலையா?" "

நீங்க கோல் எடுக்க காட்டியும் இருந்தேன். வீட்டில் ஒன்றுமே இல்லை நாளைக்கு என்ன செய்ரோ தெரியா."

"இந்த மழ நாள்ல வேலைக்குப் போகவும் ஏலாம இருக்கி. ரெண்டு நாளா ரூம்ல தான். கையில சல்லியும் இல்ல அங்கால இங்கால தேடி இரண்டாயிருவா வச்சிருக்கேன். காலையில போட்டு விடுறேன் நேரத்தோடு போயிட்டு புள்ளைகளுக்கு சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வாங்க சரியா."

அவள் பெருமூச்சுடன் "சரி" என்றாள்.

"இன்னும் ரெண்டு நாள்ல நோன்பும் வருது பெருநாளைக்கு என்ன செய்றோ தெரியா...

புள்ளகள் பெருநாள் உடுப்பப் பத்தியே சொல்லிக் கொண்டிருக்காங்க. எனக்கில்லாட்டியும் பரவால்ல சின்னதுகளுக்கு ஏதாவது வாங்க ட்ரை பண்ணுங்க

சரி..சரி...யோசிக்காதீங்க ரமீலா நோன்புக்கு அல்லாஹ் பரக்கத் செய்வான்....

பெருநாளை பத்தி பொறவு பாப்போம் மொதல்ல நாளைக்கு சாப்பாட்டுக்கு வாங்குற வழியப் பாருங்க..."

சற்று கடுமையாகவே சொல்லிவிட்டு தொடர்பை துண்டித்தான்.

அடக்க முடியாமல் வந்த அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டாலும் அணையுடைந்த வெள்ளமாய் கண்களிலே பெருக்கெடுத்த கண்ணீரை துடைத்தவாறு குளியலறைக்குள் சென்றவன் ஓவென்று அழுது தீர்த்தான்... ரிஷாட், ரமீலாவிற்கு மூன்று குழந்தைகள். அழகிய குடும்பம். நடுத்தரவர்க்க வாழ்க்கை. ரிஷாடுக்கு சரியான தொழிலொன்றில்லை. கிடைத்த வேலையெல்லாம் செய்வான். கிடைக்கும் வருமானத்தையெல்லாம் அவனுக்கோ வீண் செலவுகளோ செய்யாமல் அப்படியே குடும்ப செலவுகளை பார்ப்பான். குடும்பத்தில் பிரச்சினைகள் ஒன்றுமில்லை. பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கும் போது ஓரளவு சமாளித்துக் கொண்டு சென்றாலும் அவர்கள் வளர வளர உணவு, பாடசாலை செலவுகள் என்று வாழ்க்கைச் செலவு அதிகரித்ததே ஒழிய வருமானம் அதிகரிக்கவில்லை. இப்பொழுதெல்லாம் மூன்று வேளை உணவு பல நாட்களுக்கு இரண்டு வேளையாகவே ஆகிப் போனது. கொஞ்சம் பழகியும் விட்டது. இருந்த நகைகளையெல்லாம் விற்று கொஞ்சம் கடனும் வாங்கி வீட்டை எப்படியோ கட்டிக் கொண்டு விட்டார்கள். அந்தளவில் நிம்மதி என்றாலும் அவனது வருமானத்தில் தான் அந்த கடன்களையும் அடைக்க வேண்டி இருப்பதால் திண்ட பாதி



தின்னாத பாதியாக வாழ்க்கை அல்லல் படுகிறது. பிள்ளைகள் தான் பாவம் இந்த வயதில் அவர்களுக்குள் இருக்கும் ஆசைகளை அடக்கியே பழகி விட்டார்கள். ஆனால் அவர்களின் கண்களில் தெரியும் ஏக்கங்கள் தினம் அவளைச் சுடுவது அவளுக்கு மட்டும் தான் தெரியும். அவளும் தாயல்லவா....

நடுத்தர வர்க்க வாழ்வு நாய் திண்ட வாழ்வு. கஷ்டத்தை வெளியில் சொல்லவும் முடியாத, வெட்கத்தை விட்டு கையேந்தவும் முடியாத தன்மான பிரச்சினையுடனான போராட்டங்கள் எத்தனை அவஸ்தை...

அழுது முடித்தவள், உளூ செய்து தொழுது விட்டு, "யா அல்லாஹ் வறுமையை விட்டும் பாதுகாத்திடு ரஹ்மானே" என்று மனம் உருகி பிரார்த்தித்து விட்டு அடுத்த நாள் வாங்குவதற்கான சாமான்களை பட்டியலிட்டு விட்டு உறங்கப் போனாள்.

"ஹசரத் நீங்க சொன்ன மாதிரி எல்லா ஏற்பாடும் செஞ்சுட்டேன். ஒரு சின்ன உதவி இதுவல கொஞ்சம் பங்கிட்டு கொடுத்துருங்க..."

"இல்ல ஹாஜி நீங்க உங்க கையால கொடுக்கிறது தான் நல்லமெண்டு நான் நினைக்கிறேன். நானும் கூட வாரேன் வாங்க போவோம்"

மறுக்க முடியாமல் அன்வர் புறப்பட்டார்.

விடியலுக்காக காத்திருந்த ரமீலா விடிந்தும் விடியாததுமாக மூத்த மகள் நுஸ்ரத்திடம் சின்னவளை பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு இரண்டாம் மகன் ரசீனுடன் புறப்பட்டாள்.

"உம்மா நடக்கேலா பசிக்குது பஸ்ல போவோம்."

"பஸ்ல போக காசில்ல மகன். வரக்கொல பஸ்ல வருவம்"

மகனை தேற்றியவாறு மெல்ல நடக்கலானாள்.

"உம்மா இந்த தடவ பெருநாளைக்கு உடுப்பு எடுக்கக்கொல என்னையும் கூட்டிட்டு போங்க"

"அத அந்த நேரம் பார்ப்போம் இப்ப வாய மூடிட்டு வாங்க"

இயலாமையை மறைத்தவளாக ரசீனை அதட்டினாள்.

நகரத்திற்கு அவ்வளவு தூரம் இல்லாவிட்டாலும் இன்று ஏனோ அவளுக்கு பாதை நீண்டதாகவே தோன்றியது. நடக்க நடக்க மூச்சு வாங்கத் துவங்கியது. கண்கள் இருட்டியபடி வர மகனின் தோள்களை பிடித்தவள் மெல்ல சரியலானாள். "உம்மா... உம்மா..."

ரசீனின் அலறல் தூரத்தில் ஒலிப்பதாய் உணர்ந்தவாரே மயங்கிப் போனாள்.

"இந்த ஏரியால நிறைய கஷ்டப்பட்டவங்க இருக்காங்க. அதுதான் நான் இந்த எடத்த தெரிவு செஞ்சன். இந்த ஸதக்காவெல்லாம் கொடுத்த பிறகு பாருங்க ஹாஜி அதிலுள்ள பரக்கத்தை."

அன்வர் காரை செலுத்த அருகில் இருந்து கதைத்துக் கொண்டு வந்தார் ஹசரத்.

"அங்க பாருங்க ஹாஜி

கார நிப்பாட்டுங்க... நிப்பாட்டுங்க..."

சடனா பிரேக் அடித்த அன்வர் அப்போதுதான் கவனித்தார் அந்த பாதையோரம் பெண்ணொருவர் விழுந்து கிடப்பதை. காரை விட்டிறங்கிய இருவரும் ரமிலாவை நோக்கி விரைந்தார்கள்

. "ஏன் என்னாவின?"

பதறியபடியே அழுது கொண்டிருந்த ரசீனிடம் வினவினார்கள்.

"உம்மா மயங்கி விழுந்துட்டாங்க"

"ஏன் உம்மாக்கு ஏதாவது சுகம் இல்லையா?"

"இல்ல அங்கிள் நல்லா தான் வந்தாங்க திடீரென்டு விழுந்துட்டாங்க."

"ஹாஜி தண்ணி போத்தல் எடுங்க என்றவாரே,

"நீங்கள் சாப்பிட்டீங்களா?" என்று ரசீனிடம் வினவினார் ஹசரத்.

"நேத்து பகல் சாப்பிட்ட இப்ப சாமன் வாங்க தான் டவுன் போறம்."

"பஸ்ல போக இருந்துச்சே"

என்ற போது தலையை கவிழ்த்துக் கொண்டு மௌனமானான் ரசீன். "சாப்பிடாமல் இருந்தாலும் அல்லாஹ்வைத் தவிர யாருகிட்டயும் கஷ்டம் சொல்லவானம்" என்ற தாயின் அறிவுரை அவன் காதுகளில் ஒலித்தது. எவ்வளவு வறுமையிலும் தன் குழந்தைகளுக்கு நல்லொழுக்கங்களையும், நற்பண்புகளையும், தன்மானத்தையும் ஊட்டியே வளர்த்தாள். கடன் பட்டேனும் கல்விக்கான தேவைகளைப் பூர்த்தி செய்தாள். பயமும், அடிமைத்தனமும் இறைவனுக்கு மாத்திரமே என்று சொல்லிச் சொல்லி வளர்த்தாள்.

நிலைமையைப் புரிந்துக் கொண்ட ஹசரத் ரமீலாவின் முகத்தில் தண்ணீரை தெளித்தார். சுய நினைவுக்கு வந்த ரமீலாவிடம் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொதிகள் அடங்கலான பையை கொடுத்து "இவங்கட மகளுக்கும் சுகம் இல்ல துவா செஞ்சுக்கோங்க" என்றார்.

" அல்லாஹ் உங்கள் மகளுக்கு நல்ல சுகத்தை கொடுப்பான் இது வேண்டாமே"

அவர்கள் கொடுத்தாலும் பெறுவதற்கு அவள் தன்மானம் தடுத்தது.

" இல்ல சகோதரி இது இறைவன் உங்களுக்கு தந்தது வேண்டாம் என்று சொல்லாதீங்க. ஒவ்வொருவரின் தேவைகளையும் இறைவனே அறிந்தவன்"

"அல்ஹம்துலில்லாஹ்"

இறைவனுக்கு நன்றி கூறியவளாக பெற்றுக் கொண்டாள். அவர்களை கூட்டிச் சென்று ரமீலாவின் வீட்டு வாசலில் இறக்கிவிட்டு அன்வர் ஹாஜி நான்கு உணவுப் பொதிகளை எடுத்து ரசீனின் கைகளில் கொடுத்து

" முதல்ல எல்லாரும் சாப்பிடுங்க" என்றார்.

அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு அல்லாஹ்வை புகழ்ந்தவளாக குழந்தைகளுடன் சாப்பிட துவங்கினாள். பெரிய தொரு மன நிம்மதியுடன் வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அன்வரின் தொலைபேசி சிணுங்கியது. "ஹலோ..." "ஹலோ நானா சீக்கிரம் வாங்க மகள் கண்ண தொறந்துட்டா."

"அல்ஹம்துலில்லாஹ்"

அன்வரின் வாய் அல்லாஹ்வை புகழ்ந்தது. செல்வத்தை எப்படி செலவழிக்க வேண்டுமென்றும் அவர் உள்ளம் நன்றாகவே புரிந்து கொண்டது.

அவரின் மனதில் பெருநாளைக்கான ஸதக்கா திட்டமொன்று முளைவிட்டது. அதில் ரஷீடின் குடும்பமே முதலிடம் பிடித்தது...

இன்ஷா அல்லாஹ்

இனி ரமீலாவின் குழந்தைகளும் பெருநாளைக்கு புத்தாடைகளில் ஜொலிப்பார்கள் .

**ஷிபானா அப்துல் பதா**
**பதுளை**

---

# பன்னூலாசிரியர் உ.நிசாரின் "அணில் பிள்ளை" ஓர் அறிமுகம்





பன்னூலாசிரியர் உ. நிசாரின் "அணில் பிள்ளை" (சிறுவர் பாடல்கள்) நூல் 40 பக்கங்களில் 28 பாடல்களை உள்ளடக்கியதாக அண்மையில் வெளி வந்திருக்கின்றது.

உ.நிசார் சிறுவர் இலக்கியத்திற்குப் புதியவரல்லர் என்பதனை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது நூல். பளபளக்கும் அட்டை, வண்ணப்படங்கள், பெரிய தெளிவான எழுத்து, அழகிய பக்க வடிவமைப்பு, தளக்கோலம், என்று சிறுவர்களைக் கவரும் வகையில் நூல் ஆக்கப்பட்டிருக்கின்றது. சிறுவர்களுக்கு நூலோடு இன்னும் நெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சிறுவர்கள் விரும்புகின்ற அவர்களுக்கு நன்கு அறிமுகமான செல்லப் பிராணியின் பெயர் "அணில் பிள்ளை" நூலுக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

நூலாசிரியரின் சிறுவர் இலக்கியம் தொடர்பான புரிதல், ஈடுபாடு, கரிசனை, நீண்ட கால அனுபவம் என்பவற்றை எடுத்தியம்பும் வகையில் நூல் அமைந்திருப்பதனை அதனை வாசிப்பவர்கள் அவதானிப்பர்.

சிறுவர் பாடல்களைப் படைப்பது இலகுவான காரியமல்ல. சிறுவர்களுக்குப் பரிச்சயமான எளிய சொற்கள், மனதில் நிற்கக் கூடிய அதே வேளை மீண்டும் பாடத் தூண்டக் கூடிய சந்தம் என்பன அமையப் பெறுதல் வேண்டும். சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்கும் போது படைப்பாளர்கள் சிறுவர்களாகவே மாறிவிடவேண்டும். அவர்களின் உளவியலை உள் வாங்கிக் கொண்டு எழுதுபவர்களே சிறுவர் இலக்கியத்தில் வெற்றி பெறுகின்றனர்.

18 வயதுக்குக் குறைந்த அனைவரையும் சிறுவர்களாக ஐக்கியநாடுகள் சபை வரைவிலக்கணப்படுத்தியுள்ள போதிலும், பொதுவாக 14 வயதுக்குக் குறைந்தவர்களை "சிறுவர்கள்"எனவும் 14 - 16 வயதுடையவர்களை "இளைஞர்கள்" எனவும் பிரித்துப் பார்க்கப்படுவதுண்டு. உ.நிசாரின் "அணில் பிள்ளை" 9 - 13 வயதெல்லையினருக்குப் பொருத்தமானதாக அடையாளப்படுத்தப்பட்டு, வெளியிடப்பட்டிருக்கின்றது. நூலின் முதலாவது பாடல் "அணில் பிள்ளை."

"அணில் பிள்ளை ராசா எனக்குப்
பழமொன்று போடு. கொய்யாப்
பழமொன்று போடு அதைக்
கொறிக்காமல் போடு"
சின்னப்பையன் நான் வந்து
உன்னைக் கேட்கிறேன் நல்ல
பழமொன்று போடு அதை
கொறிக்காமல் போடு."

என்று, சிறுவர் உளவியலைப் புரிந்து கொண்டு ஒரு சிறுவனாகவே கவிஞர் தன்னை மாற்றிக் கொண்டு சின்னச் சின்ன வரிகளில் பாட்டிசைப்பது வாசகர்களின் கவனத்தை ஈர்க்கிறது.

"குருவி குருவி பழம் தருவாய்
பழமே பழமே விதை தருவாய்
விதையே விதையே முளை தருவாய்
முளையே முளையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே கிளை தருவாய்
கிளையே கிளையே தளிர் தருவாய்
தளிரே தளிரே இலை தருவாய் "

என்று "வளம்" என்ற தலைப்பில், ஈற்று முதலி அமைப்பில் இடம் பெற்றுள்ள பாடல் சிறுவர்கள் மனனம் செய்வதற்கு உகந்ததாகவும், எதிலிருந்து எது (செடியிலிருந்து மரம், மரத்திலிருந்து கிளை...) என்பதை அவர்களுக்கு அறியத் தருவதாகவும் அமைந்திருக்கின்றது.

"டெங் குட்டு டெங் குட்டு
முரசொலி முழங்குது
டெங் குட்டு டெங் குட்டு
கண்டி நகர் அதிருது!
"

என்று கண்டி பெரஹர பற்றி எழுதப்பட்டிருக்கின்ற பாடல் சிறுவரின் மன நிலையை அறிந்து, விருப்பம் உணர்ந்து எழுதிய பாடலாக அழகூட்டுகின்றது.

"டெங் குட்டு டெங்குட்டு" போன்ற ஒலிச் சேர்க்கைகள் சிறுவர்களை படிக்கத் தூண்டும் தன்மையன.

நல்லகருத்துக்களைச் சொல்பவையாகவும், அறிவுரை கூறுவனவாகவும் பல பாடல்கள் நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

"கள்ளம் கபடம் ஏதுமின்றி
உள்ளத் தூய்மை கொண்டு ஒரு
தொல்லை யிலாப் பிள்ளையாய்
தொடர்ந்து நாம் கற்போம்.
அன்பு மிகுந்த தாய் தந்தை
ஆசான் சொற்கேட்டு நற்
பண்புகளில் சிறந்து தினம்
பணிவுடனே நாம் கற்போம்"

என்னும் பாடல்கள் எடுத்துக் காட்டுகளாகக் கூறத்தக்கவை.

"அணில்பிள்ளை" சிறுவர் பாடல் நூல், சிறுவர்களைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. பாடல்களுக்கு அழகு சேர்க்கும் விதத்தில் அழகு ததும்பும் சித்திரங்களும் இந் நூலைப் பெருமைப் படுத்துகின்றன. பல விதத் தலைப்புகளிலும் பாடல்கள் அமைந்து, சிறுவர்களுக்கு மகிழ்ச்சியையும் மன உறுதியையும் உலக கண்ணோட்டத்தையும் நல்குகின்றன". என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் அணிந்துரையில் தெரிவித்திருக்கின்றார். இது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல என்பதை நூலை வாசிப்பவர்கள் உணர்வர்.

ஐந்து தசாப்தங்களாக இலக்கிய உலகில் தடம்பதித்து வருபவர் உடுநுவரை நிசார், உ.நிசார் என்ற புனை பெயர்களில் இயங்கி வரும் எச்.எல். எம்.நிசார். 11 சிறுவர் பாடல் நூல்களையும், 11 சிறுவர் கதை நூல்களையும் ஏற்கனவே எழுதியிருக்கின்றார்.

இவை தவிர, நாவல் (1), சிறுகதை (5), கவிதை(4) என மொத்தமாக 32 நூல்களைத் தந்திருப்பவர் அவர். "அணில் பிள்ளை"கவிஞரின் 33ஆவது நூலாகவும் சிறுவர் இலக்கியம் தொடர்பான 23 ஆவது நூலாகவும் வெளிவந்திருக்கின்றது

ஈழத்தில் சிறுவர் இலக்கிய முயற்சிகளி'ல் முன்னணி வகிக்கும் சமகாலக் கவிஞர்களில் ஒருவராகப் பெயர் பதித்திருப்பவர் கவிஞர் உ.நிசார்.

"அணில் பிள்ளை" அவரின் சிறுவர் இலக்கிய ஆற்றலையும், ஆளுமையையும் மேலும் வெளிச்சமிடுகின்றது.

அவருக்கு நமது வாழ்த்துகள்!

**வெளியீடு:**
**பானு வெளியீட்டகம்,**
70/3 புதிய கண்டி வீதி,
மாவனல்லை.

**பாவேந்தல்**
**பாலமுனை பாறூக்**

---

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
## இல: 116

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | 04 | ■ | 05 | |
| | ■ | 06 | | | 07 | | ■ |
| | ■ | 08 | | | | ■ | ■ |
| 09 | 10 | | ■ | 11 | | 12 | 13 |
| ■ | | ■ | 14 | ■ | 15 | | |
| 16 | | ■ | | ■ | 17 | | |
| | ■ | 18 | | 19 | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | ■ | |

திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 116
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 116

### இடமிருந்து வலம்

1. சித்திரை, வைகாசி மாதங்களின் பருவகாலத்தை இப்படியும் அழைப்பர்
5. நன்றியுள்ள பிராணி
6. தனக்கு உண்டாகும் பயன் மற்றும் வசதிகளை மட்டும் கருதிச் செயற்படும் போக்கு
8. முகத்தின் பக்கவாட்டுப் பகுதி (குழம்பியுள்ளது)
9. அளவுக்கு அதிகமான அல்லது தீவிரமான நிலை (குழம்பியுள்ளது)
11. வீடு
15. இடையூறு
16. நீரிலும் தரையிலும் வாழும் பிராணி
17. வண்ணம் (குழம்பியுள்ளது)
18. பழந்தமிழ்ப் புலவர்
20. கணிதத்தில் வரும் கூட்டல் அடையாளக் குறி
21. பெண்
22. ஒரு விஷயத்தை கை அசைவினால் உணர்த்தும் முறை

### மேலிருந்து கீழ்

1. ஒரு கட்டடம் தகர்ந்து விழுந்த நிலை
2 சம்பளம்
3. திருமணமாகாத பெண் (கீழிருந்து மேல்)
4. துன்பம் மிகுந்த தொல்லை
5. தன்மை இடத்துப் பன்மைச் சொல்
7. கணவன் _ மனைவி சேர்ந்து வாழும் குடும்ப வாழ்க்கை (குழம்பியுள்ளது)
10. பதவிநிலையில் ஆற்றும் பணி
12. உயிரற்ற உடல் (குழம்பியுள்ளது)
13. ஆட்சி அல்லது நிறுவன அமைப்பில் மேற்கொள்ளும் செயற்பாடு (குழம்பியுள்ளது)
14. ஒருவகை தானியம் (குழம்பியுள்ளது)
16. இதுவும் ஒரு பறவைதான்
18. பசுவிலிருந்தும் கிடைக்கும்
19.திக்கு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 115

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. மருதம்
4. ஆசாமி
7. சுடலை
8. வேடிக்கை
9, அல்லி
10. கடை
14. தங்கம்
17. திகதி
19. சிரம்
20. தர
22. பிசகு
23. வளி
24. குயில்
25. மகன்

**மேலிருந்து கீழ்**

1. மலையகம்
2. ருசு
3. தடல்
4. ஆடி
5. சாக்கு
6. மிகை
8. வேலி
11. கடைசி
12. மதி
13. கதிரவன்
15. குரங்கு
16. தம்பி
18. கதகளி
21. வில்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 115

### பரிசு பெறுவோர் விபரம்

முதலாம் பரிசு ரூ 500.00
**என்.எஸ். ரஜீவ்,**
பிரதேச செயலகம்,
முசலி, மன்னார்

இரண்டாம் பரிசு ரூ 350.00
**எம்.ஏ.நஜிமுத்தீன்**
155, அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று

மூன்றாம் பரிசு ரூ 150.00
**ஹிமா மரியம் முஜாஹிட்,**
இல 63/2 ஹுருமாலுவ
மொஜிடீன் மஸ்ஜித் மாவத்தை,
ரம்புக்கனை

### பாராட்டு பெறுவோர்

**1. பி. நடேசன்,**
மட்டக்களப்பு

**2. அனுராதா பாக்கியராஜா**
கொழும்பு 06

**3. வேல்நாயகம் ராஜேந்திரன்**
காரைதீவு

**4. ஏ.டபிள்யூ.எம். நியாஸ்**
மாவனல்ல.

**5. எஸ். செல்வராஜா**
பதுளை

**6. எம்.ஆர். பதீஸ் சஹ்ரி**
பாலமுனை

**7. மங்களம் மனோரஞ்சன்**
கல்முனை

**8. எச்.ஏ.ஷக்கூர்**
மடவள பஸார்

**9. எம்.எஸ்.எம். பாரூக்**
கொச்சிக்கடை

**10.எம்.டபிள்யூ.எப். ஷானாஸ்,**

# வாரபலன்



07.4.2024 - 13.4.2024 வரை

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எந்த கடினமான சூழ்நிலையையும் சமாளிப்பீர்கள். சொந்தக் காரியங்களில் இருந்த தாமதம் நீங்கும். குடும்பம் தொடர்பான கவலைகள் மறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் ஆன்மிக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கைத் துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். பெண்கள் செய்யும் காரியங்களில் நிதானமாக செயல்படுவது நன்மையைத் தரும். கலைத்துறையினருக்கு நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். நண்பர்களிடையே சுமுக உறவு இருக்க விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி குறையும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காகப் பாடுபடுவீர்கள். அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் தேவை அறிந்து செயற்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். பெண்கள் அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. கலைத்துறையினருக்கு சொத்து, மனை சம்பந்தமான காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். சிலர் வீட்டை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடலாம். மாணவர்களுக்கு நன்மதிப்பு உண்டாகும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தடைப்பட்டிருந்த விஷயங்களை தொடர்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை நீங்கும். அக்கம்பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடமும் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். பெண்கள் வீண்வாக்குவாதத்தை விட்டு நிதானமாக பேசுவது நன்மை தரும். கலைத்துறையினருக்கு மனதில் தெம்பு உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். எதிர்பார்ப்புகளை குறைத்து இருப்பதை வைத்து முன்னேற முயற்சிப்பது நல்லது.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாகச் செய்வீர்கள். சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பிடிக்கும். குடும்ப ஸ்தானத்தை சூரியன், புதன் பார்க்கிறார்கள். கணவன் மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் நிதானமாகப் பேசுவது நல்லது. தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக இருக்கும். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதையும் ஆலோசித்து செய்வது நன்மை தரும். மேலதிகாரிகள் கூறுவதற்கு, மாற்றுக் கருத்துக்களை கூறாமல் இருப்பது நல்லது. பெண்கள் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவர். கலைத்துறையினருக்கு தொழில் மிகச் சிறப்பாக இருக்கும். மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். பேச்சுத் திறமை அதிகரிக்கும். மாணவர்கள் எதையும் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசித்து செய்வது நன்மை தரும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

சிக்கல்கள் தீரும். எண்ணிய காரியம் கைகூடும், குறிக்கோள் நிறைவேறும். சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். சமூகத்தில் அந்தஸ்து உண்டாகும். குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த வாக்குவாதங்கள் அகலும். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியே தங்க நேரிடலாம். சுபச்செலவுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, புதிய பொறுப்புகள் கிடைக்கும். குறிக்கோளை அடைவதை லட்சியமாகக் கொண்டு செயற்படுவீர்கள். புதிய தொடர்புகள் மூலம் லாபம் கிடைக்கும். பெண்கள் எண்ணிய காரியம் கை கூடும். கலைத்துறையினருக்கு சிக்கலான பிரச்சினைகளில் நல்ல முடிவு கிடைக்கும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். மனஉறுதி அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் மதிப்பெண் பெற எண்ணும் முயற்சி வெற்றி பெறும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

எதிர்ப்புகள் விலகும். தொல்லைகள் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனக்கவலைகள் அகலும். பணவரத்து தாமதப்படலாம். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர், நண்பர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் வேகம் குறைந்தாலும் திருப்திகரமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களின் ஆலோசனையைக் கேட்டு செயற்படுவதை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரிகள் மூலம் நன்மை உண்டாகும். பெண்கள் மற்றவர்களின் ஆலோசனைகளை ஏற்கும் முன் அது பற்றி பரிசீலிப்பது நல்லது. கலைத்துறையினருக்கு உயர்நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். திறமையான செயற்பாட்டால் பாராட்டுக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் தேவை.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் இருந்து வந்த தாமதம் நீங்கும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் நீங்கும். தெளிவான முடிவுகள் மூலம் நன்மை உண்டாகும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். குடும்பத்துக்குத் தேவையான வசதிகளைப் பெருக்குவீர்கள். தொழில், வியாபாரம் விரிவுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்களால் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பம் நீங்கி தெளிவு உண்டாகும். கலைத்துறையினர் நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி புதிய ஒப்பந்தங்களை பெறுவர். மாணவர்கள் ஆசிரியர்கள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பதும், பாடங்களில் இருக்கும் சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டு தெரிந்து கொள்வதும் வெற்றிக்கு உதவும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எல்லாவிதத்திலும் நன்மை உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். எதையும் துணிச்சலாகச் செய்து முடிப்பீர்கள். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. எதிர்ப்புகள் நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். எதிர்பார்த்த தகவல் நல்ல தகவலாக இருக்கும். கணவன், மனைவி இருவரும் எந்தவொரு முடிவையும் நிதானமாக யோசித்து எடுப்பது நன்மை தரும். சகோதரர் வழியில் உதவியை எதிர்பார்க்கலாம். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் கூடுதல் உழைப்பின் மூலம் செய்து முடிக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும்.மாணவர்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

வாக்கு வன்மையால் எதையும் சாதகமாக முடிப்பீர்கள். திறமை அதிகரிக்கும். திட்டமிட்டபடி செயலாற்றுவதில் கவனம் செலுத்துவீர்கள். இராசியாதிபதி குரு சஞ்சாரம் செய்வது பலவித நற்பலன்களை அளிக்கும். செவ்வாயின் சஞ்சாரம் எதையும் துணிச்சலாக எதிலும் ஈடுபடச் செய்யும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்ப பிரச்சினைகளில் சாதகமான முடிவே உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சினால் எதிலும் லாபம் காண்பர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையால் முன்னேற்றமடைவார்கள். பெண்கள் துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பர். கலைத்துறையினருக்கு பயணத்தால் அனுகூலம் உண்டு. மனதில் உறுதியும், துணிவும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு திறமையால் முன்னேற்றம் உண்டாகும். கஷ்டமான பாடங்களையும் துணிச்சலாக படித்து முடிப்பீர்கள்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எந்தவொரு வேலையிலும் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும் நன்மை தரும். திடீர் இடமாற்றம் ஏற்பட்டாலும் அதன் மூலம் சாதகமான பலன்கள் உண்டாகும். குடும்பத்தில் சுமுகமான நிலை காணப்படும். மனதில் குடும்பம் தொடர்பான கவலை, பிள்ளைகள் பற்றிய கவலை அகலும். கணவன் மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் மெத்தனப் போக்கு மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும், பணி இட மாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள், ஆதரவுடன் எடுத்துக் கொண்ட காரியங்கள் சுமூகமாக முடியும். பெண்களுக்கு தொல்லைகள் குறையும். கலைத்துறையினர் உங்கள் கடமைகளைச் சரிவர செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும். அறிவாற்றலும் செயல்திறமையும் கூடும். பொருள் வரவு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மெத்தனப் போக்கு மாறும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

இனிமையான பேச்சின் மூலம் சிக்கலான காரியங்களையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். வாக்குஸ்தானத்தை செவ்வாய் பார்க்கிறார். வீண் கோபம் ஏற்படலாம். கட்டுப்படுத்துவது நல்லது. வேளை தவறி உணவு உண்ணாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். குடும்ப விஷயங்களில் ஆர்வம் காண்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் சாதுரியமாக செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு பாராட்டுப் பெறுவார்கள். பெண்களின் திறமையை கண்டு மற்றவர்கள் பாராட்டுவார்கள். கலைத்துறையினருக்கு லாபங்கள் பெருகும். கடன் சுமை குறையும். செயல்களை செம்மையுற திருத்தமாக செய்வீர்கள். மாணவர்கள் பாடங்களை நன்கு படித்து தேர்வில் வெற்றி பெறுவர்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் குடும்பத்துடன் கலந்து கொள்வீர்கள். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். நீண்ட தூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். குழந்தைகள் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபச்செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். கலைத்துறையினருக்கு செலவினங்கள் குறையும். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். மாணவர்கள் திறமையாக எதையும் செய்து பாராட்டு பெறுவார்கள்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 31

# எழுத்து, கருத்துத் திருட்டுக்கான தீர்வாக அமைந்த இரா. மகேஸ்வரனின் உரை

பதினோராம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலங்கை அணியினரின் பங்கேற்பினாலும் வலுவாக முன்நகர்ந்த வண்ணம் அரங்கேறிக் கொண்டிருந்தது. சிறப்புரைகள் களை கட்டிய வண்ணமும் ஆய்வரங்குகள் மாநாட்டின் நோக்கத்தை அர்த்தப்படுத்திக் கொண்டுமிருந்தன. எமது அணியில் அங்கம் வகித்த முக்கிய ஆளுமைகளில் ஒருவரான இரா. மகேஸ்வரன் இலங்கையின் தனித்துவத்தை நிரூபிக்கும் அவதானத்தைப் பெற்றவராக விளங்கினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் எனும் அவரது பதவிநிலையும் சர்வதேச அரங்குகளில் பரிச்சயமான அவரது ஆளுமையும் எமது அணிக்கு மேலும் வலுச்சேர்த்தது. சர்வதேச கவனத்தை வென்றெடுத்துள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் பதவியை அலங்கரிக்கும் தமிழர் என்றவகையில் அவர் மிகத் தனித்துவமாக நோக்கப்படுகிறார். விளையாட்டுத்துறை ஈடுபாட்டாலும் தேசிய, சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றவர். இலங்கையின் ஹொக்கி விளையாட்டின் சிறந்த ஆளுமையாகவும் தன்னை நிலைநிறுத்தியவர். இவ் விளையாட்டின் பயிற்றுவிப்பாளர், நடுவர் என்ற பரிமாணத்திலும் உச்சத்தைத் தொட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பிலும், அவதானித்த விடயங்கள் பற்றியும் அவ்வப் போது நிறையவே பேசிக்கொண்டோம். இவ்வாறான மாநாடுகள் பற்றிய பல அனுபவங்களையும் நிறையவே பகிர்ந்து இருக்கிறார். மலேசியப் பயணத்தில் தொடர்ந்து நானும் அவரும் ஒரே அறையிலேயே தங்கும் வாய்ப்புக் கிடைத்தமையும் இதற்கு சாதகமாகியது.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் ஊடகத்துறையுடன் கூடிய அறிமுகத்துடனேயே இரா. மகேஸ்வரன் உடனான நட்புவலுப்பெற்றது. 1997ஆம் ஆண்டு மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை மத்திய மாகாண இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த வி.புத்திரசிகாமணி தலைமையேற்று நடத்தினார். அக் காலத்தில் நான் உயர்தரம் கற்றுக்கொண்டிருந்தேன். இம் மாநாட்டையும் அதனை முன்னிறுத்திய ஆய்வரங்குகள் பற்றிய செய்தியை வெளியிடுவதிலும் இரா.மகேஸ்வரன் மிக ஆர்வமாக செயற்பட்டதை அவதானித்திருக்கிறேன். இக் காலகட்டத்திலேயே பத்திரிகை தொடர்பிலான ஆர்வம் என்னிலும் உருப்பெற்றது. ஒரு வார இதழ் வெளிவரத் தொடங்கியது. ஆர்வமுள்ளவர்கள் பிராந்திய செய்திகளை எழுதலாம் என அந்த இதழில் தகவல் வெளியிட்டார்கள். நாவலப்பிட்டி பிரதேச செய்திகளை அதில் எழுதத் தொடங்கினேன். நிறையவே களம் தந்தார்கள். ஏனைய தினசரிகளில் வரும் செய்திகளை விட நாவலப்பிட்டி பிரதேச செய்திகள் அந்தப் பத்திரிகையில் வெளிவரும். அவ்வப்போது சமூக பார்வையில் என்னுடைய ஆக்கங்களும் வெளிவரும். இச் செய்திகள் தொடர்பிலும், நிகழ்வுகள் தொடர்பிலும் மூத்தஊடகவியலாளர் கே.பொன்னுத்துரையின் வழிப்படுத்தல் மிகமிக உயர்வானது. இவ்வாறு பத்திரிகைத் துறையில் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் வாயிலாக மற்றுமொரு தினசரியின் நாவலப்பிட்டி நிருபராக நேர்முகத் தேர்வின் ஊடாக நியமிக்கப்பட்டேன். நீண்டகாலமாக கண்டிப் பிராந்தியத்துக்கான தினகரன் பத்திரிகையின் செய்தியாளராகவும் இரா.மகேஸ்வரன் பொறுப்பில் இருந்தார்.

இரா.மகேஸ்வரனின் சகோதரர் இரா.லோகேஸ்வரன் ஆசிரியராக பணியை மேற்கொண்டிருந்தார். 2000ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராக இரா.லோகேஸ்வரன் இணைந்துகொண்டார். அக் காலப்பகுதியிலேயே நானும் ஆசிரிய மாணவராக இக் கல்லூரியில் அனுமதியைப் பெற்றேன். விரிவுரையாளர் மாணவன் என்ற நிலையில் தொடர்ந்த மரியாதைக்குரிய நட்பின் மூலமும் மகேஸ்வரனுடனான தொடர்பு மேலும் வலுப்பெற்றது. எனது ஆசானாகிய லோகேஸ்வரன் தற்போது கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் அதிபராக கடமையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வப்போது மகேஸ்வரனைச் சந்திக்கும் போதெல்லாம் எழுத்துத்துறை நடவடிக்கைகள் தொடர்பிலும் உயர் கல்விவாய்ப்புகள் தொடர்பிலும் உரையாடிச் செல்வார். கண்டி மாவட்ட தமிழர்களின் அரசியல் தொடர்பில் அக்கறையுடனான ஆதங்கத்தைக் கொண்டிருப்பதுடன் ஏனைய இனங்களுடனும் தார்மீக உறவினை பேணுபவராகவும் திகழ்பவர்.

கண்டி தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஆய்வரங்கில் இவரும் ஆய்வாளராக பங்கேற்றார். அவ் அரங்கில் நானும் "மலையக பெண் கவிஞர்கள்" எனும் தலைப்பில் ஆய்வுரையை நிகழ்த்தியமை ஞாபகத்துக்கு வருகிறது.

அவ் வரங்கில் அமரர் லெனின் மதிவானமும் ஆய்வுரை சமர்ப்பித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு முக்கிய தேவையின் நிமித்தம் செல்லும் போதெல்லாம் அத்தேவை அறிந்து உதவுவதும், ஆலோசனை வழங்குவதும் இவரின் உயரிய பண்பின் அடையாளமாகின்றது. ஆய்வரங்குகள் பற்றிய விடயங்களையும் தொலைபேசி வாயிலாக பரிமாறிக் கொள்வோம். இவ்வாறான தொடர்பு மாத்திரமே இருந்த நிலையில் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற இவரின் மணிவிழா நிகழ்வின் போதுதான் இவர் மீதான புரிதலை விஸ்தரித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

குடும்ப உறவினர்கள், நண்பர்கள், கல்வியியலாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் திரண்டு இவருக்கான மணிவிழாவைச் சிறப்பித்தார்கள். விழாவில் "மகேஸ்வரம்"எனும் சிறப்பு நூலும் வெளியிடப்பட்டது. அம் மலரில் உள்ளடங்கியுள்ள இவரது வாழ்க்கைக் குறிப்பு பற்றிய நேர்காணல் என் மனதை வருடிய விடயமாக அமைகிறது. யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட மகேஸ்வரனின் தந்தை இராசையா வர்த்தக நடவடிக்கையின் காரணமாக கண்டிக்கு புலம் பெயர்கிறார். சுருட்டு வியாபாரத்தின் மூலமாக கண்டியில் தனக்கான அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்கிறார்.

மகேஸ்வரன், இராசையா, அன்னபூரணம் தம்பதிகளின் மூத்தபுதல்வனாகப் பிறக்கின்றார். அவரைத் தொடர்ந்து சகோதரன் ஒருவர், சகோதரிகள் மூவர் என அவரது குடும்பத்தில் தாய் தந்தையுடன் ஏழு பேராக காணப்பட்டார்கள். மகேஸ்வரனின் பன்னிரெண்டாவது வயதில் அவரது தந்தை இயற்கை எய்துகிறார். மூத்தபிள்ளை என்ற வகையில் குடும்பச் சுமையை இவர் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தந்தை இறந்தது முதல் கல்விகற்றுக் கொண்டே அவரது சுருட்டு வியாபாரத்தை தொடர்கிறார். கண்டி சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவரான இவர் கல்லூரி காலத்திலும் தனது ஆளுமைகளை வெற்றிகரமாக வெளிப்படுத்தியிருக்கிறார். அக் கல்லூரியின் பழையமாணவர் என்ற நிலையிலும் பாடசாலையின் நலன் சார்ந்த விடயங்களில் இவரின் ஆழ்ந்த ஈடுபாடு கவனிக்கத்தக்கது.

1983ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவராக உள் நுழைந்தது தொடக்கம் பலஆளுமைக்குரிய செயற்பாடுகளை நிலைநிறுத்தியவர். இப் பல்கலைக்கழகத்தில் 1994ஆம் ஆண்டு உதவி நூலகராக உள் நுழைந்தது முதல் தனது தொழிற்துறை ஆளுமையையும் அதற்குச் சமாந்தரமாக கல்வித்துறை ஆளுமையையும் வளர்த்துக்கொள்கிறார். 2020ஆம் ஆண்டு தொடக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது பிரதம நூலகர் எனும் பதவியை அலங்கரித்து வருகிறார்.

பல்கலைக்கழகத்தின் எல்லா சமூகத்தினரோடும், துறையினரோடும், இத் துறைசார்ந்த அனைவரோடும் சிறந்த வகையில் உறவினைப் பேணுவதும் இவரின் சிறப்பம்சமாகிறது. பல்கலைக்கழகத்தின் அனைத்துசெயற்பாடுகளோடும் அடையாளப்படுத்துவதாகவே இவரின் நாமம் விளங்குகிறது. இவ்வாறே பல்கலைக்கழகத்திற்கு அப்பால் சமூகதொடர்பாடலிலும் சகல இனத்தவரோடும், சமூகத்தவரோடும் இணைந்து பணியாற்றும் முன்மாதிரியும் இவரில் சிறப்பம்சமாகிறது. ஆய்வாளர், ஊடகவியலாளர், விளையாட்டுவீரர், விமர்சகர், என்பவற்றோடு பதிப்பாளர், வர்த்தகர் என்ற வகையிலும் தன் அடையாளத்தை தடம் பதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



இரா.மகேஸ்வரனது குடும்ப வாழ்வு என்பதும் முன்மாதிரியான அடையாளமாகவே திகழ்கிறது. மூத்தபிள்ளை என்ற வகையில் ஏனைய நான்கு சகோதரர்களுக்கும் வழிகாட்டியாக திகழ்ந்தமை சிறந்த முன்னுதாரணமாகும். இவர்கள் அனைவரும் பட்டதாரிகளாக கல்வித்துறையில் ஆளுமைகளை வெளிப்படுத்தி வருகின்றமையும் கவனிக்கத்தக்கதாகும். மருத்துவரான இவரது துணைவியார் திருமதி கோமதி இவரது பணிகளில் பெரிதும் ஈடுபாடு காட்டிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரது இரண்டு புதல்வர்களும் தந்தையைப் போலவே கல்வியிலும் விளையாட்டுத்துறை மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுளிலும் தடம் பதித்து வருவதைக் கண்டி அந்தனீஸ் கல்லூரி தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆன்மிக, மற்றும் பொதுத் தளங்களின் செயற்பாடுகளின் முக்கிய அங்கமாக மகேஸ்வரன் தொழிற்பட்டமையின் தடங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. மலையக கலை, இலக்கிய, சமூகம் சார்ந்த செயற்பாடுகளின் தனித்துவமான இவரது பங்கேற்பு பெறுமதி வாய்ந்ததாகவே அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல சர்வதேச ஆய்வரங்குகளில் ஆய்வாளராகப் பங்கேற்ற அனுபவத்துடன் கடந்த ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் பங்கேற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இம் மாநாடும் மலேசியாவிலேயே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அம் மாநாட்டில் "உலக மயமாதல் சூழலில் இலங்கையில் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்களது தனித்துவமான கலாசார விழுமியங்களையும் அண்மைக்கால மாற்றங்களையும் ஆவணப்படுத்தல்" எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. இவருடன் இவரது மனைவியும் பங்கேற்று "இலங்கையில் பெண் தெய்வ வழிபாடும் தமிழர் பண்பாட்டில் அதன் செல்செறியும்" எனும் தலைப்பில் உரையாற்றியுள்ளமையும் கவனிக்கத்தக்கது. இம் மாநாட்டில் மகேஸ்வரன் தனது தொழிற்துறைசார்ந்த தலைப்பிலேயே தனது ஆய்வை முன்வைத்தமை சிறப்பம்சமாகும்."தமிழ் மொழி வளர்ச்சியில் நவீன நூலகப் பரிமாணமும் ஆவணப் பாதுகாப்பு, ஆவணப்படுத்தல் செல்நெறிகளும், மின்தகவல், மின்பதிவு, மின் நூலகம், தரவுத் தளங்களின் தாக்கம் பற்றிய ஓர் ஆய்வு."எனும் தலைப்பிலான இவரது ஆய்வுரை ஆய்வரங்கில் மிகுந்த அவதானத்தை பெற்றதாக விளங்கியது. தமிழ் மொழி ஆய்வு முயற்சிகளில் நவீன அணுகு முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. உசாத்துணை மூலங்களாக இணையம் பிரயோகத்திற்கு உள்வாங்கப்படுகிறது. இப் பிரயோகத்தின் ஊடாகப் பதிப்புரிமை, காப்புரிமை போன்றனவற்றில் சிக்கல் நிலை ஏற்படுகிறது. பொதுவாகத் தமிழ் ஆய்வுகளில் நகல் எடுத்து ஒட்டுதல் செயற்பாட்டின் ஊடாக எழுத்துத் திருட்டு, கருத்துத் திருட்டு போன்ற செயற்பாடுகளுடன் பதிப்புரிமை, காப்புரிமை பிரச்சினைக் குரியதாகின்றது. இப் பிரச்சினை தொடர்பான கவனத்தை ஏற்படுத்தும் வகையிலும் இதற்கான தீர்வுகளைத் தேடும் நோக்கோடும் இவ் ஆய்வுரை இவரினால் முன் வைக்கப்பட்டது. தமிழ் மொழி ஆய்வில் ஆய்வுலகம் எதிர்நோக்கும் இம் முனைப்பான பிரச்சினை தொடர்பில் ஆய்வாளர்களை அறைகூவும் முயற்சியாகவும் அமைந்தமை அவதானத்திற்குரியது. இவ் ஆய்வானது இத்துறையில் இனிவரும் ஆய்வுகளுக்கு வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணமே. சமகாலத்தில் இரா. மகேஸ்வரனின் ஆய்வறிபுலம் ஆவணப்படுத்தல் தொடர்பில் அவதானத்தைச் செலுத்துகின்ற அதேவேளை சமகாலச் சிக்கல் நிலை தொடர்பிலான அவதானத்தையும் கொண்டதாக அமையப்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பயணம் தொடரும்...**

# முன்மாதிரியான இலங்கைப் பெண்களுக்கு மதிப்பளித்தல்



முன்மாதிரியான இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில், Child Fund ஸ்ரீலங்காவுடன் இணைந்து உள்ளூர் இலங்கைப் பெண்களின் சாதனைகளைக் கொண்டாடும் முகமாக ஒரு உற்சாகமான போட்டியை சமீபத்தில் நடத்தியது.

அந்த வகையில் அவர்கள் நடத்திய Sheroes போட்டியானது, இலங்கையில் முன்மாதிரிகளாகவுள்ள பெண் சாதனையாளர்களை அங்கீகரித்து மதிப்பளிப்பதோடு, பெண்களை பாராட்டி ஊக்குவிக்கிறது.

பெண்கள் கல்விக்கான ஆங்கிலம் மற்றும் டிஜிட்டல் (EDGE) திட்டம், சக குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்த முன்மாதிரிப் போட்டி அதன் கழக உறுப்பினர்களுக்கு உத்வேகமாக அமைந்ததுடன் அவர்களை கனவு காணவும் மேலும் உயரத்திற்குச் செல்லவும் தூண்டியது.

இதன் பரிசளிப்பு விழா 22 மார்ச் 2024 அன்று கொழும்பில் உள்ள டவர் ஹோல் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு இலங்கை முழுவதிலும் உள்ள EDGE கழக உறுப்பினர்களின் திறமைகள் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தியதோடு, உள்ளூரில் முன்மாதிரியாகவுள்ள பெண்களின் சாதனைகள் மற்றும் அவர்களின் சமூகங்களில் அவர்கள் ஏற்படுத்தும் சிறந்த செயற்பாடுகளையும் அங்கீகரித்தது. இலங்கையின் முதல் பார்வைக் குறைபாடுடைய ஆடை வடிவமைப்பாளர் எனப் புகழப்படும் நயனா ஆஷ் சார்யா இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பெண்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்மாதிரிகள் தாய்மார்கள், சகோதரிகள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் என மற்றும் பலவற்றை உள்ளடக்கியது. ஒவ்வொரு பெண்ணும் தங்களின் முன்மாதிரியைத் தேர்ந்தெடுத்து சித்தரிக்கும் பணியை மேற்கொண்டனர்.

# Visa டெபிட் அட்டை செலவினங்களில் 35%+ வளர்ச்சி பதிவு

டிஜிட்டல் கொடுப்பனவு செயற்பாடுகளில் உலகளாவிய ரீதியில் முன்னணியில் திகழும் Visaவானது (NYSE: V), இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளில் ஆரோக்கியமான வளர்ச்சியைக் குறிக்கும் வகையில், கடந்த ஆண்டில் Visa டெபிட் அட்டை ஊடான செலவீனங்களில் 35%க்கும் அதிகமான அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதற்கிணங்க நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவுகளில் 30%+ அதிகரிப்பும் மற்றும் இணையத்தள வர்த்தகம் ஊடாக மேற்கொள்ளப்படும் செலவுகளில் 40% அதிகரிப்பும் ஏற்பட்டதன் மூலம் மேற்படி 35% அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ள நிலையில், பண்டிகைக் காலத்தில் சுறுசுறுப்பாக இயங்கி வரும் விற்பனை நிலையங்களில் சில்லறைப் பரிவர்த்தனைகள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் வாடிக்கையாளர்கள் பாதுகாப்பான, எளிமையான மற்றும் வசதியான பரிவர்த்தனையை மனதிற்கொண்டு அதிகளவில் டெபிட் அட்டை மூலம் பணம் செலுத்துகிறார்கள்,

Visaவின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வதிவிட முகாமையாளர் அவந்தி கொலம்பகே இது தொடர்பாக தெரிவிக்கையில், “அண்மைக்காலமாக இலங்கையில் நுகர்வோர் டெபிட் அட்டை பாவனையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

மேலும் இணையதளம் ஊடான வர்த்தக வளர்ச்சியும் எமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது அத்துடன் இந்த வேகமானது சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போதும் தொடரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்" என்றார்.

# பாணந்துறையில் 56ஆவது கிளையைத் திறந்துள்ள அசட்லைன் பைனான்ஸ்



டேவிட் பீரிஸ் குழுமத்தின் நிதிச் சேவைப் பிரிவான அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் தனது 56ஆவது கிளையைத் திறந்துவைத்துள்ளது. 519,காலி வீதி பாணந்துறை என்ற முவரியில் இது அமைந்துள்ளது.

நிறுவனத்தின் விரிவாக்கப்பட்ட மூலோபாயத்துக்கான விஸ்தரிப்பின் ஓர் அங்கமே இந்தப் புதிய கிளையாகும். பல்வேறு தொழில் முனைவோர் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களைக் கொண்ட வணிக கேந்திர முக்கியமான இடத்தில் நிறுவனத்தின் புதிய கிளை அமைந்திருப்பது மூலோபாய ரீதியில் முக்கியம் வாய்ந்ததாகும். பாணந்துறையில் உள்ள மக்கள் தனிப் பயனாக்கப்பட்ட, நெகிழ்வான,நெறிமுறையான மற்றும் துறைசார் சேவைகளை வழங்குவதில் புகழ்பெற்ற அசட்லைன் பைனான்ஸிடமிருந்து சேவைகளைப் பெறுவதற்கான அணுகலைக் கொண்டுள்ளனர். இந்தப் புதிய கிளையானது வாகனங்களுக்கான லீசிங், வாகனக் கடன்கள், செயற்பாட்டு மூலதனக் கடன்கள், நிலையான வைப்பு உள்ளிட்ட பல்வேறு நிதித் தீர்வுகளை அங்குள்ள மக்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

இலங்கையின் முறைசாரா துறையின் முதுகெலும்பாக இருக்கும் பெண்களை வலுவூட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள லியதிரிய கடன்களையும் இந்தக் கிளை பெருமையோடு வங்கும்.

இந்த புதுமையான தயாரிப்பு அவர்களுக்கு மேம்பட்ட ரீதியில் இயங்குவதற்கான தீர்வுகளை வழங்குவதை நோக்காகக் கொண்டிருப்பதுடன், அவர்களின் சுதந்திரத்தை மேம்படுத்துவது மற்றும் மேலதிக வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை எளிதாக்குகிறது அல்லது உள்நாட்டில் இயக்கப்படும், சிறிய அளவிலான வணிகங்களை விரிவுபடுத்துகிறது.

# eChannellingக்கு CPM இன் கௌரவிப்பு



நாட்டின் மாபெரும் வைத்திய முற்பதிவு வலையமைப்பும் SLTMOBITEL இன் துணை நிறுவனமுமான eChannelling PLC, அண்மையில் இலங்கை பட்டய நிபுணத்துவ முகாமையாளர்கள் (CPM) நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “சிறந்த முகாமைத்துவ செயற்பாடுகள் நிறுவன விருதுகள் 2024” இல் மெரிட் விருதை தனதாக்கியிருந்தது. சுகாதார பராமரிப்புத் துறையில் சிறந்த செயற்பாடுகள் மற்றும் புத்தாக்கமான தீர்வுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதில் eChannelling இன் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் இந்த மெரிட் விருது அமைந்திருந்தது.

இலங்கையின் பரிபூரண சுகாதார பராமரிப்பு தீர்வுகள் வழங்குநராகத் திகழும் eChannelling PLC க்கு வழங்கப்பட்ட கௌரவிப்பினூடாக, நவீன தீர்வுகள் மற்றும் சிறந்த முகாமைத்துவ செயன்முறைகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி சுகாதாரப் பராமரிப்புத் துறையில் நிறுவனம் ஏற்படுத்தியிருந்த குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கையின் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் சாதனைகளை கொண்டாடும் வகையில் வருடாந்தம் CPM விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டு முழுவதிலும் நிறுவனங்களினால் பின்பற்றப்பட்டிருந்த சிறந்த முகாமைத்துவ செயன்முறைகளை மற்றும் அவற்றின் சிறந்த தலைமைத்துவம், மூலோபாயக் கொள்கைகள், மக்கள் முகாமைத்துவ செயன்முறைகள், இணைந்த பங்காண்மைகள், வினைத்திறனான வளங்கள் பயன்பாடு, ஒழுங்கமைக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் சிறந்த செயற்பாடுகள் போன்றவற்றை இந்த விருதுகள் கௌரவித்தது.

# 18ஆவது முறையாகவும் ‘People’s Brand of the Year’ விருதை வென்றுள்ள சிங்கர்



நாட்டின் முன்னணி நுகர்வோர் பொருட்களுக்கான விற்பனையாளரான Singer Srilanka, SLIM, KANTAR PEOPLES AWARD 2024 இல் தொடர்ந்தும் 18ஆவது முறையாக 'ஆண்டின் சிறந்த மக்கள் வர்த்தகநாமம்' விருதைவென்று, தனது வெற்றிப் பயணத்தை விரிவுபடுத்துகிறது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால்நடத்தப்பட்ட விழாவில், Durable Brand oF The Year விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டது. இந்த குறிப்பிடத்தக்க சாதனையானது நுகர்வோர் பொருட்கள் துறையில் சிங்கரின் மேலாதிக்கத்தையும் இலங்கை முழுவதும் அதன் அசைக்கமுடியாத நம்பிக்கையையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

Singer Sri Lanka பி.எல்.சி.யின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜான் மேஷ் ஆண்டனி, இந்த அங்கீகாரத்திற்கு நன்றி தெரிவிக்கையில்,“தொடர்ச்சியாக 18ஆவது ஆண்டாக SLIM Kantar People’s Brand of the year விருதைப் பெறுவதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

தரம், புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றில் Singer Sri Lanka வின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இந்த அங்கீகாரம் ஒரு சான்றாகும். ஆண்டுதோறும் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இந்த விருது சிங்கர் இலங்கைக்கு மட்டுமல்ல, எங்கள் பயணத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு இலங்கையர்களுக்கும் உரியது.

# மூன்று Radisson ஹோட்டல்களுக்கான Cluster பொது முகாமையாளராக கிறிஸ்டொபர்குவாட்ரோஸ்



Radisson Hotels Sri Lanka ஹோட்டலின் முகாமைத்துவ நிறுவனமான La Vie Hotels & Resorts உடன் இணைந்து இலங்கையிலுள்ள மூன்று மதிப்புமிக்க Radisson ஹோட்டல்களுக்கு Cluster பொது முகாமையாளராக கிறிஸ்டொபர் குவாட்ரோஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

Radisson Hotel Colombo, Radisson Hotel Kandy மற்றும் Radisson Blu Resort Galle ஆகியவற்றுக்கு 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சர்வதேச முகாமைத்துவம் மற்றும் விருந்தோம்பல் அனுபவம் கொண்ட கிறிஸ்டொபர் நியமிக்கப்பட்டிருப்பதால், அவர் துறைக்கு சிறந்த சேவையை வழங்குவார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

Park Hyatt Maldivesஇன் பொது முகாமையாளராக அண்மையில் பணியாற்றிய கிறிஸ்டோபர், ஹோட்டலுக்கு வருகைதரும் விருந்தினர் திருப்தி மற்றும் செயல்பாட்டுத் திறனில் சிறந்து விளங்கும் புதிய தரநிலைகளுக்கு ஹோட்டலை வழிநடத்தினார். அதற்கு முன்னர் அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள JA Resorts & Hotels ஹோட்டல்களில் Cluster ஹோட்டல் முகாமையாளராக பதவி வகித்தார். இந்தக் காலகட்டத்தில் தொழில்நுட்பம் மற்றும் நிலைத்தன்மையின் அடிப்படையில் சொத்துக்களை அவர் சிறப்பாக வழிநடத்தி அடுத்தகட்டத்திற்கு கொண்டு சென்றார்.

# CPMஇன் மகளிர் பிரிவுடன் இணைந்து பெண்களை வலுவூட்டும் NDB வங்கி




NDB வங்கியானது, இலங்கையில் பெண்களை வலுவூட்டுவதிலும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதிலுமான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், இலங்கை பட்டயதொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தினது (CPM Sri Lanka) தொழில்சார் பெண்கள் பிரிவின் உத்தியோகபூர்வ வங்கியியல் பங்குதாரராக இணைந்துள்ளது.

மார்ச் 19 அன்று, சர்வதேசமகளிர் தினத்தை கொண்டாடும் வகையில், இலங்கை பட்டய தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தின்(CPM Sri Lanka) தொழில்சார் பெண்கள் பிரிவானது கொழும்பு BMICHஇல் ஒரு முக்கிய நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. ஐ.நா பெண்களின் உலகளாவிய துவக்கத்துடன் இணைந்ததாக, பெண்களின் குரல்களை உயர்த்துவதையும், பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதையும் நோக்கமாகக் கொண்ட "பெண்களுக்காக முதலிடுங்கள்; முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்" எனும் கருப்பொருளில் இந்நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் Zmessengerஇன் இணை ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான ஜயோமிலோ குலியனாவின் பிரதான உரையும், சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் (IBA) பணிப்பாளரும் ஜோர்ஜியா தூதரகத்தின் கௌரவத்துக்குரிய தூதுவர் நாயகமுமான டியான் கோம்ஸ், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டத்தின் தலைவர் பேராசிரியர் யமுனா சிறிவர்தன, NDB சட்டப் பிரிவின் உபதலைவர் மெலடி விக்கிரம நாயக்க, போன்ற நபர்களின் வழிகாட்டலிலான அறிவார்ந்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன் CPM ஸ்ரீலங்காவின் தொழில்சார் மகளிர் பிரிவின் பிரதித் தலைவர் ருவைஹா ரசிக் இந்நிகழ்வை நெறிப்படுத்தினார்.

# GIPA உடன் வரலாற்று சாதனை படைத்துள்ள ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட்




பொதுக் காப்புறுதித்துறையைச் சேர்ந்த விற்பனை நிபுணர்களின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் உலகின் முதலாவது பிரத்தியேகமான கௌரவிப்புத்திட்டமான General Insurance Pinnacle Achiever (GIPA) விருதை ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) அறிமுகம் செய்துள்ளது. பொதுக் காப்புறுதி விற்பனைத்திறனை கௌரவிக்கும் வகையில் இந்தத்திட்டம் அமைந்துள்ளதுடன், விற்பனைச் சிறப்பில் சர்வதேச நியமங்களை ஏற்படுத்துவதற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது.

60 வருடகால உறுதியான சந்தைப் பிரசன்னத்தைக் கொண்டாடும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் லிமிடெட், தொழிற்துறையில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவையை இனங்கண்டிருந்தது. அத்துடன், பொதுக் காப்புறுதி விற்பனை நிபுணர்களின் வெற்றிகரமான செயற்பாடு மற்றும் அர்ப்பணிப்பை கொண்டாடும் சர்வதேச, சுயாதீன கட்டமைப்பு ஒன்று காணப்படாமை, அவர்களின் அபிவிருத்தியை ஊக்குவிக்காமை மற்றும் தொழிற்துறை மட்டத்தில் பொதுக்காப்புறுதி விற்பனை நியமங்களை நிறுவுவதில் காணப்படும் இடைவெளியையும் இனங்கண்டிருந்தது.

ஆயுள்காப்புறுதித்துறை மில்லியன் டொலர்வட்ட மேசை (MDRT) மற்றும் ஆயுள்காப்புறுதி சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வு சம்மேளனத்தினால் (LIMRA) அங்கிகரிக்கப்பட்ட பயிற்சித்திட்டங்கள் போன்றவற்றை கொண்டிருந்த போதிலும், பொதுக் காப்புறுதித் துறையைச் சேர்ந்த நிபுணர்களுக்கு அவற்றுக்கு நிகரான எவ்விதமான திட்டங்களும் இல்லை.

# 2024 இல் திரண்ட வெற்றியை கொண்டாடிய யூனியன்அஷ்யூரன்ஸ்








இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், அதன் தேசிய வியாபார அறிமுகம் 2024 நிகழ்வை கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது. "Unstoppable Together" எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, நிறுவனத்தின் திரண்ட நோக்கு மற்றும் ஒருமைப்பாட்டுக்கான எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. நிறுவனத்தின் வளர்ச்சிக்காக சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தி செயலாற்றியிருந்த ஆலோசகர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருந்தனர். பெறுமதி வாய்ந்த காப்புறுதிதாரர்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் அவர்களின் திறன்கள் மற்றும் ஒப்பற்ற அர்ப்பணிப்பு போன்றவற்றை கௌரவித்திருந்ததுடன், வெற்றிகரமான செயற்பாட்டின் பிரதான தூண்களாக இந்த நபர்களையும், முகவர் விநியோக பிரிவையும் கொண்டாடியிருந்தது. இந்த ஆண்டின் முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்த Fast Starter போட்டியில் சிறப்பாக செயலாற்றியிருந்த 170க்கும் அதிகமான ஆலோசகர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது. ஆலோசகர் பிரிவில் தேசிய வெற்றியாளராக டேவிட் தினேஷ் பாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும் பிராந்திய வெற்றியாளர்களும் கௌரவிக்கப்பட்டிருந்தனர். சிறிய மற்றும் நடுத்தரளவு பிரிவில் வாரியபொல பிராந்தியம் வெற்றியீட்டியிருந்ததுடன், பாரிய பிரிவில் புறக்கோட்டை பிராந்தியம் வெற்றியீட்டியிருந்தது. Fast Starter Zonal விருதுகள் பிரிவில், சிறிய பிரிவில் Northern Zone 1 வெற்றியீட்டியதுடன், நடுத்தரளவு முதல் பாரிய பிரிவில் Colombo Central Zone வெற்றியீட்டியிருந்தது.

# நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் 'கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட ஓர்உறவு'



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி முன்னெடுத்திருந்த “கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட ஓர்உறவு” திட்டத்தின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.

வங்கியின் ரெமிட்டன்ஸ் நாளிகையை பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டிருந்த இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, மூன்று வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு வெளிநாடுகளில் வசிக்கும் தமது அன்புக்குரியவர்களுடன் இணைவதற்கான விமான டிக்கட் பரிசாக வழங்கப்பட்டது.

ஜேர்மனியின் செந்தில் செல்வம் செல்வரட்னம், கனடாவின் ஸ்ரீகபிலன் சுபஸ்ரீ மற்றும் பிரான்ஸின் சாலினி அழகப்பன் ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டதுடன், அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு டிக்கட்கள் வழங்கப்பட்டிருந்தன.

பணத்தை அனுப்புபவரையும் பெற்றுக்கொள்பவரையும் அனுகூலம் பெறச்செய்யும் வகையில் இந்தத்திட்டம் அமைந்திருந்ததுடன், நாட்டின் நிதிஉறுதித்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதாகவும் அமைந்திருந்தது.

“கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உறவு” திட்டத்தின்போது, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் பண அனுப்புகை சேவையை பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன், அதனூடாக அவர்களுக்கு இந்தவெற்றியாளர் தெரிவில் பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும், மாபெரும் இறுதி வெற்றியாளர் தெரிவுக்கு முன்னதாக, பங்குபற்றுநர்களுக்கு மாதாந்த அடிப்படையில் பெறுமதி வாய்ந்த சுப்பர்மார்க்கெட் வவுச்சர்களை வெல்லும் வாய்ப்பும் வழங்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் 5 பேராசிரியர் க. கைலாசபதியின் பிறந்த நாள்..!

# புதுநெறி காட்டிய பேராசான் கைலாசபதி..!

திறனாய்வுத்துறையில் ஒளி விளக்காகத் திகழ்ந்த பேராசிரியர் கைலாசபதியின் எழுத்துக்களை இன்றைய இளம் படைப்பாளிகள் அவசியம் படித்திட வேண்டும்.

இலக்கியவாதியாக பத்திரிகை ஆசிரியனாக பல்கலைக்கழக ஆசானாக நிர்வாகியாக அத்தனை துறையிலும் தமது ஆளுமையை இளம் வயதிலேயே நிரூபித்து அழியாத் தடம்பதித்துச் சென்றவர் கைலாசபதி.

இலக்கியத் திறனாய்விலே சமூகவியல் நோக்கினை வலியுறுத்தியவர்.

இலக்கியம் படித்து இரசிப்பதற்கு மட்டுமே உரியதென்ற "கலை கலைக்காக" கோட்



**1982 டிசம்பர் 6ஆம் திகதி சிந்திப்பதை நிறுத்தும்வரை முற்போக்கு இலக்கியம் குறித்தும் அதன் வளர்ச்சிக்கான பணிகள் குறித்தும் ஓயாது சிந்தித்துச் செயற்பட்டு வந்தார்.**

பாட்டை வன்மையாகக் கண்டித்தவர்.

உருவத்தைவிட உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் வேண்டுமெனவும் இலக்கியத்திற்குச் சமூகப்பணி இருக்கிறதெனவும் வலியுறுத்தினார்.

இக்கருத்துக்களால் வந்த எதிர்வாதங்களை துணிவுடன் எதிர்கொண்டு தகர்த்தெறிந்தார்.

இக்காலத்தில் அவ்வப்போது பத்திரிகை சஞ்சிகை வானொலி மேடைகள் பலவற்றிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிய முயல்வோர்க்கு பாடங்களாக உதவிடும் எனலாம்.










1950ஆம் ஆண்டுகளில் எழுதத் தொடங்கியவர் 1960ஆம் ஆண்டுகளில் தமிழ்த் திறனாய்வுத்துறையில் ஒரு புது நெறி காட்டிய சக்தி வாய்ந்த மனிதனாக முத்திரை பதித்தார்.

1982 டிசம்பர் 6ஆம் திகதி சிந்திப்பதை நிறுத்தும்வரை முற்போக்கு இலக்கியம் குறித்தும் அதன் வளர்ச்சிக்கான பணிகள் குறித்தும் ஓயாது சிந்தித்துச் செயற்பட்டு வந்தார்.

அன்று எழுத்தாளர்கள் பலரும் தமது படைப்புகள் குறித்து கைலாசபதி என்ன கருதுகிறார் என அறிவதில் ஆர்வங்கொண்டிருந்தனர். தமது படைப்புகளுக்கு அவரிடம் அணிந்துரை பெறுவதில் பலர் பெருமைகொண்டனர்.

**தமிழகத்துப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் அவரது எழுத்துக்களை விரும்பிப்பெற்று பிரசுரித்தன. தாமரை சாந்தி சரஸ்வதி செம்மலர் தீக்கதிர் ஜனசக்தி ஆராய்ச்சி மற்றும் பல ஏடுகள் அவரது கட்டுரைகளை விரும்பியேற்றுப் பிரசுரித்தன.**

தமிழ் எழுத்தாளர்தம் படைப்புகளின் வழியை திசையை நிர்ணயிக்கும் பணியை கைலாசபதி தன் ஆளுமைக்குட்படுத்தியிருந்தார் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். தமிழகத்துப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் அவரது எழுத்துக்களை விரும்பிப்பெற்று பிரசுரித்தன.

தாமரை, சாந்தி, சரஸ்வதி, செம்மலர், தீக்கதிர் ஜனசக்தி ஆராய்ச்சி மற்றும் பல ஏடுகள் அவரது கட்டுரைகளை விரும்பியேற்றுப் பிரசுரித்தன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய கலை இலக்கியப் பேரவை போன்றவற்றின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

அன்று சீனச் சார்பு கம்யூனிசக் கட்சியெனச் சொல்லப்பட்ட தோழர் என். சண்முகதாசன் தலைமையிலான கட்சியின் ஆதரவாளராக செயற்பட்டார். கட்சிப் பத்திரிகையான "தொழிலாளி" பத்திரிகையில் புனைப்பெயரில் பல கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார்.

கட்சியின் ஆதரவுடன் செயற்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் போராட்ட நடவடிக்கைகளை ஆதரித்தும் எழுதிவந்தார்.

ஒப்பியல் ஆய்வு செய்து நவீன தமிழிலக்கியத்தில் அழியா இடம் பெற்ற பேராசிரியர் க. கைலாசபதியின் நினைவுகள் வரலாற்றில் நீடித்திருக்கும்..!

நூலுருவில் வெளிவந்த அவரது இலக்கியத் திறனாய்வு நூல்கள் சில.. ..

1. இரு மகா கவிகள்
2. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
3. தமிழ் நாவல் இலக்கியம்
4. ஒப்பியல் இலக்கியம்
5. அடியும் முடியும்
6. இலக்கியமும் திறனாய்வும்
7. பாரதி நூல்களும் பாட பேத ஆராய்ச்சியும்
8. திறனாய்வுப் பிரச்சினைகள்
9. சமூகவியலும் இலக்கியமும்
10. கவிதை நயம் (இணையாசிரியர்)
11. இலக்கியச் சிந்தனைகள்
12. ரமில் கீரோயிஸ்ற் பொயற்றி (ஆங்கிலம்)

இவரது மறைவின் பின் அவரது ஆளுமை பணிகள் குறித்தும் பல நூல்கள் வெளிவந்துள்

**வி. ரி. இளங்கோவன்**

# O/L மாணவர்களுக்கான அறிவொளி வினாத்தாள்

## கண்டியில் 36% பாடசாலைகள் விண்ணப்பிக்கவில்லை

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் ஒவ்வொரு வருடமும் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அறிவொளி வினாத்தாள் தொகுதிகளை வழங்கி வருகிறது. இம்முறையும் இதற்காக பாடசாலைகளிடம் இருந்து விண்ணப்பங்களை கோரும் விதத்தில் Google form விண்ணப்பம் கடந்த 3 வாரகாலமாக சமூக வலைத்தளங்களிலும், நேரடியாகவும் பகிரப்பட்டு வந்தது.

இம்முறை பெருந்தோட்ட (மலையக) பாடசாலைகளை 100% முழுமையாக இத்திட்டத்திற்கு உள்வாங்கும் விதத்தில் மேற்படி link அனைத்து சமூக வலைத்தளங்களிலும் பகிரப்பட்டது. அதன்படி கடந்த மார்ச் 31ஆம் திகதி முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், சுமார் 400 பாடசாலைகளுக்கும் மேல் விண்ணப்பித்து இருந்தன. அதில் 361 மலையக பெருந்தோட்ட பாடசாலைகளும் அடங்கும். மலையகத்தில் கண்டி மாவட்டத்திலிருந்து 36% பாடசாலைகள் விண்ணப்பிக்காத போதிலும், ஏனைய மாவட்டங்களில் 95% பாடசாலைகள் விண்ணப்பித்துள்ளன. அதிலும் அதிகமான பெருந்தோட்ட பாடசாலைகளை கொண்ட நுவரெலியா மாவட்டத்திலிருந்து 100% பாடசாலைகளும் விண்ணப்பித்துள்ளன.

அதேபோல் மொனராகலை, காலி, மாத்தறை, மாவட்டங்களிலும் 100% பெருந்தோட்ட பாடசாலைகள் விண்ணப்பித்துள்ளன. இந்நிலையில் கண்டி மாவட்டத்தில் 75 பாடசாலைகளில் 27 க்கும் அதிகமான பாடசாலைகள் விண்ணப்பிக்காதது வருத்தமளிக்கிறது. விசேடமாக மலையகத்திற்கு பல்வேறு கல்விச்சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கும் எமது மன்றத்துடன் இக்குழுவில் இணைந்திருக்கும் அனைவரும் ஒத்துழைப்பார்களாயின் முழுமையாக மலையக பாடசாலைகளை உள்வாங்கி எமது சேவைகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

**மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்
கொழும்பு**

# சிகிச்சை மூலம் பன்றி சிறுநீரகம் பொருத்தப்பட்ட முதல் நபர்

உலகில் முதன்முறையாக பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்ட நபர், சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார். 62 வயதான அந்த நபருக்கு, மரபணு மாற்றப்பட்ட பன்றியின் சிறுநீரகம், அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

அவர் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் (MGH) இரண்டு வாரங்களுக்கு முன் அனுமதிக்கப்பட்டார். மருத்துவ உலகில் புதிய சாதனையாகக் கருதப்படும் இந்த சிகிச்சை முடிந்து அவர் கடந்த புதன்கிழமை (ஏப்ரல் 3) வீடு திரும்பினார்.

மரபணு மாற்றப்பட்ட பன்றிகளின் உறுப்புகள் மனிதர்களுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்படுவது கடந்த காலங்களில் தோல்வியடைந்தது. ஆனால் இந்த நடைமுறையின் வெற்றி, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் துறையில் ஒரு வரலாற்று மைல்கல் என்று விஞ்ஞானிகளால் பாராட்டப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் பொஸ்டன் நகரத்தில் உள்ள ஹாவார்ட் மருத்துவப் பள்ளியின் மிகப் பெரிய பயிற்சி மருத்துவமனையான எம்ஜிஹெச் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் இந்தச் செய்தியைத் தெரிவித்தது. மருத்துவமனை வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், மாசசூசெட்ஸ் மாகாணத்தின் வெய்மவுத் பகுதியைச் சேர்ந்த ரிச்சர்ட் 'ரிக்' ஸ்லேமன் என்பவர், மிகத் தீவிரமான சிறுநீரக நோயுடன் போராடி வந்ததாகத் தெரிவித்தது. அவருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# கொலைகாரன் யார் என்பதும் தெரிந்துவிட்டது உண்மையில் தோமஸ்தானா அதில் சம்பந்தப்பட்டது!

எல்லோரையும் ஒரு முறை பார்த்து விட்டு மீண்டும் பேச ஆரம்பித்தார் சிரஞ்சீவி.

"அதுமட்டுமல்ல செல்வராகவனுடன் ஏதாவது சண்டை பிடித்து விட்டால் அடுத்த கணமே தோமஸைத் தேடி ஓடி விடுவாள் துர்கா. அவரும் விபரங்களைக் கேட்டுவிட்டு இவளை சமாதானப்படுத்தி அனுப்பி வைப்பார். இதனால் செல்வராகவனைப் பற்றியும் தோமஸைப் பற்றியும் நிறையவே சுவாரஸ்யமான விஷயங்களை அதில் எழுதி இருப்பாள் என்று நினைக்கிறேன்!"

பொலிஸ் குழுவினர் செல்லும் வரை அமைதியாக இருந்த துர்கா,

அவர்கள் சென்ற பிறகு,

"நீங்கள் சுத்த மோசம் சிரஞ்சீவி சேர். நான் எழுதும் அந்த டைரியைப் பற்றி அவர்களின் முன்னால் ஏன் பேசினீர்கள்" என்று அவரிடம் கோபித்துக் கொண்டாள்.

"நீங்கள் மயக்க முற்றிருந்த நிலையிலும் அந்த டைரியை கட்டிப்பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தவர்கள் அது உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்களே!" என்று சொல்லியபடியே,

துர்காவின் தலையை அன்புடன் தடவி விட்டார்.

முக்கியமான ஒரு காரியத்திற்காக அவசரமாக வெளியே போய்விட்டு,

மீண்டும் ரெஸ்ட் ஹவுசுக்கு திரும்பி வந்தபோது,

அங்கே சோகமே வடிவாக அமர்ந்திருந்த சொலமனைப் பார்த்ததும்,

வியப்பினுள் விழுந்தார்.

"ஏன், என்னாச்சி சொலமன். ஏன் இப்படி சோகமாக இருக்கிறீங்க, துர்கா, சிந்துஜன் எல்லோரும் எங்கே போனார்கள்!" சுற்றிலும் பார்த்தபடியே கேட்டார் சிரஞ்சீவி.

"தோமஸிடமிருந்து ஏதோ தகவல் ஒன்று வந்தது. இருவரும் உடனே புறப்பட்டுப் போய் விட்டார்கள்!"

அவர் இப்படிச் சொல்லும் போது,

அப்படி அவர்கள் போனதை,

சொலமன் விரும்பவில்லை,

அவரது வதனம் எடுத்துக் காட்டியது!

"ம், இப்போது புரிகிறது சொலமன், துர்காவோடு சிந்துஜனும் போனது உங்களுக்குப் பிடிக்கவில்லை. அப்படித்தானே?

"ம், உங்கள் மருமகன் துர்காவுடன் எல்லையை மீறி செயற்படுவதாகத் தெரிகிறது!" அலட்சியமாகச் சொன்னார் சொலமன்.

"ஆமாம் அதென்றால் உண்மைதான் சொலமன். துர்காவோடு மட்டுமல்ல யாருடனும் அவன் அப்படித்தான் நடந்து கொள்வான். அவன் அப்படித்தான்!"

சொலமன் ஏதோ சொல்ல வாய் திறக்க அதேநேரம்,

"சேர் உங்களைத் தேடி பாண்டியன் என்ற ஒருவர் வந்திருக்கிறார்!" வந்த படியே சொன்னார் ஹோட்டல் உரிமையாளர்.

"அப்படியா, வரச் சொல்லுங்கள்" என்றார் சிரஞ்சீவி.

அடுத்து,

நடக்க முடியாமல்,

தள்ளாடியபடி வந்தார் ஒருவர்,

நல்ல மதுபோதையில் இருந்தார்.

"சி, சி, சிரஞ்சீவி!" அவரைப் போலவே,

வார்த்தைகளும் தடுமாறின!

"ஆமாம், நான்தான் சிரஞ்சீவி என்ன விஷயம் சொல்லுங்க?" என்றார் சிரஞ்சீவி,

"அந்த செல்..வராகவனை கொலை செய்தவனை கண்டு பிடித்துக் கொடுத்தால் எனக்கு... எவ்வளவு.. பரிசு கிடைக்கும்!" தடுமாறிய படியே அவன் கேட்டான்.

"ம், இவ்வளவுதான் என்று இதுவரையில் நாங்கள் தொகை எதையும் நியமிக்கவில்லை. ஆனாலும் பொதுவாகவே கொலைகாரனை பிடித்துக் கொடுத்தாலோ அல்லது பிடிப்பதற்கு ஏதாவது துப்புக் கொடுத்தாலோ நாங்கள் பரிசு கொடுப்பது வழக்கம்!"

"அப்படீன்னா, அந்த பணத்தை எனக்குக் கொடுங்க□"

"யார் நீங்க?" அவனை முறைத்துப்பார்த்த படியே கேட்டார்.

"நானா? நான், நான் தான்.. பாண்டியன். தோமஸ் ஐயாவின் வீட்டுக் காவல்காரன்..ம்.. இன்னிக்கு.. என்னை வேலையில் இருந்து.. நிப்பாட்டீட்டாங்க..!"

"ஏன்.. நீங்க என்ன தப்புப் பண்ணினீங்க..?"

"எந்தத் தப்புமே, பண்ணல்ல, இந்த மாதிரி குடிச்சிட்டு.. இருந்ததினால தோமஸ் ஐயா, வேலையில இருந்து என்னைய தூக்கிட்டாரு.. ம்.. நீங்களே சொல்லுங்க.. எங்கள மாதிரி கஷ்டப்படுறவங்களால..இந்த மாதிரி கொஞ்சம் குடிக்காம இருக்க முடியுமா..?"

"சரி... செல்வராகவனை கொலை செய்தவனை உங்களுக்குத் தெரியுமா?"

"ஆமாம்.. சேர்..எனக்குத் தெரியும்... ஆனா சொல்ல மாட்டேன்... முதலில் பரிசு வேண்டும்..!"

"ம்.. இதோ பாருங்கள் பாண்டியன் இப்படியெல்லாம் சொல்லி பரிசை வாங்கிக் கொள்ள முடியாது. கொலைகாரனைப் பிடித்து தண்டனை கொடுத்த பிறகுதான் பரிசு கொடுப்பார்கள்...!"

"ஓ... அதுவும் அப்படியா... சரி அப்போ சொல்லுறன் கேட்டுக்கோங்க...செல்வராகவன் சேரைக் கொலை செய்தது தோமஸ் சேர்தான்...!"

பாண்டியன் இப்படிச் சொன்னதும்,

படாரென்று நிமிர்ந்து அமர்ந்து கொண்டார் சொலமன்.

சிரஞ்சீவியின் புருவங்கள் உயர்ந்தன,

நெற்றியில் கோடுகள் விழுந்தன.

"தோமஸ் சேரா, உன்னால் அதை நிரூபிக்க முடியுமா?" படாரென்று கேட்டார் சிரஞ்சீவி.



"என்னால் முடியாதென்று யார் சொல்ல முடியும்.. ஆனால் ஒண்ணு அவரை துப்பாக்கியால் சுட்டதை நான் பார்க்கவில்லை. மற்றைய எல்லா விஷயங்களுமே எனக்குத் தெரியும் சேர். சின்னம்மா வந்தபிறகுதான் இவை எல்லாம் நடந்தன. நான் டவுனுக்குப் போய் ஒரு ஷொட்டைப் போட்டுவிட்டு வரும்போது பொழுது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. வீட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த பிசாசுப் பெண்ணிடமிருந்து தப்பவே முடியாது! நான் வெளியே போயிட்டு லேட்டா வந்தா, அன்னிக்கி எனது சாப்பாடு கட்டாகிவிடும். நேரத்துடனேயே கதவுகளைப் பூட்டிக் கொள்வாள்! அன்றும் அப்படித்தான் நடந்தது. அதனால் நான் கராஜில் அமர்ந்திருந்தேன்.

"சரி... அப்புறம் என்ன நடந்தது?" இடையில் புகுந்தார் சிரஞ்சீவி.

"நொண்டி... நொண்டி நடந்து வந்த சின்னம்மா. கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்து அவங்களை உள்ளே எடுத்துவிட்டு மீண்டும் கதவைச் சாத்திக் கொண்டார் ஐயா!"

"அதன் பிறகு அந்தக் கதவு திறக்கப்படவே இல்லையா?"

"சிறிது நேரத்திற்கு பிறகு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த தோமஸ் ஐயா கோவில் தெருப்பக்கம் போனார். அப்போது ஜன்னல் கதவு திறந்துதான் இருந்தது. உள்ளே பாய்ந்து சென்று சமையல் அறைக்குள் புகுந்து சாப்பிட்டு விட்டு வரத்தான் நினைத்தேன். ஆனாலும் அதுவும் முடியாமல் போய்விட்டது!"

"ஏன்?"

"ஜன்னலுக்கு அருகிலேயே ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்து கொண்டு பத்திரிகைத் துண்டொன்றைப் படித்துக் கொண்டிருந்தார் சின்னம்மா!"

"ம். பிறகு?"

"அப்போதுதான் அந்த வெடிச் சத்தம் எனக்குக் கேட்டது! ஆனாலும் அந்தச் சத்தம் சின்னம்மாவுக்குக் கேட்கவில்லை, என்றுதான் நினைக்கிறேன்!"

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அந்த பத்திரிகை துண்டில் இருந்த சின்னம்மாவின் பார்வை திரும்பவே இல்லை. நான் மீண்டும் திரும்பி கராஜுக்கு போகப் போனபோது ஐயா வந்து கொண்டிருந்தார். அவர் பார்த்து விடுவாரோ என்ற பயத்தில் எதிரில் இருந்த பூ மரங்களுக்கு பின்னால் மறைந்து கொண்டேன். என் அருகால்தான் அவர் நடந்து சென்றார். பால்போல் நிலவு இருந்ததால் அவரது முகம் நன்றாகவே தெரிந்தது. எதையோ பார்த்து பயந்தவரைப் போல அவர் முகம் வெளுத்துப் போயிருந்தது. அதேநேரம் அவர் நடக்கும்போது என்னவோ பேசிக் கொண்டே நடந்தார். அவர் என்ன பேசிக் கொண்டு போகிறார் என்று நான் உற்றுக் கேட்டேன்!"

"என்ன பேசிக் கொண்டு போனார்?"

பரபரப்புடன் கேட்டார் சிரஞ்சீவி.

"ம். இன்று வசமாக சிக்கிக் கொண்டான் என்று சொல்லிவிட்டு, ஏதோ ஒரு ஊஞ்சலைப் பற்றியும் சொல்லிக் கொண்டு போனார். அதன்பிறகு கால் சட்டைப் பையில் இருந்து சிறிய துப்பாக்கி ஒன்றை எடுத்து அதைத் திறந்து இரண்டு முறை பார்த்துவிட்டு, மீண்டும் பையில் போட்டுக் கொண்டார். பிறகு வீட்டுக்குள் சென்றார்.

இதைக் கேட்டதும்,

சொலமனின் முகத்தில்,

பூரண சந்திரன் தோன்றினான்.

"ம். கேட்டீங்களா சிரஞ்சீவி...இப்போ இதுக்கு என்ன சொல்றீங்க?"

அவரை உற்றுப் பார்த்தபடியே கேட்டார் சொலமன்.

ஆனாலும்,

சிரஞ்சீவி பதில் ஏதும் சொல்லாமல் மீண்டும் பாண்டியனின் பக்கம் திரும்பி,

"ம். பாண்டியன் நீங்கள் கொஞ்சம் வெளியில் இருங்கள். நான் பிறகு கூப்பிடுகிறேன்!" என்றார்.

"ம். உண்மையான கொலைகாரன் யார் என்று இப்போது உங்களுக்குப் புரிந்திருக்குமே. சந்தேகமே இல்லாமல் அது புரிந்திருக்கும் இல்லையா?"

கொலைகாரனை கண்டு பிடித்தேனோ, ம்... யார் கொலைகாரன்?

சிரித்தபடியே கேட்டார் சிரஞ்சீவி.

"அதில் இனி சந்தேகமே வேண்டாம். தோமஸ்தான் கொலைகரன்!" பூரிப்புடன் சொன்னார் சொலமன்!

மெல்ல தலையை ஆட்டியபடியே,

"அதுவெறும் சந்தேகம் மட்டும் தானே இல்லையா?" என்று கேட்டார்.

"ஆமாம். அந்த சந்தேகத்தின் மீது நீங்கள் அவரைக் கைது செய்வதற்கு எந்த தடையுமே இல்லையே?"

"ம். இன்றிரவு நான் அவரை சந்திக்க முடிவு செய்திருக்கிறேன்!"

ஆனாலும்,

அவர் எதிர் பார்க்காத சம்பவம் ஒன்று நடக்கப் போகிறது என்பது அவருக்குத் தெரியாது!

(தொடரும்)


Senthooram
செந்தூரம்
2024 ஏப்ரல் 7 ஞாயிற்றுக்கிழமை

# தோல்வியில் சாதனை படைத்த 'தேர்தல் மன்னன்'



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

தோல்வி என்பது என்னவென்று பத்மராஜனிடம்தான் கேட்க வேண்டும். 2024 இந்திய பாராளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடப்போகிறார். அதனை கேட்டு ஊர் மக்களுக்கு சிரிப்பாக வரும்... ஆனால் பத்மராஜனோ மீசையை முறிக்கிவிட்டுக்கொண்டு மீண்டும் ஒருமுறை ஓட்டுக் கேட்க புறப்பட்டு விட்டார்.

அவர் தேர்தலில் போட்டியிடுவது இது ஒருமுறை இரண்டு முறையல்ல 239 ஆவது தடைவை. முந்தைய 238 தடவைகளும் தோல்வியைத்தான் சந்தித்திருக்கிறார்.

வாகனச் சக்கரங்களை பழுது பார்க்கும் கடையை நடத்தி வரும் 65 வயதான கே. பத்மராஜன் முதல் முறை தேர்தலில் போட்டியிட்டது 1988 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தனது சொந்த ஊரான மேட்டூரில் தான். ஆனால் அன்று தொடக்கம் இன்று வரை அவருக்கு ஆதரவாக பெரிதாக யாரும் ஓட்டுப் போட்டதாகத் தெரியவில்லை.

என்றாலும் சாதாரண குடிமகனுக்கு தேர்தலில் பங்கேற்க முடியும் என்பதற்காகவே தான் போட்டியிடுகிறேன் என்கிறார். கழுத்தில் துண்டைப் போட்டுக் கொண்டு தமிழ்நாட்டு பாணியில் பெரிய அரசியல்வாதிபோல் தொற்றம் தரும் பத்மராஜன், 'அனைத்து வேட்பாளர்களும் வெற்றிக்காகத்தான் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். ஆனால், நான் அப்படியில்லை' என்கிறார்.

என்னை பொறுத்தவரை வெற்றி என்பது பங்கேற்புத் தான் என்று கூறும் அவர் தனது தோல்வி பெரும்பாலும் எதிர்பார்த்தது என்றபோதும் 'மகிழ்ச்சியுடன் தோல்வியை சந்திப்பேன்' என்கிறார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெயர்பெற்ற இந்தியாவில் 2024 ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் தேர்தல் ஆறு வாரங்கள் நீடிக்கும். இதில் பத்மராஜன் தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்தில் பாராளுமன்ற ஆசனத்திற்கு போட்டியிடுகிறார்.

'தேர்தல் மன்னன்' என்று உள்ளூர் மக்களால் செல்லமாக அழைக்கப்படும் பத்மராஜன் ஜனாதிபதி தேர்தல் தொடக்கம் உள்ளூர் தேர்தல்கள் வரை போட்டியிட்டிருக்கிறார்.

இந்தக் காலத்தில் அவர் பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் பிரதமர் அட்டல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தியிடம் தோல்வியை சந்தித்திருக்கிறார்.

'வெற்றி என்பது இரண்டாவது பட்சம். யார் எதிர்க்கட்சி தலைவர் என்பது எனக்குக் கவலையில்லை' என்கிறார் அவர்.

ஒருவகையில் பத்மராஜனுக்கு தனது தோல்வியின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பது மாத்திரம் தான் கவலை. ஆனால் அதுவும் சும்மா வருவதில்லை. கடந்த மூன்று தசாப்தங்களில் வேட்புமனுத் தாக்கலுக்காகவே அவர் பல இலட்சம் ரூபாக்களை செலவு செய்திருக்கிறார்.



இதில் தேர்தலில் போட்டியிடுவதற்காக வைக்கப்படும் கட்டுப்பணமான இந்திய நாணயப்படி ரூபா 25,000 உம் கூட அடங்கும். அதாவது தேர்தலில் 16 வீதத்துக்கு மேல் வாக்குகளை வெல்லாவிட்டால் இந்தக் கட்டுப்பணமும் திருப்பித் தரப்படுவதில்லை. பத்மராஜன் இந்தக் கட்டுப்பணத்தை திருப்பிப் பெற்றதாக வரலாறு இல்லை.

இந்தத் தோல்விகளால் அவர் பெற்ற ஒரே வெற்றி லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது மாத்திரம் தான். இந்தப் புத்தகம் இந்தியர்கள் படைக்கும் சாதனைகளை பதிவு செய்யும் புத்தகமாகும். இதில் இந்தியாவில் அதிகம் தோல்வியை சந்தித்த வேட்பாளர் என்று பத்மராஜன் சாதனை படைத்திருக்கிறார்.

2011 ஆம் ஆண்டு தேர்தலில் பத்மராஜன் இதுவரை தனது வாழ்நாளில் அதிக வாக்குகளை பெற்றிருக்கிறார். அந்த சட்டசபை தேர்தலில் மேட்டூரில் போட்டியிட்ட அவர் 6,273 வாக்குகளை வென்றிருக்கிறார். ஆனால் தேர்தலில் வெற்றி பெற 75,000 மேல் வாக்குகளை பெற வேண்டும்.

'நான் ஒரு ஓட்டைக் கூட எதிர்பார்க்கவில்லை. ஆனால் சிலர் எனக்கு ஆதரவு அளிக்கிறார்கள்' என்கிறார்.

தனது வாகனச் சக்கரங்களை பழுதுபார்க்கும் கடையை நடத்துவது தவிர, பத்மராஜன் ஹோமியோபதி வைத்தியம் பார்ப்பதோடு உள்ளூர் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராகவும் செயற்படுகிறார். ஆனால் இந்த அனைத்து வேலைகளுக்கு மத்தியிலும் தேர்தலில் போட்டியிடுவதை முக்கிய வேலையாக பார்த்துவருவதாக அவர் கூறுகிறார்.

'இது காண்பிக்கும் ஈடுபாடு பற்றியது. மக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள்.

எனவே, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நான் முன்மாதிரியாகச் செயற்படுகிறேன்.'

ஒவ்வொரு முறை வேட்புமனு தாக்கல் செய்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான ஆவணங்கள், அடையாள அட்டைகள் அனைத்தைனும் அவர் பாதுகாப்பாக சேகரித்து வைத்திருக்கிறார். மீன், மோதிரம், தொப்பி, தொலைபேசி என்று ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சின்னத்தில் போட்டியிட்டிருக்கும் பத்மராஜன் இம்முறை தனது வேலையுடன் தொடர்புபட்ட சக்கர சின்னத்தில் போட்டியிடுகிறார்.

பத்மராஜனின் இந்த தோல்விகள் பலரின் கேலிக்கு காரணமானபோதும், அவரோ தோல்வியில் இருந்து எவ்வாறு மீண்டெழுவது என்று மாணவர்களுக்கு பாடம் எடுக்கிறார். அதனை அவர் தனது தேர்தல் பிரசாரமாகவே வைத்திருக்கிறார்.

'நான் வெற்றி பெறுவது பற்றி நினைக்கவில்லை. தோல்வி சிறந்தது' என்று கூறுகிறார். 'அந்த மன நிலையுடன் நாம் இருந்தால் எந்த மன அழுத்தமும் ஏற்படாது.'

தனது கடைசி மூச்சு இருக்கும் வரை தேர்தலில் போட்டியிடப் போவதாககுறிப்பிடும்பத்மராஜன், தேர்தலில் வெற்றி பெற்றால் அது தமக்கு பேரதிர்ச்சியாக இருக்கும் என்கிறார். அப்படி ஏற்பட்டால் 'மாரடைப்பு வந்துவிடும்' என்று அவர் உறக்கச் சிரித்தபடி கூறுகிறார்.





"உன் வீட்டு நாய் என்னைக் கடிச்சிட்டுது!"

"இருக்கவே இருக்காது! அது அசைவம் சாப்பிடாதே!"

"பிழைக்கமாட்டேன்னு தெரிஞ்சும் ஏன் டாக்டர் ஆபரேஷன் பண்றீங்க?"

"நான் பிழைப்பேனே..."






"சி.பி.ஐ. விசாரணைக்கு தலைவர் என்ன சிரிச்சுகிட்டே போறாரு?"

"எல்லா கேள்வியும் அவுட் ஆகிடுத்தாம்."

"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. இது மாதிரி வேற ஒரு பழமொழி சொல்லு."

"சீரியல் பார்க்கின் சமையல் இல்லை."



"உங்க பொண்ணுக்கு பார்த்திருக்கிற மாப்பிள்ளை பெரிய பணக்காரராமே?"

"ஆமாம்... வெங்காய வியாபாரி!"





"எங்க வீட்டுல நேத்து திருடன் புகுந்து..."

"எத்தனை பவுன் தங்கம், வெள்ளி திருட்டு போச்சு?"

"எல்லாம் அப்படியே இருக்குதுங்க. சமையலறையில் இருந்த வெங்காயத்தை யெல்லாம் தூக்கிட்டு போயிட்டாங்க?"



"டாக்டர்! எனக்கு ஆபரேஷன் பண்ணி முடிச்சதும் அந்த சாமி உண்டியலில் பணம் போடறீங்களே! எனக்கு சீக்கிரம் குணமாகணும்னு வேண்டிக்கிட்டீங்களா?"

"இல்லை, நான் எப்போ தப்பா ஆபரேஷன் பண்ணாலும், அப்போ உண்டியலில் 'அபராதம்' பணம் போடுவேன்!"

"என்னைக் கைவிட்டுட மாட்டீங்களே சுரேஷ்?"

"கையில இவ்வளவு மோதிரம் போட்டிருக்கியே... விட்டுடுவேனா பிரியா?"





"எனக்கு 'ஜன கண மன...' பாட்டு ரொம்ப பிடிக்கும்."

"எதனால?"

"எங்க வீட்டுல என் மனைவியும் எங்கம்மாவும் சண்டை போட்டுக்கிட்டா உடனே 'ஜன கண மன...' பாடுவேன். உடனே சண்டையை நிறுத்திடுவாங்க!"

"பொண்ணு பார்க்க வந்தபோது மாப்பிள்ளை கேட்ட சமாச்சாரம் எங்களுக்கு அதிர்ச்சியாப் போச்சு!"

"வரதட்சணை நிறைய கேட்டாரா?"

"இல்லைங்க... வெங்காய பஜ்ஜி இருக்கான்னு கேட்டுட்டாரு!"



"ஆனாலும்! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ரொம்ப மோசம்..."

"ஏன்?"

"போகிப் பண்டிகைக்கு பழைய பாய் கேட்கிறாங்க!"

"ஊழல் செய்ய வாய்ப்பு எதுவும் அமையாததால் என்னால் தொடர்ந்து அமைச்சராக பதவி வகிக்க முடியாமல் எனது பதவியை ராஜினாமா செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!"



"வாங்கின கடனைத் தர மாட்டேன்னான்!"

"அப்புறம்?"

"அவன் கிட்டயே அம்பது ரூபா கைமாத்தா வாங்கிட்டு வந்தேன்!"



# ஈரான் சர்வதேச குர்ஆன் கண்காட்சியில் இலங்கை கலைஞர்






ஈரானில் நடைபெற்ற 31வது சர்வதேச குர்ஆன் கண்காட்சியில் இலங்கையைச் சேர்ந்த கலைஞர் பங்கேற்பு ஜே.எம் பாஸித் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற 31வது சர்வதேச குர்ஆன் கண்காட்சியில் இலங்கையைச் சேர்ந்த அரபு எழுத்தணிக் கலைஞர் அமீர் பைசல் பங்கேற்றார்.

மார்ச் 18ம் திகதி முதல் 28ம் திகதி வரை நடைபெற்ற இக்கண்காட்சியில் இந்தியா, பாகிஸ்தான், துனிசியா, போஸ்னியா, ஹெர்சகோவினா, அல்ஜீரியா, இந்தோனேசியா, கென்யா, ஓமன், மலேசியா உட்பட 25 நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் இக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் ரமழான் மாதத்தில் ஏற்பாடு செய்யப்படும் இக் கண்காட்சியில் குர்ஆன் வசனங்கள் மற்றும் போதனைகள் மற்றும் சில இஸ்லாமிய புத்தகங்களின் அரிய கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைக் குறிக்கும் கலைப்படைப்புகள் பார்வைக்கு வைக்கப்படும்.

கலைஞர்கள் பயிலரங்குகளை நடத்தி தங்கள் கலைப்படைப்புகளை கண்காட்சியில் வைக்க வாய்ப்பளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஏழு நாடுகளைச் சேர்ந்த கலாச்சார அமைச்சர்கள், உலக அளவில் பிரபலமடைந்த பல குர்ஆன் ஓதுபவர்கள், உலகெங்கிலும் உள்ள புகழ்பெற்ற அறிஞர்கள் இக் கண்காட்சிக்காக அழைக்கப்பட்டிருந்தனர். அதில் இலங்கை கொழும்பைச் சேர்ந்த அரபு எழுத்தணிக்கலைஞர் அமீர் பைசல் இலங்கைக்கான ஈரான் தூதரகத்தின் அழைப்பின்பேரில் பங்கேற்றார்.

# டுபாய் சர்வதேச திருக்குர்ஆன் மனனப் போட்டியில் பங்கேற்றது மகிழ்ச்சியளிக்கிறது

## இலங்கை தமிழ் மாணவர் பெருமிதம்




டுபாயில் நடந்து வரும் சர்வதேச திருக்குர்ஆன் மனப்பாடப்போட்டியில் பங்கேற்றது பெருமிதம் அளிக்கிறது என இலங்கை தமிழ் மாணவர் எம்.ஆர். முகம்மது (வயது 19) பெருமிதம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது :

நான் இலங்கையின் கண்டி பகுதியில் உள்ள அல் ஹக் கீமியா அரபிக் கல்லூரியில் ஓதி வருகிறேன். டுபாயில் நடந்து வரும் 27வது திருக்குர்ஆன் மனப்பாடப் போட்டியில் தேர்வாக இலங்கை அளவில் போட்டி நடத்தப்பட்டது. அந்தப் போட்டியில் நான் இரண்டாவதாக தேர்வானேன். முதலாவதாக தேர்வானவர் மற்றொரு நாட்டில் நடக்கும் போட்டியில் பங்கேற்க சென்று விட்டார். இதனால் எனக்கு டுபாயில் நடக்கும் போட்டியில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்துள்ளது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்க நான் எனது தந்தை பவாஸ் முபாரக் உடன் இங்கு வந்துள்ளேன்.

அமீரக துணை அதிபரும், பிரதமரும், டுபாய் ஆட்சியாளருமான ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் ஆதரவுடன் சிறப்பான முறையில் இந்தப் போட்டி தினமும் நடந்து வருகிறது. இந்த போட்டியில் பங்கேற்க வெளிநாடுகளில் இருந்து வந்த என்னைப் போன்ற போட்டியாளர்களுக்கு இலவச விமானப் பயணம், நட்சத்திர ஓட்டல் வசதி, அறுசுவை உணவு, போக்குவரத்து வசதி, மருத்துவ உதவி தேவையென்றால் அதற்கான வசதிகள் என பல்வேறு வசதிகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. இதற்காக அமீரக துணை அதிபருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த போட்டியில் நல்ல முறையில் பங்களிப்பை வழங்கியுள்ளேன். நல்ல முடிவை எதிர்பார்க்கிறேன்.

அரபிக் கல்லூரி படிப்புடன் நான் கண்டியில் பயோ சயின்ஸ் படிப்பையும் படித்து வருகிறேன்.

எனது சகோதரி அரபிக் கல்லூரியிலும், தம்பி நான்காம் வகுப்பும் படித்து வருகின்றனர். எனது தாயாரும் அரபிக்கல்லூரியில் படித்தவர் ஆவார் என்றார்.

# இந்திய கலாசார நிலைய கேரள ஒன்றுகூடல்









கேரள சமாஜம், உலக மலையாளக் கூட்டமைப்பு மற்றும் சுவாமி விவேகானந்தா இந்திய கலாசார நிலையம் இணைந்து நடாத்திய கேரள ஒன்றுகூடல் நிகழ்வு 30.03.2024 அன்று தாஜ் நட்சத்திர களத்தில் இடம்பெற்றது. இதில் “கலாசூரி” திவ்யா சுஜேனின் அபிநயக்ஷேத்ரா நடனப் பள்ளி சிறப்பு நடன விருந்து வழங்கியது. மலையாள பாடல்களுக்கான நடனமும், வட இந்திய நடனமும் இடம்பெற்றன. சுனஞ்சல பிரதீப, அபிலாஷினி மகேந்திர குமார், ரிஷிகேஷா செம்பையா, பிரிதிகா சஞ்சீஸ்குமார் , காவியா திலீபன் ஆகியோர் பங்குபற்றி இருந்தனர்.



ஆசிரியை விஜி




கவிஞர் வாசுகி பி வாசு



திரைப்பட இயக்குனர் கிறிஷ் அன்டனியுடன் எமது கலைஞர்கள்



சுகந்தன் ராஷ்மிக்கா



## ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

தினகரன் வாரமஞ்சரி

தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

களுத்துறை மாவட்டத்தில் உள்ள
தமிழ் மொழி பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும்
பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளின்
ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய
அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில்
12.05.2024 காலை 9 மணிக்கு

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும்.

*எம். பாஸி ஸுபைர்* (விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர்)
தொ.பேசி இல. 077 0812420

## அரச ஓவிய சிற்ப விழாவிற்கான விண்ணப்பங்கள்

2024 மார்ச் 20 ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் இவ்விண்ணப்பங்களை, 2024 ஜூலை மாதம் 25 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

விண்ணப்பப்படிவங்களை, கலாசார உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் அல்லது கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம் அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

# கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு















ஜே.எம் பாஸித் கட்டார்

கட்டாரிலுள்ள இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் மலபார் கோல்ட் டைமோன்ட் நிறுவனத்தின் முழு ஆதரவுடன் கட்டார் நாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்கான வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் புனித இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் அஹமத் றிசாத் தலைமையில் கட்டார் நியூ ஸலாத்தா அல்அரபி விளையாட்டு அரங்கில் இவ்வைபவம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்வில் கட்டார் உள்துறை அமைச்சின் பிரதிநிதி பைசல் அல்ஹூதாவி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் பங்கேற்றனர். இவ் இப்தார் நிகழ்வில் அதிகளவிலான இலங்கையர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் தமிழர்களால் நிறைந்து வழிந்த 'சொற்கோ வி. என். மதிஅழகன்' நூல் அறிமுக விழா


























கனடா ஸ்காபுறோ நகரில் கடந்த சனிக்கிழமை 23ம் திகதி நடைபெற்ற 'சொற்கோ வி. என். மதி அழகன்' நூல் அறிமுக விழா கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுகவிழா தமிழர்களால் நிறைந்து வழிந்த ஒன்றாக வெற்றிகரமாக நடைபெற்றது. கனடாவில் வாழும் தமிழர்கள் மத்தியில் உள்ள ஊடகவியலாளர்கள். நடன இசை ஆசிரிய ஆசிரியைகள் கலை இலக்கிய நண்பர்கள். கல்வியாளர்கள். பேராசிரியர்கள் நண்பர் மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் வர்த்தகப் பெருமக்கள் உட்பட 500க்கும் அதிகமான பார்வையாளர்கள் மண்டபத்தை நிறைத்த வண்ணம் அமர்ந்திருக்க பாராட்டுரைகள் மற்றும் சிறப்புரைகள் ஆகியன இடம்பெற்றன.

# ஐடிஎம்என்சி (IDMNC) ரமழான் மாத இப்தார் நிகழ்வு











ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தும் ரமழான் மாத இப்தார் நிகழ்வு வெள்ளவத்தை பிரதான அலுவலகத்தில் நிறுவனத்தின் தவிசாளர் கலாநிதி வி.ஜனகனின் வழிகாட்டலில் கடந்த செவ்வாயன்று (02) மிக விமர்சையாக இடம்பெற்றது. இந்த இப்தார் நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்களும், விரிவுரையாளர்களும், மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# மலையக மக்கள் சக்தி அமைப்பின் விருது விழா






மலையக மக்கள் சக்தி அமைப்பின் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு 31.03.2024 அன்று அதன் தலைவர் ராமன் செந்தூரன் தலைமையில் அட்டனில் இடம்பெற்றது.






# ‘ரண்டக்க ரண்டக்க’ பாடல் போல ஒரு பாடல்

ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் நடிக்கும் ‘கேம் சேஞ்சர்’ படத்தின் முதல் சிங்கிள் ‘ஜரகண்டி’ பாடலின் லிரிக்கல் வீடியோ வெளியாகியுள்ளது.

இயக்குநர் ஷங்கர், ராம் சரண் ஹீரோவாக நடிக்கும் ‘கேம் சேஞ்சர்’ படத்தை இயக்கி வருகிறார். இதில் கியாரா அத்வானி நாயகி. அஞ்சலி, எஸ்.ஜே.சூர்யா, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி, நவீன் சந்திரா, ஜெயராம், சுனில் உட்பட பலர் நடித்துள்ளனர். ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தில் ராஜு, மெகா பட்ஜெட்டில் தயாரிக்கிறார். தமன் இசையமைத்துள்ளார். இப்படத்தில் இடம்பெற்றுள்ள ‘ஜரகண்டி’ என்ற பாடலின் லிரிக்கல் வீடியோ இன்று வெளியாகியுள்ளது.

‘அந்நியன்’ படத்தில் இடம்பெற்ற ‘ரண்டக்க ரண்டக்க’ பாடல் போல ஒரு பாடல் வேண்டும் என்று ஷங்கர் தமனிடம் கேட்டிருக்கலாம். அதே வைப்ல் ஒரு பாடலை உருவாக்கித் தந்துள்ளார் தமன்.

ஷங்கர் படங்களுக்கே உரிய பிரம்மாண்ட கலர்புல் செட் பின்னணியில், நூற்றுக்கணக்கான குரூப் டான்சர்கள் சூழ பாடல் படமாக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடல் காட்சிகளுக்காக மட்டும் ரூ.90 கோடி செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. அதற்கான நியாயத்தை, இந்த வீடியோவின் வழியே தெரிந்து கொள்ளமுடிகிறது.

டலேர் மெஹந்தி மற்றும் பூஜா வெங்கட் குரலில் உருவாகியுள்ள இந்த பாடல் கேட்டதுமே மனதில் ஒட்டிக் கொள்ளும் வகையில் படமாக்கப்பட்டுள்ளது. விவேக்கின் தமிழ் வரிகள் பெரிதாக ஒட்டவில்லை.

# வாட்ஸ்அப் குரூப்பின் விபரீதம்

புருஸ்லீ ராஜேஷ் நாயகனாக நடிக்கும் படம், ‘ஒரே பேச்சு, ஒரே முடிவு’. ஸ்கிரீன் லைட் பிலிம்ஸ் தயாரிக்கும் இதில், நாயகியாக ஸ்ரிதா சுஜிதரன் நடிக்கிறார். மற்றும் தலைவாசல் விஜய், சம்பத் ராம், மீசை ராஜேந்திரன், ஐ.எம்.விஜயன், கராத்தே ராஜா நடிக்கின்றனர். ஆதர்ஷ் பி.அனில் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு யூ.எஸ். டீக்ஸ் இசை அமைத்துள்ளார். மலையாள இயக்குநர் வி.ஆர்.எழுதச்சன் இயக்கியுள்ளார். “வாட்ஸ்அப் குரூப்பில் இணையும் நாயகன், அந்த குரூப்பில் தனது பள்ளிப் பருவ காதலி இருப்பதை அறிந்து சந்திக்கச் செல்கிறான். அதனால் ஏற்படும் பிரச்சினைகளை வைத்து உருவாகியுள்ள படம் இது. படப்பிடிப்பு முடிந்துவிட்டது. விரைவில் திரைக்கு வர இருக்கிறது” என்று படக்குழு தெரிவித்துள்ளது.



# போதை, ரத்தம் இல்லாமல் ஒரு படம்



ஜெயம் ரவி, கீர்த்தி ஷெட்டி, கல்யாணி பிரியதர்ஷன், தேவயானி, வாமிகா கபி உட்பட பலர் நடிக்கும் படம், ஜீனி. இதை மிஷ்கினிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய அர்ஜூனன் இயக்குகிறார். மகேஷ் முத்துசாமி ஒளிப்பதிவு செய்கிறார். ஏ.ஆர். ரஹ்மான் இசை அமைக்கிறார். இதன் முதல் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியானது.

படம் பற்றி இயக்குநர் அர்ஜூனன் கூறும்போது, “குடும்பம் மற்றும் உறவுகளை மையமாகக் கொண்டு இந்தப் படம் உருவாகிறது. வன்முறை, போதை, ரத்தம் என எதுவும்

இல்லாமல் ஜாலியான படமாக இது இருக்கும். பெண் கதாபாத்திரங்கள் வலிமையாக இருக்கும். தாய், மகள், சகோதரி மற்றும் மனைவியின் உணர்ச்சிகளைச் சுற்றி படம் சொல்லும். மகிழ்ச்சியான திரை அனுபவத்தை இந்தப் படம் கொடுக்கும். யானிக் பென் ஆக்‌ஷன் காட்சிகளை அமைத்திருக்கிறார்” என்றார். வன்முறை,

# வெப்பம் குளிர் மழை'க்காக ஒரு மாதம் பயிற்சி



இயக்குநர் திரவ் ஹீரோவாக அறிமுகமாகும் படம், 'வெப்பம் குளிர் மழை'. இஸ்மத் பானு, எம்.எஸ்.பாஸ்கர், ரமா, மாஸ்டர் கார்த்திகேயன், விஜயலட்சுமி உட்பட பலர் நடித்துள்ள இந்தப் படத்தை பாஸ்கல் வேதமுத்து இயக்கி இருக்கிறார். ஷங்கர் ரங்கராஜன் இசை அமைத்துள்ள இந்தப் படத்துக்கு பிருத்வி ராஜேந்திரன் ஒளிப்பதிவு செய்துள்ளார். இதன் ட்ரெய்லர் சமீபத்தில் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளது.

படம் பற்றி திரவ் கூறியதாவது: இதன் இயக்குநர் பாஸ்கல் வேதமுத்துவும் நானும் ‘குற்றம் கடிதல்’ படத்தில் பணியாற்றினோம். அவர் சொன்ன ஸ்கிரிப்ட் பிடித்திருந்தது. நான் கிஷோர் நடிப்பில் ஒரு படத்தை இயக்கி இருக்கிறேன். இன்னும் ரிலீஸ் ஆகவில்லை. அதனால் இந்தப் படத்தை நானே தயாரித்தேன். சில ஹீரோக்கள் இதில் நடிக்க முன் வந்தனர். ஆனால் கால்ஷீட் பிரச்சினையால் தள்ளிப் போனது. அதனால் நானே நாயகனாக நடித்தேன். படப்பிடிப்புக்கு முன்பாக சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாவிடுதிகோட்டை கிராமத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பே சென்றோம். அங்குள்ள மக்களுடன் பழகி நடித்தோம். அந்தக் கிராமத்தினரும் நடித்துள்ளனர். இது குழந்தையின்மையை பற்றிப் பேசும்படம். குழந்தை இல்லை என்பதை இப்போதும் சமூகம் எப்படி பார்க்கிறது என்று கதை சொல்லும். இவ்வாறு திரவ் கூறினார்‘



# சித்தார்த் - அதிதி ராவ் திருமணம்

நடிகர் சித்தார்த் அதிதி ராவ் திருமணம் நடைபெற்றதாக தகவல் வெளியான நிலையில், சித்தார்த் தனது சமூக வலைதள பக்கத்தில் அதை உறுதி செய்துள்ளார்.

நடிகர் சித்தார்த், கடந்த சில வருடங்களாக நடிகை அதிதி ராவ் ஹைதாரியை காதலித்து வருகிறார். இருவரும் 2021ம் ஆண்டு ‘மகா சமுத்திரம்’ என்ற படத்தில் சேர்ந்து நடித்த போது, காதல் மலர்ந்ததாகக் கூறப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் இரண்டு பேரும் திரைப்பட விழாக்களுக்கு ஒன்றாக செல்வதை வழக்கமாக வைத்திருந்தனர்.

இருவரும் தங்கள் சமூக வலைத்தளப் பக்கங்களிலும் புகைப்படங்களைப் பகிர்ந்து வந்தனர். ஆனால், வெளிப்படையாகக் காதலை அறிவிக்காமல் இருந்தனர். இதனிடையே, சித்தார்த்தும் அதிதி ராவும் தெலங்கானா மாநிலத்தில் உள்ள ஸ்ரீரங்கபுரம், ஸ்ரீ ரங்கநாயக சுவாமி கோயிலில் நேற்று (மார்ச் 27) திருமணம் செய்து கொண்டதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், சித்தார்த் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “அவர் யெஸ் சொன்னார். நிச்சயதார்த்தம் முடிந்தது” என பதிவிட்டுள்ளார். அதிதியும் இதேபோல பதிவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.





# கவனம் ஈர்க்க பதிவிடுகிறேனா?

## ராஷ்மி கவுதம்

தமிழில் சாந்தனு ஜோடியாக ‘கண்டேன்’ படத்தில் நடித்தவர் தெலுங்கு நடிகை ராஷ்மி கவுதம். சின்னத்திரை நிகழ்ச்சிகளையும் நடத்தி வரும் அவர், சமூக வலைதளங்களில் ஆக்டிவாக இருக்கிறார். சமீபத்தில் உணவு விநியோக நிறுவனம் ஒன்று சைவ உணவை விநியோகிப்பவர்களுக்கு பச்சை நிற ஆடையை அறிமுகப்படுத்தியது. இதற்கு சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் எழுந்தன. நடிகை ராஷ்மி கவுதம், உணவு விநியோக நிறுவனத்தின் முடிவை ஆதரித்து பதிவு ஒன்றை வெளியிட்டார்.

இதையடுத்து அவருக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்த சில நெட்டிசன்கள், விளம்பரத்துக் காகவும் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் இதுபோன்ற பதிவுகளை வெளியிடுவதாகச் சாடினர்.

இதற்குப் பதிலளித்த ராஷ்மி கவுதம், “கவனத்தை ஈர்க்கவும் விளம்பரத்துக்காகவும் இதுபோன்ற விஷயங்களைச் செய்ய வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் ஒரு புகைப்படம் பதிவிட்டால், அதை பெரிதாக்கிப் பார்த்து கொண்டே இருப்பார்கள். இப்போதும் நீங்கள் விரும்பிய கவனத்தைப் பெற்றுள்ளீர்கள். இதற்காக எவ்வளவு காலம் காத்திருந்தீர்கள்?” என்று கேட்டுள்ளார்.

அவரின் இந்தப் பதிவு சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# காதலும் ஊடலும் கலந்த ஒரு பாடல்

இயக்குநர் லோகேஷ் கனகராஜ் மற்றும் ஸ்ருதிஹாசன் இணைந்து நடித்துள்ள ‘இனிமேல்’ ஆல்பம் பாடலின் வீடியோ வெளியாகி உள்ளது. இதில் இணக்கமான ரொமான்ஸில் இருவரும் நடித்துள்ளனர்.

ஸ்ருதிஹாசன் இசையமைப்பில், லோகேஷ் கனகராஜ் நடித்துள்ள ‘இனிமேல்’ ஆல்பம் பாடலின் அறிவிப்பை அண்மையில் ராஜ்கமல் நிறுவனம் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் வெளியிட்டது. இந்த ஆல்பம் பாடலின் வரிகளை கமல்ஹாசன் எழுதியுள்ளார். இப்பாடல் காதலர் தினத்தையொட்டி வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

பாடல் எப்படி? வழக்கமான காதல், அவர்களிடையே இணக்கமான ரொமான்ஸ், அதன்பின் வரும் சண்டை, பிரிவு, மீண்டும் இணைதல் என்ற ஃபார்முலாவில் இப்பாடல் உருவாகியுள்ளது. இந்தப் பாடல் மூலம் நடிகராக அறிமுகமாகியுள்ளார் லோகஷ் கனகராஜ். ஆனால், அவருக்கும் ரொமான்ஸுக்கும் ஒரு காததூரம் இடைவேளி இருப்பது போல தெரிகிறது.



# ஆலகாலமாகிய ஆலாலம்

அறிமுக இயக்குநர் ஜெயகிருஷ்ணா, நாயகனாக நடித்து இயக்கியுள்ள படம் ‘ஆலகாலம்’. நாயகியாக சாந்தினி நடித்துள்ளார். இவர்களுடன் தீபா, பாபா பாஸ்கர், தங்கதுரை, கோதண்டம், சிசர் மனோகர் நடித்துள்ளனர். ஸ்ரீஜெய் புரொடக்‌ஷன்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தில் ஈஸ்வரி ராவ் அம்மாவாக நடித்துள்ளார்.

படம்பற்றி ஜெயகிருஷ்ணா கூறும்போது, “நான் யாரிடமும் உதவி இயக்குநராக இல்லாமல், இந்தப் படத்தை இயக்கி இருக்கிறேன். ஆலகாலம் என்றால் கொடிய நஞ்சு. வஞ்சகம், சூழ்ச்சி, மது, போதை, அடக்குமுறை என்கிற விஷம், உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இதில் பலர் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சூழலில் லட்சியத்தோடு வளரும் மகன், வெற்றிக்குப் போராடும் இளைஞன், தன்னம்பிக்கையுடன் கரம் கோர்க்கும் காதலி, இவர்கள் வாழ்க்கைக்குள் வரும் வஞ்சகம், சூழ்ச்சியிலிருந்து அவர்கள் மீண்டார்களா? இல்லையா என்பது கதை. காதலும் பாசமும் நிறைந்த குடும்பப் படமாக உருவாகியுள்ளது. ஏப்ரல் 5ல் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்” என்றார். என்.ஆர்.ரகுநந்தன் இசை அமைத்துள்ள இந்தப் படத்துக்கு கா.சத்தியராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

# 'அரண்மனை 4' ஏப்ரல் வெளியீடு

சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகியுள்ள ‘அரண்மனை 4’ படம் ஏப்ரல் மாதம் திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நடைபெற உள்ள மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவுக்குப் பின் படம் வெளியாகும் என கூறப்படுகிறது.

கடந்த 2014ம் ஆண்டு சுந்தர்.சி இயக்கத்தில் ஹன்சிகா, ஆன்ட்ரியா, வினய் உள்ளிட்டோர் நடிப்பில் வெளியானது ‘அரண்மனை’. 2016ம் ஆண்டு வெளியான இப்படத்தின் இரண்டாம் பாகத்தில் சித்தார்த் நடித்திருந்தார். 2021ம் ஆண்டு இப்படத்தின் மூன்றாம் பாகம் வெளியானது. ஆர்யா, ராஷிகண்ணா, சாக்‌ஷி அகர்வால் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ஹாரர் காமெடி ஜானரில் சீரிஸாக வெளியாகும் இப்படத்தின் நான்காவது பாகத்துக்கான அறிவிப்பு அண்மையில் வெளியானது. இந்தப்படத்தையும் சுந்தர்.சியே இயக்குகிறார். இப்படத்தில் சுந்தர் சி, தமன்னா, ராஷி கண்ணா, யோகி பாபு, கோவை சரளா, சிங்கம்புலி, VTV கணேஷ், டெல்லி கணேஷ், ஜே பி, விச்சு, கே ஜி எஃப் ராம், சேசு, சந்தோஷ் பிரதாப், மொட்டை ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஹிப்ஹாப் ஆதி படத்துக்கு இசையமைத்துள்ளார். இப்படம் பொங்கல் பண்டிகையையொட்டி ஜனவரி மாதம் வெளியாகும் என கூறப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் தேதி மாற்றப்பட்டது. தற்போது ஏப்ரல் மாதம் படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தேதி குறிப்பிடப்படவில்லை. தமிழகத்தில் நடைபெற உள்ள மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவுக்குப் பின் படம் வெளியாகும் என தெரிகிறது.



# கற்றலில் இடை விலகலும் பிள்ளைகளின் பாதிப்பும்

**கேடில் விழுச்செல்வம்
கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.**



பொருள் கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும் அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. கல்வி என்ற தமிழ்ச் சொல் கல் (ஆய்வு செய்) என்ற வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது. கல்வி ஒவ்வொருக் குழந்தைகளினதும் உரிமையாகும். அவர்களுக்கான கற்கும் உரிமையை பறிக்கும் அதிகாரம் பெற்றோருக்கோ மற்றோருக்கோ கிடையாது. கட்டாயக் கல்வி கற்க வேண்டிய வயதில் பல பிள்ளைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்படாமல் இடைநிறுத்தப் படுகின்றனர்.

கல்வியானது கற்றல் அனுபவத்தைத் தருகிறது. ஓர் நபரின் கற்றல் அனுபவம் அது மாணவரின் உடல், உளம், மனம், உணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய வளர்ச்சியைப் பெற உதவுகிறது. கற்றல் அனுபவத்தில் ஒரு நபரின் பங்கேற்பு என்பது படிப்பு, ஆய்வு, விளையாட்டு, ஆரோக்கியமானச் செயல் திட்டத்தில் ஈடுபடுதல், விவாதத்தில் பங்கேற்பு, குழுவேலை போன்றவற்றில் ஈடுபடுத்தல் பலவகையான குண இயல்புகளைக் கொண்டு சந்திப்பு, அனுசரணை என்பவற்றைக் கொண்டுள்ளது. கல்வி (Education) குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வியாளர்கள் கூற்றின்படி, இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதில் துளியும் ஐயமில்லை.

குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் பெற்றோர்களாகிய நமக்கு அவர்களுக்கான கல்வியை கொடுக்க வேண்டிய பொறுப்பும் அக்கறையும், கடமையும் இருக்கிறது. அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்குவதற்கு சிறார்களின் கல்வியும், உயர்தரக் கல்வியும், மேற்படிப்புக் கல்வியும் அமையும்.

“இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்,சிறுவர்கள் நம் நாட்டின் கண்கள்” என்றெல்லாம் பேச்சளவில் மாத்திரம் கூறாது சிறுவ, சிறுமிகளின் தனியாள், சமூகத் திறன்களை விருத்தி செய்ய வேண்டும். இதற்கு பாடசாலை கல்வி வெகும் முக்கியம். சிறுவர்களின் கட்டாயக் கல்வி வயது எல்லை 5 வயது முதல் 16 வயது வரையென வகுக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டை பொறுத்த வரையில் இலவச கல்வி என்பது வரமாக கிடைத்துள்ளது. கல்வி பொது தர சாதாரண தரப் பரீட்சையின் பின் பெறுபேறுகள் குறைவாக இருப்பினும் நாட்டில் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப் பட்டு தொடர்ந்து கற்பதற்கான பல வழிகள் நம் நாட்டில் இருக்கிறது. இப்படியிருந்து பாடசாலை கல்வி கற்கும் நாட்களில் பிள்ளைகள் ஏன் இடை விலகல்களை மேற்கொள்கிறார்கள் என்றுப் பார்த்தல் சிறுவர் கல்வி இடைவிலகளுக்கான காரணங்கள் என்னென்ன.

வறுமை, பொருளாதாரம் தேடிட ஏதாவதொரு தொழிலுக்கு செல்லுதல், பிள்ளைகளுக்கு பாடசாலை மீது வெறுப்பு ஏற்படல், வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையிலான போக்குவரத்து மற்றும் தூரப் பிரச்சனை, சிலவேளைகளில் பாடங்களிலோ அல்லது ஆசிரியர் மீதோ வெறுப்படைந்து பாடசாலையை விட்டு வெளியேறல், ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கை காரணமாக பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படல், ஒழுக்கயீனம் குற்றவாளியாக இருப்பதினால் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படல், பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை, பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையே தொடர்பு குறைவாகக் காணப்படல், பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் இடைவெளி காணப்படல், நோயுற்றிருத்தல் (உடல் உளரீதியாக), பிறப்பிலுள்ள குறைபாடு, பெற்றோர்களின் தொழிலுக்கு உதவிட கல்வியை இடை நிறுத்தல், பெற்றோர்களுக்கு கல்வியின் அவசியம் தெரியாமல் பாடசாலை மீது நம்பிக்கை இல்லாதிருத்தல், பெற்றோர்களின் கவலையீனம் பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றமை, பெற்றோர்களின் பிரச்சனை மற்றும் பிரிவுகளால் பிள்ளை கல்வியை கை விடுதல், தாய் வெளிநாடுகளுக்கு செல்ல பிள்ளைகளை பராமரிப்பவர் அப்பிள்ளையின் கல்வி மீது பொறுப்பில்லாமல் இருத்தல், பெற்றோர் இல்லாத பட்சத்தில் பிள்ளைகள் பராமரிப்பாளர்களின் கல்வி செயற்பாட்டுக்கு அக்கறை காட்டாமை மற்றும் கட்டுப்படாமை,பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆரம்பகல்வியை தனியார்பாடசாலைகளில் கொடுத்து பின் கட்டணம் செலுத்த முடியாமல் பிள்ளைகளை வீட்டில் வைத்திருத்தல், தன் வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைப் பராமரித்தல், இளம் வயதுக் காதல் என்று காரணங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம் இவ்வாறு பல காரணங்களால் படிக்க வேண்டிய வயதில் கல்வியை இடைநிறுத்தி சிறார்கள் திரிகிறார்கள்.இவர்கள் தங்கள் வயதுக்கு மீறிய நபர்களுடன் நட்புக் கொண்டு தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவது, போதைப் பொருள் பாவிப்பது, ஊர் சுற்றுவது,திருட்டு ,பொய், என்று திசைமாறும் பறவைகளாக பறக்க முற்படுகிறார்கள். அதை விடக் கொடுமை தாங்களே குழந்தைகள் என்பது தெரியாமல் காதல், திருமணம், பிள்ளை பெறுதல் என்று தங்கள் வாழ்க்கை நிறைவுறுவதாக நினைத்து தங்களை தாங்களே நாசம் செய்துக் கொள்கிறார்கள்.

நாளைய சமுதாயம் இன்றைய பிள்ளைகளின் கைகளிலே உள்ளது. அவர்களின் எதிர்காலம் சுபீட்சம் பெற பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொறுப்புள்ளது. நாம் ஒருவரை ஒருவர் புரிந்து பிள்ளைகளின் கல்வி தொடர வழியமைப்போம். பாடசாலை இடை விலகல்களை தவிர்த்து நல்லதொரு எதிர்கால சமுதாயம் உருவாக்குவோம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# நீரிழப்பை தடுக்கும் பானங்கள்

கோடைக்காலங்களில் உடலில் வெப்பநிலை அதிகரிக்கும் போது தாகம் தணிக்க சில்லென்ற பானங்களை மனம் விரும்பும். ஆனால் அவை நீரிழப்பை மேலும் அதிகரித்துவிட கூடாது. கடுமையான கோடையாக இருந்தாலும் புத்துணர்ச்சியாக இருக்க விரும்பினால் சில பானங்களை சேர்ப்பது அவசியம். இவை நீரிழப்பை தடுக்கவும் உதவும். மேலும் உடல் நச்சை நீக்கி உடலுக்கு வேண்டிய போதுமான ஊட்டச்சத்துக்களையும் இவை கொண்டுள்ளதால் எல்லோரும் இதை முயற்சிக்கலாம்.

நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காயின் கலவை திரிபலா. நாட்டு மருந்து கடைகளில் இவை கிடைக்கும். இவை நச்சு நீக்கும் தன்மை கொண்டது. ஆயுர்வேதம் ஆரோக்கியமான செரிமானத்தை மேம்படுத்தவும், உடலில் இருந்து நச்சுக்களை அகற்றவும் இதை பரிந்துரைக்கிறது.

எப்படி எடுப்பது?

ஒரு டம்ளர் நீரை கொதிக்க வைத்து அடுப்பை அணைத்து ஒரு டீஸ்பூன் திரிபலா பொடியை சேர்த்து 5 –10 நிமிடங்கள் வைத்திருந்து இளஞ்சூடாக இருக்கும் போது குடிக்கலாம். நீரிழிவு அல்லாதவர்கள் குழந்தைகள் தேன் சேர்த்து குடிக்கலாம்.

**மோர்**

மோர் புரோபயாடிக் நிறைந்த அற்புதமான இயற்கை பானம். இது எலக்ட்ரோலைட்டுகளால் நிரம்பியுள்ளது. செரிமான கோளாறுகளை தடுக்க செய்யும். அமிலத்தன்மை போன்ற பித்த கோளாறு அதிகம் இருந்தால் மோர் சேர்க்கலாம். இது நச்சு நீக்கியாகவும் செயல்படும்,

எப்படி எப்போது எடுப்பது?

ஒரு கப் பசுந்தயிரில் மூன்று கப் தண்ணீர் சேர்த்து நன்றாக ப்ளெண்டரில் சுற்ற விடவும். இதன் மேல் இருக்கும் கொழுப்பு மற்றும் வெண்ணெய் அகற்றிவிட்டு அதனுடன் சீரகத்தூள், உப்பு போன்றவை சேர்த்து கொத்த மல்லி, கறிவேப்பிலை தூவி பரிமாறவும். இதனை காலை முதல் மாலை வரை எப்போது வேண்டுமானாலும் குடிக்கலாம்.

**எலுமிச்சை**

எலுமிச்சை வைட்டமின் சி நிறைந்தவை. இது உடலில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யும். இது உடல் நச்சுத்தன்மையை நீக்க செய்கிறது. நீரேற்றத்தை உறுதி செய்கிறது. சரியான வழியில் போதுமான தண்ணீர் குடிப்பதை உறுதி செய்ய எலுமிச்சை பானம் சேர்க்கலாம். தினமும் ஒரு டம்ளர் குடித்துவருவது சிறந்த நன்மைகளை அளிக்கும்.

**எப்போது எப்படி எடுப்பது?**

காலை நேரத்தில் பல் துலக்கிய உடன் ஒரு டம்ளர் எலுமிச்சை நீரை குடித்து வர வேண்டும். நண்பகலில் 3 மணி வரை எப்போது வேண்டுமானாலும் குடிக்கலாம். ஒரு சொம்பு நீரில் எலுமிச்சையை பிழிந்து சுவைக்கு கால் டீஸ்பூன் உப்பு, சீரகப்பொடி சேர்த்து புதினா இலைகளை தூவி (இனிப்புக்கு தேன் கலந்து ) குடிக்கலாம்.



# மஸ்கட்டில் இந்தியா -ஓமன் இடையிலான வரலாறு குறித்த சிறப்பு நிகழ்ச்சி






ஓமன் நாட்டின் தலைநகர் மஸ்கட்டில் உள்ள இந்திய தூதரகத்தில் மாண்ட்வியில் இருந்து மஸ்கட்டிற்கு என்ற தலைப்பில் ஓமன் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையேயான வரலாற்றை வெளிப்படுத்தும் சிறப்பு நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு இந்திய தூதர் தலைமை வகித்தார். வரலாற்று நிபுணர் ஸ்வாகத் பனி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர் ஓமன் மற்றும் வளைகுடா நாடுகளில் இந்திய ரூபாயின் பயன்பாடு பழங்காலத்தில் இருந்ததை விளக்கும் வரலாற்று தகவல்களை நினைவு கூர்ந்தார். இதேபோல் ஓமன் வர்த்தகர்கள் உள்ளிட்டோரும் இந்திய ரூபாயின் பயன்பாடு குறித்து விவரித்தனர். இந்த விழாவில் இந்திய மற்றும் ஓமன் சமூகத்தினர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையே நெருங்கிய பிணைப்பு இருந்து வந்தது குறித்து பெருமிதம் தெரிவித்தனர்.

# SUN SIDE SPORTS CLUB













SUN SIDE SPORTS CLUB விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த அணிக்கு 7 பேர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஹட்டன் எபோட்சிலி, மொன்டிபெயார் விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. முதலாம் இடத்தை ST Boys அணியும் இரண்டாம் இடத்தை Mec naas அணியும் மூன்றாம் இடத்தை Indian power அணியும் பெற்றுக் கொண்டன. மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் முன்னாள் கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாந்த், தொழிலதிபர் சு.விஜயன், Business World International அமைப்பின் இயக்குனர் ரகு இந்திர குமார் ஆகியோர் பங்குபற்றினர்.

# ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு











உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச தலைவர் "சமூக சிற்பி" வி.எஸ். துரைராஜாவின் ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு எனும் நூல் அறிமுக விழா (2/4/2024) செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட ஒரு சில படங்கள்...

# கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவிகளின் வலைப்பந்தாட்டப் போட்டி


Ice Storm


Gryffindor


அக்கினி சிறகுகள்


Dominant Divas





Wonder women's

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவிகள் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்தினர். இப்போட்டிகளில் பழைய மாணவிகள் Ice Storm, Gryffindor, அக்கினி சிறகுகள், Dominant Divas , Wonder women's என ஐந்து குழுக்களாக பிரிந்து போட்டியிட்டனர். இன்று இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தகுதிபெற்ற Ice Storm அணி Gryffindor அணியுடன் மோதவுள்ளது. மூன்றாமிடத்துக்கான தெரிவுக்கு அக்கினி சிறகுகள் அணியுடன் Dominant Divas அணி நேருக்கு நேர் மோதவுள்ளது.

# பொழுதுபோக்காக பேஸ்புக்கில் கவிதை எழுதி சிங்களப் பாடலாசிரியராக பிரபலமான கவிதாயினி ஷர்மிளா ஹுசைன்







“எங்கேயோ நீ தரித்திருந்து
எவருக்கேனும் உயிர் கொடுத்தால்
அதுவே எனக்குப் போதும்
நீ எனக்குக் கிடைக்காவிட்டாலும்
கவலையில்லை....

பிரபல சிங்களப் பாடகர் கருணாரத்ன திவுல்கனி பாடிய இந்தப் பாடல் அன்று போலவே இன்றும் பிரபலமானது. பத்து வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்தப் பாடலை இன்றும் ரசிகர்களால் விரும்பிக் கேட்கப்படுகிறது. இந்தப் பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரரர் பாடலாசிரியர் ஷர்மிளா ஹுசைன். ஒரு முஸ்லிம் இளம் பெண் எப்படி இத்தனை அழகாக வசனங்களைக் கோர்த்து பாடல் வரிகளை அமைக்கிறார் என நீங்கள் ஆச்சரியப்படலாம். அவர் எழுதிய பாடல் வரிகளை கேட்கும் போதெல்லாம் மனதில் எழும் கேள்வி அது.அவரிடமே அந்த சந்தேகத்தை கேட்டோம்.

“சிறுவயதில் நாங்கள் அவிசாவளைக்கு அருகில் உள்ள கொடியாகும்புர பகுதியில் வசித்து வந்தோம். நான் முதன் முதலில் பங்கதெனிய வித்யாச் சக்கரவர்த்தி பாடசாலையில் கற்றேன். பின்னர், உயர்தரம் கற்க ருவன்வெல்ல ராஜசிங்க கல்லூரிக்கு சென்றேன். சிங்கள மொழியில் தான் நான் கற்றேன். நான் சிறுவயதிலிருந்தே சிங்கள மொழியை நேசித்தேன். கணிதத் துறையில் தான் கற்றேன். எனக்கு இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் உள்ளனர். எனக்கு இருபது வயதிருக்கும் போது என் தந்தை இறந்துவிட்டார். அன்றிலிருந்து தாயும் தாத்தா பாட்டியும் தான் எங்களைக் கவனித்துக் கொண்டார்கள். எனது தாயார் முன்பள்ளி ஆசிரியர். அவரும் முன்னர் பத்திரிகைகளுக்கும் சஞ்சகைகளுக்கும் கவிதைகள் எழுதுவது வழக்கம். அவர் பத்திரிகைகளில் எழுதிய கவிதைகள் என்னிடம் பத்திரமாக இருந்தன. எனக்கும் எழுதும் ஆர்வம் வருவதற்கு எனது அம்மா தான் காரணம்.

பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் படிக்கும் போது தான் நான் முதன் முதலில் கவிதை எழுதினேன். சிறுவயது முதலே எனக்கு அறிவிப்பாளராக வேண்டும் என்ற அவாவும் இருந்தது. உயர்தரம் கற்ற பின்னர் 2005 ஆம் ஆண்டில், தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் ஊடகப் பாடநெறியை நிறைவு செய்தேன். அதன் பிறகு, மனித வள முகாமைத்துவம் கற்றேன்.

பிரபல நடிகை அனோஜா வீரசிங்கவிடம் குரல்வள ஆளுமை தொடர்பில் பயிற்சி பெற்றேன். திருமணத்தின் பின்னர் வானொலி அறிவிப்பாளராகும் ஆசையில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றேன். முதல் நேர்முகப் பரீட்சை முடிந்த நிலையில் முதல் குழந்தையை பிரசவித்தேன்.அதனால் நான் இரண்டாவது நேர்முகத் தேர்விற்குச் செல்லவில்லை. இன்றும், அறிவிப்பு கலையின் மீது எனக்கு மிகுந்த விருப்பம் இருக்கிறது.

அறிவிப்பாளராகும் அவரின் அதீத ஆசை வெறும் கனவாகிப் போனாலும் இன்று பலரும் போற்றும் பாடலாசிரியராக ஷர்மிளா, பிரபலமடைந்து வருகிறார்.

பாடலாசிரியராக மாறிய தனது கலைப் பயணத்தை சர்மிளா இவ்வாறு விபரித்தார் .

“சிறுவயதில் இருந்தே கவிதைகளை கிறுக்கும் பழக்கம் இருந்தது. இந்தச் சமயத்தில் தான் 2012ல் பேஸ்புக் பயன்படுத்த ஆரம்பித்தேன். பேஸ்புக்கை பயன்படுத்தினாலும் எனது ஆக்கங்கள் எதனையும் அச்சமயம் பதிவேற்றவில்லை. முகநூலில் 'மல்வருஷா' என்று ஒரு பக்கம் இருந்தது. இதனை இஷாரா உதயங்கனி மற்றும் ரவீந்திர செல்லஹேவா ஆகியோர் ஆரம்பித்திருந்தனர். அதில் கவிதைகள் பிரசுரமாகும். அந்தக் கவிதைகளை வாசிப்பதை பழக்கமாகக் கொண்டிருந்தேன். அவை பற்றி எனது கருத்துக்களை அவ்வப்போது பதிவிடுவேன். பெரும்பாலான கருத்துக்கள் கவிதை வடிவில் தான் பதிவேன். ஒரு நாள் அந்தக் கவிதைப் பக்கத்தை நடத்தும் இஷாரா எனக்கு சொன்ன யோசனை தான் எனது பயணத்தை மாற்றியமைத்தது. சொந்தமாக கவிதைப் பக்கமொன்றை ஆரம்பிக்குமாறு அவர் எனக்கு அறிவுரை சொன்னார். அவரின் யோசனை என்னை சிந்திக்கக் தூண்டியது.

'எனது கவிதை நீயானாய்' என்ற பெயரில் சொந்தமாக பேஸ்புக் பக்கமொன்றை ஆரம்பித்தேன். ஒரு நாள் சிங்கள இசையமைப்பாளர் தர்ஷன விக்ரமதுங்க எனக்கு குறுஞ்செய்தியொன்றை அனுப்பியிருந்தார். மறுநாள் காலை தர்ஷன் அண்ணனை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நான் எழுதிய கவிதைகளை தனக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கோரினார்.

"எங்கேயோ தரித்திருந்து... என்ற பாடலை அவருக்கு அனுப்பி வைத்தேன். தர்சன அண்ணனிடமிருந்து எனக்கு அழைப்பொன்று வந்தது.எனது கவிதை வரிகளை கொண்டு பாடலொன்றை இசையமைத்திருப்பதாக அவர் சொன்னார். என்னால் நம்பவே முடியவில்லை. இசை பற்றி எதுவும் தெரியாமல் நான் எழுதிய வரிகள் இசை வடிவம் பெறும் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

இந்தப் பாடலைப் பாடுவதற்கு யார் பொறுத்தமானவர் என்று தர்ஷன் என்னிடம் கேட்டார். கருணாரத்ன திவுல்கனி எனது பாடல் வரிகளை பாட விருப்பம் தெரிவித்துள்ளார் என்று அவர் சொன்ன தகவல் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது.

முகநூலில் தர்ஷன் அண்ணனின் தொடர்பு கிடைத்திருக்காவிட்டால் நான் இந்தளவு உயரத்திற்கு வந்திருப்பேனா என்று தெரியாது.

எனது பாடல்கள் பிரபலமடைந்திருக்காது. நானும் மற்றவர்களைப் போன்று முகநூலில் கிறுக்கும் ஒருத்தியாக மாத்திரம் இருந்திருப்பேன். தர்ஷன் அண்ணனினால் தான் இன்று இவ்வளவு உயரத்திற்கு வந்திருக்கிறேன்.

இதுவரை ஐம்பது பாடல்கள் வரை எழுதியிருக்கிறேன். மேலும், 'லொக் டவுன்' படத்தில் சுனில் எதிரிசிங்க பாடிய 'மது சந்திர தியே' பாடலையும், 'வெளிபவுரு' படத்தில் சஷிகா நிசங்சலா பாடிய 'கெனிமடல இஹிருனா' பாடலையும் எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இரண்டு பிள்ளைகளின் தாயான சர்மிளா குடும்பப் பெண்ணாக இருந்து கொண்டு சிங்கள இசைத்துறையில் தனக்கென தனியிடத்தை பிடித்திருக்கிறார். எப்பொழுதும் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்வதற்கு நேரம் ஒதுக்கும் அவர் இன்னும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

சர்மிளாவின் தாயார் சித்தி பாத்திமாவின் வழிகாட்டல் தான் அவரை இலக்கியத்துறையில் சாதிக்க பெரும் உந்துசக்தியாக இருந்தது என்றால் அதுமிகையல்ல. கணவர் முஹம்மது ஹுசைனின் ஆதரவை பெருமையுடன் நினைவு கூறும் சர்மிளா தான் கவிதை எழுதுவதை அவர் ஊக்கப்படுத்துவதாக தெரிவிக்கிறார். ''எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

எனக்கு தொழில் செய்வதற்கு கொஞ்சமும் விருப்பமில்லை. ஆனால் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் பாடல் எழுதுவதை எனது தாயார் விரும்புகிறார். ஆரம்ப காலத்தில் அவரும் கவிதைகள் எழுதி வந்ததால் அவர் கவிதையை இன்றும் நேசிக்கிறார். எனது பெயரை பலரும் அறிந்திருந்தாலும் நேரில் கண்டவர்கள் குறைவு. நான் யார் என்பதை அறிந்த பின்னர் பலரும் எனது பாடல்களை பற்றி ஆர்வமாக பேசுவார்கள் நான் எழுதிய பாடல்களைப் பற்றி சிலாகித்துப் போசும் போது சந்தோசமாக இருக்கும்.

நான் எழுதும் ஒவ்வொரு பாடலுக்கும் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.என்னால் முடிந்த வரை பாடல்கள் எழுதுவேன். இது வரை சாதித்ததை நினைத்து பெருமை அடைகிறேன்'' என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் சர்மிளா.

முஸ்லிம் எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளிகளில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே சிங்கள இலக்கியத் துறையில் கால்பதித்து சாதித்துள்ளனர். அதில் சர்மிளாவு ஹுசைனுக்கும் முக்கிய இடம் இருக்கிறது என்றால் அது மிகையில்ல.

(சிலுமினவில் பிரசுரமான இனோகா சமரவிக்ரமவின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது)

றொம்ப பிஸி
சம்ஸ் பாஹிம்
whatsapp 0714011181
shumsfahim@gmail.com

# மலையகம் 200 : முஸ்லிம் இலக்கியப் பங்களிப்பு

மலையகம் 200 சமூக, அரசியல், பொருளாதார ,கலை, இலக்கிய, பண்பாட்டு ரீதியில் அவதானிப்புப் பெறுகிறது.

இலங்கை வட்டத்தைப் பூரணப்படுத்துவதில் மலையகமும் பெரும் பங்காகிறது. மலையகம் என்பது மலையக முஸ்லிம்களையும் உள்ளடக்கியது. மலையக இலக்கியத்திற்கு முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளார்களா என்கிற கேள்விக்கு ஆதாரமான பதில் தேடுகை மீது கவனக்குவிவு அவசியமாகிறது.

உக்குவல்லை அக்ரம் இது குறித்த ஆய்வு அல்லது ஆதாரத்தேடலை முன்னெழுப்புகிறார்.

மலையகம் சார்ந்து முஸ்லிம்களால் எழுதப்பட்ட இலக்கியங்கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், திரட்டப்படுதலும் தொகுப்பாதலும் இந்தப் பின்புலத்தில் அவசியமெனலாம்.

அக்ரம் வினவி நிற்பது 'தெரிந்திருக்கும் இது சார் தகவல்களைத் தந்துதவுங்கள்' என்பதுதான்.

சஞ்சிகைகள்,பத்திரிகைகள், மலர்கள், ஆய்வுகளென நிறையவே எழுதப்பட்டிருக்கின்றன.

ஒருபுறம் முஸ்லிம் வாசிப்புத் தளம் சார்ந்த அல்ஹஸனாத், எங்கள் தேசம், மீள்பார்வை, சிந்தனை, பயணம் என் நீண்ட மலையக மைய எழுத்துக்கள் நிகழ்ந்துள்ளன.

மறுபுறம் இலத்திரனியல் ஊடகவழியாக மலையகம் குறித்த முஸ்லிம் பதிவுகள் நிகழ்ந்துள்ளன.

இவற்றை இற்றைப்படுத்த உம் போது மலையக



இலக்கிய அல்லது அரசியல் நீரோட்டத்தில் முஸ்லிம் வெளியின் போதுமை, போதாமை குறித்து அளவிடவும்.

வரலாற்றெழுத்தியலில் உள்ளீர்க்கவும் முடியுமாகும். மலையகம் என்பது ஈழத்தில் ஒரு பகுதி மக்களின் வாழ்வு; குரல்; இதில் மலையக முஸ்லிம்களின் வாழ்வும் குரலும் அடங்கும்.




# மாற்றுமொழிக் கவிதை

பலஸ்தீனின் துயரமென்பது அம்மக்கள் விடுதலையின் வீறாப்பும் தான். மூயின் பசைசோ கவிதையை பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.உலகின் இதயங்கள் மீது ஓங்கி அறைகிறது கவிதை

★

பதாஹ்,
நாங்கள் குருதி சிந்துவோம்
நாங்கள் பணிந்தே அடங்க நினைத்தால்
நாங்கள் எங்களின் காயங்களிலே
பெருகும் குருதியை நிறுத்தியிருப்போம்
உலகின் ஜன்னல் கதவுகளில் எம் குருதி
சிந்திக் கறைபடுத்தட்டும்
உலகின் முகத்தில்
எங்களின் குருதி சிந்தப்பட்ட கறை தெரியட்டும்!
இந்த உலகம் நீண்ட காலமாய்ப்



பலஸ்தீனர்களின் பச்சை இறைச்சியை
முள்ளுக் கரண்டியும் கத்தியும் கொண்டு
புசித்து வந்துள்ளது
இந்த உலகின் காதுகள் யாவும்
இந்த உலகின் கண்கள் யாவும்
இந்த உலகின் இதயம் யாவும்
இந்த உலகின் தொண்டைகள் யாவும்
வெந்துபோன ஆப்பிள் பழங்கள்
ஆக்கிரமிப்பாளரின் கூடையிலிருந்து
திருடப்பட்ட ஆப்பிள் பழங்கள்!




மூன்றாம் பக்க அடிக்குறிப்பு
((((((((ஈ))))))))
பாடசாலை தர்மவிதிப் புத்தகம்
பண்பாட்டின் ஆணிவேர்
அதிலிருந்துதானே
மானுடப் பண்புகள் விருட்ஷம் கொள்ள வேண்டும்
பண்பாட்டின் ஆணிவேரை அசையாத ஆன்ம வேராக்குதலென்பது
பாடசாலை சமூகத்தின் கடனென்பேன்
அதிபரும் ஆசானும்
அதிகாரிகளுமான உள் சமூகமும்
பாடசாலையின் பெற்றோரும் மற்றோருமான வெளிசமூகமும் இணைந்தவிடத்தில் தொடங்குகிறது பண்பாட்டின் மூலம்
குழந்தை தாயின் கருவறையில்
தாய் மடியின் கருவறையில்
வீட்டுச்சூழல் கருவறையில் அயலெனும் சுற்றுச்சூழல் கருவறையில் வாழ்கிறது
பின்
பாடசாலையெனும்
பெருங்கருவறையில்
உயிர்கொள்கிறது
உயிரும் உடலும் உணர்வும் பண்பாடுமென
கருக்கொள்ளுமிடமெல்லாம் உருவாகிறது
குழந்தைக்கான பண்பாடு
அது ஒழுங்குறுத்துமிடமாகிறது பாடசாலையெனும் கூட்டுக்கருவறை
வகுப்பறையொரு கருவறை
காலைக்கூட்டமொரு கருவறை
பாடப்புத்தகமொரு கருவறை
பாடபோதகரொரு கருவறை
பரீட்சை மண்டபம் கருவறை
இணைப்பாடவிதானமொரு கருவறை
கருவறைகளாலானது கல்விச்சாலை
உயிர்த்தல்
பயிலுதல்
வளர்தல்
வாழ்தல் நிகழிடம்
பாடசாலையொரு கருவறை
பண்பாட்டைப் படித்தலெனும்
பக்குவத்தால்
மனப்புத்தகத்தின் பக்கமெல்லாம் வெண்மையுற
வெளிச்சமுறும் காலமொன்று
அறநெறிப்பட்ட அறிவுநெறி
திறனொளி கொண்ட
திறன்வெளி
மனப்பாங்கெனும்
திடமுறு நலவழி
பயிலுதலே
பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் பக்குவமாம்
தலைமுறை தலைமுறையாய்
தேசத்தின் திசையெல்லாம் பண்பாட்டின் ஒளிபரவ
ஒரு விதை மனதுக்குள் தூவ வேண்டும்
எல்லோரும் பண்பட்ட வாழ்வுதனை வளமோடு வாழ வேண்டும்
பாடசாலை
தர்மவிதிப்புத்தகத்தில் விதையொன்று வேர் கொண்டெழ வேண்டும்.

# கல்விப் பேராசான் நினைவேந்தல்



இலங்கைக் கல்விப்புலத்தில் உயர்ந்து நிற்கும் நாமம் பேராசான் சோ.சந்திரசேகரம்.

இந்த தலைமுறையின் கல்வி மேம்பாட்டில் ஓர் ஆற்றுப்படை அனுபவக்காரராகத் திகழ்ந்தவர் அமரர் பேராசான் சந்திரசேகரம் அவர்கள்.

உயர்கல்வித்துறையில் ஆழ்ந்த புலமைச் சொத்து அவர்.

அவரது சோதனைப் பாணியும், நட்புடனாக அணுகுதலும், தீட்சண்யமிக்க வழிகாட்டலும்,அன்பு வழியும் சொல்லாடலும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஆதர்ஷமாக. அமைந்தது.

வகுப்பறை மற்றும் விரிவுரை மண்டப போதனைகளுக்கப்பால் கல்வித் துறை சார்ந்து பேராசான் எழுதிக் குவித்த பனுவல்களின் கனதி;அவை தோற்றுவித்த ஆய்வு வழி;சிந்தனைக்கிளர்ச்சி; ஒப்பீட்டுக்கல்வி அனுபவமென ஆழமாக வேரூன்றி நின்ற அற்புதம் அமரர் பேராசான் சோ.சந்திரசேகரம் அவர்கள்.

கல்வியில் மட்டுமன்றி கலை,இலக்கியம்,சமூகவியல்,பண்பாடு,இன இணக்கப்பாடு குறித்தும் செயற்பட்ட புலமை மனிதர் அவர்.

மலையகத்தின் முதனிலைப் பேராசான் மலையகப் பல்கலைக் கழகத்தின் தேவை குறித்து அழுத்திப் பேசியவர்.

கல்வி மாநாடுகளில் ஆய்வறிஞராயிருந்தவர்; ஆயிரக்கணக்கான.ஆசிரியர்களுக்குப் பேராசானாய் திகழ்ந்தவர் அமரர் சோ.சந்திரசேகரம் அவர்கள்.

அன்னாரது இரண்டாவது வருட நினைவுப் பேருரை நேற்று கொழும்புத் தமிழ்ச்சங்கம்சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நிகழ்வுற்றது.

பேராசானின் கல்வியியல் வாழ்வுக்கு மதிப்பளிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்ட'பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றம் 'இந்த நினைவேந்தலை நிகழ்த்தியது.

மன்றத்தின் தலைவர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையுரையாற்றினார்.கலாநிதி ச.அதிரதன் வரவேற்பரை நிகழ்த்தினார்.

நினைவுப் பேருரை "தொலைத்த இடத்தில் தேடுவோம்" என பேராசான் சி.மௌனகுரு ஆழமானதும் அவசியமானதுமான விடயங்களை முன்னிறுத்தி ஆற்றுப்படுத்தினார்.

கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் கலாநிதி க.இரகுபரன் பேருரையாளரை அறிமுகம் செய்ய ஞாபகார்த்த மன்ற செயலர் ச.இந்திரகுமார் நன்றியுரைத்தார்.

நிகழ்வில் சிறப்பம்சமாக இலங்கையில் கல்வியின் வரலாற்றுச் செல்நெறிகள் மற்றும் சர்வதேசக் கல்வி முறைகளின் செல்நெறிகள்ஆகிய பாத்திரமான கல்வி நூல்கள் வெளியிடப்பட்டன.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



தங்குவதற்கு இடம், நல்ல உணவு, மாதாமாதம் சம்பளமும் ஒழுங்காக கொடுத்தார்கள். புது ஊரில் பிழைப்புக்கு வழியின்றி தவித்த இவர்களுக்கு இந்தத் தொழில் ஒரு வரப்பிரசாதமாகவே தெரிந்தது. இருவரும் அரண்மனையில் ஒன்றாகவே வளர்ந்தது போல இங்கேயும் ஒன்றாகவே இருந்தார்கள். ஒன்றாகவே உண்டு, ஒன்றாகவே உறங்கி, ஒன்றாகவே வேலைக்கு செல்வார்கள். ஓய்வு நேரங்களில் இருவரும் புதிய ஊரை சுற்றிப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். புது வாழ்க்கை அவர்களுக்கு சுவாரஸ்யத்தையும் புத்துணர்வையும் அளித்தது. சொந்த காலில் நின்று சம்பாதிப்பதை மண்டேலா பெருமையாக நினைத்தான்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஜஸ்டிஸ் மண்டேலாவை பார்த்து கிண்டலாக “மண்டேலா நாம் கல்லூரியில் விழுந்து விழுந்து கஷ்டப்பட்டு படித்திருக்காமல் நேரடியாக தங்கச் சுரங்க தொழிலுக்கே வந்திருக்கலாம். தங்கச் சுரங்கம் தங்கச் சுரங்கம் தான்” என்று விளையாட்டாக சொல்ல மண்டேலாவோ “அப்படி சொல்லாதே, நாம் ஜோங்கிந்தாபா அரசரின் வாரிசுகள் என்றபடியால்தான் சுரங்கத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் சலுகைகளும் கைநிறைய சம்பளமும் தருகிறார்கள். ஆனால் நம்மோடு பணியாற்றும் நம்மின மக்களை அப்படியா நடத்துகிறார்கள்? அடிமைகளாக அல்லவா நடத்துகிறார்கள். இதை பார்க்கும் போது என் மனம் படும் வேதனை சொல்லி மாளாது. ஏன்தான் இந்த தங்க சுரங்கத்திற்கு பணியாற்ற வந்தோமென்று மனசாட்சி என்னை கொல்லும். ஆனால் உள்மனது பிழைப்புக்கு வேறு வழியில்லை இதுதான் கதி என்று சொல்லி ஆறுதல் சொல்லிவிடும்” என்று விரக்தியுடன் கூறினான்.

மண்டேலாவும் ஜஸ்டிஸ{ம் காலம் போகப் போக இந்த வாழ்க்கை முறையுடன் ஐக்கியமாகிப் போனார்கள். தங்கச் சுரங்க நிவாகமும் மண்டேலாவின் சிபாரிசு கடிதம் பற்றி மறந்தே போய்விட்டது. நிலைமை இவ்வாறிருக்க மண்டேலா தங்கச் சுரங்கத்தில் ஒரு நாள் தன் நண்பர்களிடம் தான் ஊரை விட்டு ஓடி வந்த கதை பற்றியும் பயண உரிமை அலுவலகத்தில் நடந்த கூத்தையும் தங்கச் சுரங்கத்தில் பொய் கூறி வேலையில் சேர்ந்ததைப் பற்றியும் பெருமை பேசிக் கொண்டிருந்தான். அப்போது எவனோ ஒருவன் மண்டேலாவின் வீறாப்புப் பேச்சினை காதில் போட்டுக்கொண்டான். இது எவ்வாறோ நிர்வாகம் வரை கசிந்தது. தவளை தன் வாயால்தான் கெடும் என்பதைப் போல மண்டேலாவும் நிர்வாகத்திடம் வசமாக மாட்டிக்கொண்டான். உடனே மண்டேலாவின் வேலை பறிபோனது. ஜஸ்டிஸ் செய்வதறியாது திகைத்து போனான். மண்டேலாவை விட்டு பிரிய நேரிடப் போவதை எண்ணி மனம் வருந்திக் கண் கலங்கினான். மண்டேலாவின் நிலையும் அவ்வாறேதான் இருந்தது. தான் விளையாட்டாக பெருமை பேசியது வினையாகிவிட்டதை உணர்ந்து வெட்கித்து போனான். ஜஸ்டிஸ் ஒருவாறு சமாளித்துக்கொண்டு இருவரும் ஒன்றாகவே வேலையில் இருந்து விலகுவோம் என்று கூற மண்டேலாவோ அதற்கு சம்மதிக்கவில்லை.

“வேண்டாம் ஜஸ்டிஸ். சுரங்கத்தில் நீ நல்ல மதிப்பும் மரியாதையுடனும் இருக்கிறாய். அதை வீணாக எனக்காக கெடுத்துக்கொள்

**அத்தியாயம் – 12**

ளாதே. இது போனால் இன்னொரு தொழிலை நான் தேடிக்கொள்வேன்” என்று கூறி அவனை தேற்ற அவனும் பிரிய மனமில்லாது அரை மனதுடன் சம்மதித்தான். மண்டேலா கண் கலங்கியவாறு அவனை கட்டியணைத்து விட்டு மனதை கல்லாக்கிக்கொண்டு நிர்வாகத்தை விட்டு கவலை தோய்ந்த முகத்துடன் நடை பிணமாக நடந்து சென்றான்.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் கலை வாரிசு எம். ஆர். ஆர். வாசு



பழம் பெரும் நடிகர் நடிகவேள் எம். ஆர்.ராதாவின் கலை வாரிசான எம். ஆர். ஆர். வாசு தமிழ் நாடக மற்றும் திரைப்பட நடிகராவார். நடிகவேள் எம். ஆர். ராதாவுக்கும் தனலட்சுமி அம்மாளுக்கும் 1942.05.29 அன்று மகனாக திருச்சியில் பிறந்தவர் வாசு. இவர் பல திரைப்படங்களில் நடித்திருக்கிறார். சிவாஜி கணேசனின் பல படங்களில் வாசு நடித்துள்ளார். மக்கள் திலகம் எம்ஜியாரின் "தாயைக்காத்த தனயன்" படத்தில் 1962 இல் அறிமுகமானார். இவருக்கு ராதாரவி என்ற சகோதரனும், ரசியா, ராணி, ரதிகலா என்று மூன்று சகோதரிகளும் உள்ளனர். நடிகர் வாசு விக்ரம் இவரது. மகனாவார். இவருடைய தந்தையின் இன்னொரு மனைவியான கீதா ராதாவிற்கு பிறந்தவர்கள் நிரோஷா, ராதிகா, மோகன் ராதா ஆவர். வாசு நாடக கம்பனி நடத்தி வந்தார். அதில் ராதாரவியும் நடித்திருக்கிறார். என் விழிகளில் என் தந்தை என்ற பெயரில் எம். ஆர். ராதாவினைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். தந்தையைப் போலவே இவரும் கரகரப்பான குரலில் பேசி நடித்துப் புகழ் பெற்றவர். நகைச்சுவை, வில்லன் , குணச்சித்திரம் என பன்முகத் திறமை கொண்டவர் வாசு. 20.03.1984 ஆண்டு உடல நலக்குறைவு காரணமாக மரணமடைந்தார். ஓர் நல்ல கலைஞனான வாசு மதுவுக்கு அடிமையாகி 42 வது வயதில் காலமான விடயம் வேதனைக்குரியதே. இவர் கடைசியாக நடித்த படம் "குழந்தை ஏசு" எம். ஆர்.ஆர்.வாசு நடித்துள்ள சில. திரைப்படங்கள் : தாயைக் காத்த தனயன், புன்னகை காவியத் தலைவி, பிள்ளையோ பிள்ளை, எடுப்பார் கைப் பிள்ளை, சொர்க்கம், பாரத விலாஸ், காவியத் தலைவி, தவப்புதல்வன், என்னைப் போல் ஒருவன், காசி யாத்திரை, மூன்று தெய்வங்கள், எதிர்நீச்சல், நாலும் தெரிந்தவன், பட்டிக்காடா பட்டணமா, தசாவதாரம் (பழையது), சக்கரம், அவன்தான் மனிதன், குழந்தை ஏசு மற்றும் பல.

# வித்தியாசமான நடிப்பில் திரையுலகை அதிர வைத்த நடிகர் ரகுவரன்



தனது வித்தியாசமான நடிப்பினால் திரையுலகை அதிர வைத்த மறைந்த நடிகர் ரகுவரன் டிசம்பர் 11, 1958 இல் பிறந்தார். 2008.03.19 அன்று அமரரானார். தமிழ், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் எதிர்நாயகனாகவும் குணச்சித்திர வேடங்களிலும் ஏறத்தாழ 300 படங்களுக்கு மேல் நடித்த திரைப்பட நடிகராவார். ரகுவரன் கொல்லன்கோடு, பாலக்காடு மாவட்டம், கேரளாவில் பிறந்தவர். உடல் நலக்குறைவு காரணமாக காரணமாக மார்ச் 19, 2008 சென்னையில் காலமானார் . இவர் நடிகை ரோஹிணியை காதலித்து மணந்தார். 1996இல் மணம் புரிந்த இத்தம்பதிகள் 2004இல் விவாகரத்து பெற்றனர். ராதாகிருஷ்ணன் வேலாயுதம் நாயர்கஸ்தூரி தம்பதியருக்கு முதல் மகனாக பிறந்தவர் ரகுவரன். இவர் தந்தை வேலாயுதம் நாயர் தொழில் செய்வதற்காக தமிழ்நாட்டில் உள்ள கோயம் புத்தூரில் தனது குடும்பத்துடன் குடியேறினர். அதன் பின் ரகுவரன் கோவையில் தனது



கல்லூரி கல்வியான இளங்கலை பட்டத்தை படித்து முடித்தார். இவர் 1982 ஆம் ஆண்டு "ஏழாவது மனிதன்" என்ற படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகம் ஆனார். கூட்டுப்புழுக்கள், கை நாட்டு, மைக்கேல் ராஜ் ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்தார். ஆனாலும் எதிர்நாயகன் வேடங்கள் அவரின் ரசிகர்களால் வரவேற்கப்பட்டது. சம்சாரம் அது மின்சாரம், அஞ்சலி போன்ற படங்களில் குணச்சித்திர வேடத்தில் நடித்தார். இது தவிர ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடப்படங்களிலும் நடித்திருக்கிறார்.இவர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானஇவரது திரை வாழ்க்கை மட்டுமின்றி சொந்த வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. இத்தகைய போதை பழக்கத்தால் இவர் காதல் திருமணம் செய்து கொண்ட நடிகை ரோகிணியும் அவரை விட்டு பிரிந்து செல்ல நேர்ந்தது. ரகுவரன் அவரது போதை பழக்கத்தில் இருந்து விடுபட முயற்சி செய்தாலும், அவரால் போதை பழக்கத்தில் இருந்து மீண்டு வர முடியாமல் போனது. உடல் நலக்குறைவு காரணமாக சென்னை சேத்துப்பட்டில் நடிகர் ரகுவரன் மார்ச் 19, 2008 இல் காலமானர்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# கொழும்பு விவேகானந்தா கல்லூரி பழைய மாணவிகளின் வலைப்பந்தாட்ட அணி




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.